வெளியீடு 27-10-1987 Issued 27-10-1987

2964

529/A4/88

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை மார்ச் 27, 1987—தொகுதி 35 எண் 2

Friday the 27th March 1987—Volume 35 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

2964

T.N.L.A Debates

Official Report

Vol 35 No 2&3

27, 28. March 19[illegible]

D
V211,31 N87
N87.35.2&3
136509

6 வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொது விவாதம்—(தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| * திரு. கி. ராமன் | .. | 226—233 |
| திரு. கோ. பெருமாள் பிள்ளை | .. | 233—239 |
| * திரு. மா. மணிமாறன் | .. | 239—252 |
| திரு. எஸ். பாலசுப்பிரமணியன் | .. | 252—256 |
| * திரு. கே. சுப்பராயன் | .. | 257—270 |
| திரு. மு. தங்கமணி | .. | 270—276 |
| * திரு. த. புஷ்பராசு | .. | 276—283 |
| திரு. கே. முத்துவேல் | .. | 283—289 |
| திரு. வே. கு. சின்னசாமி | .. | 289—294 |
| * திரு. ஆர். எஸ். ஆறுமுகம் | .. | 294—300 |
| * திரு. கே. உச்சி | .. | 300—306 |
| திரு. ஆ. சந்திரசேகரன் | .. | 306—309 |
| திரு. ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி | .. | 309—313 |

7 அறிவிப்பு—

பேரவை அலுவல் .. .. .. .. 313—314

8 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். 314

2964

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

1987, மார்ச் 27, வெள்ளிக்கிழமை.

பங்குனி 13, அக்ஷய—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்".

சொல்லும்போது கேட்டவரைத் தன் வயப்படுத்தும் பண்புகளுடன், கேட்காதவரும் கேட்க விரும்புமாறு கூறப்படுவது சொல்வன்மையாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பல்லடம் தாலுகா தாசில்தார் அலுவலகம்.

**197—(* வினா எண். 9420)** திரு. கு. ரமணி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தாலுகாவுக்கான தாசில்தார் அலுவலகத்தை திருப்பூர் மாநகரத்திலிருந்து பல்லடம் நகரத்துக்கு மாற்ற திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றி எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

D
V211.31 N87
N87.35-2 f3
136509
சென்னை-600 008

உள்ளடக்கம்

27—3—1987

---


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 145—185 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 185—210 |
| 2 தகவல் கோரல்— | |
| (அ) எண்ணூர் அருகே மீனவரிடையே மோதல் .. .. .. .. | 211 |
| (ஆ) வறட்சி குறித்து வெள்ளை அறிக்கை | 212—213 |
| (இ) உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து .. .. .. .. | 213 |
| 3 கவன ஈர்ப்பு— | |
| (அ) திருப்பரங்குன்றம் வெள்ளக்கல் பகுதியில் குடியமர்த்தப்பட்டவர்களுக்கு வசதிகள் .. .. .. .. | 213—215 |
| (ஆ) கோவை மாவட்டம், கிளியூர், காரமடை பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டுதல் .. .. | 216—218 |
| (இ) இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றம் மதுரையில் செயல்படுவதால் ஏற்படும் சிரமம் .. .. .. .. | 218—220 |
| (ஈ) கூவம் கழிவுநீரைக் கடலில் செலுத்துதல் | 220—222 |
| (உ) திருவாரூர் பகுதி திருப்பள்ளி முக்கூடல் வாய்க்கால் தலைப்பு மேடிட்டுள்ளது. | 222—224 |
| 4 அறிக்கை அளித்தல்— | |
| (அ) பொதுக் கணக்குக் குழு .. .. | 224 |
| (ஆ) பொது நிறுவனங்கள் குழு .. .. | 224 |
| 5 அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) நிதி ஒதுக்க (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1987 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1987) .. | 225 |
| (ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1987 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 7/1987) .. .. | 226 |

[1987 மார்ச் 27

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, பல்லடம் தாலுகா என்று பெயர் இருக்கிறது. ஆனால், அதனுடைய தலைமையிடம், தாசில்தார் மற்றும் அரசு காரியாலயங்கள் இருப்பது திருப்பூரிலே. பல்லடம் தாலுகா என்ற பெயர் இருப்பதாலே, பல்லடத்திலே சென்று இலாகாவினுடைய காரியாலயங்கள் வேறு ஏதாவது அமைக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் இல்லை. பல்லடம் தாலுகா வெள்ளைக்காரன் காலத்தில் பிரிக்கப்பட்டது. அது பிரிக்கப்பட்ட காலத்தில் திருப்பூர் அவ்வளவு வளர்ச்சி பெற்றிருக்காது என்று நான் கருதுகிறேன். அதற்குப் பிறகு திருப்பூர் தொழில் துறையிலும், வணிகத் துறையிலும், மக்கள் தொகையிலும் வளர்ந்து வளர்ந்து, பெரிதாகிவிட்டதன் காரணமாக அது பல்லடம் தாலுகாவின் தலைநகரமாகிவிட்டதன் அடிப்படையில், அது அதனுடைய தலைநகர் என்று ஏற்படுத்தப்பட்ட பிறகு, வசதி, வாய்ப்புகள் மற்றவை பல்வேறு கோணங்களில் பார்க்கப்படும்போது, பெயர் பல்லடம் தாலுகா என்று இருந்தாலும் தலைமையிடம் திருப்பூரிலே இருப்பதுதான் பல்வேறு வகையிலே பொருத்தமாக இருக்கும் என்று ஆராய்ந்த பிறகு முடிவெடுக்கப்பட்டது. ஆனால், பல்லடம் பகுதியினுடைய வளர்ச்சிக்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி நாம் தனியாகத்தான் ஆராய வேண்டும். அந்தப் பகுதியினுடைய வளர்ச்சிக்கு என்ன திட்டங்கள் தீட்ட வேண்டுமென்பதையும் நாம் ஆராய வேண்டும்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, திருப்பூர் பின்னால் வளர்ச்சி அடைந்து தொழில் நகரமாகிவிட்டதனால், தாசில்தார் அலுவலகம் மற்ற பலவிதமான சர்க்கார் காரியாலயங்கள் அங்கே இருப்பது பொருத்தமானதுதான். பல்லடம் ஒரு பெரிய தாலுகாவாக இருக்கிறது. அதனால் அதை இரண்டாகப் பிரித்து, பல்லடம் தாலுகா என்றும், திருப்பூர் தாலுகா என்றும் ஏற்படுத்தினால், பல்லடத்திலே அரசாங்கக் காரியாலயங்கள் போன்றவை வருவதற்கும் வளர்ச்சி குன்றிப்போன அந்தப்



பகுதியில் வளர்ச்சி ஏற்படவும் வழி ஏற்படும். அந்தச் செயற்குறிப்பு ஏதாவது அரசின் கவனத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை அந்தப் பகுதி மக்களால் வைக்கப்பட்டிருக்கிறது. தலைநகரை மாற்றுகின்ற நிலை ஏற்படாவிட்டாலும்கூட, திருப்பூரை ஒரு வட்டமாகவும், பல்லடத்தை ஒரு பகுதியாகவும் ஆக்குகின்ற அளவுக்குப் பல்லடம் வட்டம் பெரிதாக இருக்கிற காரணத்தால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. வட்டமாக ஆக்குகின்ற அளவுக்கு சாத்தியக் கூறுகளும் அதனுடைய அடிப்படைத் தன்மைகளும் இருக்கின்றனவா என்பதை ஆராயுமாறு வருவாய்த் துறை கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதனுடைய முடிவைப் பொறுத்து நாம் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் பகுதியிலே இருக்கக்கூடியவர்களும் சூலூர் பகுதியிலே இருக்கக்கூடியவர்களும் பிரச்சினைகளை ஒட்டி திருப்பூர் நகரத்திற்குத்தான் வரவேண்டியிருக்கிறது. எனவே, அவர்களுக்கு வசதியான முறையிலே ஒரு குறைந்தபட்ச மாற்று ஏற்பாடு என்ற முறையில் பல்லடத்தில் ஒரு நிரந்தரமான அலுவலகத்தை, தாலுகா அலுவலகக் கடமைகளைச் செய்கின்ற முறையிலே நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு இல்லை. எந்த வகையிலே அந்தப் பகுதியை மேம்பாடு அடையச் செய்வதற்கு முடியும் என்பதைப் பற்றி தனியாகத்தான் ஆராய வேண்டும்.

**திரு. ஆர். செங்காளியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தாலுகாவானது நீண்ட நாட்களாக பல்லடம் தாலுகா என்று முன்னாலேயே, வெள்ளைக்காரன் காலத்திலேயே அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்று பல்லடம் சூலூருக்கும் திருப்பூருக்கும் மத்தியிலே இருக்கிறது. சூலூரானது கோவைக்கு,

ஒட்டிய பகுதியாக இருக்கிறது. திருப்பூரை ஒட்டியதாக இருக்கிறது. பல்லடம் என்பது மத்தியிலே உள்ள பகுதி. அது பின்தங்கிய பகுதியாகவும் இருக்கிறது. இப்போது அங்கே சில மாஜிஸ்திரேட் கோர்ட்களும் இருக்கின்றன. ஆகவே தாசில்தார் அலுவலகம் அங்கே ஏற்படுமானால் அந்த பகுதி அபிவிருத்தி பெறுவதற்கும் தொழில்கள் வளருவதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதை உணர்ந்து அதைப்பற்றிய முடிவை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக ஒரு வட்டத்தை உருவாக்குகின்ற அத்தகைய சூழ்நிலை ஏற்படுகிறபோது அந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பதிலே பல்வேறு இடர்ப்பாடுகள் மற்றவைகள் இருக்கின்றன. ஏற்கெனவே ஒரு தாலுகா அலுவலகம் அமைந்து பல ஆண்டுகளாக செயல்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அமைந்து வருகிற ஒரு இடத்தில் இருப்பதை எடுத்து பல்லடத்திற்கு மாற்றுவது என்பது கடினமான செயலாக அமையும். அதுமட்டுமல்லாமல் அதன் மூலம் ஏற்படுகிற பலன்களையும் மற்றவைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டால் அது இயலாததாக அமையும். மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய வினாவிற்கிணங்க பல்லடம் தனியாகவும், திருப்பூர் தனியாகவும் இரண்டாக ஏற்படுகிற சூழ்நிலை வருகிறபோது பல்லடம் தனி வட்டமாகவோ அல்லது அதோடு வேறு சில பகுதிகளைச் சேர்த்து அது ஒரு தனி வட்டமாகவோ ஆகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று பல்லடத்தைத் தலைநகரமாகக் கொண்டு அங்கே அலுவலகம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படக்கூடும். இப்படி மாநிலத்திலே பல இடங்கள் இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்திலே குளத்தூர் வட்டம் என்று இருக்கிறது. ஆனால் அதற்குத் தலைநகர் கீரனூரிலேதான் இருக்கிறது. அதைப்போலவே உடையார் பாளையம் என்ற வட்டம் இருக்கிறது. அதற்குத் தலைநகர் ஜெயங்கொண்டானிலே இருக்கிறது. நான் முதலிலே சொன்னபடி மக்களுடைய நலன்கள், வசதிகள், நிர்வாக வசதிகள் ஆகியவற்றைக் கருத்தில் வைத்து நாம் பணிகளை மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.





**திரு. எல்ல. இராசமாணிக்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தமிழகத்திலே உள்ள பெரிய தாலுகாக்களை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் அரசின் ஆய்வில் உள்ளதா? அதேபோல் சைதை தாலுகா மிகப் பெரிய தாலுகாவாக இருக்கிறது. அதை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பெரிய தாலுகாக்களை இரண்டாகப் பிரிக்கின்ற குறிப்புகள் எதுவும் இல்லை. குறிப்பாக சில தாலுகாக்களை அவை பெரிதாக இருக்கின்ற தன்மையைக் கருதி, நிர்வாக வசதியைக் கருதி அவ்வப்போது பிரித்துக் கொண்டு வருகிறோம். அந்த வகையில் அண்மையில் 25, 30 தாலுகாக்கள் உருப்பெற்று எழுந்திருக்கின்றன.

### வன, மீனளத் துறையை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

**198—(* வினா எண் 10584) திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைமைச் செயலகத்தில் வன, மீனளத் துறையை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தில் வனம் மற்றும் மீன் துறையை இரண்டாகப் பிரிப்பது பற்றிய பலாபலன்கள் அரசால் ஆராயப்பட்டு வருகின்றன.

### செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்தல்.

**292—(* வினா எண். 12476) திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டம் இப்போது 13 தாலுகாக்களைக் கொண்ட மாவட்டமாக இருக்கிறது. அது அதிக ஜனத்தொகை கொண்ட மாவட்டமாக இருக்கிறது. சைதை, ஸ்ரீபெரும்புதூர் போன்ற தாலுகாக்களைப் பிரிக்கக்கூடிய அளவுக்கு ஜனத்தொகை கூடிவிட்டிருக்கிறது. அரக்கோணம், செய்யாறு போன்ற தாலுகாக்களைக்கூட செங்கற்பட்டு மாவட்டத்திலே இணைக்கவேண்டுமென்ற கோரிக்கை மக்கள் மத்தியில் இருக்கிறது. கலெக்டர் அலுவலகம் சைதையில் வாரம் ஒருமுறை கூடுகிறது. போலீசைப் பொறுத்தவரையில் அங்கே இரண்டு மாவட்டங்களாகச் செயல்பட்டு வருகின்ற நிலை இருக்கிறது. அதைவிடச் சிறிய மாவட்டங்களையெல்லாம் இரண்டாகப் பிரிக்கின்ற நிலை இருக்கிறது. ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்தைப் பற்றி மட்டும் ஏனோ, பல காரணங்களினால் எந்தவிதமான பேச்சும் இல்லாமல் இருக்கிறது. எனவே அரசு உடனடியாக அதை இரண்டாகப் பிரித்து அரக்கோணம், செய்யாறு பகுதிகளை இணைத்து—இப்போது அந்த மாவட்டத்தின் தலைநகர் ஒரு கோடியிலே இருப்பதால்—அதை மாற்றி நடுத்தர வட்டத்திலோ அல்லது கிழக்கு மேற்கிலோ ஒரு மாவட்டத்தை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்ற செயற்குறிப்பு இப்பொழுது இல்லை. ஆனால், ஏற்கனவே, பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்ற அக்கறை செயற்குறிப்பு, படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று சொல்லி, அதற்கான முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கோவை



மாவட்டம் முதலிலே இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, இராமநாதபுரம், திருநெல்வேலி, வட ஆற்காடு, மதுரை, தஞ்சாவூர், தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் பிரிக்கப்படும் என்றும் அவை படிப்படியாகப் பிரிக்கப்படும் என்றும் நாம் கூறியதற்கிணங்க, இராமநாதபுரம் மாவட்டம் ஏற்கனவே மூன்றாகப் பிரிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் அறிவார்கள். அதற்குப் பிறகு, மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதை அறிவார்கள். அதற்குப் பிறகு சென்ற ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. அதற்கடுத்து, வட ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படுவதற்கான முயற்சியிலே இந்த ஆண்டு அரசு ஈடுபடும் என்றும் எடுத்துச் சொல்லப்பட்டது. ஆண்டுக்கு ஒரு மாவட்டத்தைப் பிரிக்கின்ற அளவில்தான் செலவு இடம் கொடுக்கும். ஏனென்றால், ஒரு மாவட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்றால், கிட்டத்தட்ட ரூ. 12 கோடி தொடராச் செலவு ஏற்படுகிறது; தொடரும் செலவு ரூ. 3½ கோடியிலிருந்து ரூ. 4 கோடி ஆகிறது. அந்த அடிப்படையிலே இனி பிரிக்க வேண்டிய மாவட்டங்களாக அறிவித்த அளவு வட ஆற்காடு மாவட்டம் இருக்கிறது, திருச்சி மாவட்டம் இருக்கிறது, தென் ஆற்காடு மாவட்டம் இருக்கிறது, தஞ்சாவூர் மாவட்டம் இருக்கிறது. அதற்குப் பிறகு மற்ற மாவட்டங்கள் கவனத்திற்கு வரும். அப்பொழுது செங்கற்பட்டு கவனிக்கப்படும்.

**திரு. கடலூர் இ. வி. வேலு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் இந்த ஆண்டு பிரிக்கப்படும் என்று முன்னவர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது எந்தத் திங்களிலிருந்து துவக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு என்றுதான் சொல்ல முடியுமே தவிர, திங்கள், நாள், நேரம், நாழிகை (சிரிப்பு) ஆகியவற்றை எல்லாம் இப்பொழுது எடுத்துச் சொல்வதற்கில்லை. ஆனால், அதற்கான அதிகாரிகள் ஏற்கனவே ஓரளவுக்கு அந்த மாவட்டத்தில் எந்த, எந்த தாலுகாக்களைப் பிரிக்கலாம், என்ன, என்ன வகையிலே கோட்டங்களைப் பிரிக்கலாம் என்ற அளவுக்குக் குறிப்புகளைத் தந்திருக்கிறார்கள். அதை அரசு

மட்டத்தில் ஆராய்ந்து. அமைச்சரவை மட்டத்திலும் முடிவெடுத்த தற்குப் பிறகு, அதற்காகத் தனி அதிகாரி போட வேண்டும். தனி அதிகாரி போட்டதற்குப் பிறகு, அந்த அலுவலகங்கள் எல்லாம் வைப்பதற்கான வாய்ப்புக் கூறு, மற்றவை ஆராயப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் இதைத் துவக்குவதற்கான முடிவுகள் எடுத்ததற்குப் பிறகு நாள், நேரம் எல்லாம் குறிப்பிடப் படும். இப்பொழுது இந்த ஆண்டு என்றுதான் பொதுவாகச் சொல்லப்படும்.

**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற பொழுது, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டாகிவிட்டன. அதற்குப் பின்னாலே ஒன்றன்பின் ஒன்றாகப் பிரிக்கப்படும் வகையில் தஞ்சை மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் என்று குறிப்பினை எடுத்துச் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்திற்கு முன்னாலேயே தஞ்சை மாவட்டத்தைப் பிரிக்கப் போவதாக அறிவிப்புகள் வெளி வந்தன. ஆனால், தஞ்சை மாவட்டத்திற்கு முன்னதாக வட ஆற்காடு மாவட்டம் போய் விட்டது மகிழ்ச்சியாக இருந்தாலும், தஞ்சை மாவட்டத்தை இந்த ஆண்டே பிரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பு தந்திருப்பதற்கு இணங்க இப்பொழுது எடுத்து உடனடியாக மேற்கொள்ள வேண்டிய மாவட்டமாக வட ஆற்காடு மாவட்டம்தான் இருந்திருக்கிறது.

**திரு. என். விஜயபாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பிரித்து, தில்லையாடி வள்ளியம்மை மாவட்டம் அமைப்பதாக தமிழக அரசு அறிவித்து இருந்தது. மயிலாடுதுறையைத் தலைநகரமாகக் கொண்டு அந்த மாவட்டம் அமைக்க செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக் கேள்வி செங்கற்பட்டு மாவட்டத்தைப் பற்றியது.

THIRU T. VENKATA REDDI : Hon. Speaker, Sir, though my question is different and does not relate to Chengalpattu district....

Mr. SPEAKER : You will not get an answer. There is no use in asking.

**திரு. இரா. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்கள் விடை அளிக்கும்போது, செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு இல்லை யென்று சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற செயற்குறிப்பு இருக்கிறது என்று சொன்னதற் கிணங்க, வட ஆற்காடு மாவட்டத்தைப் பிரிக்கும்போது, செங்கற்பட்டிற்கு அருகில் இருக்கிற அரக்கோணம் போன்ற தாலுகாக்களை, செங்கற்பட்டோடு சேர்த்து, செங்கற்பட்டையும், வட ஆற்காட்டையும் ஒன்றாகச் சேர்த்து, மூன்றாகப் பிரித்து, திருவள்ளூரைத் தலைநகராக வைத்து, பெயர் வைத்து, பிரிக்க செயற்குறிப்பு மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை. 2, 3 மாவட்டங்களை ஒன்றாக ஆக்கி, மறுபடியும் 3, 4 ஆக மாற்றுவது என்றால் மறுபடியும் அதற்கு காலம் பிடிக்கும். அதற்கு தனியாக ஆய்வுக் குழு போட வேண்டும். பிறகு தனியாக கிளர்ச்சி கூட நடைபெறும். அதை இதிலே சேர்க்க வேண்டுமென்றும், இதை தலைநகராக்க வேண்டுமென்றும், இதை சேர்த்து தான் தாலுகா தலைநகராக்க வேண்டுமென்றும் கிளர்ச்சி வரும். தலைநகர் மட்டுமல்ல தொகுதிக்காகவும் கூட பிரச்சினைகள் வரும். இதற்கே 2, 3 ஆண்டுகள் ஆகும். எனக்கும் சௌகரியமாகத்தான் இருக்கும். (சிரிப்பு) ஆனால் இப்போது அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1987 மார்ச் 27

திரு. சோ. கலிதீர்த்தான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மாவட்டங்களைப் பிரிப்பது பற்றி சொல்லும்போது இந்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்தைப் பிரிப்பது பற்றி கூறினார்கள். அதைப் போல தென்னாற்காடு மாவட்டமும் பெரிய மாவட்டமாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது.) (பதில் இல்லை)

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைப் பிரிக்கின்ற உத்தேசம் இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகரமான காஞ்சி புரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கின்றபோது செங்கற்பட்டை தலைநகராகக் கொண்ட ஒரு மாவட்டத்தையும், காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட இன்னொரு மாவட்டத்தையும் உருவாக்கி பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

Mr. SPEAKER : It is only a demand, it is not a question. நீங்கள் கேள்வி கேட்கவில்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொறடா திரு. துரை கோவிந்தராசன் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வட ஆற்காடு மாவட்டத்தைப் பிரிப்பது பற்றிதான் தற்போது பரிசீலிக்க இருப்பதாகச் சொன்னார்கள். முன்பு தஞ்சை மாவட்டத்தை 3 ஆகப் பிரிப்பதாக அறிவிக்கப்பட்டது. அதை எப்போது பிரிப்பார்கள் என்று அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பிரிப்பது பற்றிய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். அது குறிப்பிலே இல்லாமல் போய் விட்டதோ, அல்லது குறிப்பிலேயிருந்து விடுபட்டுப் போய்விட்டதோ என்று எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அடுத்த ஆண்டிலாவது தஞ்சை மாவட்டத்தைப் பிரிப்பது பற்றி குறிப்பிலே சேர்க்கும் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1987 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் அவர்களின் கேள்விக்கும் சேர்த்து அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லையென்று சொன்னதுடன் கேள்வியே முடிந்துவிட்டது. அதற்குப் பிறகு 'எக்ஸ்ட்ரா' வாக சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதன்மீது உறுப்பினர்கள் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னேன். ஏற்கெனவே எடுத்த முடிவின்படி வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் பிரிக்கப்பட வேண்டுமென்று செயற்குறிப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் அடுத்தடுத்து பிரிக்கப்பட இருக்கின்றன. அடுத்து பிரிக்கப்பட இருப்பது வட ஆற்காடு மாவட்டம். அந்த அளவுக்குத்தான் இங்கே சொல்லப் பட்டிருக்கிறது. மற்றவைகள் அடுத்தடுத்து பிரிக்கப்பட வேண்டும். இப்போது அதுபற்றி சொல்லுவதற்கில்லை. பின்னர் அறிவிக்கப்படும்.

திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் மாவட்டம் எப்போது உதயம் ஆகும்? (பதில் இல்லை).

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் போது அரசு இந்த இந்த மாவட்டத்திற்கு இன்ன இன்ன பெயர் என்று ஜி.ஓ. போடுவதற்குத் தயாராக இருக்கிறது. இதற்கு இடையில் மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது ஒரு பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் வைக்கப் பட்டிருக்கிறது, என்றாலும் சில அரசியல்வாதிகள் செங்கற்பட்டு மாவட்டம் தான் அண்ணா மாவட்டம் என்று தபாலில் எழுதிக் கொண்டு குழப்பத்தை உண்டு பண்ணுகிறார்கள். தபால் துறையினருக்கு திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்ட மாவட்டம் தான் அண்ணா மாவட்டம் என்று தனியாகக் கடிதம் எழுதுவதற்கு அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

அப்படி விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்குமேயானால் நம்முடைய மாநிலத்திற்கும் அந்த விதிவிலக்கைக் கேட்டுப் பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை என்று சொன்னாலும்கூட, தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இது பாதிக்கப்படக்கூடிய கேள்வியாக இருக்கின்ற காரணத்தால் விடையளிக்கிறேன். 15 சதவீதம் மத்திய அரசாங்கம் மத்திய ஒதுக்கீட்டுக்குக் கொடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருப்பது உண்மைதான். நாம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும் மத்திய அரசாங்கம் 15 சதவீதத்திற்கு உண்டான இடத்திற்கு நோட்டிபிகேஷன் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறார்கள். இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அவர் கேட்கும் பொழுது, மற்றைய மாநிலங்களுக்கு ஏதேனும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டார்கள். உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலேயே ஜம்மு-காஷ்மீருக்கும், ஆந்திராவிற்கும் விதிவிலக்கு உண்டு என்று அளித்திருக்கிறார்கள். விதிவிலக்கு அளித்ததற்கு வேறு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியவில்லை. எல்லாவற்றையும் சேர்த்து அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்புக் கொள்ளப்பட்டபடி மருத்துவப் பல்கலைக் கழகம் எந்தத் தேதியிலிருந்து அல்லது எந்த மாதத்திலேயிருந்து செயல்படத் தொடங்கும் என்பதை குறிப்பாக அறிவிக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் கொஞ்சம் சீக்கிரமே கொண்டு வர வேண்டுமென்றுதான் ஆர்வம் காட்டிக் கொண்டிருக்கிறது. மசோதா தயாராகிவிட்டது. இன்னும் கொஞ்சம் பரிசீலனை முடிந்தவுடன் அநேகமாக இன்னும் ஒரு வார காலத்திற்குள் இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படலாம் என்று கருதுகிறேன்.



**திரு. டி. எம். வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவப் பல்கலைக் கழகத்தைத் துவக்குவது குறித்து உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறோம். இருந்தாலும் மருத்துவக் கல்லூரிகளிலே படித்தவர்களை, கிராமங்களிலே வேலை செய்ய வேண்டுமென்று மருத்துவர்களைப் பணிக்கின்ற நேரத்திலே அங்கே போய் வேலை செய்யாமல், வேலையிலே சேர்ந்த உடனே விடுமுறை போட்டுச் சென்று விடுகிறார்கள். இப்படிச் செல்வதால் கிராமப்புற மக்களுடைய மருத்துவ நலன் மிகவும் பாதிக்கப்படுகிறது. அவர்கள் மீதெல்லாம் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மருத்துவர்களுமே போய் விடுகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. சில மருத்துவர்கள் அப்படிப் போவது உண்மைதான். போகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பதவியிலிருந்து அவர்கள் நீக்கப்படுவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை :** தலைவரவர்களே, இப்போது உத்தேசிக்கப் பட்டிருக்கிற மருத்துவப் பல்கலைக் கழகம், கோவையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் இயங்குவதைப்போல, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, சென்னையைத்தான் தலைமையிடமாகக் கொண்டு ஆரம்பிக்க அரசு உத்தேசித்திருக்கிறது.

**திரு. மா. சின்னராசு :** தலைவரவர்களே, பல்வேறு மருந்து களுக்கான ஆராய்ச்சிகள், மனித உடல் காக்கும் மருந்துகளுக்கான ஆராய்ச்சிகூட நம்முடைய கால்நடை மருத்துவமனைகளில் (வெட்டரினரி ஹாஸ்பிட்டல்ஸ்) தான் மேற்கொள்ளப்படுகிறது. ஆகவே, கால்நடை மருத்துவக் கல்லூரிகளையும் உத்தேச மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கின்ற செயற் குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'ஜெனிடிக்ஸ்' பற்றி குறிப்பிடு கிறார்கள் என்று கருதுகிறேன், இப்போது மருத்துவமனை

களிலேயே அதற்கு என்று தனிப் பிரிவு இருக்கிறது. அதை மேலும் விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**டாக்டர் அ. பொன்னுசாமி:** தலைவரவர்களே, மருத்துவத் துறையில் புரட்சியை ஏற்படுத்தியுள்ள மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரை, ஏற்பட இருக்கிற மருத்துவப் பல்கலைக் கழகத்திற்குச் சூட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அதற்கு பெயர் வைப்பது பற்றி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களால் ஆணையிடப்பட்டிருப்பது 'தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகம்' என்பது.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்:** தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் பெரும் முயற்சியினாலும் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு நிதி அமைச்சர் ஆகியோரது ஆதரவினாலும் பெரியார் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்கப்படவிருக்கிறது. ஆகவே, மருத்துவப் பல்கலைக் கழகத்தையும் அங்கே தொடங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இதை அவரவர் தொகுதிக்குக் கொண்டுபோக முடியாது; கொண்டு போகவும் கூடாது. சென்னையில் தொடங்க அரசு முடிவு செய்திருக்கிறது.

### அரசு மருத்துவக் கழக மருத்துவமனைகள்.

201—(* வினா எண். 4931) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கட்டண முறையில் வைத்திய வசதி செய்ய அரசே மருத்துவக் கழகம் (Tamil Nadu Hospital Corporation) ஏற்படுத்தி மருத்துவமனைகள் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.



**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசு மருத்துவமனைகளுக்குப் போகின்ற பொதுமக்களிடம் ஓரளவு கட்டணம் வசூல் செய்தால்கூட பரவாயில்லை, சிறந்த வசதி பெற வேண்டுமென்று விரும்புகிறார்கள். பக்கத்தில் இருக்கிற கேரள மாநிலத்தில் கூட்டுத் துறையில் இப்படிப்பட்ட அரசாங்க மருத்துவமனைகளை ஆரம்பித்து இருப்பதற்கு பொது மக்களிடம் சிறந்த வரவேற்பு இருக்கிறது. அங்கே சிறந்த நிர்வாகத்தை மேற்கொள்ள முடிகிறது. ஆகவே, அரசாங்கத் துறையில் 'தமிழ்நாடு ஹாஸ்பிட்டல்ஸ் கார்ப்பரேஷன்' ஆரம்பித்து, குறைந்த கட்டணத்தில் மருத்துவ வசதி, அறுவை சிகிச்சை அளிப்பதற்கு இனிமேலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டிற்கு ஒரு தனிப் பெருமை உண்டு. தமிழ்நாட்டில்தான் பெரிய அறுவை சிகிச்சைகள் கூட இலவசமாகச் செய்யப் படுகின்றன. இந்தியாவிலேயே தமிழ்நாட்டிற்குத்தான் இந்தப் பெருமை உண்டு. ஆனால் வசதி படைத்தவர்களிடம் கட்டணம் வாங்கலாம் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று கருதுகிறேன். இப்போது அந்தத் திட்டம் இல்லை. சில மருத்துவமனைகளில் ஓரளவு கட்டணம் வாங்கிக் கொண்டு சில பேர்களுக்கு சில 'பெட்டு' களைச் செய்கிறார்கள். மற்றபடி யாரிடமும் எந்தப் பணமும் வசூல் செய்யப்படுவதில்லை. ஆனால் நல்ல வசதி படைத்தவர்கள் சிகிச்சை பெற வந்தால், அவர்களுடைய வருமானம் அதிகமாக இருந்தால், தங்குகிற அறைக்கும் மற்றவற்றிற்கும் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** தலைவரவர்களே, தனியார் மருத்துவ மனைகள் கூடுதலாகப் பெருகிக்கொண்டே வருகின்றன. தற்போதுள்ள நிலைமையில் ஒரு பெட்டிக்கடை வைப்பதாக இருந்தால் கூட அரசாங்கத்தில் லைசென்ஸ் பெற வேண்டும். எந்தத் தொழில் நடத்தப்படுவதாக இருந்தாலும் அதைக் கட்டுப் படுத்த லைசென்ஸ் பெறும் முறை இருக்கிறது. இன்றைக்கு

தனியார் மருத்துவமனைகளில் உரிய படிப்பு படிக்காதவர்களை மருத்துவர்களாகவும், நர்சுகளாகவும் நியமித்துவிட்டு, சிகிச்சை பெற வருகின்றவர்களிடம் கூடுதல் கட்டணமும் வசூல் செய்கிறார்கள். இந்தக் குறைகளைப் போக்க, தனியார் மருத்துவ மனைகளைக் கட்டுப்படுத்த, 'பிரைவேட் நர்சிங் ஹோம்ஸ் ரெகுலேஷன் ஆக்ட்' ஒன்றைக் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தனியார் மருத்துவமனைகள் என்று சொல்லி, சில வசதிக் குறைவான மருத்துவமனைகளைத் தொடங்கிவிடுவதால், அங்கே சிகிச்சை பெறச் செல்கிற சில பேர் உயிரிழக்கக்கூடிய கட்டாயம் ஏற்படுகிறது. அதை எல்லாம் அரசு கண்காணித்து, ஒரு இறுதி முடிவுக்கு வந்த பிறகு, தனியார் மருத்துவமனைகளாக இருந்தாலும் அவற்றைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லி, அதற்கு ஒரு சட்டம் இயற்றலாமா என்பது குறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

(முற்பகல் 10-30)

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, அறைக்குக் கட்டணம், மற்றும் சிலவற்றுக்குக் கட்டணம் பெற்றுக் கொண்டு, பெரிய அளவிலான கட்டணமாக இல்லாமல், கொடுக்கக்கூடிய சக்திக்கு ஏற்ப பெற்றுக் கொண்டு, மருத்துவ வசதிகளை விரிவு படுத்துகின்ற முறையில் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் (டிஸ்டிரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிட்டல்ஸ்) இப்படிப்பட்ட வசதிகளைச் செய்து கொடுப்பது சரியானது. மற்ற பல மாநிலங்களில் இப்படிப்பட்ட நடைமுறை இருக்கிறது. மற்ற மாநிலங்களில் இருப்பதைப்போல இங்கே கட்டணம் வசூல் செய்யலாம் என்ற யோசனை இல்லை என்று சொன்னார்கள். அதனால் இன்றைக்கு ஏற்பட்டு வருகிற தனியார் மருத்துவ மனைகளில் பயங்கரமான ஒரு பெரிய சுரண்டல் நடைபெறுகிறது ; ஏழை எளிய மக்கள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். அவர்கள் நம்மைவிட நல்ல எக்விப்மென்ட்ஸ் வைத்து இருக்கிறார்கள். அங்கே வேலை செய்கிற டாக்டர்களும் மற்றவர்களும் அரசாங்கத்தினிடத்தில் படித்து, அதாவது



போகிறார்கள்.
அரசாங்க மருத்துவமனைகளிலிருந்து தான்
அவர்களுக்கு சரியான சம்பளமும் மற்ற வசதிகளும் ஏற்படுத்திக்
கொடுத்து, இந்தக் கட்டணத்திற்கு ஒரு லிமிட்டையும்
ஏற்படுத்திக் கொடுத்தால் நிச்சயமாக இந்த நல்ல காரியத்தைச்
செய்ய முடியும். அதற்காகவாவது அரசு உடனே ஒரு சட்டத்தை
உருவாக்க முயற்சிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த அரசு மருத்துவத்துறையைப் பொறுத்தவரையில்
இலவசமாகத்தான் மருத்துவ வசதி வழங்குவது என்று முடிவு
எடுத்திருக்கிறது. அதிலும் குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு
மருத்துவம் செய்வதில் புரட்சித் தலைவருடைய அரசுக்கு
எந்தவித மாற்றமும் செய்வதாக உத்தேசம் இல்லை. வசதி
படைத்த மற்றவர்களிடத்திலிருந்து கட்டணம் வசூலிப்பது
குறித்து நான் ஏற்கெனவே சொன்னேன். அவர்களுடைய
வருவாயைப் பொறுத்து அவர்களிடத்திலிருந்து நாம் கட்டணம்
வசூலிக்கிறோம். தனியார் மருத்துவமனைகளில் இருக்கிற
வசதிகள் நம்முடைய மருத்துவமனையில் இல்லை என்று குறிப்
பிட்டார்கள். சில இயந்திரங்கள் தனியார் மருத்துவமனைகளில்
சரியாக வைக்கப்பட்டு இருப்பதும் உண்மைதான். அரசுத்
துறையில் வாங்கி மருத்துவமனைகளில் வைக்கப்பட்டிருக்கிற பல
இயந்திரங்களில் சில பழுதுபட்டு இருப்பதும் உண்மைதான்.
இவற்றை எல்லாம் மொத்தமாக இப்போது சீர்படுத்திக்கொண்டு
வருகிறோம். ஆராய்ந்துகொண்டு வருகிறோம். இவற்றை
எல்லாம் ஒழுங்காக எப்படி கண்காணிப்பது, பழுதுபடாமல்
எப்படிப் பாதுகாப்பது என்பது பற்றி அரசாங்கம் ஒரு ஆராய்ச்சி
செய்து கொண்டிருக்கிறது. விரைவில் முடிவு எடுப்போம்.
தனியார் துறை மருத்துவமனைகளில் இருக்கிற இயந்திரங்களை
விட சிறந்த இயந்திரங்களை நமது மருத்துவமனைகளில் வாங்கி
வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. கோ. வீரய்யன்:** பேரவைத் தலைவர் அவர்களே,
தனியார் நடத்தக்கூடிய மருத்துவமனைகளில் போதிய வசதி
இல்லை என்பதால் உயிரிழப்பு கூட ஏற்படுகிறது என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அடுத்து

சொல்லும்போது சில கருவிகள் தனியாரிடம் இருக்கின்றன என்று சொன்னார்கள். அரசு மருத்துவமனைகளில் இல்லாத கருவிகள் பல, அதாவது பல், கண், காது, தொண்டை போன்ற வைத்தியங்களுக்குத் தேவையான கருவிகள் தனியாரிடத்தில் இருக்கின்றன. ராலைக மருத்துவமனை மாவட்டக் தலைமை மருத்துவமனையாக இருந்தும் அங்கே வைத்தியத்திற்குச் சென்றால் தனியாரிடம் சென்று அதற்கான டெஸ்டைச் செய்துகொண்டு வாருங்கள் என்று எழுதி அனுப்புகிறார்கள். அந்த நிலையை மாற்றி, இப்படிப்பட்ட கருவிகளை அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தித் தருவதற்கு, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல் வைத்தியத்தைப் பற்றிக் குறிப்பிட்ட காரணத்தால் அதைப்பற்றிச் சொல்கிறேன். சென்னையிலே இருக்கிற பல் மருத்துவக் கல்லூரி ஆசியாவிலேயே மிகச் சிறப்புடையது. இங்கே இருக்கிற இயந்திரங்கள் போல் வேறு எங்கும் இல்லை என்று சொல்லலாம். அந்த அளவுக்கு சிறப்பான இயந்திரங்கள் எல்லாம் சென்னையிலே இருக்கின்ற பல் மருத்துவக் கல்லூரியில் இருக்கின்றன. மாவட்டங்களில் எங்கெங்கு குறைபாடுகள் இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் களைவதற்கு அரசு தயாராக இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் எழுதிக் கொடுத்தால் அதை அரசு பரிசீலிக்கும்.

திருமதி பி. லட்சுமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திரா மாநிலத்தில் 'த்ரீ டயர் சிஸ்டம்' உள்ளது. அதுபோல் இங்கேயும் கொண்டுவரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, 'த்ரீ டயர் சிஸ்டம்' ஆந்திரா மாநிலத்திலே எதிலே இருக்கிறது என்பது புரியவில்லை. மருத்துவத் துறையில் 'த்ரீ டயர் சிஸ்டம்' கொண்டு வந்து புகுத்துவது என்பது இயலாத காரியம். நாம் வைத்திருக்கிற 'சிங்கிள் டயர் சிஸ்டம்' ஒழுங்காகப் போனாலே போதும். இதிலே இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். வசதி படைத்தவர்களிடத்திலேயிருந்து கட்டணம் வசூலிக்கின்ற முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். அதை நிறுத்துவதாக உத்தேசம் இல்லை.





திருமதி கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற அரசு மருத்துவமனைகளில் இருக்கின்ற ஸ்பெஷலிஸ்ட்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் எல்லாம் தனியார் மருத்துவமனைகளில் சென்று பணியாற்றுகிறார்கள். ஸ்பெஷலிஸ்ட்கள் எல்லாம் சேர்ந்து தனியார் மருத்துவமனையை நடத்துகிற காரணத்தால் அது மிகப் பிரசித்தி பெற்றதாகவும், அரசு மருத்துவமனை மிகவும் க்ஷீண திசை அடைந்துவிட்டதைப் போலவும் தோன்றுகிறது. ஆகவே ப்ரைவேட் ஹாஸ்பிட்டல் என்று சொல்லப்படுகிற தனியார் மருத்துவமனைகளுக்கு அவர்கள் செல்லாமல் இங்கேயே பணியாற்றக்கூடிய அளவில் அவர்களைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் அரசு ஏதேனும் முடிவு எடுத்து இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒட்டுமொத்தமான ஒரு கேள்வியாகும். பொதுவாக தனியார் மருத்துவமனைகளில் சென்று பணியாற்றுகிற நமது மருத்துவர்களுக்கு கன்சல்டேஷனுக்குத்தான் அனுமதி அளித்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வியை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. சில மருத்துவர்கள் மருத்துவமனைக்கு வந்த நோயாளிகளைக் கூட அங்கே பரிசோதனை செய்துவிட்டு பிறகு வெளியே தனியார் மருத்துவமனைகளில் அவர்களைச் சேர்த்து அதே டாக்டர்கள் அங்கே போய் அறுவை சிகிச்சை போன்ற மருத்துவ சிகிச்சைகளைச் செய்கிறார்கள். இதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது. அப்படி ஏதேனும் ஒரு மருத்துவர் அரசாங்க மருத்துவமனையில் சேர்ந்த நோயாளியை அங்கேயே மருத்துவம் செய்யாமல் வெளியே வரச் சொல்லி இவரே போய் வெளியே அவருக்கு மருத்துவம் செய்திருப்பாரேயானால் அப்படி ஏதேனும் தகவல் வந்தால் அந்த மருத்துவர் மீது அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: பேரவைத் தலைவர் அவர்களே. நூற்றுக்கணக்கான வியாதிகளுக்கு பல் தொடர்பான வியாதியே காரணம் என்று உணரக்கூடிய நிலையில், ஆசியாவிலேயே மிகச் சிறந்த பல் மருத்துவமனை சென்னையில்

இருக்கிறது என்றாலும் அதைப் போன்ற இன்னொரு மருத்துவமனையைத் தமிழகத்தில் திருச்சி அல்லது மதுரை போன்ற இடத்தில் அமைக்க ஏதாவது குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர் களே, தற்சமயம் இல்லை. தற்சமயம் இல்லை என்றால் எதிர் காலத்தில் வரக்கூடும் என்பதற்காகத்தான் தற்சமயம் இல்லை என்று சொன்னேன்.

தேவகோட்டை, கண்ணன்குடி ஒன்றியங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

202—(* வினா எண். 9280) திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் தேவ கோட்டை ஒன்றியம், கண்ணன்குடி ஒன்றியம் ஆகியவைகளில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேவகோட்டை ஒன்றியத்தில், திருவேகம்பட்டில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், கண்ணன்குடி ஒன்றியத்தில் அமைந் தான்குடியில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வரு கின்றன. தேவகோட்டை ஒன்றியம், கண்ணன்குடி ஒன்றியம் ஆகியவைகளில் மேலும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவும் செயற்குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் திருவேகம்பட்டில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. ஆனால் அது மாவட்டப் பிரிவினையில் இராமநாதபுரம் மாவட்டத் தோடு சேர்ந்து இருக்கிறது. தற்சமயம் அது தேவகோட்டை ஒன்றியத்தோடு சேர்க்கப்படவில்லை. எனவே தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாமல் இருக்கிறது. அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்றும் அதேபோல கண்ணன்குடி ஊராட்சி ஒன்றியத்தில் கண்ணன்குடியில்தான் ஆஸ்பத்திரி இருக்கிறது. 15, 20 மைல் சுற்றளவில் வேறு எந்த ஆஸ்பத்திரியும் கிடையாது. எனவே அதையும் மறு பரிசீலனை செய்து அங்கேயும் ஆஸ்பத்திரி அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர் களே, ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிப்பதற்கு என்று சில அடிப்படை விதிகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று வைத் திருக்கிறோம். 30 ஆயிரம் ஜனத்தொகை கொண்ட இடத்தில்தான் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கேட்பவர்கள் பத்தாயிரம் ரூபாயும், 5 ஏக்கர் பூமியும் இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்று விதி வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு—150 என்று நினைக்கிறேன்—150 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதியதாகத் துவக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி அளித் திருக்கிறார்கள். அது எங்கெங்கே துவக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி கருத்துரு பரிசீலிக்கும்போது அதுவும் பரிசீ லிக்கப்படும்.

திரு. கா. சொர்ணலிங்கம்: தலைவர் அவர்களே, தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திலேயும் வேலாயுதப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியத்திலேயும் திருவேகம்பட்டு பகுதியில் உள்ள முப்பேரி ஊராட்சி ஒன்றியத்திலேயும் ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது அமைச்சர் அவர் களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? அது விரைவில் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 27

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல இடங்களில் கேட்டிருக்கிறார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல. எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கலாம் என்பதைப் பற்றி இன்னும் முடிவு எடுக்கவில்லை. அதாவது இடத்தைப் பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை. அதை எடுக்கும்போது இவைகளையெல்லாம் பரிசீலிக்கலாம்.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய இலக்கணத்திற்கு ஏற்ப பல இடங்களில் முப்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை இருந்து, அதேபோல 10 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 லட்சம் ரூபாய் வரையில் கொடுத்திருக்கிறார்கள் என்று செய்தி இருக்கிறது. நான் என்னுடைய தொகுதியைப் பற்றி கூறியிருக்கிறேன். இதுவரையில் அந்தப் பகுதிகளில் ஆஸ்பத்திரிகள் ஆரம்பிக்கப் படவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, அது போல் ஒன்றல்ல, பல இடங்களில் இப்படி 10 ஆயிரம் ரூபாய் பணமும் கொடுத்து 5 ஏக்கர் நிலமும் கொடுத்திருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் 150 இடங்களில் 150 நிலையங்கள் திறக்க வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு 10, 15 இடங்களில்தான் திறந்து வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு 150 என்று வைத்திருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற அந்தக் குறை நீங்கும் என்று நான் கருதுகிறேன்.

**திருமங்கலம் தொகுதி கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்தல்.**

202—(*வினா எண் 11252) திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதியில் உள்ள மேல ஊப்பனூர், கப்பலூர் ஆகிய ஊர்களில் உள்ள கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனின், அதன் விபரம் என்ன?



1987 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (ஆ): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியிலுள்ள மேல் ஊப்பனூர், கப்பலூர் ஆகிய ஊர்களில் உள்ள கள்ளர் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப்பள்ளிகளாக உயர்த்த மதுரை கள்ளர் சீரமைப்பு தனித் துணை ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதன் மீது உசிலம்பட்டி மற்றும் பெரியகுளம் ஆகிய மாவட்ட கல்வி அலுவலர்களிடம் அறிக்கை கோரப்பட்டு கருத்துரைகள் கிடைத்த பின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதியில் உள்ள மேல ஊப்பனூர், கப்பலூர் ஆகிய ஊர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் இருக்கிற பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர், அந்தப் பகுதிகளிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்கிறார்கள். இந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். பிறமலைக் கள்ளர் சமுதாயத்தினர் நாட்டை வெள்ளையன் ஆண்டபோது குற்றப் பரம்பரையைச் சார்ந்தவர்களாகக் கருதப் பட்டு இளைஞர்கள், வயதுக்கு வந்தவர்கள் காவல் நிலையத்தில் வந்து இரவு படுத்துக் கொள்ள வேண்டும் என்ற கொடுமையான பழக்கம் இருந்தது. நாடு சுதந்திரம் பெற்ற பிறகுதான், அந்த குற்றப்பரம்பரையினர் சட்டமும், கைரேகைச் சட்டமும் ரத்து செய்யப்பட்டன. ரத்து செய்யப்பட்டாலும் அந்த சமுதாயத்தினர் பொருளாதார நிலையிலும், சமுதாய நிலையிலும் மிகவும் பின் தங்கியிருக்கிறார்கள். ஆகவே முன்னுரிமை கொடுத்து இந்த இரண்டு இடங்களிலும் உள்ள பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக இந்தக் கல்வி ஆண்டிலேயே, ஜூன் மாதத்திலேயே ஆக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில், சமுதாயத்தில் மிகவும் பிற்பட்டு இருக்கிற பிறமலைக்கள்ளர் சமுதாயத்தினர் மீது நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு தனிப்பட்ட முறையில் அக்கறை உண்டு. இந்த இரண்டு பாடசாலைகளை உயர்தரப்

பாடசாலைகளாக ஆக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுத்து வருகிறது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் உயர்தரப் பாடசாலைகளாக ஆக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இந்தப் பிறமலைக் கள்ளர் பள்ளிகள் கள்ளர் சீரமைப்புத் துறையினால் நடத்தப்பட்டு வருகின்றன. மதுரை மாவட்டத்தில் இருக்கிற திருமங்கலம், உசிலம்பட்டி, பெரியகுளம் போன்ற பகுதிகளில் இந்தப் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் என்ன காரணத்தினாலோ இந்தப் பள்ளிகள் பல ஆண்டுக் காலமாக சீரமைக்கப்படாமல் இன்னும் பழுதுபட்ட நிலையிலேயே இருந்து வருகின்றன. இன்னும் சொல்வேன், அந்தப் பள்ளிகளில் இருக்கிற ஜன்னல்கள், கதவுகள், மேஜை, நாற்காலிகள், கரும்பலகைகள் உடைந்து பாழடைந்த நிலையில் இருக்கின்றன. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு முன்னுரிமை கொடுத்து இவைகளையெல்லாம் சீரமைப்பதற்கு உத்தரவை இந்த ஆண்டு பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இதற்காக ஒரு ஆலோசனைக் குழு சமீபத்தில்தான் நிறுவப்பட்டுள்ளது. இந்தக் கூட்டம் நடக்கும்போது எங்கெங்கு குறைபாடுகள் இருக்கின்றன என்று தெரிவிப்பார்களானால், அதுபற்றி பரிசீலித்து நிச்சயமாக நடவடிக்கையெடுக்கப்படும்.

**திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலம் இந்த கப்பலூர், மேலஉரப்பனூர் தவிர மீதமிருக்கிற நடுநிலைப் பள்ளிகளில் பெரும்பாலானவற்றை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை கல்வி இலாக்காவிற்கு கள்ளர் சீரமைப்புத் துறையினால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அதை விரைவுபடுத்தி இந்த நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்பு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கு அரசாங்கம் எந்தவிதமான தயக்கமும் காட்டாது. தனிச்சலுகை அளிக்கும் என்பதை நான் உத்தரவாதமாகவே தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** தலைவர் அவர்களே, கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலம் மதுரை மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களில் புதியதாக நடுநிலைப் பள்ளிகள், உயர்தரப் பள்ளிகள் துவங்குவதற்கு உத்தேசமிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, என்னிடத்தில் அந்தப் பட்டியல் இல்லை. தனியாகக் கேள்வி கேட்டால் அதுபற்றிய விவரம் சொல்கிறேன்.

## முத்துப்பேட்டையில் சிறிய மீன்பிடித் துறைமுகம்.

204—(* வினா எண். 11628) திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முத்துப்பேட்டை பகுதியில் சிறிய மீன்பிடித் துறைமுகம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்துப்பேட்டை பகுதியில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**திரு. பொ. உத்திராபதி :** தலைவர் அவர்களே, முத்துப்பேட்டையில் வாழக்கூடியவர்களில் பெரும்பகுதியினர் ஏழை முஸ்லீம்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள். அவர்கள் இரவு புறப்பட்டுச் சென்று மீன் பிடித்துக் கொண்டு வந்தால் ஆற்றிற்கு அருகிலே அந்த மீன்களைக் கொண்டு சேர்ப்பதற்கு முடியவில்லை. நடு ஆற்றில் போட்டை நிறுத்தி வைத்து விட்டு, அங்கேயிருந்து மீனைக் கொண்டு வந்து கரையிலே சேர்த்து அதற்குப் பிறகு

விற்கக்கூடிய ஒரு அவலநிலை இருக்கிறது. ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் திட்டம் இல்லையென்றாலும் கூட அந்தப் பகுதி மக்களின் நிலையை கருத்தில் கொண்டாவது அந்த ஏழை மக்கள் மீனை சுலபமாகக் கொண்டு வந்து கரை சேர்ப்பதற்கு எதிர்காலத்திலாவது உரிய ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, எங்கெங்கே இதைப்போல சிறிய மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்க முடியுமென்பதைப்பற்றி பெங்களூரில் உள்ள மத்திய கடலோரப் பொறியியல் ஆய்வு மையம் தமிழகக் கடலோரப் பகுதிகளில் ஆய்வு செய்தது. அதிலே முத்துப்பேட்டை இடம் பெறவில்லை. முத்துப்பேட்டையில் சாத்தியக்கூறுகள் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். என்றாலும் முத்துப் பேட்டைக்கு கிழக்கே 27 கி.மீ. தொலைவில் உள்ள கோடியக்கரை என்னும் இடத்தில் ரூ. 14.40 லட்சம் செலவில் டி. எச். ஜட்டியும், தெற்கே சுமார் 25 கி.மீ. தொலைவில் மல்லிப்பட்டினத்தில் ரூ. 10.60 லட்சம் செலவில் ஒரு சிறிய படகுத் துறையும் அமைக்கப் பட்டுள்ளது. இது தவிர முத்துப்பேட்டையில் இப்போது இதனை அமைக்க சாத்தியக்கூறு இல்லையென்று பெங்களூரில் இருக்கிற மத்திய கடலோர பொறியியல் ஆய்வு மையம் தெரிவித் திருப்பதால் இப்போது இதுபற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

**திரு. பொ. உத்திராபதி:** தலைவர் அவர்களே, தற்போது முடியாவிட்டாலும் கூட இதற்கு அடுத்த பகுதிகளாக இருக்கிற தொண்டியகாடு, தில்லைவிளாகம், இரும்பாவனம், கரையான்காடு, கருப்பநாதன்குளம், விளாங்காடு, செங்காடு போன்ற பத்து பஞ்சாயத்துகளில் வாழக்கூடியவர்கள் 98 சதவீதம் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் 3, 4 கி.மீ. சேற்றில் நடந்து கடலுக்குச் சென்று, அதற்குப் பிறகு மீன்பிடித்து இந்த 3, 4 கி.மீ. நடந்து வந்து இரால்களையும், மீன்களையும் கரைக்குக் கொண்டுவந்து விற்பனை செய்து வருகிறார்கள். ஆகவே இதற்காக இரண்டு நாள் மௌக்கெட்டர்ல்தான் மீனைக் கொண்டு வர முடிகிறது. முத்துப்பேட்டையிலும், அதையடுத்த பகுதி களிலும் சுமார் 5 ஆயிரம் இளைஞர்கள் மீன் பிடிக்கிறார்கள். நான்





கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், அந்தப் பகுதியிலே மீன் பிடிப்பவர்களுக்கு வசதியாக துறைமுகமோ அல்லது வேறு ஏற்பாடோ செய்வதற்கு, அரசு அதிகாரிகள் மூலமாக ஒரு குழு அமைத்து, அந்தக் குழு அந்தப் பகுதிக்குச் சென்று, நேரிலே அந்தப் பகுதியிலுள்ள நிலைமையைக் கண்டறிந்து, அதன் பிறகாவது அரசு சிபாரிசு செய்து, அந்த அடிப்படையில் எதிர் காலத்திலே நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதிலிருந்து ஒரு உண்மை தெரிகிறது. 3 அல்லது 4 கிலோ மீட்டர் சேற்றிலே நடந்து சென்று, மீன் பிடிக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கும்போது அங்கே துறைமுகம் கட்ட சாத்தியக் கூறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப் பற்றி அரசு, அதிகாரி களைக் கொண்டு ஆராயச் செய்யும்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூரில் உள்ள ஆய்வு மையம் ஆய்வு செய்த இடங்களில் கன்னியாகுமரி மாவட்டம், முட்டம் பகுதி இடம் பெற்றிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இது தஞ்சை மாவட்டத்திலே இருப்பதைப் பற்றிய கேள்வி. கன்னியா குமரி மாவட்டத்திற்கு இப்போது வர முடியாது.

**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, என்னுடைய தொகுதியான வால்பாறையில் இருக்கக்கூடிய சோலையாறு டாம், ஆளியாறு டாம், அப்பர்-ஆளியாறு டாம் மற்றும் பக்கத்திலே இருக்கக்கூடிய பரம்பிக்குளம் போன்ற இடங் களில் நிறைய மீன் விளைகிறது. ஆனால் அந்த மீனை எடுத்து நாம் பயன்படுத்த முடியாத அளவிற்கு இண்டர்-ஸ்டேட் பிராப்ளம் உருவாகியிருக்கிறது. அதைப் போக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய ஆசைப்படு கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, மீன் விளையாது, மீனை வளர்க்கவேண்டும். அப்படி inter-State problem இருப்பதாக இதுவரையில் அரசுக்கு எந்தவிதமான தகவலும் இல்லை. அப்படி ஏதேனும் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அதைப் பற்றி எழுதித் தந்தால் அரசு பரிசீலிக்கும்.

**தமிழகத்தில் போக்குவரத்துக் கழக மோட்டல்கள்.**

91—(* வினா எண். 6068) **திரு. க. சோலைராசு :** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் போக்குவரத்துக் கழகங்கள் எத்தனை மோட்டல்களை நடத்தி வருகின்றன ?

(ஆ) மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டியில் எப்போது தொடங்கும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) போக்குவரத்துக் கழகங்கள் தற்சமயம் 10 மோட்டல்களை நடத்தி வருகின்றன.

(ஆ) மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டியில் மோட்டல் 17—1—1986 முதல் இயங்கி வருகிறது.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஆரம்பிக்கப்பட்டிருக்கிற மோட்டல்களின் கட்டிட அமைப்பு சரியான முறையில் அமைக்கப்படாததால், கழிப்பிட வசதியின்றி பொதுமக்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். அதே போல் இந்த மோட்டல்களை நடத்துகிறவர்கள், அதன் சமையல் கூடங்கள் போன்றவற்றை முறையான அளவில் கட்டாததால் அங்குள்ளவர்களும் துன்பப்படுகிறார்கள். எனவே வரக் கூடிய காலங்களில் சிறப்பான முறையில் இவைகளை அமைக்க வழிவகை செய்யப்படுமா? மேலும் ஏற்கனவே நடைபெறுகிற மோட்டல்களில் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இப்படி ஒரு அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களோடு பேசியபோது அவர்கள் கருத்துச் சொல்லியதற்குக் காரணம், பல இடங்களில் வண்டிகள் போய் நிற்கிறபோது, தனியார்கள் நடத்துகிற அந்த சிற்றுண்டிச்சாலைகள் சரியாக இல்லை. எனவே இதை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு, அது துவக்கப்பட்டது. இந்த அரசினுடைய நோக்கமாக, குறைந்தபட்சம் 50 கி.மீட்டருக்கு ஒரு மோட்டல் இருக்க வேண்டும் என்ற ஏற்பாட்டோடு, நாம் இந்த வேலைகளை முதலிலே துவக்கியிருக்கிறோம். ஆரம்பக் கட்டத்திலே 100 கிலோ மீட்டருக்கு ஒன்று என்று துவக்கினாலும், காலப்போக்கிலே முடிவு அடைகிறபோது, 50 கி. மீட்டருக்கு ஒரு மோட்டல் என்று வர வேண்டும் என்று நாங்கள் ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். இதற்கு இடம் கிடைப்பதே பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஏற்கனவே இப்போது ஏறக்குறைய 10 இடங்களிலே நான் சொன்னது மாதிரி அவைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லா இடங்களிலும் வசதியான அளவிற்கு கட்டிடங்கள் கட்ட வேண்டும் என்று நாம் நினைத்தாலும், உடனடியாகச் செய்ய வேண்டும் என்ற காரணத்தால் கழிப்பறை வசதிகளை மட்டும் சிறப்பாகச் செய்து கொடுத்துவிட்டு, மற்றபடி கொஞ்சம் கூரைக் கட்டிடங்களாக இருந்தாலும் கூடப் பரவாயில்லை, நல்ல உணவு கொடுப்பதற்கு அங்கே ஏற்பாடுகளைச் செய்தால் போதும் என்ற நிலைமையில் இந்த ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். எனவே நிதிப் பிரச்சினையின் காரணமாக இதையெல்லாம் உடனடியாகச் செய்ய முடியவில்லை என்றாலும், அடிப்படை வசதியான கழிப்பறை போன்ற வசதிகளை உடனே செய்து விட்டு, மற்ற வசதிகளை தொடர்ந்து செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி அமைக்கப்படுகிற அந்த மோட்டல்களின் எதிர்ப்புறம் அழகான முறையில் பூங்கா அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். பூங்காக்கள் அமைக்க போதிய பொருளாதார வசதி இல்லை என்று சொன்னால், மற்ற வங்கிகள்

அல்லது தனியார் அல்லது அதை நடத்தக் கூடியவர்களே விரும்புகிறார்கள் என்று சொன்னால், கடைக்கு எதிர்ப்புறம் உள்ள பகுதிகளில் அழகான வடிவம் அமைத்து, பூங்காக்கள் அமைக்கப்படுமா? மேலும் மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்குச் செல்கிற அந்தப் பாதையிலே தங்குகிற உணவு கிடைக்கக்கூடிய இடங்கள் சரியான அளவில் இல்லை. எனவே, மேட்டுப்பாளையத்திலேயிருந்து ஊட்டிக்குச் செல்கிற இடையில் ஒரு மோட்டல் அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். அங்கே அடிப்படை வசதிகளைச் செய்வதற்கு மிகத் திண்டாட்டமான நிலையிருக்கிறது. காரணம் எல்லா இடங்களிலேயும் ஒரேகாலத்திலே செய்யவேண்டும் என்று நாம் முயற்சி எடுக்கவேண்டிய காரணத்தால் இந்தப் பிரச்சினை இருக்கிறது என்று சொன்னேன். எனவே இந்தச் சூழ்நிலையில் பூங்கா அமைப்பது உண்மையிலே உடனடியாக நடக்க முடியாத காரியம். மேலும் பேங்க் போன்ற நிறுவனங்களுக்கும் மற்றும் தனியார்கள் யாருக்காவது கொடுக்கவேண்டும் என்றும், அப்படிக் கொடுத்தால் அவர்கள் அதைச் செய்வார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைத் தெரிவித்தார்கள். சாதாரணமாக அவர்கள் நகரத்தினுடைய எல்லைக்குள்ளே செய்வதற்குத்தான் தயாராக இருப்பார்களே தவிர, அங்கே செய்வது என்பதும் அவைகளைப் பராமரிப்பது என்பதும் அவர்களுக்கு சிரமமாக இருக்கும். இருந்தாலும் அதைக் கேட்டுப் பார்க்கலாம்.

(முற்பகல் 10-50)

அடுத்து மேட்டுப்பாளையத்திற்கும் ஊட்டிக்கும் இடையில் இந்த மோட்டல்கள் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவே அதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். இடத்தைப்பற்றித்தான் பிரச்சினையாக இருக்கிறது. இடம் கிடைத்த உடன் அதைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



## தலைமைச் செயலகத்தில் மின்தடை.

92—(*வினா எண் 9200) **திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் அடிக்கடி மின் தடை ஏற்படுவது உண்மையா?

(ஆ) அதை நீக்குவதற்கு மாற்று ஏற்பாடு ஏதும் செய்யப் பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. ஆகவே அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

## தென்பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்.

93—(*வினா எண். 10348) **திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலூர்பேட்டை—தியாகதுருகம் சாலையில் தென் பெண்ணையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி இன்னும் தொடங்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

[1987 மார்ச் 27

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இப்பாலம் கட்டும் பணிக்காக விரிவான ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாய்வுப் பணிகள் முடிக்கப்பட்டதும் விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படும். அதன் பின்னர் ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டு இப்பாலம் கட்டும் பணி செயல்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்படும்.

**கடலூர் துறைமுகத்தை விரிவுபடுத்தல்.**

94—(* வினா எண். 10509) திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் துறைமுகம் விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பட்ஜெட்டிலே கடலூர் துறைமுகம் விரிவுபடுத்தப்படும் என்று இருக்கிறது. ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்லும்போது இந்தக் கேள்விக்கு இடம் இல்லை என்று சொல்லுகிறார்கள். அந்த முன்பு நல்லமுறையில் துறைமுகம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. ஆகவே அதை விரிவுபடுத்துவதற்கான செயற் குறிப்பை எடுத்துக்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அங்கே ஏறத்தாழ 20 லட்ச



1987 மார்ச் 27]

ரூபாய் அதற்காகச் செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னால் 30 லட்ச ரூபாய் ஒதுக்கி பல்வேறு பணிகள் அங்கே செய்யப்பட்டு இருக்கின்றன. இந்த ஆண்டு கூட 11 லட்ச ரூபாய் செலவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு இந்த அளவுக்குத்தான் பணம் ஒதுக்க முடியும் என்ற காரணத்தால் விரிவுபடுத்துகிற எண்ணம் இல்லை என்றுதான் சொன்னேன். அங்கு இருக்கின்ற முக்கியத்துவத்தைக் கருதி எதிர்காலத்தில் அது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கோ. செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது வருங்காலத்தில் விரிவுபடுத்தப்படும் என்று சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே அந்தத் துறைமுகத்தைச் சேர்ந்தாற்போல் 2 ஆறுகள் ஓடுகின்றன. அவைகள் அந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கு ஒரு நல்ல அமைப்பாக இருக்கின்றன. ஆகவே அங்கே இருக்கின்ற கெடிலம் ஆறு, பெண்ணை ஆறு ஆகிய ஆறுகளிலிருந்து [illegible] வரை அங்கே சரக்குகளை ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் வசதியாக அவைகளையும் சேர்த்து செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் தீட்டப்படுகிறபோது இவைகளை எல்லாம் ஆய்வு செய்யலாம்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை துறைமுகத்தை விரிவுபடுத்தும் திட்டம் [illegible] பயணிகளை ஏற்றிச்செல்லும் துறைமுகமாக [illegible] இருந்த இந்த நாகை துறைமுகம் [illegible] இருக்கிறது. மத்திய அரசுக்கு [illegible] எழுதியபோது; மாநில அரசு விரிவு [illegible] மேற்கொண்டு மத்திய [illegible] செய்யும் என்று அமைச்சர் [illegible] ஆகவே, நாகை துறைமுகத்தை [illegible] திட்டம் ஏதாவது தற்போது உள்ளதா ? அப்படி [illegible] அதன் மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் [illegible] அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட்டால் சரியாக இருக்கும். மத்திய அரசு இதற்குப் பணம் ஒதுக்குகிறோம் என்று அவருக்கு எழுதியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். பல்வேறு திட்டங்களுக்குப் பணம் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். இன்னும் கூட வராமல் காலதாமதம் இருந்து கொண்டு தான் இருக்கிறது. எனவே நிதிப் பிரச்சினை என்பது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஒன்றாகத்தான் இருக்கிறது. இருந்தாலும், அதைப்பற்றித் தனியாக கேள்வி போட்டால் கொஞ்சம் விரிவாக பதில் சொல்ல வாய்ப்பு இருக்கும்.

திரு. கடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் நாம் எல்லாம் பாலம் கட்டவேண்டும் என்று சொல்லுகிறபோது அமைச்சர் அவர்கள் முயற்சியால் பாலம் கட்டப்படும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் தயவால், போக்குவரத்துத் துறை 1986-87 ஆம் நிதி ஆண்டில் ஆணை பிறப்பிக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு வரை இது துவக்கப்படவில்லை. கேட்டால் இது இன்வெஸ்டிகேஷன் டிபார்ட்மெண்டில் ஆய்வுக் கட்டத்தில் இருக்கிறது என்று சொல்லிவிடுகிறார்கள். எனவே அந்த அதிகாரிகளின் மெத்தனமான போக்கு அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்விக்குத்தான் இது சம்பந்தம். இருந்தாலும் இதற்குப் பதில் சொல்லவேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சாதாரணமாக இதுவரை ஒரு பாலம் கட்டவேண்டும் என்று சொன்னால் இந்த இடத்தில் பாலம் கட்டவேண்டும் என்ற அந்தக் கோரிக்கை மட்டும்தான் அரசுக்கு அனுப்பப்படுகிறது. அப்படி அரசுக்கு அனுப்பப்படுகிறபோது அவர்களுடைய மேலோட்டமான மதிப்பீடு போடப்படுகிறதே ஒழிய அதைப் பற்றிய முழுமையான ஆய்வு செய்யப்பட்டு எவ்வளவு தேவை என்பது எல்லாம் முழுமையாகத் தெரிவிப்பது இல்லை. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், சொல்லுகிறேன். இப்படித் தெளிவாக இல்லாத காரணத்தால் எவ்வளவு செலவாகும்



என்பதை அவர்கள் கணக்கிடாமல் அரசுக்கு அனுப்பி விடுகிறார்கள். அரசு ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் அவர்கள் முழுமையாக ஆய்வு செய்கிறார்கள். அப்படி ஆய்வு செய்கிறபோது ஒவ்வொரு கட்டத்திலும் அதற்குக் காலதாமதம் ஏற்படத்தான் செய்கிறது. அந்தக் காலம் அவசியமாக அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமா என்று அந்த வல்லுநர்களை அழைத்து நான் கேட்டபோது சொன்னார்கள். அந்தக் காலம் கொடுக்கப்பட வேண்டும், இல்லை என்றால் திட்டமே கெட்டாலும் கெட்டுவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணத்தால் முதல்வரவர்கள் இப்போது அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு உத்தரவையிட்டார்கள். இனிமேல் அரசாங்கத்தாரப்பிலே அனுமதி கேட்டு வரக்கூடியவைகள் முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, எவ்வளவு தேவை, அதனுடைய மொத்த மதிப்பு என்ன என்று அத்தனையும் இதில் வந்து விட வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி இனிமேல் ஆய்வுக்கு வந்து அனுமதி கேட்டுவிட்டால், வேலையை உடனே துவக்குகின்ற ஒரு நிலையை ஏற்படுத்திவிட முடியும். எனவே மாற்று ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது.

## வாகனங்களுக்கு சாலை வரி வசூலித்தல்.

205—(* வினா எண். 11560) திரு. செ. செம்மலை: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிர்வாகச் சீர்திருத்தத்துறை பரிந்துரையின் அடிப்படையில் வாகனங்களை வாங்கும்போதே ஒரு தொகையை சாலை வரியாக வசூலிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இதுபற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர்

அவர்கள் இந்த ஆண்டு அளித்துள்ள நிதிநிலை அறிக்கையில் வாகன வரி மாற்றத்தின் மூலம் கிடைக்கிற அவ்வளவு தொகையையும் சாலைகளின் பராமரிப்புக்காக ஒதுக்கப் படுவதாகத் தெரிவித்துள்ளார். எனவே எதிர்காலத்தில் இப்படி சாலை வரி, வாகன வரி மூலம் கிடைக்கின்ற தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவீதத் தொகையை ஆண்டுதோறும் சாலைகளின் பராமரிப்பிற்காக ஒதுக்குகின்ற முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளுமா? அதற்காக நிதித் துறையினுடைய உதவியை அமைச்சரவர்கள் நாடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நான்-டிரான்ஸ்போர்ட் வெஹிகிளைப் பொறுத்தவரையில், மொத்தமாக வரியை வசூலித்துவிடலாம் என்பது கோரிக்கை. அரசாங்கத்திற்குக் கொஞ்சம் வேலையைக் குறைக்கும். அந்தப் பணத்தை கட்டக் கூடிய வாகனம் வைத்திருப்பவர்களுக்கும் அந்தப் பணியைச் சுலபமாக்கும் என்ற காரணத்தால், இப்படிப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சாலைக்காக வசூலிக்கப் படுகின்ற கூடுதலான அத்தகைய தொகையில் சாலைகளின் பராமரிப்பிற்காகவும், சாலையைப் புதுப்பித்துக் கொடுப்பதற் காகவும் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக அதன் மூலமாக ஒரு பெரிய மாற்றத்தை இப்போது இந்த நெடுஞ்சாலைத் துறையிலே ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன். ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை ஒதுக்குவதற்காக நிதியமைச்சர் அவர்களிடம் பேசியிருக்கிறோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். முழுவதுமே கொடுக்கவேண்டுமென்றும் எங்க ளுக்கு ஆசை தான். ஆனால் அதுவே முக்கியமான வருமானம் என்ற காரணத்தால் ஒரு குறிப்பிட்ட அளவிலே ஒதுக்கப்பட வேண்டுமென்று நிதித் துறையிலே கேட்பதற்கு இந்தத் துறைக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை. நிதித்துறையைப் பொறுத்திருக் கிறது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "வாகன வரியை வசூலிப்பதிலே இருக்கிற சிரமங்களைத் தவிர்ப்பதற்காக வாகன வரியைக் கூட ஒட்டுமொத்தமாக



வசூலித்து விடலாம்" என்று அமைச்சரவர்கள் ஒரு நிகழ்ச்சி யிலே பேசியிருப்பதாகப் பத்திரிகையிலே கண்டேன். அப்படி ஒட்டுமொத்தமாக வாகன வரியை வாகன ஓட்டிகளிடமிருந்து வசூலிப்பதும் ஒரு சுமையாக அமைந்து விடும். எனவே அந்தச் சுமையைக் குறைப்பதற்கு வாகனங்கள் வரி என்கிற வகையில் வாகனங்களில் பயன்படுத்துகின்ற டீசல், பெட்ரோல் இதுபோன்ற எரிபொருள்களின்மீது ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை, குறைந்த சதவீதத்தை வாகன வரியாகச் சேர்த்து வசூலிப்பதால், வாகன ஓட்டிகளுக்கும் சுமை இருக்காது, அதே சமயத்தில் அந்த வாகனங்களைப் பயன்படுத்துவோரிடமிருந்து நமக்கு வரி வந்து சேருமே, அந்த அளவிற்கு அந்த வகையில் வாகன வரியை மாற்றி அமைப்பதற்கு அமைச்சரவர்கள் தங்களுடைய பரிசீலனையோடு இந்த யோசனையையும் ஏற்றுக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, பலவிதமான சிக்கல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக் கிறது. வரியை எங்கே வசூல் செய்தாலும் அந்த வரியை வசூல் செய்வதற்கு ஒரு பணியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே அதன் காரணமாக இப்போது வண்டிகள் வாங்குகிறபோது அந்த வண்டிகளை வாங்கிக் கொண்டு வந்து ஆர்.டீ.ஓ. ஆபீசில் ரிஜிஸ்டர் செய்யும்போது ஒரு பணியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அரசு அதிகாரிகள் அந்தச் செய்கிறார்கள். எனவே அப்படிச் சேர்த்து ஒரு ஆண்டுக் காலம் அல்லது 6 மாத கால வரியை வாங்குகிறபோது, அதற்கு 10, 15 ஆண்டுக்கால வரியை வாங்கிவிட்டால் அதற்குப் பின்னால் அந்த வாகனத்திற்காக மீண்டும் வரி கட்ட வேண்டிய அவசியம் இருக்காது. அந்த வேலை நமக்கு மிச்சமாகிறது. எனவே ஒரு ஆண்டுக் காலத்திற்கு வரி வாங்கிய அந்த வேலையை 15 ஆண்டுகளுக்குச் செய்து விடுகிறபோது, நிச்சயமாக இந்த பிரச்சினை ஏற்படாது. வாகனம் வாங்குகிறவர்களுக்கும் ரூ. 20,000 போட்டு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்குகிறபோது, அதற்காக ஒரு தொகையைக் கட்டுவது என்பது சிரமமாக இருக்காது. எனவே இரண்டு பக்கமும் சுலபமாக இருக்கும் என்ற காரணத்தினால் தான் இந்த நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

[1987 மார்ச் 27

**மானாமதுரை ஆதி திராவிடர் செங்கல் உற்பத்தி தொழில் கூட்டுறவுச் சங்கம்.**

119—(* வினா எண். 8836) **திரு. க. பாரமலை:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் ஆதி திராவிடர்களுக்காக செங்கல் உற்பத்தி தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்போது ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகத்தில் இது சம்பந்தமாக ஒரு கருத்துரு உள்ளது. அக்கருத்துரு 1987-88 பகுதி 2 திட்டத்தின்கீழ் பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 11-00)

**திரு. க. பாரமலை:** தலைவர் அவர்களே, மானாமதுரையில் மட்பாண்டத் தொழிலுக்கும், செங்கல் தொழிலுக்கும் ஏற்ற மண் அதிகமாக இருக்கிறது. இந்தத் தொழிலில் பெரும்பகுதி மக்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது பக்கத்திலே பல்வேறு தொழில்கள் இன்றைக்கு வெகு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தொழிலுக்கும் சிறப்பான எதிர் காலம் இருக்கிறது. ஆகவே விரைவாக ஆரம்பித்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி இரண்டாவது திட்டத்திலே, சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அடுத்த பகுதி இரண்டாவது



1987 மார்ச் 27]

திட்டத்திலே சேர்க்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். எவ்வளவு விரைவாகச் செய்ய முடியுமோ அதற்கான முயற்சியை அரசாங்கம் செய்யும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 206 முதல் 210 வரை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றன.

**வாணியம்பாடியில் தோல் பதனிடும் ஆய்வு நிலையம்.**

120—(* வினா எண். 10402) **திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடியில் தோல் பதனிடும் தொழில் பற்றிய ஆய்வு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.**

**பட்டதாரி காவலர்களுக்கு பட்டதாரி படி வழங்கல்.**

1—வினா 1844—**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இதர அரசு அலுவலர்களுக்கும் அரசு நிறுவனங்களில் பணி புரிவோருக்கும் வழங்கப்படும் பட்டதாரிகள் அலவன்ஸ் காவல் துறையில் பணி புரியும் பட்டதாரி காவலர்களுக்கும் வழங்க செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

காவல் துறையில் பணி புரியும் இரண்டாம் நிலைக் காவலர்கள் குறைந்த பட்சக் கல்வித் தகுதியை விட அதிகக் கல்வித் தகுதி பெற்றிருந்தால், (அதாவது எஸ்.எஸ்.எல்.சி. பள்ளியிறுதித் தேர்வு தேறியவர்களுக்கு) மூன்று முன் ஊதிய உயர்வுகள் அளிக்கப்படுகின்றன.

ஆனால், பட்டதாரி காவலர்களுக்கு முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலைக் காவலர் பட்டதாரி படி என்று ஏதும் வழங்கப்படுவதில்லை. இது வழங்குவது குறித்த செயற்குறிப்பும் தற்போது நிலுவையில் இல்லை.

**கருங்காலக்குடி கிராமத்திலுள்ள சார்நிலைப் பதிவாளர் அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டிடம்.**

2—வினா 2320—திரு. க. வெ. வீராணம்பலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி கருங்காலக்குடி கிராமத்தில் இயங்கி வரும் சார்நிலைப் பதிவாளர் அலுவலகத்திற்கு நிரந்தரமாகக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

அரசின் நிதி நிலைமை காரணமாக கருங்காலக்குடி சார் பதிவகத்திற்கு நிரந்தரமான கட்டிடம் கட்ட தற்போது உத்தேசிக்கப்படவில்லை.

**தஞ்சை மருத்துவக் கல்லூரி 'காவேரி' மாணவியர் விடுதியில் தனி உணவுப் பிரிவு துவங்குதல்.**

3—வினா 2420—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி "காவேரி" மாணவியர் விடுதியில் தனி உணவுப் பிரிவு இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாகத் தனி உணவுப் பிரிவு துவங்கப்படுமா?



விடை—

(அ) ஆம்.

(ஆ) நிதி நிலைமை காரணமாக, தற்சமயம் தனி உணவகம் துவங்க இயலவில்லை.

**சென்னை நகரில் பட்டம் விடுவதைத் தடை செய்தல்.**

4—வினா 2484—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் சிறுவர்கள் 'பட்டம்' விடுவதைத் தடை செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) அதே போல், தனியார் நிறுவனங்கள் விளம்பர பலூன்கள் விடுவதைத் தடை செய்யும் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

(அ) ஏற்கனவே, 1888 ஆம் ஆண்டு சென்னை நகரக் காவல் சட்டம், பிரிவு 71, கூறு (XIV) படி பொது இடங்களில் பட்டம் விடுவது தண்டிக்கத் தகுந்த ஒரு குற்றமாகும். இருப்பினும் இந்தக் குற்றத்தைத் தடுக்க சென்னை நகரக் காவல் சட்டத்தில் தனியாக ஒரு விசேஷப் பிரிவை ஏற்படுத்துவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இல்லை.

**திருவில்லிப்புத்தூர் தொகுதியில் காவல் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டிடம்.**

5—வினா 2546—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் தொகுதி, வத்திராயிருப்பு காவல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 மார்ச் 27

6—வினா 2549—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிபுத்தூர் தாலுக்கா காவல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

7—வினா 2556—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் வடக்கு காவல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திருவில்லிப்புத்தூர் பூவானி பழப்பண்ணை பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டும் திட்டம்.**

8—வினா 2551—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூர் பூவானி பழப் பண்ணையில் பணியாளர்களுக்கான குடியிருப்பு கட்டும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.



1987 மார்ச் 27]

**சென்னை நகரில் மாநகராட்சி அனுமதியின்றி பழைய வீடுகளை புதுப்பித்தல், வீடுகள் கட்டுதல் ஆகியவற்றைத் தடுத்தல்.**

9—வினா 2587—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் மாநகராட்சி அனுமதியின்றி பழைய வீடுகளை புதுப்பிப்பது, வீடு கட்டுவது ஆகிய வேலைகளைத் தடுக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா?

விடை—

சென்னை மாநகராட்சிச் சட்டப் பிரிவு 236-ன்கீழ் அனுமதியின்றி புதிதாக வீடுகள் கட்டுவது, வீடுகளைப் புதுப்பிப்பது ஆகியவற்றிற்கு கட்டிடச் சொந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்க சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களின் சொந்தக்காரர்களுக்கு கட்டிட வேலையை நிறுத்துமாறு எச்சரிக்கை அனுப்பப்படுகிறது. மீறி கட்டுபவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு அவர்களுக்கு வழக்கு மன்றங்களின் மூலம் அபராதம் விதிக்கப்படுகின்றது. அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களை இடித்து அப்புறப்படுத்தவோ அல்லது முறைப்படுத்தவோ ஆணையருக்கு மாநகராட்சிச் சட்டத்தில் அதிகாரம் உள்ளது. மேலும், அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு தண்டனை வரி, வீட்டு வரியோடு தொடர்ந்து கட்டிடங்களுக்கு முறையாக அனுமதி வழங்கும் வரை வசூலிக்கலாம்.

**காருகுறிச்சி கிராமம் கன்னடியான் கால்வாய் மத்தியிலுள்ள பாலம்.**

10—வினா 3285—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மாதேவி தொகுதி (வடக்கு) காருகுறிச்சி கிராம ஆதிதிராவிடர் பகுதியில் கன்னடியான் கால்வாயின் மத்தியில் உள்ள பாலத்தை விரிவுபடுத்தும் பணி எப்போது துவங்கப்படும்?

[1987 மார்ச் 27

விடை—

இப்பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்ட வேண்டும் எனத் தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார். இப்பணிக்கு சுமார் ரூ. 7.00 இலட்சம் தேவைப்படுவதால், அரசின் குறுகிய நிதிநிலை காரணமாக உடனடியாக எடுத்துச் செய்ய இயலவில்லை.

## மேலூர் மருத்துவமனையில் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு அமைத்தல்.

**11—வினா 4272—திரு. க. வெ. வீரானம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூர் அரசு மருத்துவ மனையில் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் மேலூர் அரசு மருத்துவ மனை 63 படுக்கைகள் கொண்ட வார்டு, பல் சிகிச்சை பிரிவு, சித்தா பிரிவு, எக்ஸ்ரே ஆய்வு கூடத்துடன் இயங்கி வருகிறது. எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவு அமைக்க கருத்துரு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை

## கடத்தூர் காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்புகளுக்கு கட்டிடம் கட்டும் திட்டம்.

**12—வினா 4309—திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் கடத்தூர் காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்புக்கு கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கென ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?



1987 மார்ச் 27]

விடை—

(அ) ஆம்.

(ஆ) பெரியார் மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் வட்டம் கடத்தூர் கிராமத்தில் சர்வே எண். 81/1-ல் 2 ஏக்கர் நிலத்தைக் கடத்தூர் காவல் நிலையம் மற்றும் குடியிருப்புகள் கட்ட நில எடுப்பு செய்யும் பொருட்டு நிலக் கிரயமாக ரூபாய் 23,000 ஒப்பளிப்பு அளித்து 20—8—1985 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண் 2032-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவினங்களின் மதிப்பீடு குறித்து காவல் துறை இயக்குநர் பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரிடம் கேட்டுள்ளார். பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளரிடம் இருந்து திட்ட மதிப்பீடுகள் பெற்ற பின் நிதி ஒதுக்கீடு குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதனிடையே பெரியார் மாவட்டக் கூடுதல் ஆட்சித் தலைவரை நில எடுப்பு குறித்து நடவடிக்கை எடுத்து நில எடுப்புச் சட்டம் பிரிவு 4(1)-ன் கீழ் வரைவு அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) கடத்தூர் கிராமத்திலுள்ள இரண்டு ஏக்கர் நிலம் காவல் துறை வசம் ஒப்படைக்கப்பட்ட பின், கடத்தூர் காவல் நிலையம் மற்றும் காவலர் குடியிருப்பு கட்டும் திட்டம் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## திருமலையம் பாளையத்தில் நூல் நிலையம் அமைக்கும் திட்டம்.

**13—வினா 4330—திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி திருமலையம் பாளையம் பேரூராட்சி பகுதியில் திருமலையம் பாளையத்தில் நூல் நிலையம் அமைக்க திட்டம் உண்டா?

(ஆ) எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தக்கலை காவல் நிலையத்திலுள்ள காவலர் மற்றும் முதல்நிலைக் காவலர் பதவிகள்.**

14—வினா 4507—திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

தக்கலை காவல் நிலையத்தில் காலியாக இருக்கும் காவலர் மற்றும் முதல் நிலைக் காவலர் பதவிகளுக்கான இடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

1985 ஆம் ஆண்டு, காவலர் பதவிக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 123 பேர்கள் டிசம்பர் மாதம் காவல் பயிற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஆறு மாத கால பயிற்சி முடிந்தவுடன், எழு இரண்டாம் நிலைக் காவலர் காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**பத்மநாபபுரம் அரசு மருத்துவமனை.**

15—வினா 4512—திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் அரசு மருத்துவ மனையில் உள்நோயாளிகளுக்குப் படுக்கை வசதியை அதிகப்படுத்த அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.





**திருக்கோயிலூர், ரிஷிவந்தியம் ஒன்றியங்களில் ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கல்.**

16—வினா 4803—திரு. சு. சிவராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கோயிலூர், ரிஷிவந்தியம் ஒன்றியங்களில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு 1985-86 ஆம் ஆண்டில் வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேருக்குத் தரப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருக்கோயிலூர், மற்றும் ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கத் திட்டமிடப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அதனடிப்படையில் திருக்கோயிலூர் ஒன்றியத்தில் 349 பேர்களுக்கும், ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் 136 பேர்களுக்கும் வீட்டுமனை வழங்கப்படும்.

**ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனை.**

17—வினா 5065—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் அரசு மருத்துவ மனையில் உள் நோயாளிகளின் படுக்கை எவ்வளவு உள்ளது?

(ஆ) அதனை அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

(அ) மொத்தம் 40 படுக்கைகள் உள்ளன.

(ஆ) இல்லை.

[1987 மார்ச் 27

**நீலகிரி மாவட்டத்தில் கட்டப்படும் விவசாயக் கிடங்குகள்.**

21—வினா 5724—திரு. கே. உச்சி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-86 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் எத்தனை விவசாயக் கிடங்குகள் கட்டப்பட உள்ளன ?

(ஆ) அவைகளின் உத்தேச மதிப்பீடு தொகை என்ன?

விடை—

(அ) 1985-86 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் விவசாயக் கிடங்குகள் கட்டப்படவில்லை.

(ஆ) வினா எழாது.

**குடும்ப கார்டுகளுக்கு வழங்கப்படும் பொருள்களின் எடையைக் கண்காணிக்க விசேஷ பறக்கும் சோதனைப் படை.**

22—வினா 5786—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நியாய விலைக் கடைகளில் குடும்ப கார்டுகளுக்கு வழங்கப்படும் பொருள்களின் எடையைக் கண்காணிக்க விசேஷ பறக்கும் சோதனைப் படை அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், 1984-85 ஆம் ஆண்டில் எத்தனை திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1984-85 ஆம் ஆண்டில் தமிழ்நாடு முழுமையும் 6,054 திடீர் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, 1,503 தணிக்கைகளில் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.



1987 மார்ச் 27]

**திருப்பூர் நடராஜா தியேட்டர் அருகில் நொய்யல் நதிப் பள்ளத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம்.**

23—வினா 5856—திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நஞ்சப்பா ஹைஸ்கூல் நடராஜா தியேட்டர் அருகிலுள்ள நொய்யல் நதிப் பள்ளத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

திருப்பூர் நஞ்சப்பா ஹைஸ்கூல் நடராஜா தியேட்டர் அருகிலுள்ள நொய்யல் நதிப் பள்ளத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**திண்டுக்கல் நகரின் மையப் பகுதிகளிலுள்ள குளங்களில் தேங்கும் சாக்கடை நீரை அகற்றல்.**

24—வினா 6119—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரின் மையப் பகுதிகளில் அமைந்துள்ள அரண்மனை குளம், அய்யன்குளம், கோபால் சமுத்திரம் குளம், மேட்டுராஜக்காபட்டிகுளம் ஆகிய குளங்களில் தேங்கும் சாக்கடை நீரை நகரத்தை விட்டு அப்புறப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

இந்நகராட்சி எல்லைக்குள் ஐந்து குளங்கள் உள்ளன. இவற்றில் அரண்மனைக்குளம், மேட்டு ராஜக்காபட்டி குளம் ஆகிய இரண்டும் (அரசு புறம்போக்கு) தாசில்தார் பொறுப்பில் உள்ளன. அய்யன்குளம், சொக்கலிங்கம் பிள்ளை குளம், கோபாலசமுத்திரம் குளம் ஆகிய மூன்றும் (அரசு புறம்போக்கு) நகராட்சி ஆணையர் பொறுப்பில் உள்ளனவாகும். இவற்றில் வந்து தேங்கும் சாக்கடை நீரை வெளியேற்ற போதுமான நிலம் ஏதுமில்லை. இதனை உபயோகப்படுத்த மாற்று நிலப் பகுதியும் இல்லை. எனவே நகரிலிருந்து வெளியாகும் கழிவுநீர் தேங்கும் இக்குளங்களில் உள்ள கழிவுநீரை வெளியேற்ற பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாததால் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலை உள்ளது.

[1987 மார்ச் 27

**மாவட்டங்களில் கைத்தறிக் கண்காட்சி அமைத்தல்.**

**25—வினா 6831—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டம்தோறும் கைத்தறிக் கண்காட்சி அமைத்து விற்பனையைப் பெருக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது?

**விடை—**

(அ) தற்பொழுது இல்லை.

(ஆ) கைத்தறிக் கண்காட்சிகள் பொதுவாக விற்பனையைப் பெருக்கும் நோக்கத்துடனேயே தள்ளுபடிச் சலுகையுடன் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கண்காட்சியை நடத்துவதற்கு முன்னர், எந்த எந்த இடங்களில் கண்காட்சிகள் நடத்தினால் கைத்தறித் துணிகளின் விற்பனை பெருக வாய்ப்புள்ளது என தீர ஆலோசிக்கப்பட்டு, இலாபகரமாக நடைபெறும் வாய்ப்புள்ள மாவட்ட தலைநகரங்களில் மட்டும் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன. எனவே, மாவட்டந்தோறும் கைத்தறிக் கண்காட்சிகள் நடத்தினால் இலாபகரமாக இருக்கும் என்று அறியப்பட்டால் அவ்வாறு மாவட்டந்தோறும் நடத்த வாய்ப்புண்டு.

**மாடுகளுக்கு கருத்தரிக்க பயன்படும் விந்துவிற்கு கட்டணம் வசூலித்தல்.**

**26—வினா 7224—திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாடுகளுக்கு கருத்தரிக்க வைக்க பயன்படும் விந்துவிற்கு கட்டணம் வசூலிக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) திரவவிந்து மூலம் கருவூட்டலுக்கு ரூபாய் ஒன்றும், உறைவிந்து மூலம் கருவூட்டலுக்கு ரூபாய் ஐந்தும் வசூலிக்கப் படுகிறது.



1987 மார்ச் 27]

**நீலகிரி மாவட்டத்தில் Litter Free Zone ஏற்படுத்தல்.**

**27—வினா 7680—திரு. கே. உச்சி :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நீலகிரி மாவட்டத்தில் Litter Free Zone ஏற்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப் பட்டவை எவை?

(இ) நடப்பு ஆண்டிலும் செயல்படுத்த உத்தேசம் உள்ளதா?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) பஸ் நிலையம் அருகில் கமர்சியல் சாலை, கேஸ் பஜார் சாலை மற்றும் எட்டின்ஸ் சாலை.

(இ) ஆம், மேலும் அரசினர் பூங்காவிலிருந்து படகு இல்லம் வரையிலும் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**சிவகாசி தொகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்கல்.**

**28—வினா 7867—திரு. வி. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் பல கிராமங்களில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவது காலதாமதம் ஆவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) விரைவில் பட்டாக்கள் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

(அ) காமராசர் மாவட்டம், சாத்தூர் வட்டம், சிவகாசி தொகுதியில், அரசு நத்தம் புறம்போக்கு நிலங்களில், இருபது அம்சத் திட்டத்தின் கீழும் மற்றும் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் எவ்வித காலதாமதமும் இல்லை. மேலும் வீட்டுமனைப் பட்டா கோரி வந்த எவ்வித மனுவும் நிலுவையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 மார்ச் 27

### குடவாசலில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தல்.

**29—வினா 7933—திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசலில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

தமிழ்நாட்டில் தீயணைப்பு நிலையங்கள் திறப்பதற்கான இடங்களின் முன்னுரிமை பட்டியலில் தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் இடம் பெற்றுள்ளது. அவ்வரிசைப்படி அரசின் நிதி நிலைமைக்கேற்ப குடவாசலிலும் ஒரு தீயணைப்பு நிலையம் திறக்கப்படும்.

### குடவாசல் ஒன்றியத்தில் சாலைகளை கருங்கல் ஜல்லி சாலைகளாக மாற்றல்.

**30—வினா 7936—திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி குடவாசல் ஒன்றியம் நெம்மேலி கிராமத்தை கருத்திற்கொண்டு 15 கி.மீ. தொலைவிலுள்ள நன்னிலம்—நெம்மேலி மருதவசேரி மானத்த குடி—கிள்ளியூர் சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றி போக்குவரத்து வசதி செய்து தரப்படும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

இத்தகைய செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை

**31—வினா 7954—திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்ககண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியத்தில், சிதக்கமங்கலம்—பம்மல்—தேதியூர் 6 கி.மீ. தொலைவுள்ள சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



136509

1987 மார்ச் 27]

**விடை—**

செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

**32—வினா 7959—திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், செருகளத்தூர் ராதாநல்லூர்—ஆரப்புலியூர் சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

N211,31 N87
N87-35.2 f3

**விடை—**

பரிசீலனையில் இல்லை.

**33—வினா 7985—திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் விஷ்ணுபுரம்—தேதியூர், வடுகர்பாளையம் சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

இத்தகைய செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**34—வினா 7988—திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம் நெடுஞ்சேரி—பத்தனை—செருவண்டூர் சாலையை கருங்கல் ஜல்லி சாலையாக மாற்றிடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

இத்தகைய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

## அழியாநிலை—மூக்குடி சாலையைத் தார்ச் சாலையாக மாற்றியமைத்தல்.

35—வினா 8124—திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி அறந்தாங்கி வட்டம், அழியாநிலை—மூக்குடி சாலையை தார்ச் சாலையாக மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கப்படும்?

(இ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) இதுபற்றிய செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

## உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டிடம்.

36—வினா 8275—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் மற்றும் காவலர் குடியிருப்பு ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது எவ்வளவு மதிப்பீட்டில் செய்யப்பட உள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டிடம் மற்றும் காவலர் குடியிருப்பு ஏற்படுத்த அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

## சுகாண்டிரில் மருந்தினால் ஏற்படும் விளைவுகள்.

37—வினா 8412—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) "சுகாண்டிரில்" என்ற மருந்து தொடர்ந்து பயன்படுத்தினால் பலவித வியாதிகளை உருவாக்கும் அபாயமுள்ளது என்பது உண்மையா?



(ஆ) இந்த காரணத்தால் இம்மருந்து மேல்நாடுகளில் உற்பத்திக்குத் தடை போடப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(இ) தமிழக மருத்துவமனைகளில் இம்மருந்து பயன்படுத்தப்படுகிறதா?

விடை—

(அ) "சுகாண்டிரில்" என்ற மருந்து தொடர்ந்து உபயோகித்தால் தீய விளைவுகள் ஏற்படக் கூடும். சுகாண்டிரில் என்பது "ஆக்சிபென்புடோசோன்" என்கிற ஆங்கில மருந்துக்கு "இபகெய்கி" என்கிற மருந்து தயாரிப்பாளர் வியாபாரிதியில் வழங்கப்பட்ட பெயராகும்.

(ஆ) "ஆக்சிபென்புடோசோன்" என்கிற மருந்து பின்லேண்ட், ஜோர்டான், நார்வே போன்ற நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் உபயோகத்தில் உள்ளது.

(இ) இம்மருந்து இந்தியாவிலும், தமிழகத்திலும், தமிழகத்திலுள்ள மருத்துவ மனைகளிலும் அவசர சூழ்நிலைகளில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இதற்குக் காரணம் இந்திய அரசு மருத்துவ வல்லுநர்களின் ஆலோசனையின் பேரில் பயன்படுத்தப்படலாமென முடிவு செய்துள்ளது.

## தஞ்சை மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு வழங்கப்பட்ட மானியம்.

38—வினா 8544—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் புயல் வெள்ளத்தால் சேதமடைந்த நிலங்கள் எத்தனை ஹெக்டேர்?

(ஆ) பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு அரசு மானியம் மற்றும் வழங்கப்பட்ட பூச்சி மருந்து, உரம், அவைகளின் மதிப்பு எவ்வளவு?

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கடந்த 1985 நவம்பர் திங்களில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் 66,640 ஹெக்டேர் நெல் வயல்கள் பாதிக்கப்பட்டன.

(ஆ) பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ. 14·64 இலட்சத்திற்கு பூச்சி மருந்துகளும், மற்றும் ரூ. 32·20 இலட்சத்திற்கு இரசாயன உரமும், ஆக ரூ. 46·84 இலட்சத்திற்கு முழு மானியமாக 78,510 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

**சென்னைக்கருகில் முயல் இறைச்சி விற்பனை செய்யும் திட்டம்.**

39—வினா 8558—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கருகில் முயல் இறைச்சி விற்பனை செய்வதற்கு அரசு திட்டம் வகுத்துள்ளதா ?

விடை—

சென்னைக்கருகில் உள்ள படப்பையில், முயல்களை வளர்த்து அவற்றின் இறைச்சியை சென்னை நகரிலும், சுற்றுப்புறங்களிலும் விற்பதற்கு ஒரு திட்டத்தை டாப்கோ நிறுவனம் தயாரித்துள்ளது. அத்திட்டம் அரசிற்கு வந்தபின் அதுபற்றி ஆய்வு செய்யப்படும்.

**பட்டுக்கோட்டையில் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.**

40—வினா 8564—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டையில் நீதிமன்றங்களுக்கு புதிய கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?





விடை—

(அ) ஆம்.

(ஆ) பட்டுக்கோட்டையிலுள்ள நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்ட உயர்நீதிமன்றம் ரூ. 43.60 இலட்சங்களுக்கு மதிப்பீடுகளையும் வரைபடங்களையும் அனுப்பியுள்ளது. அது அரசின் பரிசீலனையிலுள்ளது.

**பெருநாளியில் புதிய மருத்துவமனைக் கட்டிடம்.**

41—வினா 8936—திரு. கே. முத்துவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பெருநாளியில் புதிய மருத்துவமனைக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**புக்கத்துறை—மானாம்பதி கூட்டுரோடு வரையுள்ள தார்ச் சாலையை அகலப்படுத்தும் திட்டம்.**

42—வினா 9023—திரு. க. நரசிம்மபல்லவன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புக்கத்துறை கூட்டுரோடு—மானாம்பதி கூட்டுரோடு வரை (வழி உத்திரமேரூர்) போகும் தார்ச் சாலையை அகலப்படுத்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**கொங்குநகர் மற்றும் புதுராமகிருஷ்ணாபுரம் ரயில்வே கேட்டுகள்.**

43—வினா 9108—திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் கொங்குநகர் புதுராமகிருஷ்ணாபுரம் ரயில்வே கேட்டுகளை வாகனப் போக்குவரத்திற்காகத் திறந்து மூடுவதற்கு திருப்பூர் நகராட்சியால் ரயில்வே துறைக்கு ஏதாவது வாடகை கட்டப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 1984-85-ல் கட்டப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1984-85 ஆம் ஆண்டுக்கு கொங்குநகர் மற்றும் புதுராமகிருஷ்ணாபுரம் ஆகிய இடங்களில் உள்ள ரயில்வே கேட்டுகளை வாகனப் போக்குவரத்துக்காக திறந்து மூடுவதற்கு கீழ்க்கண்டவாறு தொகை திருப்பூர் நகராட்சியால் செலுத்தப்பட வேண்டும்:

| | ரூ. பை. |
|---|---|
| 1. பராமரிப்புக் கட்டணம் | 1,33,681.50 |
| 2. உரிமையாணைக் கட்டணம் | 49,579.98 |
| மொத்தம் .. | 1,83,261.48 |

போதிய நிதி வசதியின்மையால் இன்னும் இத்தொகை நகராட்சியால் செலுத்தப்படவில்லை.

**தேனியருகே கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைத்தல்.**

44—வினா 9142—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி அருகே கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆமெனில், எப்போது துவக்கப்படும்?





விடை—

(அ) மற்றும் (ஆ): தேனி, பெரியகுளம் பகுதியில் உள்ளது. பெரியகுளம் பகுதியில் தனியார் ஆலை ஒன்றும் கூட்டுறவுத் துறையில் ஆலை ஒன்றும் அமைப்பதற்கு முன் உரிமம் அளிக்கக் கோரி இரண்டு விண்ணப்பங்கள் அரசுக்கு வந்தன. தனியார் ஆலை அமைக்க முன் உரிமம் கோரி பெறப்பட்ட விண்ணப்பம் மைய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டு விட்டது. கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஒன்று தொடங்க முன் உரிமம் கோரி வரப்பெற்ற விண்ணப்பம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**கீரிப்பட்டி மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு மாணவர் விடுதி.**

45—வினா 9151—திரு. பி. பழனிமுத்து: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலுள்ள கீரிப்பட்டி மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி கட்ட அரசு அனுமதி அளித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**புளியங்குடி அரசு மருத்துவமனைக்குப் புதிய கட்டிடம்.**

46—வினா 9177—திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புளியங்குடி அரசு மருத்துவமனைக்குப் புதிதாகக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு?

(இ) கட்டிடப் பணிகள் எப்பொழுது துவக்கப்படும்?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ): இப்மருத்துவமனைக்கு ரூ. 3 இலட்சம் செலவில் புதிய கட்டிடங்கள் கட்ட ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. கட்டிடப் பணிகள் பொதுப்பணித் துறையினரால் விரைவில் துவங்கப்படும்.

### தச்சநல்லூர் அருகில் மேம்பாலம் அமைத்தல்.

47—வினா—9198—திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை ரயில்வே கிராசிங் தச்சநல்லூர் சமீபம் மேல் பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில் விவரமென்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): நெல்லை தச்சநல்லூர் அருகே உள்ள இருப்புப் பாதைக் கடவுக்குப் பதிலாக மேம்பாலம் கட்டும் திட்டம் எதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

### தாம்பரம் தொகுதியில் முதியோர், உடல் ஊனமுற்றோர், விதவைகள் ஓய்வூதியம் கேட்டு வரப்பெற்ற மனுக்கள்.

48—வினா 9234—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் சட்டமன்றத் தொகுதியில் 1984 ஆம் ஆண்டு முதல் 1985 முடிய முதியோர் ஓய்வூதியம், உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம், விதவைகள் ஓய்வூதியம் கேட்டு வரப் பெற்ற விண்ணப்பங்கள் எத்தனை?

(ஆ) அவைகளில் எத்தனை அனுமதிக்கப்பட்டு எத்தனை நிலுவையில் உள்ளது?



விடை—

(அ) மற்றும் (ஆ): தாம்பரம் தொகுதியில் 1984-85 ஆம் ஆண்டு முடிய முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் வரப் பெற்ற மனுக்கள், அனுமதிக்கப்பட்டவை, தள்ளுபடி செய்யப் பட்டவை மற்றும் நிலுவையில் உள்ளவை விவரம் கீழ் வருமாறு:—

| (1) | வரப் பெற்ற மனுக்கள். (2) | அனுமதிக் கப் பட்டவை (3) | தள்ளு படி செய்யப் பட்டவை. (4) | நிலுவை யில் உள் ளவை. (5) |
|---|---|---|---|---|
| 1 முதியோர் உதவித் தொகை சாதாரணம் | 331 | 121 | 19 | 191 |
| 2 ஆதரவற்ற விதவைகள் உதவித் தொகை. | 327 | 97 | 84 | 146 |
| 3 ஆதரவற்ற உடல் ஊன முற்றோர் உதவித் தொகை | 29 | 8 | 17 | 4 |
| ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் உதவித் தொகை | 47 | 13 | 18 | 16 |
| மொத்தம் .. | 734 | 239 | 138 | 357 |

### தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு முழு ஸ்கேனர் வழங்கல்.

49—வினா 9260—திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு முழு ஸ்கேனர் வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

விடை—

தஞ்சை மருத்துவக் கல்லூரிக்கு முழு உடல் பற்றி அறியக் கூடிய ஸ்கேனர் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்சமயம் இல்லை. மூளையைப்பற்றி அறியக்கூடிய ஸ்கேனர் ஒன்று ...ad Scanner ஏற்கனவே தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

[1987 மார்ச் 27

## குறவர்களை ஓரே பிரிவினராக்கும் திட்டம்.

**50—வினா 9397—திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் குறவர்கள் எத்தனை பிரிவுகளாக இருக்கிறார்கள்?

(ஆ) இந்தக் குறவர்களை ஓரே பிரிவினராக ஆக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) அரசு கொடுக்கும் சலுகைகள் இவர்களுக்கு முறையாக கிடைக்கின்றனவா?

விடை—

(அ) "குறவன்" என்ற இனம் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பட்டியலில் வரிசை எண் 36-ன் கீழ் இடம் பெறுகிறது. 'கொறவர்' என்ற 27 பிரிவுகள் பல முன் அடைமொழிகளுடன் சீர் மரபினர் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

(ஆ) சீர் மரபினர் பட்டியலில் உள்ள 27 பிரிவினர்களையும் மேற்படி குறவன் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினருடன் இணைக்கலாமா என்ற கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) மேற்படி இன மக்கள் சலுகைகள் முறையாகக் கிடைப்பது இல்லை என்ற குறையைத் தெரிவித்து முறையீடுகள் ஏதும் இதுவரை அரசுக்கு வரவில்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]



1987 மார்ச் 27]

## 2. தகவல் கோரல்.

### (அ) எண்ணூர் அருகே மீனவர்டையே மோதல்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை அருகில் உள்ள எண்ணூரை அடுத்த பழவேற்காட்டிற்கும் திருப்பாலைவனத்திற்கும் இடையே உள்ள மீனவர்கள் வாழும் பகுதிகளான பூனங்குப்பம் மீனவர்களுக்கும், சப்பாணி குப்பம் மீனவர்களுக்கும் இடையே செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மோதலில் ராமு என்ற ஒருவர் இறந்திருக்கிறார். அது தவிர, நேற்று அந்தப் பகுதியிலே பயங்கர ஆயுதங்களுடன் இரண்டு கோஷ்டிகள் மோதி 5 பேர்கள் பொன்னேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஐவருடைய நிலைமையும் கவலைக்கிடமாக இருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. ஏற்கெனவே ஒரு கொலை நடந்தால் அந்தப் பகுதி சூனியப் பிரதேசமாகிவிடுவது வழக்கம். மறுபடியும் இந்தத் தகராறு, இந்த மோதல் எப்படி ஏற்பட்டது என்பதற்கு மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர் அவர்கள் பதில் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதுபற்றிய விவரக் குறிப்புகள் எதுவும் இல்லாத நிலையில் ஏதையும் சொல்வதற்கில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுப்பார்களானால் ஒன்று இரண்டு நாட்களிலே முழு விவரங்களைத் திரட்டி, இந்த அவைக்குத் தெரிவிக்க முடியும். என்ன நிலை ஏற்பட்டது, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற முழு விவரங்களைத் தரலாம். கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அவர்கள் இன்றைக்கே தரலாம். இரண்டு மூன்று நாட்களிலே அதுபற்றிய விவரங்களைத் தரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் முதலிலேயே உறுப்பினரிடம் கேட்டேன். அமைச்சரிடம் கேட்டீர்களா என்றேன். ஆம் என்றார். நான் அனுமதித்தேன்.

## (ஆ) வறட்சி குறித்து வெள்ளை அறிக்கை—அளிப்பது குறித்து.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொடர்ந்து நான்காவது ஆண்டாக இந்த ஆண்டும் பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தினாலும், தமிழகத்திலே இருக்கின்ற எல்லா மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலும், வரி வஜா பற்றி இந்த மன்றத்திலே எல்லா உறுப்பினர்களாலும் பேசப்பட்டது. மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் மேதகு ஆளுநர் உரைக்கு பதில் தெரிவிக்கின்ற நேரத்திலே எங்கெல்லாம் வறட்சி நிலவுகின்றதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் எனக்கு கிடைத்திருக்கின்ற தகவல்படி எங்கெல்லாம் வறட்சியினால் நஞ்சை பாதிக்கப்பட்டிருக்கின்றதோ அங்குதான் வரி வஜா செய்து இருக்கிறார்கள். பெரும்பாலான இடங்களில் புஞ்சைகள் பாதிக்கப்பட்டும் அங்கே வரி தவிர மற்ற கிஸ்தி போன்ற வசூல் நடந்து கொண்டு இருக்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது. நான் உங்கள் மூலமாக மாண்புமிகு நாவலர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். வறட்சியாலே நஞ்சை, புஞ்சை பாதிக்கப்பட்ட இடங்களில் உடனடியாக வரி வஜா செய்வதற்கும், வரி வசூலை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதோடு, வறட்சி சம்பந்தமான நடவடிக்கைகளைப் பற்றிய வெள்ளை அறிக்கை—white paper —இந்த மாமன்றத்தில் அளிக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, வரவு-செலவுத் திட்ட பொது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது வெள்ளை அறிக்கை தேவையில்லை. அதுபற்றிய நிலைமைகளை அறிந்து, ஆராய்ந்து பதிலுரை தருகின்றபோது தர முடியுமானால் தருகிறேன். இல்லாவிட்டால் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை வரும்போது விவரமான அறிக்கைகளைத் தரலாம். இருக்கின்ற விவரங்களை 20 மாவட்டங்களிலிருந்து திரட்ட வேண்டும். ஆகவே, திரட்டி, இருக்கின்ற சூழ்நிலையை ஒட்டி என்ன நடவடிக்கை



மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்ற முழு விவரத்தையும் தர வேண்டுமென்றால் கூடுமானவரையில் பதிலுரையின்போது விவரம் வருமேயானால் தரலாம். இல்லாவிட்டால் தனியாகத் தரலாம். இதற்கென்று தனி வெள்ளை அறிக்கை இப்போது வைக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்படாது.

## (இ) உறுப்பினர் கொடுத்த அறிவிக்கை குறித்து.

**திரு. அ. பாலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் மூலமாக மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் மூலமாக, அண்ணா மாவட்டத்தில் நிலக்கோட்டைத் தொகுதியை மட்டும் வறட்சிப் பகுதியாக ஆக்கவில்லை என்ற அவசர முக்கிய தீர்மானம் கொடுக்கப்பட்டுள்ளது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாங்கள் இன்றைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறோம். பதில் வந்தால் இங்கே வந்து சேரும்.

## 3. கவன ஈர்ப்பு.

## (அ) திருப்பரங்குன்றம் வெள்ளக்கல் பகுதியில் குடியமர்த்தப் பட்டவர்களுக்கு வசதிகள்.

**திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பரங்குன்றம் தொகுதியில் அவனியாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட வெள்ளக்கல் என்னும் பகுதியில் உள்ள மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான புல் வளர்ப்பு பண்ணை பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு, குடிநீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் கூட நிறுத்தப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[திரு. ச. இராமச்சந்திரன்] [1987 மார்ச் 27

## அறிக்கை

மதுரை மாவட்டம், அவனியாபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட, மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான 385 ஏக்கர் கழிவு நீர் பண்ணையில், புல் வளர்ப்பு செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில், சுமார் 30 ஏக்கருக்கு மேலான வெள்ளக்கல் என்னுமிடத்தில், 300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வருகின்றனர்.

2. இவர்கள் கழிவு நீர் பண்ணையில் புல் வளர்த்து பராமரிப்பதற்காகவும், புல் விற்பனை செய்வதற்காகவும், மாநகராட்சியில் தற்காலிக அடிப்படையில் குடியமர்த்தப்பட்டவர்கள். அவர்கள் நிரந்தரமாக அப்பகுதியை ஆக்கிரமித்துக்கொண்டு, அவ்விடத்தை விட்டு வெளியேறாமல் மாநகராட்சிக்கு இடையூறு செய்து வருகிறார்கள். மேலும் அப்பகுதியில் உள்ளவர்களில் சிலர், புல்லைக் களவாடிச்சென்று, மாடு வளர்க்க உபயோகப்படுத்துகின்றனர். இதனால், மாநகராட்சிக்கு பல லட்சம் ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. அவர்களை சட்டப்படி வெளியேற்றவும், மதுரை மாநகராட்சி தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது அவ்விடத்தில் 10 தெரு விளக்குகளும், ஒரு குடி நீர் கிணறும், ஒரு ஆழ்துளைக் கிணறும் உள்ளது. இச்சூழ்நிலையில் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள தண்ணீர் விநியோகம் மற்றும் இதர வசதிகள் தவிர, புதிதாக எவ்வித வசதியும் செய்வதில்லையென்று மாநகராட்சி முடிவு செய்துள்ளது.

3. மேற்படி சூழ்நிலையில், அவனியாபுரம் பேரூராட்சிக்கு உட்பட்ட வெள்ளக்கல் பகுதியில் வாழும் மக்களுக்கு, அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சுகாதார வசதி, வீட்டு மனைப் பட்டா வழங்குதல் முதலியவற்றை, அவனியாபுரம் பேரூராட்சியால் செய்வதற்கில்லை.

* **திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்திலேயிருந்து வெளியேறுகின்ற சாக்கடை நீரைப் பயன்படுத்தி புல் வளர்ப்புப் பண்ணையை வளர்த்து வருகிறோம். ஆரம்பத்தில் யாருமே இந்த புல் வளர்ப்புப் பண்ணையில் பணியாற்றுவதற்கு முன் வரவில்லை. அந்த நோக்கில், மதுரை மாநகராட்சி சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னால் உசிலம்பட்டி தாலுகாவிலிருந்து, காளப்பன்பட்டி, தும்மக்குண்டு, குமரன்பட்டி, ஆரியப்பட்டி



1987 மார்ச் 27] [திரு. மு. மாரிமுத்து]

போன்ற பகுதிகளிலிருந்து விவசாய மக்களைக் கூட்டி வந்து, அங்கே யாரும் முன் வராத அந்தப் பகுதிகளில்—வெள்ளக்கல் என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதிகளில், சாக்கடைத் தண்ணீரைப் பயன்படுத்தி புல் வளர்க்கின்ற தொழிலைச் செய்ய வைத்து, குடியமர்த்தி, இன்றுவரை மதுரை மாநகராட்சி அவர்களைப் பயன்படுத்தி வருகிறது. தற்போது அந்த புல் வளர்ப்புப் பண்ணை சீரோடும், செழுமையாகவும் வளர்ந்து, இன்று ஏறத்தாழ மதுரை மாநகராட்சிக்கு 5 இலட்சம் ரூபாய், ஆண்டொன்றுக்கு வருமானம் தரக்கூடிய நிலையில் இருக்கிறது. இப்படி செழுமையையும் செழிப்பையும் ஏற்படுத்தித் தந்த அந்த மக்கள்—வெள்ளக்கல் என்று சொல்கின்ற சுமார் 30 ஏக்கர் பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். வெள்ளக்கல் என்பது மேட்டுப்பகுதி, இந்த புல் வளர்ப்புப் பண்ணை இருக்கின்ற இடம் பள்ளப் பகுதி. இந்த புல் வளர்ப்புப் பண்ணைக்கும், இந்த மேட்டுப் பகுதிக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. என்றாலும் கூட, இவர் அறிக்கையில் அந்த மக்களை அங்கேயிருந்து காலி பண்ணி ஆகவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி நம்மால், மதுரை மாநகராட்சியினால் அழைத்து வரப்பட்டு, குடியமர்த்தப்பட்டு இன்று அந்தப் பகுதிக்கு செழிப்பையும், வளத்தையும் தந்த அந்த மக்களை சாதாரணமாக, மாற்று ஏற்பாடின்றி வெளியேற்றுவது என்பது சரியாக இருக்காது. அக்கிரமமாக ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கக்கூடிய. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. மு. மாரிமுத்து:** அக்கிரமமாக ஆக்கிரமிப்பு செய்கின்ற நபர்களைக்கூட தாயுள்ளம் கொண்ட நமது புரட்சித் தலைவருடைய அரசு வேறு இடத்தை ஒதுக்கி, அவர்களுக்கு வாழ வசதி செய்து தந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நம்மால் அழைத்து வரப்பட்ட அந்த மக்களை, நம்மால் குடியமர்த்தப்பட்ட அந்த மக்களுக்கு ஏதாவது வழிவகை செய்து, அவர்களுக்கும் ஒரு நிரந்தரமான குடியிருப்பை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களை வாழ்வித்தால் நலம் என்று கருதுகிறேன். அதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் அழைத்து வரப்பட்டவர்கள் அல்ல. ஆக்கிரமிப்பாளர்கள் என்பது தான் தகவல். ஆக்கிரமிப்பாளர்கள் எங்கிருந்தபோதும் அகற்றப்பட வேண்டியவர்கள்.

(ஆ) கோவை மாவட்டம், கிளியூர், காரமடை பகுதிகளில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டடங்கள் கட்டுதல்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் 1982 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட கிளியூர், காரமடை ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக கட்டிடம் கட்டுவதற்கு பொது மக்கள் நன்கொடை ரூபாய் பத்தாயிரம் செலுத்தியும், தேவையான நிலத்தை ஒப்படைத்தும் பல ஆண்டுகள் ஆகியும் சம்பந்தப்பட்ட துறை பணம் கட்டவில்லை என்று தெரிவித்துள்ளதால், இப்பகுதியில் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் முன் அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

அரசின் கொள்கைப்படி ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்குவதற்கு தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கு 5 ஏக்கர் பரப்பளவுள்ள நிலமும், ரூ. 10,000 நன்கொடையும் பொது மக்களிடமிருந்து அரசுக்கு கிடைக்கப் பெறவேண்டும். 1984—85 ஆம் ஆண்டு அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட 10 கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களுள் கோவை மாவட்டத்தில் இரண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிலியூர் மற்றும் காரமடை ஆகிய இடங்களில் 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர் மாவட்டம் காரமடை மற்றும் சிலியூர் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக பொது மக்களின் பங்குத் தொகையான ரூபாய் பத்தாயிரம் நன்கொடையாக அரசு கருவூலத்தில் செலுத்தி, சீட்டு எண் 17 மற்றும் 63 வாயிலாக முறையே 26—10—1983, 6—8—1984 நாட்களில் செலுத்தப்பட்டுள்ளது. சிலியூரில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதற்காக திருவாளர் டி. துரைசாமி கவுண்டர் அவர்களால் வழங்கப்பட இருக்கும் 5.00 ஏக்கர் நிலம் இன்னமும் பொது சுகாதாரத் துறைக்கு தானப் பத்திரம் வாயிலாக பதிவு செய்யப்படாத நிலையில் உள்ளது. இது குறித்து திரு. துரைசாமி கவுண்டர் அவர்களை [illegible]



20—2—1987 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மாவட்ட சுகாதார அலுவலரிடம் மேற்படி நிலம் வழங்கப்படுவதற்கான விதிமுறைகள் கேட்டு அணுகியுள்ளதாக மாவட்ட சுகாதார அலுவலர் கோவை அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட சுகாதார அலுவலர் கோவை மேற்படி நபரை நேரில் சந்தித்து விபரங்கள் தெரிவிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார். புதிய ஆரம்ப சுகாதார நிலையம், காரமடைக்கு திருமதி மாரியம்மாள் மற்றும் ஆரான் என்ற நபர்களால் 4.77 ஏக்கர் நிலம் வழங்கப்பட உள்ளதாகவும், மேற்படி நிலம் இத்துறைக்கு இன்னமும் பதிவு செய்து கொடுக்கப்படாத நிலையில் உள்ளதாகவும், மாவட்ட சுகாதார அலுவலர், கோவை தெரிவித்துள்ளார், இப்பொருள் குறித்தும் மேற்குறிப்பிட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமாய் மாவட்ட சுகாதார அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். ஆரம்ப சுகாதார நிலைய இயக்ககத்திலிருந்து மேற்படி இடங்களில் மருந்தகம், அலுவலர் குடியிருப்பு மற்றும் சுற்றுச் சுவர் ஆகியவை கட்டுவதற்கு திட்டம் மற்றும் வரைபடங்களுடன் செயற்குறிப்பு மார்ச் மாதம் 1987-ல் வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித் திருக்கிற அறிக்கையில் கட்டிடம் கட்டுவதற்கான வரைபடமும், பணம் கட்டியதற்கான குறிப்புகளும் வரப்பெற்றிருக்கின்றன என்று தெரிவித்து இருக்கிறார்கள். எனக்கு எழுத்து மூலம் அளிக்கப்பட்ட பதிலில் பணம் கட்டப்படவில்லை என்றும், இடம் கொடுத்தால் கட்டுவது பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் வந்த பதிலின் காரணமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வந்தேன். இப்போது உரிய பதில் பெறப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, எனக்கு இரண்டு மாதம் கழித்து கொடுக்கப்பட்ட பதிலில், பணம் கட்டப்படவில்லை என்று தெரிவித்து இருந்த காரணத்தினால், [illegible] ஏற்பட்ட காலதாமதத்திற்கு அது காரணமாக இருக்கிறது. ஆகவே, இதைத் தவிர்த்து இந்த ஆண்டு, அந்த இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும்—ஆதிவாசி மக்கள் இருக்கிற பகுதி, அதிகமாக ஆதி திராவிட மக்கள் வசிக்கிற பகுதியாக இருக்கிற காரணத் தினால்—கட்டிடம் கட்டுவதற்கான நிதி ஒதுக்கம் செய்து இந்த ஆண்டு கட்டிக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பணம் கட்டியதை அரசு ஏற்றுக் கொண்டது; பணம் கட்டியிருக்கிறார்கள். நிலத்தை ஒப்படைவு செய்வதிலே சில தகராறுகள் இருந்து, நிலத்தை ஒப்படைவு செய்யாத காரணத்தினால்தான் கட்டிடம் கட்டுவதில் காலதாமதமாகிக் கொண்டு வந்திருக்கிறது. இப்போதுதான் நிலத்தை ஒப்படைவு செய்வதற்கு வழிவகைகளைக் கேட்டுக்கொண்டு போயிருக்கிறார்கள். இன்னும் அதுகூடச் செய்து கொடுத்ததாக அரசிற்குத் தகவல் முழுமையாகக் கிடைக்கவில்லை. நிலத்தை ஒப்படைவு செய்யவேண்டும்—இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற 140 ஆரம்ப சுகாதார நிலையங்களை புதியதாக ஆரம்பிக்க இருக்கிறார்கள்—ஆனால், இது கட்டிடம் கட்டுவதைப் பற்றிய பிரச்சினை ஆகும். கட்டிடம் கட்டுவது ஒரு பெரிய பிரச்சினை. இன்னும் பல இடங்களில், இதுபோல் வாடகைக் கட்டிடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்தெந்த இடத்தில் முதலில் வரிசைப்படுத்திக் கட்டமுடியுமோ, அப்படி வரிசைப்படுத்தித்தான் கட்ட முடியும். அவசரப்பட்டு எதையும் செய்வதற்கில்லை.

(முற்பகல் 11-10)

## (இ) இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றம் மதுரையில் செயல்படுவதால் ஏற்படும் சிரமம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் ஏ. பாலுச்சாமி, கே. முத்துவேல் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கே. முத்துவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மாவட்ட நீதிமன்றம் இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்படாமல், மதுரையிலேயே செயல்பட்டு வருவதால் அப்பகுதி மக்களுக்கு உள்ள சிரமம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

### அறிக்கை

வருவாய்த்துறை மாவட்டங்களாக, இராமநாதபுரம் மாவட்டம் மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பினும் நீதித்துறை மாவட்டங்களாக இன்னும் பிரிக்கப்பட்டு செயலாற்றவில்லை. அரசு ஆணை நிலை எண் 614, உள் துறை, நாள் 14—3—1985 ன்படி நீதித்துறையைப் பொறுத்தவரை முன்பிருந்த நிலையிலேயே மறு அறிவிப்பு வரும்வரை செயல்படுத்தப்படலாம் என்று ஆணை வெளியிடப்பட்டது. இராமநாதபுரத்தில் நீதித் துறை மாவட்டம் அமைக்கப் போதுமான இடவசதிகளைச் செய்து தருமாறு மாவட்ட ஆட்சித்தலைவரும், மற்றும் மாவட்ட நீதிபதியும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். சென்னை உயர்நீதிமன்றத்திடமிருந்து தற்போது மதுரையில் இயங்கி வரும் மாவட்ட, மற்றும் அமர்வு நீதிமன்றங்களை இராமநாதபுரத்தில் அமைப்பதற்கான வரைவு அறிவிக்கைகள் மற்றும் செயற்குறிப்புகள் கிடைக்கப்பெறவில்லை. அவை வந்தவுடன் அரசு ஆய்வு செய்து ஆணைகளை விரைவில் வெளியிடும்.

**திரு. கே. முத்துவேல்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் நீதித் துறை மாவட்டமாக இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மாவட்டம் பிரிக்கப்பட்டு 3 வருடங்களான பின்பும் நீதித் துறை மாவட்டமாகப் பிரிக்கப்படாமல் இருப்பது சரியல்ல. உடனடியாகப் பிரித்திட அரசு முன்வருமா என்று அறிய விரும்புவதோடு சென்னை உயர்நீதி மன்றத்திலிருந்து வரைவு அறிக்கை மற்றும் செயற்குறிப்புகள் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது. காலதாமதத்தை நீக்குகின்ற வகையில் மக்கள் நீதி வசதியை அதிகச் செலவின்றிப் பெற அதிக தூரம் சென்று பெறவேண்டிய நிலை மாறிட, உடனடியாக உயர்நீதி மன்றத்திடமிருந்து அறிக்கையையும், செயற்குறிப்பையும் பெற்று நீதி மன்றம் அமைப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தைப் பொறுத்த வரைக்கும் அங்கு நீதி மன்றத்தைத் தனியாக அமைப்பதற்கு போதிய இட வசதி இல்லை என்ற ஒரு பிரச்சினையை உயர்நீதி மன்றம் தெரிவித்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அரசு தாக்கீது அனுப்பி உடனடியாக தக்கதோர் இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தருமாறு கோரியிருக்கிறது. அது குறித்து விவரங்கள் பெறப்பட்டவுடன் விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

### (ஈ) கூவம் கழிவு நீரைக் கடலில் செலுத்துதல்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சென்னை கூவம் நதி கழிவு நீரைக் கடலுக்குச் செலுத்தி சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளக் கோரும் சென்னை மக்களின் கோரிக்கை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை

சென்னை கூவம் ஆற்று முகத்துவாரத்தில் மணற்திட்டுகள் உருவாவதால் கழிவு நீர் எளிதாகக் கடலில் கலப்பதில்லை. தற்பொழுது மணற்திட்டுகளை அவ்வப்பொழுது அகற்றி இதற்கு தற்காலிகத் தீர்வு காணப்பட்டு வருகிறது. இப்பிரச்சினைக்கு ஓர் நிரந்தரத் தீர்வு காணும் பொருட்டு இந்தியத் தொழில் நுட்பக் கழகம் (Indian Institute of Technology, Madras) பூண்டியிலுள்ள நீரியல் ஆராய்ச்சி நிலையம் (Institute of Hydraulics and Hydrology, Poondi) மற்றும் தலைமைப் பொறியாளர் (பாசனம்) ஆகியோர் இவ்வாற்றின் முகத்துவாரத்தில் பொருத்தமான ஓரிடத்தில் ஓர் தடுப்புச் சுவர் கட்டுவதற்கான மதிப்பீடுகள் தயார் செய்தார்கள். இப்படித் தடுப்புச் சுவர் (Groyne) கட்டினால், தங்களின் சொத்துக்களுக்கும், கட்டுமானங்களுக்கும்



கடல் அரிப்பினால் சேதம் ஏற்படுமென சென்னைத் துறைமுகக் கழகம் (Madras Port Trust) எதிர்ப்புத் தெரிவித்தது. எனவே, இதுபோன்ற பிரச்சினைகளை கையாள்வதில் போதிய அனுபவம் வாய்ந்த பூனாவிலுள்ள மத்திய நீர் மற்றும் மின் ஆராய்ச்சிக் கழகத்திடம் (Central Water and Power Research Station) இதுபற்றி ஆராய்ச்சி செய்து விவரமான அறிக்கையினை அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்பட்டு, ஆராய்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவ்வறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2. கூவம் ஆற்றில் கழிவு நீர் கலப்பதும், அதன் கரைகள் ஆக்கிரமிக்கப்பட்டு அசுத்தப்படுத்தப்படுவதும், ஆற்றில் போதுமான நீரோட்டம் இல்லாததும் துர்நாற்றத்திற்கும், சுகாதாரக் கேட்டிற்கும் முக்கியக் காரணங்களாகும். சென்னையிலுள்ள கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் போன்ற அனைத்து நீர்வழிகளிலும் உள்ள சுகாதாரக் கேட்டினைப் போக்குவதற்காக, தலைமைச் செயலரின் தலைமையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் துறைகளின் பிரதிநிதிகள், சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணை வேந்தர், அண்ணா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் மற்றும் இன்டாக்கின் (Intach) பிரதிநிதியையும் கொண்ட ஓர் சிறப்பு பணிக்குழு (Task Force) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு இதற்கான ஓர் சீரிய திட்டம் (Master Plan) தயாரித்து வருகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விசை அறிக்கையில் கூறப்பட்டுள்ள சென்ட்ரல் வாட்டர் அண்ட் ரிசர்ச் ஸ்டேசன் ஆய்வுக்கு கால வரம்பு விதிக்கப்பட்டுள்ளதா? அதன் ஆய்வு எப்போது முடியும் என்கின்ற விவரம் இல்லை. அதுபற்றி அரசு அறிவிக்குமா என்பதோடு, தலைமைச் செயலாளருடைய தலைமையிலே கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய், அடையாறு போன்ற நீர்வழிப் போக்குவரத்துக்களில் சுகாதாரக் கேடுகளை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு என்று ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்க கமிட்டி போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டியின் அறிக்கை எப்போது அரசுக்கு வந்து சேரும்? அந்த அறிக்கையின்மீது எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

என்று தெரிவித்ததோடு இந்த அறிக்கையைப் பெறுவதற்குமுன் இடைப்பட்ட காலத்திலேயே தொடர்ந்து கூவத்தால் பாதிப்பு வரும் என்ற காரணத்தால் தற்காலிகமாக அந்தக் கூவம் நாற்றத்தையும், அதனால் ஏற்படும் கேடுகளையும் தவிர்ப்பதற்கு கடல்நீரை கூவத்திற்குள் பம்பிங் செய்து மிக வேகமான முறையில் புளோ ஆகிறபோது இவற்றினுடைய கேடுகள் குறையும் என்ற காரணத்தால் இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆய்வுக்கு நாங்கள் காலவரையறை வைக்கவில்லை. உறுப்பினருடைய உணர்வைப் புரிந்துகொண்டிருக்கிறோம். மிக விரைவாக அந்த ஆய்வினுடைய முடிவு வாங்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தலைமைச் செயலாளருடைய தலைமையிலே போடப்பட்டிருக்கிற அந்தக் குழு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு கூடி போதிய நடவடிக்கைகளை; எடுக்கவேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. கடல்நீரை கூவத்திலே பம்புசெய்து கூவத்தை சுத்தப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். 150 கன அடி கடல்நீரை கூவத்திலே பம்ப்செய்து கோயம்பேடு பகுதியிலே கடல்நீர் ஆற்றிலே ஓடக்கூடிய திட்டத்தை செயல்படுத்த சுமார் 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவிலே பொதுப்பணித்துறை ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (உ) திருவாரூர் பகுதி திருப்பள்ளி முக்கூடல் வாய்க்கால் தலைப்பு மேடிட்டுள்ளது.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் அருகிலுள்ள திருப்பள்ளி முக்கூடல் வாய்க்காலின் தலைப்பு கவனிக்கப்படாததால் மேடிட்டு அவ்வூரில் பாசனம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.





**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் சுருக்கமான அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

### அறிக்கை

ஓடம் போகியார் ஆற்றில் திருவாரூர் எல்லையில் சுக்கனார் வாய்க்கால் என்னும் வாய்க்கால் பிரிகிறது. இதன் நீளம் 12.57 கி.மீ. இதன் பாசனப் பரப்பு 2,191 ஏக்கர்கள். சுக்கனார் வாய்க்காலின் கீழ் 17 பிரிவு வாய்க்கால்கள் உள்ளன. இதன் பி. 10-வது கிளை வாய்க்கால் திருப்பள்ளி முக்கூடல் வாய்க்காலாகும். 5.60 கி.மீ. நீளமுள்ள இவ்வாய்க்காலின் பாசனப்பரப்பு 126 ஏக்கர்களாகும். இவ்வாய்க்கால்கள் சுமார் 18 ஆண்டுகளுக்கு முன் முன்னேற்றத் திட்டத்தின்கீழ் சீரமைக்கப்பட்டது.

சுக்கனார் வாய்க்காலில் சிமெண்ட் பலகைகள் பொருத்தி லைனிங் செய்யும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு செயல்முறையில் உள்ளன. இதுவரை பிரதான வாய்க்காலில் 4.25 கி.மீ. வரையிலும் மற்றும் முதல் இரண்டு கிளை வாய்க்கால்களிலும் லைனிங் வேலை எடுத்து செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள பகுதிகள் வருங்காலங்களில் படிப்படியான செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். இப்பணிகள் அனைத்தும் முடிந்தவுடன் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் முழுமையாக நிவர்த்திக்கப்படும்.

**திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாய்க்கால்களை [illegible] முதலிலே தலைப்புப் போடுகிறார்கள். தலைப்பு [illegible] வேண்டியதன் விளைவாக, லெவல் எடுப்பது சரியோ, தவறோ எனக்குத் தெரியாது. லெவல் எடுக்கும்போது அதிலே பெட் லெவல் செய்கின்ற காரணத்தினாலே தலைப்பிலே உயரம் அதிகமாகி விட்டது. தலைப்பின் உயரம் அதிகப்படுத்தப்பட்டதன் காரணத்தினாலே வாய்க்காலின் நீளம் மிகக் குறைவாக இருக்கிறது. அதனாலே கடைமடைக்குத் தண்ணீர் செல்லவில்லை. அறிக்கையிலே, கடைசியிலே அது சரியாகும் என்று சொல்கிறார்கள். தலைப்பிலே இருக்கிற லெவலிலே, மேடிட்ட இடத்தைப் பள்ளப்படுத்தி வாட்டர் லெவலை ஒழுங்காக ஒழுங்குபடுத்தி முன்கூட்டியே அதைச் செய்தால்தான் பாசனம் சரியாகும்.

எனவே கடைசிவரை பார்க்காமல் முன்கூட்டியே அந்தத் தலைப்பை சீர் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டப் பகுதியில் ஏறத்தாழ 36 ஆறுகள் ஓடிக்கொண்டிருக் கின்றன. அவைகளிலிருந்து பிரிகிற முதல் பிரிவுகளுக்கெல்லாம் "ஏ" பிரிவு சேனல்கள் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றன. மீண்டும் அதிலிருந்து பிரிகிறவைகளுக்கு "பி" கிளாஸ் சேனல்கள் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கின்றன. தற்போது "பி" கிளாஸ் சேனல்களைத்தான் மாடர்னைசேஷன் செய்து கொண்டு வருகிறோம். அதிலே குறைகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறைகள் இருந்தால் உடனடியாக அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

THIRU T. VENKATA REDDY: On behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee:

(1) Forty-fourth Report on the further action taken by the Government on the recommendation contained in the 19th Report of the Committee (1982-83) and the 5th Report of the Committee (1977-78) on the Report of the Comptroller and Auditor-General of India for the year 1973-74.

(2) Forty-fifth Report of the Committee on the paragraphs per-taining to Public Works Department in the Report of the Comp-troller and Auditor-General of India for the year 1979-80 (Civil).

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித்துறை பற்றிய பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கையை நான் இப்பேரவைக்கு அளிக்கிறேன்.



## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

திரு. அ. மலர்மன்னன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதன் மீது விவாதத்திற்கு அனுமதிக்காமல் நிறை வேற்றினால் எப்படி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங் கள். சொல்வதைக் கேளுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவில் எல்லாக் கட்சியினரும் உட்கார்ந்து ஒப்புக் கொண்டிருக் கிறார்கள். எனவே விவாதம் இல்லை. உங்கள் தலைவரிடம் கேளுங்கள்.

(அ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 7/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(முற்பகல் 11-20)

6. வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொது விவாதம்—தொடர்ச்சி

* **திரு. கி. ராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துக்களை சுருக்கமாகச் சொல்ல விழைகிறேன். என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்பாக இராஜபாளையம் தொகுதியில் உள்ள சில பிரச்சினைகள் பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள என்னுடைய தொகுதியில் கிராம மக்களின் குடிநீர்ப் பிரச்சினை



மிகவும் பெரிதாக உள்ளது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் நேரடி உத்தரவின் அடிப்படையில், பல நடவடிக்கைகள் எடுத்து வந்தாலும், அவைகள் போதுமானதாக இல்லை. கடந்த 19 ஆம் தேதியன்று இராஜபாளையம் காந்தி நகரைச் சேர்ந்த சுமார் 50 பெண்கள் காலிக் குடங்களைத் தூக்கிக் கொண்டு பஞ்சாயத்து யூனியன் ஆபீசுக்கு வந்து விட்டார்கள். காந்தி நகரில் அடி-குழாயில் தண்ணீர் இல்லாத காரணத்தால் லாரிகள் அல்லது டிராக்டர்கள் மூலமாக, தண்ணீர் கிடைக்கிற இடத்திலேயிருந்து கொண்டு வந்து, சப்ளை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். அதேபோல, எங்கெங்கே குடிநீர்ப் பிரச்சினை மிகக் கடுமையாக இருக்கிறதோ, அந்தந்த இடங்களில் எல்லாம் லாரிகள் மூலமாக, டிராக்டர்கள் மூலமாக தண்ணீர் சப்ளை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடுமையான வறட்சியின் காரணமாக, நிலவரி ரத்து செய் வதைப் பொறுத்தவரையில் காமராஜ் மாவட்டத்தில் இன்னும் உத்திரவாகவில்லை என்று நினைக்கிறேன். உடனடியாக நிதியமைச்சர் அவர்கள் உத்திரவிட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். காரணம், குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், புஞ்சை கானியங்களை பயிர் செய்யக் கூடிய அளவிற்குக்கூட தண்ணீர் இல்லை. அந்த நிலைமையில் இருக்கும்போது, வரியை மட்டும் கெடுபிடியோடு வசூல் செய் வதாகத் தெரிகிறது. ஆகவே, வரி வசூலை உடனடியாக நிறுத்தி வைக்க உத்திரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இராஜபாளையம் நகர அரசு மகப்பேறு மருத்துவமனை ஒரு தீராத பிரச்சினையாக இருந்து கொண்டு வருகிறது. இந்த மகப்பேறு மருத்துவமனையைச் சுற்றியுள்ள அசுத்த நிலைமையைப் பார்க்கும்போது, அது மகப்பேறு மருத்துவ மனையா அல்லது வேறு ஏதாவது கழிவு நீர் போகக் கூடிய இடமா என்று கேட்கக்கூடிய நிலைமையில் மிகவும் கேவலமாக இருக் கிறது. இராஜபாளையம் வர்த்தக சங்கத்தினர் கடந்த 20—1—1987 அன்று பேரவை மனுக்கள் குழு வந்தபோது ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். ஏன் இந்த நிலைமையில் இந்த மகப்பேறு மருத்துவமனை இருக்கிறது என்று கேட்டால், அந்த மருத்துவமனையைச் சுற்றி தடுப்புச் சுவர் இல்லையாம். ஆகவே, தேவையான தடுப்புச் சுவர் கட்ட உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இராஜபாளையம் யூனியனைச் சேர்ந்த கிழவிகுளம் கிராம மக்கள் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க 1981-ல் ஐந்து ஏக்கர் நிலம், பத்தாயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். கடந்த 6 ஆண்டுகளாக, எதுவும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. கடந்த 1985-86 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது இது சம்பந்தமாக ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்து, முன்னாள் அமைச்சர் டாக்டர் ஹண்டே அவர்களை இரண்டு, மூன்று தடவை நேரிடையாகப் பார்த்தும், ஆறு ஆண்டுகளாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், நடப்பாண்டிலாவது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், அருள்கூர்ந்து நடவடிக்கை எடுத்து இந்தக் கிராம மக்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, புத்தூர்—நல்லமங்கலம் கிராமங்களை இணைக்கும் பாலம் பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இதை இந்த ஆண்டிலாவது நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வடகரைக்குத் தெற்கே உள்ள கொருக்காம்பட்டி, செல்லம்பட்டி, கோட்டைப்பட்டி ஆகிய ஊர்களுக்கு போக இன்னும் ரோடு கிடையாது. இந்தக் கிராமங்களுக்கு ரோடு வசதி இல்லாத காரணத்தால் அதிகாரிகள் யாரும் அங்கே போவதில்லை. முதன் முதலாக 1986 நவம்பர் மாதத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் ஒன்றை நியமித்து (8—11—1986) காமராஜ் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விஜயராகவன் அவர்களை கூட்டிக்கொண்டு போயிருந்தேன். அதுகூட நேரிடையாகப் போக வழி இல்லாமல் திருநெல்வேலி மாவட்டம் வழியாக, சுற்றுப்பாதையில் கஷ்டப்பட்டு போய்ச் சேர்ந்தோம். ஆகவே, வடகரைக்குத் தெற்கே போகும் அந்த ரோடை உடனடியாக அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக தேவதானத்திற்கு மேற்கேயுள்ள, சாஸ்தா கோவில் அருவியிலிருந்து வரும் நீரைச் சேர்த்து வைக்க நீர்த்தேக்கம் ஏற்படுத்தி, முகவூர், தளவாய்ப்புரம், செட்டியார்பட்டி, சேத்தூர் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் சப்ளை செய்ய, ஒரு நிரந்தர ஏற்பாட்டை செய்துகொடுத்தால் கடும் வறட்சி ஏற்படும் போது குடிநீர்ப் பிரச்சினை உண்டாகாமல் தடுக்கமுடியும். இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.



கடைசியாக ஒரு முக்கியமான பிரச்சினை. இராஜபாளையம் ஆணையரை இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை அல்லது 3 மாதங்களுக்கு ஒரு தடவை, நிர்வாகக் காரணங்களுக்கு அப்பாற்பட்டு, காரணமேயில்லாமல் மாற்றுவதால், அங்கே நிர்வாகம் சரியாக நடைபெறாமல், வளர்ச்சிப் பணிகள் நிறைவேற்றுவதில் தாமதமேற்படுவதால், சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்; தயவு செய்து ஒரு ஆணையரைத் தொடர்ந்து அங்கே பணியாற்ற விடுங்கள். அடிக்கடி மாற்றுவதால், மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் மின் அணுப் பொருள்கள் மீதான விற்பனை வரிக் குறைப்பு, மோட்டார் ஊர்திகள் மீதான விற்பனை வரிக் குறைப்பு, கையால் செய்யப்பட்ட தீக்குச்சிகளுக்கு சலுகை வரி, காலணி வழங்கும் திட்டம் ஆகியவை மிகுந்த பாராட்டுக்குரியதாகும். அந்த வகையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஆனால் மோட்டார் ஊர்திகளுக்கு 1 சதவிகிதம் மேலும் குறைத்து, பாண்டிச்சேரியில் உள்ளது போல 4 சதவிகிதமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாண்டிச்சேரியில் 4 சதவிகிதம், தமிழ்நாட்டில் 5 சதவிகிதம் என்றால், இன்னும் நம்முடைய மக்களுக்கு பாண்டிச்சேரிக்குப் போய் கார் வாங்கும் ஆவல் உண்டாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, கட்டுமானப் பொருள்கள், உணவுப் பொருள் மற்றும் சிற்றுண்டிச் சாலைகளில் விற்கப்படும் உணவு மற்றும் பானங்கள் மீதான வரி குறித்து, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நிதி நிலை அறிக்கை இணைப்பில் 36 ஆம் பாராவைப் படிக்கிறேன். "1986-87 ஆம் ஆண்டிலும் குடும்ப நலத் திட்டம் முழு மூச்சுடன் செயற்படுத்தப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் 5,60,000 கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென மத்திய அரசு இலக்கு நிர்ணயித்திருக்க, 1987 பிப்ரவரி வரை 3,97,214 கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. குடும்ப நலத் திட்டத்தின் ஏனைய முறைகளைச் செயற்படுத்துவதிலும்

[திரு. இ. ராமன்] [1987 மார்ச் 27

இதே அளவிற்குக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது" என்று
குறிப்பிடப்பட்டுள்ளது. நான் உங்களைப் பணிவோடு கேட்டுக
கொள்ள விரும்புவது என்னவென்றால், நாம் கடந்த 3 ஆண்டு
களாகத் தொடர்ந்து குடும்ப நலத் திட்டத்தை வெற்றிகரமாக
நிறைவேற்றி மைய அரசின் பரிசுகளைத் தட்டிக் கொண்டு
வந்தாலும், உண்மை நிலையை சிறிது ஆலோசிக்க வேண்டும்.
அந்த அடிப்படையில்,

Report of the Comptroller and Auditor General of India for the
year 1983-84 page 80-81 -ல் ஒரு பாராவைப் படிக்கிறேன்.

"The Government of India guidelines indicate that the maximum
number of operations in a well-equipped hospital should not exceed
100 per day. It was, however, seen that the number of operations
recorded by a single doctor in camp averaged 320 a day in one
district and 300 a day in another district. The number exceeded 500
on six days in both the districts. The optic of the lap instrument
was required to be sterilised for 10 to 15 minutes between two opera-
tions. The number of operations claimed to have been done thus
appears unattainable" என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த ஆடிட்
ரிப்போர்ட் என்ன சொல்கிறதென்றால், சாதாரணமாக ஒரு
நாளைக்கு ஒரு டாக்டர் 100 அறுவை சிகிச்சைதான் செய்ய
வேண்டும். ஆனால் 300, 500 என்று கணக்கு காண்பிக்கப்
பட்டிருப்பது சாதாரணமாக நடக்கக்கூடியதல்ல.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத்
தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களை ஒன்று
கேட்டுக் கொள்கிறேன். தமிழ் நாட்டில், ஏதோ தவறு நடப்பது
போல் பத்திரிகைகளில் வரக்கூடாது. குறிப்பாக, உதாரணத்
திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மதுரையில் இருக்கின்ற கண்
அறுவை சிகிச்சை—காட்டராக்ட் ஆப்பரேஷன் செய்யும் டாக்டர்,
அந்த அறுவை சிகிச்சையை ரொம்ப சீக்கிரம், குறைந்த நேரத்தில்
செய்கிறார். அதனால், செய்ய முடியாது என்று சொல்வதற்
கில்லை. அந்த ஆடிட் ரிப்போர்ட்டைப் படித்துவிட்டு, தமிழ்
நாட்டில் இப்படி நடந்துவிட்டது; இப்படி நடக்க முடியாது;
இதற்கு சாத்தியக்கூறு இல்லை என்ற முடிவுக்கு வருவது
நல்லதல்ல. மேலும், தமிழ்நாட்டு மருத்துவர்களைக் குறை
சொல்லக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களை
அவையின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஆடிட் ரிப்
போர்ட்டையும் அரசு பரிசீலித்தது. அதைப் பற்றிய முழு விவரம்



1987 மார்ச் 27] [திரு ப. உ. சண்முகம்]

அறிந்து அதைப் பற்றி பரிசீலித்து, நடவடிக்கை எடுத்திருக்கி
றோம். உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பார்த்தால் தமிழ்
நாட்டிற்கும், நமக்கும் நல்லதல்ல, பொதுவாக மருத்துவத்
துறைக்கும் நல்லதல்ல.

(முற்பகல் 11-30)

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இந்தக் குடும்ப நலத் திட்டம் பற்றி
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்
னார்கள். . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ராமன்
அவர்கள் பேசி முடிக்கவும்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, குடும்ப நலத் திட்டம் பற்றி. . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது முடியாது.
இப்போது, உங்களை நான் பேச அனுமதிக்கவில்லையே.
அரசாங்கத்தின் சார்பில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
விளக்கம் சொல்லலாம். ஒவ்வொருவரும் அதற்குப் பதில்
சொல்வது என்பது சரியல்ல.

திரு. இ. ராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
வர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு
நான் பெரிதும் மதிப்புக் கொடுக்கிறேன். நான் என்னுடைய
சொந்தக் கருத்துக்கள் எதையும் சொல்லவில்லை, யாரையும்
தவறு சொல்லவுமில்லை. நம்மிடத்திலே, ஏதாவது தவறு இருந்
தால் இப்பொழுதாவது திருத்திக்கொள்ள வேண்டும் என்ற
நல்லெண்ணத்திலேதான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர்
திரு. ராமன் அவர்கள் எடுத்துக்கொள்கின்ற முயற்சிகளுக்கு
நான் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
அவருடைய நல்லெண்ணத்திற்கு நன்றியும் தெரிவித்துக் கொள்
கிறேன். தமிழ்நாட்டைப்பற்றி தவறான செய்தி எதுவும்
பத்திரிகையிலே இதைப் பற்றி வந்துவிடக்கூடாது என்பதற்காகத்
தான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களை
மறுத்துப் பேசவேண்டும் என்பதற்காக அல்ல.

[1987 மார்ச் 27

திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, அடுத்தபடியாக, மாண்புமிகு முதல்வர் அவர்களின்
சத்துணவுத் திட்டத்தைப்பற்றி சில வார்த்தைகள். ஒரு நாட்டின்
பெரிய முதலீடு குழந்தைகளின் நலத்திட்டம் தான். அந்த குழந்
தைகளின் நலம் என்ற அடிப்படையில், மாண்புமிகு முதல்வர் அவர்
களுடைய சத்துணவுத் திட்டம் நம் எல்லோராலும் பாராட்டப்
படக்கூடிய விதத்தில் நடந்துகொண்டு இருக்கிறது. கிட்டத்தட்ட
64 லட்சம் குழந்தைகள் சத்துணவு சாப்பிடுகிறார்கள். இதில் 25
லட்சம் குழந்தைகள் ஹரிஜனக் குழந்தைகளாக இருக்கின்றார்கள்.
எண்ணிக்கையைப் பார்க்கும்போது, நான் உண்மையாகவே மகிழ்ச்சி
யடைகிறேன். ஹரிஜன மக்கள் சார்பில், மாண்புமிகு
முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இருந்தாலும், இந்த சத்துணவு மையங்களில்,
தவிர்க்கக்கூடிய பல குறைகள் நடக்கின்றன. அந்த குறைகளைத்
தவிர்த்தால், இன்னும் நல்ல முறையில், இந்தத் திட்டம் வெற்றி
கரமாக நடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன். (மணி அடிக்கப்பெற்றது) 10 நிமிடங்கள்கூட ஆக
வில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் தொகுதி
யைப்பற்றிப் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. கி. ராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே. தவறு செய்பவர்கள், யாராக இருந்தாலும் அவர்களைத்
தயவுதாட்சண்யமின்றிக் கண்டிக்க வேண்டும். இந்த திட்டத்தில்,
நடைமுறையில் காணப்படுகின்ற குறைகளைக் கண்டறிந்து,
நிவர்த்தி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், வறுமை ஒழிப்புத் திட்டங்களில் ஒருங்
கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், அதாவது ஐ.ஆர்.டி.பி.
திட்டம் ஒரு முக்கியமான திட்டம். இந்தத் திட்டத்தின்
பயன்கள், உண்மையிலேயே தகுதியுள்ள ஏழைகளுக்கு முழுமை
யாகக் கிடைக்கக்கூடிய விதத்தில் நிறைவேற்றப்படவில்லை.
காரணம் என்னவென்றால், சர்வே செய்யும் முறையின் நடைமுறை
பணி சரியாக நடைபெறவில்லை. Survey has not been done properly
ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. ஏ.
கிருஷ்ணசாமி அவர்கள் கடந்த 25—10—1986 அன்று டெல்லியில்



1987 மார்ச் 27] [திரு. கி. ராமன்]

நடந்த ஒரு கூட்டத்தில் இதுபற்றி தெளிவாகப் பேசியிருக்
கின்றார்கள்.

"Though clear instructions have been issued by the Govern-
ment of India for conducting proper base line surveys to enable pro-
per selection of beneficiaries under Integrated Rural Development
Programme (IRDP) in the blocks, yet we are of the view that this
approach is lopsided and fragmentary. Adhoc base line surveys
with reference to the cluster of villages every year will not ensure
a balanced and equitable approach to the disbursement of assistance
under IRDP. Proper approach should be to conduct base line sur-
vey in all the villages in every block and prepare a Master list of
I.R.D.P. beneficiaries eligible for assistance, with the poorest of the
poor figuring first in the list and priority of each beneficiary being
determined with reference to his poverty criteria. Once the Master
List for each Community Development Block is drawn up, then we
can update it year after year for devising suitable administrative
arrangements.".

இது அமைச்சர் அவர்களின் பேச்சு. அமைச்சர் அவர்களே
ஒத்துக்கொண்டார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் இந்தத்
திட்டத்தின்கீழ் தகுதி பெறக்கூடிய மக்களைப் பற்றிய விவரம்
சரியாக சர்வே செய்யப்படவில்லை. ஏதோ அட்ஹாக் முறையில்
தேவைக்கேற்ப சர்வே எடுத்திருக்கிறார்கள். இதைத்தான்,
அமைச்சர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இனிமேலாவது
ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின்கீழ் சர்வே எடுக்கும்போது உரிய
முறையில் சர்வே எடுத்து, நல்லமுறையில் கிராமப்புறங்களிலுள்ள
மக்களுக்குப் பயன்படும் வகையில், வழிவகை செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது)
கடைசியாக, ஓரே ஒரு வார்த்தையைச் சொல்லி முடித்து
விடுகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய
நிதி நிலை அறிக்கை I am willing to wound, but not to
strike என்கிற நிலையில் உள்ளது. மாண்புமிகு
நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.
"Please come to the stage of cheering the people." என்று நான்
மனதார வேண்டிக்கொண்டு, முடிக்கிறேன், வணக்கம்.

திரு. கோ. பெருமாள் பிள்ளை: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர்
அவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற 1987-88 ஆம்
ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது ஒரு சில
வார்த்தைகளை இங்கே எடுத்து வைப்பதற்கான வாய்ப்பினை

இந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முகமன் காணிக்கையாக்குகின்றேன்.

மதுவிலக்கை அமுல்படுத்துவதன் மூலமாகவும், இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற வறட்சியின் காரணமாகவும் ஏற்பட்டிருக்கின்ற அத்தியாவசியச் செலவுகளின் காரணமாகவும் பலவிதமான எதிர்பாரா செலவுகளை இந்த அரசு சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில் எப்படியாவது மக்களைப் பாதிக்காத அளவுக்கு, ஏழை மக்கள் துன்பப்படாத அளவுக்கு இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தயாரித்து இன்றைக்கு இந்த மன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்றபோது, இன்றைக்கு இருக்கின்ற பொருளாதார சூழ்நிலையில், இந்தியத் துணைக் கண்டத்தின் ஒட்டுமொத்தமான விலைவாசி ஏற்றத்தை ஒப்பிட்டுப்பார்க்கும் போது தமிழக அரசு இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக அதிகமான வரிகளை மக்கள் மீது சுமத்தாமல், வரிகளைப் போடாமல், ஏழையெளிய மக்களைப் பாதிக்காத அளவிலே மிகச் சிறந்த முறையிலே இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து தாக்கல் செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை எளிய மக்கள் வாழ்விலே ஒளி ஏற்றுகின்ற அளவிலே இந்த நிதிநிலை அறிக்கை சிறப்பாக அமைந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிரந்தரமான திட்டங்கள் இதிலே இல்லையென்று இங்கே வாதிட்டவர்களுக்கு பதில் சொல்லக் கூடிய அளவுக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே 30 லட்சம் குடும்பங்களுக்கு எப்படி வீடுகளை அமைத்துக் கொடுப்பது என்பதைப் பற்றியும், எப்படி அரசு நிதியினைத் திரட்டும் என்பதைப் பற்றியும், ஆண்டு ஒன்றுக்கு 250 கோடி ரூபாயிலிருந்து 300 கோடி ரூபாய் வரை ஏற்படுகின்ற செலவுகளை வெற்றிகரமாகச் செலவிட்டு நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளைப் பற்றியும் திட்டவட்டமாக, தெளிவாக எடுத்து வைத்திருக்கிறார்கள்.





அதே நேரத்தில் இந்த நிதி நிலை அறிக்கையிலே மத்திய அரசாங்கத்தின் சார்பில் வீட்டு வசதி வங்கி ஒன்றினை ஆரம்பிக்க முன்வந்திருப்பதுபற்றியும் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நான் அதை வரவேற்றுப் பாராட்டுவதோடு இந்த சூழ்நிலையில் அதுகுறித்து ஒன்றே ஒன்றை இங்கே எடுத்து வைக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த வங்கியை அமைக்கின்ற நேரத்தில், இன்றைக்கு வங்கிகளின் மூலமாக கடன் வாங்கி வீடுகளைக் கட்டுகிறவர்கள் அந்தத் தொகையைத் திருப்பி அளிக்கும்போது மிக அதிக வட்டியை வங்கிகளுக்கு செலுத்த வேண்டியிருப்பதால் இதுபோன்ற வங்கிகளிலிருந்து மக்கள் பணத்தைப் பெற்று வீடுகளைக் கட்ட இப்பொழுதெல்லாம் சற்று தயக்கம் காட்டி வருகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, ஆரம்பிக்கப்பட இருக்கும் இந்த வங்கியில் வட்டி விதாச்சாரத்தைக் குறைத்து, நடுத்தரப் பகுதியைச் சார்ந்த மக்கள் பயன்பெறுகின்ற அளவிற்கு அந்த வங்கி செயல்படுமேயானால் நடுத்தர மக்கள் தங்களுக்குத் தேவையான வீடுகளைத் தாங்களே கட்டிக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பினை அது உருவாக்கித் தரும் என்பதை இந்த நேரத்திலே நான் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதேபோன்று இந்த நிதிநிலை அறிக்கையில் மக்களுடைய சமுதாய நலனை முன்னாலே வைத்து, வருகின்ற பத்தாண்டுகளுக்குப் பின்பு இந்த சமுதாய மக்கள் அதனால் எப்படிப் பயன்பெறுவார்கள் என்பதை எடுத்துக்காட்டுகின்ற விதத்திலே சத்துணவுத் திட்டத்தோடு சுகாதாரத் திட்டத்தையும் ஒருங்கிணைத்து இன்றைக்கு வழிவகுத்துத் தந்திருக்கிறார்கள்.

நான் இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டுக் காட்டுவேன். பொதுவுடைமைத் தத்துவம் பேசுகின்றவர்கள் மக்களை திசை மாற்றுகின்ற விதத்தில் இங்கே கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். நான் ஒன்றை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிறேன். இன்றைக்குப் புரட்சித் தலைவரவர்கள் ஒரு குடும்பத் தலைவரைப்போன்று இருந்து, ஒரு தாயும் தந்தையும் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புகின்ற நேரத்

திலே அந்தக் குழந்தைகளுக்கு எதையெதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கனவு காண்கின்றார்களோ அதையெல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

பள்ளிக்குச் செல்லுகின்ற குழந்தைக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது, உடுக்க உடை வழங்கப்படுகின்றது. அதோடு மட்டும் நிறுத்திக்கொள்ளாமல் அந்தக் குழந்தை படிப்பதற்குப் பாட நூலும் அங்கே வழங்கப்படுகிறது. இன்றைக்கு அதோடு நிறுத்திக்கொள்ளாமல் பள்ளிக்குச் செல்லுகின்ற குழந்தை, பணக்கார வீட்டுக் குழந்தைகளின் காலிலே செருப்பும், கழுத்திலே டையும் ஆக வருகின்ற நேரத்திலே ஏழைத் தாய்மார்களுடைய குழந்தை பள்ளிக்குச் செல்லுகின்ற நேரத்திலே காலிலே முள் குத்தி பள்ளிக்குச் செல்லுகின்றபொழுது புழுதி கொண்டு செல்கிற நிலைமைகளை மாற்றி அந்தக் குழந்தைகளும் காலிலே காலணியை அணிந்துகொண்டு செல்லுகின்ற ஒரு வாய்ப்பினை புரட்சித் தலைவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலே அந்தத் திட்டத்தின் மூலமாக தமிழகத்திலே காலணி தைப்போர் அவர்கள் மூலமாக அமைத்திருக்கின்ற சங்கங்கள் நலிவுற்று அழிந்து போகின்ற சூழ்நிலையிலே இருக்கின்ற நேரத்திலே அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற விதத்திலேயும் இந்தத் திட்டத்தை இங்கே தந்திருக்கின்றார்கள். அதைப் பாராட்டுவதற்கு மனமில்லாமல் இங்கே பேசியவர்களெல்லாம் 'நிரந்தரமான திட்டங்கள் இல்லை, வறட்சியான திட்டங்கள்' என்று இங்கே எடுத்து வைத்தார்கள். சிந்தனையே இல்லாதவர்கள், சிந்தனையை இறக்குமதி செய்து கையிலே வைத்துக் கொண்டு பேசுகின்றவர்களெல்லாம் வறட்சியான சிந்தனை என்று இதை வாதிடுவது வேதனைக்கு உரியது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவேதான் புரட்சித் தலைவர்கள் 400 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டத்திற்கும், அதோடு சேர்ந்த சுகாதார ஒருங்கிணைப்புத் திட்டத்திற்கும், இருபது கோடி ரூபாய் காலணி வழங்குகின்ற திட்டத்திற்காகவும் இன்றைக்கு ஆணித்தரமாக செலவு செய்து கொண்டிருக்கின்றார்கள். இதையெல்லாம் பாராட்டுவதற்கு மனம் இல்லாதவர்கள் தூற்றிப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். எதிர் வரிசையிலே இருக்கிறோம் என்பதால் எதையெடுத்தாலும் எதிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தின்



அடிப்படையிலேதான் வாதங்களை எடுத்து வைக்கிறார்களே தவிர நல்ல சிந்தனையை வரவேற்கின்ற எதிர்க்கட்சி நண்பர்களாக அவர்கள் செயல்படவில்லை என்பது மிகுந்த வேதனைக்குரிய செயல் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இந்தியைப்பற்றி இங்கே பேசினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களும், இந்திய தேசிய காங்கிரசைச் சேர்ந்தவர்களும் இங்கே இந்தியை ஆதரித்தும், இந்தியை எதிர்த்தும் பேசினார்கள். திருமதி யசோதா அம்மையார் அவர்கள் இந்த மன்றத்திலே பேசுகின்ற நேரத்திலே, 'நீங்கள் இந்தியை ஏற்றுக்கொண்டால் என்ன, படிப்பவர்கள் படித்துவிட்டுப் போகட்டுமே, நீங்கள் ஏன் குறுக்கே நிற்கின்றீர்கள்' என்ற வார்த்தையை அடிக்கடி வைப்பார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வதெல்லாம், படிப்பவர்கள் படித்துவிட்டுப் போகட்டும், குறுக்கே நாங்கள் நிற்கவில்லை. அதைப்போலவே, நாங்களும் அவர்களைத் திருப்பிக் கேட்கிறோம். இந்திய அரசியல் சட்ட அமைப்பிலே தமிழும் ஒரு ஆட்சிமொழியாக இருந்துவிட்டுப் போகட்டுமே, நீங்கள் ஏன் குறுக்கே நிற்கிறீர்கள்?

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ் இந்தியாவினுடைய ஆட்சிமொழியாக வருவதற்கு தமிழக காங்கிரஸ் கட்சியும், எங்கள் தலைமையும் எந்த நேரத்திலேயும் குறுக்கீடாக இருந்தது இல்லை; இருக்கப் போவதும் இல்லை. அதேநேரத்தில் படிக்கின்றவர்கள் படிக்கட்டுமே என்றுதான் சொன்னேன். அது உண்மை. அதைப் போன்று தமிழ் ஆட்சிமொழியாக இருந்துவிட்டுப் போகட்டுமே என்று சொன்னார்கள். அதிலே எங்களுக்கு ஒன்றும் கருத்து மாறுபாடு இல்லை. ஆனால் அரசாங்கப் பள்ளிகளில் விரும்பிப் படிக்கிற ஏழை எளிய மாணவர்களுக்கு இந்தியைப் படிக்க இப்போது வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. விரும்பிப் படிக்கின்றவர்களுக்கு இந்த அரசாங்கம் வசதி செய்து கொடுக்கவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. கோ. பெருமாள் பிள்ளை:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் என்னுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இதைப்போன்ற ஒரு தீர்மானத்தை இந்திய தேசிய காங்கிரஸ் இந்த அவையிலே கொண்டுவர முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இந்தியை இந்த அரசு ஆதரிக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரம் கலைஞர் கருணாநிதி அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தார்கள் என்பது என்னுடைய ஞாபகம். அன்றைக்கு மத்திய அரசிலிருந்து ஒரு சுற்றறிக்கை வந்தபோது மாணவர்கள் எல்லாம் போராட்டத்திலே இறங்கினார்கள். சென்னையைச் சேர்ந்த மாணவர்கள் எல்லாம் சென்னை மைய இரயில் நிலையத்திலே இரயில் நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினார்கள். அப்பொழுது கலைஞர் திரு. கருணாநிதி அவர்கள் அந்த இரயில் நிலையத்திற்கு வந்து மாணவர்கள் மத்தியிலே பேசியதை இன்றைக்கு இந்த மாமன்றத்தின் முன்னால் நினைவு படுத்த விரும்புகிறேன். 'மாணவச் செல்வங்களே, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற பேரறிஞர் அண்ணா அரசு, இந்தியை எதிர்க்கின்ற அரசு. இந்தி என்ற அரக்கிக்கு இரத்தினக் கம்பளம் விரித்து வெண்சாமரம் வீசுகின்ற அரசு அல்ல இது. ஆகவே நீங்கள் போராட்டம் நடத்த வேண்டாம்' என்று சொன்னார்கள். அதைப்போலத்தான் இன்றைக்கு நான் திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இந்தி இந்த தமிழகத்தில் நுழையாத அளவுக்கு தன்னுடைய அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகின்ற அதே நேரத்தில் 'உறவுக்குக் கை கொடுப்போம்; உரிமைக்கு குரல் கொடுப்போம்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் இந்த மன்றத்திலேகூட இந்தி தமிழகத்தில் நுழையக் கூடாது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. அதையும் மீறி இன்றைக்கு கலைஞர் கருணாநிதி போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். அதனுடைய உள்நோக்கம் என்ன? மக்களை ஏமாற்ற வேண்டும்; மக்களை திசை திருப்ப வேண்டும். தமிழ்நாட்டில் குழப்பமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக





போராட்டத்தை நடத்துகிறாரே தவிர தன்னுடைய சுய இலாபத்திற்காக போராட்டத்தை நடத்துகிறாரே தவிர வேறு நோக்கம் அல்ல. உண்மையிலேயே தமிழைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் இன்றைக்கு வெடிகுண்டு சம்பவங்களுக்கு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் காரணமாக இருக்கமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒருசில கருத்துக்களை இந்த மாமன்றத்தின்முன் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதி நாஞ்சில் நாடு என்று சொல்லப்படுகின்ற பகுதியை முழுமையாக உள்ளடக்கி இருக்கிறது. ஒரு காலத்தில் கன்னியாகுமரி மாவட்டம் திருவிதாங்கூர் சமஸ்தானத்தோடு இணைந்திருந்தபோது, திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் நெற்களஞ்சியம் என்று பாராட்டப்பட்ட அந்த நாஞ்சில் நாடு இன்றைக்கு வறட்சியின் காரணமாக வறண்ட பகுதியாக மாறிக்கொண்டிருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குறிப்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் வறட்சியின் காரணமாக கரிவு ஏற்பட்டிருப்பதால் 45 கோடி ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். அது மட்டுமல்ல: வரிச் சலுகைகள் அளிக்கப்பட்டிருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் கழிந்த ஆண்டு இந்த வரி விலக்கு அளிக்கப்படுவதற்கு முன்பே மக்களிடமிருந்து வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அதிகாரிகளுக்குக் கூறி, யார் யாரிடம் வரி வாங்கப்பட்டிருக்கிறதோ அவர்களுக்கு உரிய சலுகைகளை உடனே அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

(முற்பகல் 11-50)

* திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் [illegible] 3745 கோடி ரூபாய்க்கு பெரிய நிதிநிலை அறிக்கையை [illegible]

மன்றத்திற்கு அளித்ததின் மேல் நானும் ஓரிரு கருத்துக்களைச் சொல்கிற வாய்ப்பினை வழங்கிய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிக்கையை வைக்கிற நேரத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதனை உவந்து ஏற்கவேண்டுமென்று அறிவித்தார்கள். மனப்பூர்வமாக இந்த அறிக்கையை நான் மனம் உவந்து ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் பல நேரங்களில் சட்ட மன்றத்தில் நடக்கின்ற நிகழ்ச்சிகளை திராவிட முன்னேற்றக் கழகம் பாராட்டவில்லை என்று சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் கட்டாயமாக நான் நாவலரைப் பாராட்டுகிறேன். காலம் கடந்தாவது இந்த நிதிநிலை அறிக்கையில் கார் மற்றும் இரண்டு சக்கர வண்டி களுக்கு வரியைக் குறைவு செய்தார்களே, அதற்காகப் பாராட்ட வேண்டாமா? கட்டாயமாகப் பாராட்டுகிறேன்—ஆனால் காலம் கடந்து இவ்வாறு அறிவுபூர்வமாக சிந்தித்து இந்த முடிவை எடுத்திருக்கிறார்களே என்பதற்காகத்தான். கார் மற்றும் இரண்டு சக்கர வண்டிகளைப் பொறுத்தவரையில் ஆந்திராவிலும் பாண்டிச்சேரி மாநிலத்திலும் இருக்கக்கூடியவர்கள் தான் வியா பாரிகளாக இருந்தார்கள். தமிழ்நாட்டிலே வரி அதிகமாதலால் யாரும் காரையோ அல்லது இரு சக்கர வண்டிகளையோ தமிழகத்தில் வாங்க முடியாமல் பாண்டி மாநிலத்திலும், ஆந்திராவிலும் சென்று வாங்கியதால் இங்கே வரி வருவாய் குறைந்தது. அவ்வாறு குறைந்த அந்த வருவாயை ஆந்திராவும், பாண்டியும் பெற்றன என்பதை மறந்து இருக்க மாட்டீர்கள். எனவே அந்த வருமானத்தை இன்றைக்கு இழப்பு என்று சொல்கிறீர்கள். ஆனால் சாதுரியமாக அதை நீங்கள் பெறுகிறீர்கள் என்பதை நான் மனம் உவந்து ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் காலம் கடந்த முயற்சி என்றுதான் வருத்தத்தோடு நான் இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து திட்டங்கள் பற்றிச் சொல்கிறபோது மிகச் சிறப்பாகச் சொல்லியிருக்கிறீர்கள். திட்டத்தில் மத்திய அரசோடு போராடியோ, வாதாடியோ சிறப்பாக நிதி பெற்றிருப்பதாகச் சொன்னீர்கள். கட்டாயமாக தமிழகத்திற்காக இப்படிப்பட்ட நிதி ஒதுக்கீடு பெறுகிற பணியில் பாடுபடுகிறீர்கள் என்பதற்காக நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் ஒன்றை நான்





உங்களிடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில் உள்ள பொதுப் பணித் துறையின் கீழ் இருக்கின்ற கால்வாய்களை எல்லாம் சீரமைப்பதற்காக திட்டக் குழுவின் ஒப்புதலுக்காகச் சென்றிருந்த நேரத்தில் அவர்கள் ஒப்புதல் அளித்தார்களா? இல்லையே! திட்டக் குழு ஒப்புதல் அளிக்காத காரணத்தால், நிதி ஒதுக்காத காரணத்தால் தஞ்சை மாவட்டத்தில் நவீனப்படுத்தப்பட வேண்டிய கால்வாய்கள் எல்லாம் மறு பரிசீலனைக்கு ஆட்படுத்தப்பட்டு, தயாரிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் பொதுப் பணித் துறையால் திருப்பி அனுப்பப்பட்டு இருக்கின்றன. அதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் என்ன சொல்லி யிருக்கிறார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன். தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்தில் 75 சதவீத மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிற காரணத்தால், அதில் வருகின்ற வருமானத்தைக் கொண்டு மட்டும் வாழ்ந்து வருகிற காரணத்தால் அவர்களுக்கு உதவவேண்டும். அவர் களுக்கு உதவுகின்ற வகையில் கால்வாய்களை நவீனப்படுத்து வதற்குரிய வகையில் திட்டச் செலவுக்கு ஒப்புதல் பெறாமல் இருக்கிறீர்கள். ஏன் அதில் சுணக்கம்? அதையும் பரிசீலனை செய்யவேண்டும் என்ற வகையில் நீங்கள் போராடினால் நாங் களும் சேர்ந்து போராடத் தயாராக இருக்கிறோம். நீங்கள் போராடமாட்டீர்கள். எனவே நீங்கள் வாதாடியாவது ஒப்புதல் பெற்று எங்களுக்காக அந்தக் கால்வாயினை நவீனப்படுத்தித் தரவேண்டுமென்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் நாவலர் அவர்கள் சொன்னார்கள். அதனை நாவலர் அவர்கள் சொன்னதுதான் வருத்தமாக இருக்கிறது. வேறு யாராவது சொன்னாலாவது பரவாயில்லை. நற்றமிழ் பயின்றவர், நடமாடும் பல்கலைக்கழகமாக இருந்தவர், அப்படிப் பட்ட நாவலர் அறிக்கையைப் படிக்கிற நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். 'இந்திரா ஆவாஸ் யோஜனா' என்று எழுதி யிருக்கிறார்கள். அதனைத் தமிழ்ப்படுத்தி எழுதியிருக்கக் கூடாதா? இதிலேயும் ஏதாவது மத்திய அரசு வற்புறுத்தியதா? ஏதாவது காவலர்களை பக்கத்தில் வைத்துக் கொண்டு நிதியமைச்சர் இப்படித்தான் போட வேண்டுமென்று வற்புறுத்தினார்களா? தமிழ் நாட்டில் இருக்கக் கூடியவர்கள்

[திரு. மா. மணிமாறன்] [1987 மார்ச் 27

தமிழ் பயின்றவர்கள், தமிழுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடிய நீங்கள்.......

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பெயர் மத்திய அரசிலிருந்து வந்த பெயர். அவ்வாறு மத்திய அரசிலிருந்து வந்ததை நாவலர் அவர்கள் அப்படியே படித்தார்கள். அதைத் தமிழ்ப்படுத்தி இந்திரா அம்மையார் அவர்களுடைய பெயரால், இந்திரா காலனி என்று தான் மாற்றப்பட்டு இருக்கிறது. அதாவது இந்திரா தாழ்த்தப் பட்டோர் குடியிருப்பு என்று மாற்றப்பட்டு இருக்கிறது. இந்தியில் இருக்கின்ற அந்தப்பெயரை அப்படியே இந்தியில் போடவில்லை.

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றுவரையில் மாற்றப்படவில்லை. இந்திரா ஆவாஸ் யோஜனா என்றுதான்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தமாதிரி எங்கும் இல்லை. இருந்திருந்தால் தமிழ் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருப்பதன்படி இந்திரா குடியிருப்பு என்றுதான் மாற்றி இருக்கிறார்கள். அதுபோன்றுதான் எல்லா இடத்திலும் போட்டிருக்கிறார்கள்.

**திரு. மா. மணிமாறன்:** துணைத் தலைவர் அவர்களே, மெத்த மகிழ்ச்சி. அப்படிப் போடச் சொல்லி உத்தரவு பிறப்பித்ததற்குப் பிறகும் இப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவரவர்களே, நான் மறுபடியும் சொல்கிறேன். அரசாங்கம் உத்தரவு போட்டு இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற குடியிருப்புகளுக்கெல்லாம் இந்திரா நினைவுக் குடியிருப்பு என்று தான் போடப் பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பெயர் மத்திய அரசிலே இருந்து வந்தது. அதை அப்படியே நாவலர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் கொடுத்திருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை.



1987 மார்ச் 27]

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் இவ்வாறு அடிக்கடி பதில் சொல்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் அனைத்திற்கும் பதில் சொல்வார்கள். எனவே மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் பதில் சொல்வார்கள் என்பதற்காக மற்ற அமைச்சர்கள் சும்மா இருக்க வேண்டும் என்ற நியதி இல்லை. அவ்வப்போது கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் வரும்போது நிச்சயமாக பதில் வரும். எனவே பதில் வரும் என்ற நம்பிக்கையோடு பேச வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சும்மா இருக்க மாட்டார்கள் என்பது நன்றாகத் தெரியும். எங்காவது ஏதாவது செய்து கொண்டிருப்பீர்கள். இந்திரா ஆவாஸ் யோஜனா என்பதைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்குப் பிறகும் நிதிநிலை அறிக்கையில் வந்திருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது ஒலி பெருக்கியில் சரியாகக் கேட்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் மீண்டும் சொன்னால் தக்க பதிலை நான் இப்போதே கொடுக்கிறேன்.

**திரு. மா. மணிமாறன்:** ஒலிபெருக்கி அடிக்கடி வேலை செய்வது இல்லை. நான் சொன்னதற்கு எல்லாம் கட்டாயமாக நீங்கள் பதில் சொல்வீர்கள் என்றுதான் சொன்னேன். வேறு ஒன்றும் சொல்லவில்லை. நீங்கள் சொல்வீர்கள் என்பதை சிறப்பாகத்தான் நான் சொன்னேன்.

இன்னொன்று, இந்த இந்திரா ஆவாஸ் யோஜனா என்பதை நீங்கள் குறிப்பிட்டிருப்பதை ஏன் குறிப்பிட்டேன் என்றால், நாம் அடிக்கடி கேட்டு வருகிறோம், ஆகாஷ்வாணி என்பதை வானொலி என்று மாற்றுங்கள் என்று. மத்திய அரசாங்கத்திற்கு பல முறை கோரிக்கை வைத்திருக்கிறோம். பொது மக்களும்

பலர் அதுமாதிரி மாற்ற வேண்டும் என்று பல இடங்களில் இருந்து எழுதியிருக்கிறார்கள். ஆனால் இன்று வரையில் மத்திய அரசாங்கம் அதை மாற்றவில்லை. ஆகாஷ்வாணி என்றுதான் வானொலியில் அறிவிக்கிறார்கள். அது மட்டும் அல்ல. தமிழில் செய்தி சொல்லும்போதுகூட அப்படித்தான் சொல்லுகிறார்கள். ஆகவே, இதுவரையில் அந்தச் சொல்லை மாற்றிச் சொல்வதற்கு மத்திய அரசாங்கம் முன்வராத நிலையில் நீங்கள் மட்டும் ஏன் அந்தச் சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னேன்.

இப்படிப்பட்ட அறிக்கையை நாவலர் அவர்கள் உவந்து அளித்திருக்கிறார்கள். அவர்கள் உவந்து அளித்த கருத்துக்களின் மீது நாம் கருத்துக்களைச் சொல்லுகிறோம். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் நாவலர் அவர்களும். ஆனால் தஞ்சை மாவட்டம் மட்டும் அல்லாமல் தமிழகத்தில் உள்ள 75 சதவீதம் மக்கள் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழில் விவசாயம். அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், கடுமையான வறட்சியின் காரணமாக . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, விவசாய வறட்சியைத்தான் வறட்சி என்று சொல்லலாமே தவிர, வசூலில் எந்தவித வறட்சியையும் காணோம். வறட்சி இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறது அது.

**திரு. மா. மணிமாறன்:** துணைத் தலைவர் அவர்களே, வறட்சி ஏற்பட்ட காலங்களில்தான் வசூல் தாராளமாக நடந்துகொண்டிருக்கிறது என்பதை நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது ஆகாஷ்வாணியை வானொலி என்று மாற்றவில்லையே என்று கேட்டார்கள். தமிழ்ச்சொல் வேண்டும் என்றார்கள். பாராட்டுகிறேன். ஆனால் அவருடைய தலைவர் கலைஞர் கருணாநிதி என்று பெயர் வைத்திருக்கிறார்களே, அது தமிழ்ச் சொல் அல்ல, அதை அருள் செல்வம் என்று மாற்றிக் கொள்வார்களா? (சிரிப்பு).

**திரு. மா. மணிமாறன்:** துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் தற்போது இயற்கையாகவும் செயற்கையாகவும் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் குறிப்பாக



செயற்கையான வறட்சியை உருவாக்கியிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திற்கும் மைசூர் மாநிலத்திற்கும் உள்ள ஒப்பந்தம் முடிவு பெறாத காரணத்தாலே மேட்டூரிலிருந்து தண்ணீர் வரவில்லை. அதனால் இன்றைக்கு தஞ்சை வறட்சியாகக் காட்சியளிக்கிறது. ஆகவே அப்படி நியாயமாக வரவேண்டிய, வளமாக வரவேண்டிய தண்ணீர் வராமல் இருப்பதன் காரணமாகத் தான் வறட்சி ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி நம்முடைய அரசாங்கம் இந்த அறிக்கையில் ஒன்றும் தெரிவிக்கவில்லை. கடந்த ஆண்டு ஆகஸ்டில் காவிரிக்கு டிரிப்யூனல் கேட்டீர்கள். இந்த ஆண்டு இது வரை டிரிப்யூனல் என்ன ஆயிற்று? மத்திய அரசாங்கம் டிரிப்யூனல் போடப்படுவது பற்றி அறிக்கை தந்திருக்கிறார்களா என்று கேட்டால், அதுபற்றி இந்த அறிக்கையில் ஒன்றும் இல்லை. அதனால் 50 சதவீதம் உணவுப் பொருளை தயாரிக்கக்கூடிய தஞ்சை மாவட்டம் வறட்சியாக்கப் பட்டிருக்கிறது.

மைசூர் மாநிலத்திலிருந்து எப்படி தண்ணீர் பெறுகிறார்கள் என்றால் தமிழகத்தினுடைய மின்சாரத்தை தாரை வார்த்துதான் தண்ணீர் பெறுகிறார்கள். 5 டி.எம்.சி. தண்ணீர் பெறுவதற்கு 5 டி.எம்.சிக்கு ஈடாக மின்சாரத்தைக் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் 5 டி.எம்.சி. தண்ணீர் வந்திருக்கிறதா என்று சொன்னால், 4 டி.எம்.சி. தண்ணீர்தான் வந்திருக்கிறது. அந்த 1 டி.எம்.சி. தண்ணீரை இழந்திருக்கிறோம். நமக்குத் தேவையான தண்ணீரைக் கூட விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி விலை கொடுத்து வாங்குவதையும் சரியாக பெற முடிவதில்லை. ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் . . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தண்ணீரை ஒன்றும் நாம் விலை கொடுத்து வாங்கவில்லை. அவர்கள் சொன்னது, தங்களுடைய பகுதிகள் எல்லாம் வறட்சியாக இருக்கின்றன. மின்சார வெட்டும், கட்டுப்பாடும் அதிகமாக இருக்கிறது. அந்தத் தண்ணீரைக் கொண்டுதான் மின்சார உற்பத்தி செய்து கொண்டிருக்கிறோம், மின்சார உற்பத்திக்கு இந்தத் தண்ணீர் தங்களுக்கு வேண்டும் என்று சொன்னதன் பேரில், இந்தத் தண்ணீரை எங்களுக்கு விடுவதனால் உங்களுக்கு எவ்வளவு மின்சாரம் இழப்பு ஏற்படுமோ

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மார்ச் 27

ஆறை நாங்கள் தருகிறோம், எங்களுக்கு தண்ணீரைத் தாருங்கள் என்று சொன்னோம். தண்ணீருக்கு ஒன்றும் விலை பேசவில்லை. அவர்கள் சொன்னது, நாங்கள் உங்களுக்குத் தண்ணீர் தந்து விடுவோமானால் எங்களுக்கு மின்சார உற்பத்தியில் அடியோடு இழப்பு ஏற்பட்டு விடும், நாங்கள் சேமித்து வைத்திருக்கிற தண்ணீர் மின்சார உற்பத்திக்குத்தான் என்று சொன்னார்கள். ஆகவே தான் மின்சார உற்பத்தியிலே இதனால் எவ்வளவு இழப்பு ஏற்படுகிறது என்று சொல்கிறீர்களோ, அந்த இழப்பை மின்சாரத்தினால் நாங்கள் ஈடுகட்டுகிறோம். ஆனால் தண்ணீர் தேவைப்படுகிற காரணத்தினால், மாண்புமிகு உறுப்பினர் வாழ்கிற தஞ்சை மாவட்டத்தைக் கருதித்தான் இப்படி சொன்னோமே தவிர வேறல்ல. நீங்கள் மின்சாரத்திற்கு வைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லியிருந்தால் தஞ்சை மாவட்டம் தான் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கும். இந்த அரசுக்கு மாண்புமிகு உறுப்பினரை விட அதிக அக்கறை இருக்கிற காரணத்தினால் தான், இந்த மின்சாரத்தை ஓரளவு இழந்தாவது தண்ணீர் பெற வேண்டும் என்பதற்காக இப்படி பேசப்பட்டதே தவிர, தண்ணீருக்கு விலை கொடுத்து வாங்கினோம் என்றல்ல.

(நண்பகல் 12-00)

**திரு. மா. மணிமாறன்:** துணைத்தலைவர் அவர்களே, நான் சொல்லிக் கொள்வதெல்லாம் அவர்களுடைய கிரிட்டிலே அவர்களுக்கு வேண்டிய மின்சாரத்தை நாம் கொடுத்துவிட்டோம். நமக்கு 5 டி.எம்.சி. தண்ணீர் வர வேண்டும். ஆனால் 4 டி.எம்.சி. தண்ணீர்தான் வந்திருக்கிறது. எனவே ஒரு டி.எம்.சி. தண்ணீர் நாம் ஏமாற்றப்பட்டிருக்கிறோம். கிராமப்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் தங்கள் வாழ்க்கை என்னவாகுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் வாழக் கூடியவர்கள் மிகச் சாதாரணமானவர்கள். சாலை வசதி, மின்சார வசதி இல்லாதவர்கள். இப்படி ஏழைப்பிற்கு வழியில்லாத இந்த மக்கள், ஏழை விவசாயிகள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி வாடிக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்க உங்கள் அறிக்கையில் ஒன்றுமில்லை. ஜூன் மாதக் கடைசிக்குள் கூட்டுறவுச் சங்கக் கடன்கள் அனைத்தையும் கட்ட வேண்டுமென்று உத்தரவைப் பிறப்பித்து இருக்கிறீர்கள். அந்த உத்தரவை மீண்டும் நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 மார்ச் 27] [திரு. மா. மணிமாறன்]

காரணம் வறட்சி என்பதை நீங்களே ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டமும் அதிலே இருக்கிறது. எனவே கூட்டுறவுச் சங்கங்களில் வசூலிக்கிற 50 சதவீதம் எஞ்சிய கடனை தயவுசெய்து வறட்சி நீங்கியதற்குப் பிறகு வசூலிக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல திட்டங்களை கிராமப்புற மக்களுக்காகச் சொன்னாலும் கூட கிராமப்புறங்களில் இருக்கிற ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் நிதியாதாரம் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளுடைய எதிர்காலம் என்னவாகும் என்பது தெரியாது. தேர்தல் நடந்த தற்குப் பின்னாலே இருக்கிற ஜெனரல் ஃபண்டிலே பணம் கிடையாது, சர்ப்ளஸ் ஃபண்டிலே பணம் கிடையாது. சம்பளத் திற்கே சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிற ஊராட்சி ஒன்றியங்கள் பல இருக்கின்றன. நகராட்சிகள் பல இருக்கின்றன. நான் கேட்டுக் கொள்வதெல்லாம் நகராட்சிகளை நீங்கள் கன்சிடர் செய்யமாட்டீர்கள். ஏனென்றால் அவர்கள் உங்களுக்கு ஓட்டு போட்டிருக்க மாட்டார்கள். எனவே நகராட்சிகளை விடுத்து உங்களுக்கு ஓட்டு போட்டிருக்கிறார்களே, அப்படிப் பட்ட ஊர்களில் இருக்கக்கூடிய கிராமப்புற மக்களின் வசதி வாய்ப்பிற்காக, குடிதண்ணீருக்காக, நடைபாதைகளுக்காக நிதியாதாரம் குறைந்திருக்கிற ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதியாதாரத்தைக் கொடுக்க அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்படிப்பட்ட கிராமப்புறங்களில் உங்களுக்கு வாக்களித்தவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வாக்குப் பெறுகிற இடம் எதுவென்று சொன்னால், இதுபோன்று இருக்கிற கிராமப்புறங்கள் தான். அந்தப் பகுதிகளில் இருக்கிற மக்கள் வாழ்வதற்கு என்ன வழி இருக்கிறது? தனி அதிகாரிகள் இருக்கிற நேரத்தில் ஆலோசனைக் குழுக்களைப் போட்டு வைத்தீர்கள். அதற்குப் பின்னாலே இன்றைக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஏறத்தாழ 50 லட்சம், 40 லட்சம் ரூபாய் என்று கடனாக சுமத்திவிட்டுச் சென்றார்கள். தன்னிறைவுத் திட்டம் என்ற பெயராலே, வேறு

[திரு. மா. மணிமாறன்] [1987 மார்ச் 27

திட்டங்கள் பெயராலே நன்றாகத் தன்னிறைவு பெற்ற காரணத்தால் இன்றைக்கு ஒன்றியங்களில் 40 லட்சம் 50 லட்சம் என்று கடனாக வைத்துப் போயிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின் பெயரால் 40 லட்சம், 50 லட்சம் கடன் வாங்கியிருக்கிறாகள் என்று உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்கிறார். விவரம் தெரிந்துதான் பேசுகிறாரா, விவரம் தெரியாமல் பேசுகிறாரா என்று புரியவில்லை. அப்படிப் பேசுவது சரியல்ல. ஏதோ நகரத்தில் உள்ளவர்கள் தங்களுக்கு ஓட்டுப் போட்டதாகவும், எங்களுக்கு ஓட்டு போடாததாகவும், நாங்கள் ஏதோ அவர்களை பாதிப்பிற்குள்ளாக்குவதாகவும் சொல்கிறார்கள், பரவாயில்லை. பெரும்பாலான நகராட்சிகளைப் பிடித்திருக்கிற தி.மு.க.வினரை நான் கேட்டுக்கொள்வேன். நீங்கள் இப்போதாவது நகராட்சிகளில் அரசாங்கத்திடமிருந்து கேட்காமல், நகராட்சிகளை நீங்களே நடத்துவதற்கு வரி வசூலித்து தைரியமாக நடத்துங்கள். உங்களை யாரும் தடுக்கவில்லை. அரசாங்கத்திடம் ஏன் எதிர்பார்த்துக் கொண்டு அரசாங்கத்தின் மீது பழி போட்டு தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறீர்கள்? இது தேவையற்ற ஒன்று.

**திரு. மா. மணிமாறன்:** துணைத் தலைவர் அவர்களே, நல்ல யோசனையை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம், நீங்கள் டெல்லியிலிருந்து கேட்காமலிருந்து நீங்களே எல்லா திட்டங்களையும் நிறைவேற்றிக் கொண்டால், கட்டாயம் நகராட்சிகள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, எந்த நகராட்சிக்கும் மாநில அரசிடமிருந்து நிதி கொடுக்க வேண்டுமென்ற நியதி கிடையாது, கொடுப்பது கிடையாது. இனாமாகக் கொடுப்பதில்லை. அப்படி ஏதாவது நகராட்சிகளுக்குப் பணம் தேவைப்பட்டால் கடனாகத்தான் கொடுப்பார்கள். டெல்லியிலிருந்து கேட்பதை, அதற்கும் இதற்கும் சம்பந்தப்படுத்தி பேச வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் விவரம் தெரியாமல் பேசுகிறார் என்று சொன்னதில் இன்னும்



1987 மார்ச் 27] [திரு. ப. உ. சண்முகம்]

கொஞ்சம் ஆழமாகத் தன்னைக் கொண்டு புதைத்துக் கொள்கிறார். தமிழகத்திற்கு இருக்கிற உரிமையை இப்படி கொண்டு போய் திராவிட முன்னேற்றக் கழகம் அடமானம் வைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. இது அவமானம்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கிற நீங்களே, தமிழகத்து கிராமப்புற மக்களை அடிமையாக்க நினைக்கிற நேரத்திலே, நான் டெல்லிக்கு உங்களை அடிமையாக்க விரும்பமாட்டேன் என்பதைச் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலே உள்ள பெரும்பாலான ஊராட்சி ஒன்றியங்களும், ஏறக்குறைய 40 லட்சத்திற்கு மேலாக—40 லட்சம் என்பது குறைவு—இன்றைக்கு அடமானத்தில் இருக்கிறது. எனக்கு விவரம் தெரியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்கு விவரம் தெரியாவிட்டாலும், நீங்கள் விவரம் தெரிந்தவர்கள், நீங்கள் தயவுசெய்து மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் உள்ள நிதி நிலைமையைப் பற்றி தெரிந்து கொண்டு, யாருக்கு விவரம் தெரியாது என்ற முடிவிற்கு நீங்களே வாருங்கள்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, உள்ளாட்சி மன்றங்களுக்கு நீங்கள் நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறீர்கள் என்றால் கிட்டத்தட்ட 30 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த 30 கோடி ரூபாய் என்பது மிகச் சாதாரணமான தொகை. இன்றைக்கு 3,745 கோடி ரூபாய்க்கு மேலே வரவு—செலவுத் திட்டத்தைச் செய்து கொண்டு இருக்கிற நேரத்தில், நீங்கள் வெறும் 30 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறீர்கள். 1975-ல் நீங்கள் எல்லாம் ஒன்றாக இருந்த நேரத்திலே, உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கிய தொகையின் அளவு 2.8 சதவீதமாகும். 1977-லே இது 2.7 சதவீதமாகி, 1980-லே 2.5 சதவீதமாகி, 1986-லே 1.1 சதவீதமாகி, பின்னர் 1987-லே 1 சதவீதமாக ஆகியிருக்கிறது. இது நியாயமா? அப்போது உள்ளாட்சி மன்றங்

[திரு. மா. மணிமாறன்] [1987 மார்ச் 27

களுக்கு ஒதுக்கிய தொகையின் அளவிற்கும், இப்போது ஒதுக்கு கின்ற தொகையின் அளவிற்கும் இவ்வளவு வித்தியாசத்தை ஏன் உருவாக்குகிறீர்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து நான் உங்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இன்றைக்கு நீங்கள் சாலைகளுக்கும், பாலங்களுக்கும் நிதி ஒதுக்கி இருக்கிறீர்கள். 1975-ல், அன்றைக்கு நீங்கள் ஒன்றாக இருந்தபோது ஒதுக்கிய தொகையினுடைய சதவிகிதத்திற்கும், இன்றைக்கு ஒதுக்கியிருக்கிற தொகைக்கும் கணக்குப் பார்க்கிற நேரத்திலே, மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசமாகத் தெரிகிறது. அன்றைக்கு பாலங்களுக்கும், சாலைகளுக்கும் 9 சதவிகிதம் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு ஏறக்குறைய 7 சதவிகிதத்திற்கு வந்து தள்ளப்பட்டிருக்கிறது. ஒரு நாடு முன்னேறவேண்டும் என்று சொன்னால், போக்குவரத்து வசதிகள் சீராக இருக்க வேண்டும். இன்றைக்கு அப்படியிருக் கிறதா என்று சொன்னால், கட்டாயமாக இல்லை.

கல்வித்துறைக்கு அதிகப் பணம் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்துக் கல்வி கூடங்களுக்கும் போதுமான கட்டிடங்கள் இருக்கின்றனவா? உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப் பட்ட தொகை வெறும் 77 லட்சம் ரூபாய்தான். இந்த 77 லட்சம் ரூபாயில் கட்டுகிற கட்டிடங்கள் போதுமா? நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம், இந்த 77 லட்ச ரூபாயில் ஒரே ஒரு ஷெட் தான் கட்ட முடியும். நல்ல ஒரு கட்டிடத்தைக் கட்டவேண்டும் என்று சொன்னால், குறைந்தபட்சம் 1 கோடி ரூபாய் இருந்தால்தான் கட்ட முடியும். தமிழகத்தில் நாளுக்குநாள் அதிகமான அளவில் கல்விக்கூடங்களைத் திறந்து கொண்டு வருகிறோம். இப்படி அதிகமான கல்விக் கூடங்களைத் திறந்து கொண்டு வருகிற போது, திறந்தவெளி மைதானத்திலே தான் இன்றைக்கு மாணவர்கள் எல்லாம் பயிலுகின்ற காட்சியை, பழைய கால முறையைத்தான் நம்முடைய அரசாங்கம் நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறது. எனவே நீங்கள் ஒதுக்கியிருக்கிற இந்த 77 லட்சம் ரூபாய் என்பது போதுமானதல்ல. அதை அதிகப்படுத்தித் தரவேண்டும்.

ஆனால் இன்னொரு திட்டத்திற்கு நீங்கள் அதிகமான பணத்தை ஒதுக்கியிருக்கிறீர்கள். நான் அதை மனமாரப் பாராட்டுகிறேன். பள்ளியில் படிக்கின்ற இளைஞர்களுக்கும்



1987 மார்ச் 27] [திரு. மா. மணிமாறன்]

ஞர்களுக்கும், 10 கோடி ரூபாய் அளவில் காலணி வழங்க ஒதுக்கியிருக்கிறீர்கள். இதை நான் பாராட்டுகிறேன். மாணவ சிறார்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிற நீங்கள், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு வெறும் 77 லட்ச ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

அடுத்து, நம்முடைய மாநிலத்திலே தொழிற்துறை மிகவும் சிறப்பாக இருக்கிறது என்றெல்லாம் இங்கே நண்பர்கள் சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன். நான் சாதாரணமான ஒருவரைப் பற்றி இங்கே குறிப்பிடவில்லை. உங்களுக்கு எல்லாம் வேண்டிய வர்தான். ஒருகாலத்திலே அவரை நீங்கள் பாராளுமன்ற உறுப்பினராக, ராஜ்ய சபைக்கு அனுப்பினீர்கள். அவர் நம்முடைய தொழில் துறையைப் பற்றிச்சொல்கிறபோது மிகச் சிறப்பாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு மத்திய அரசின் முதலீடு குறைந்து கொண்டே வந்து, கடந்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே ஒன்றுமே இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் நலிந்த தொழில் நிறுவனங் களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றன. இவைகளுக்கு உதாரணமாக ராணிப்பேட்டை, மற்றும் ஹோசூர் ஆகியவற்றை எடுத்துக்கொள்ளலாம். அங்குள்ள தொழிற்சாலைகளில் ஏறக் குறைய 90 விழுக்காடு தொழிற்சாலைகள் நலிந்த நிலையில் இருக்கின்றன. கடந்த ஆண்டில் தமிழகப் பொருளாதார அறிக்கையைப் பார்க்கும்போது, மிகக் குறைவான வளர்ச்சியும், மிகச் சுமாரான விவசாய நிலைமையும், தொழில் வளர்ச்சிக் குறைவும் வேலையில்லாத திண்டாட்டமும் அதிகமாகி, ஏழ்மை நிலைமை பெருகி இருப்பதைத்தான் காண முடிகிறது என்று மால்கம் ஆதிசேசையா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உங்களால் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டவர், ஜனவரி மாதத்திலே பொருளாதார அறிக்கையின் மீது பேசுகிறபோது சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

அடுத்து, கே. பி. என். கவுர், என்பவர், தமிழ்நாட்டைப் பற்றி மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். ஆட்சியாளரின் திறமையின்மை காரணமாக தமிழ்நாட்டில் ஏழ்மை அதிகரித்து

வருகிறது என்ற குற்றச்சாட்டை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படி பொருளாதார நிபுணர்கள், வல்லுநர்கள் எல்லாம், உங்கள் மீது குற்றச்சாட்டை சுமத்தி வருகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தமிழகத்தில் திட்டக் கமிஷன் இருக்கிறதே, அது இன்றைக்குச் செயல்படுகிறதா என்று சொன்னால், அது இருப்பதாகவே தெரியவில்லை. திட்டக் குழுவிற்குத் தலைவர் இருக்கிறார், துணைத் தலைவர் இருக்கிறார், செயலாளர் இருக்கிறார், ஆக இந்த மூன்று பேர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். திட்டக் கமிஷன் 1974-லே தொடங்கப்பட்டது. 1984-க்குப் பின் தொலைநோக்குத் திட்டங்கள் எதையாவது தயாரித்து, தமிழகத்தை ஒரு முன்னோடியான மாநிலமாக ஆக்குவதற்கு இந்தத் திட்டக் கமிஷன் ஏதாவது திட்டங்களைத் தீட்டியிருக்கிறதா? இந்தத் திட்டக் கமிஷனை நீங்கள் எல்லாம் சேர்ந்துதான் உருவாக்கியிருக்கிறீர்கள். இன்றைக்கு எங்கேயிருக்கிறது அந்தக் கமிஷன்? யார் அங்கே இருக்கிறார்கள்? மூன்றே மூன்று பேர்கள்தான் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். வேறு யாராவது உறுப்பினராக இருக்கிறார்களா? வேறு யாருமே கிடையாது. ஏ. ஜி. ஆபிசிலேயிருந்து கூட ஒருவர் வந்தார். வந்தவர் திரும்பிப் போய்விட்டார். என்ன காரணம் என்று கேட்டால், இங்கே வேலை இல்லை. அதனால் போய்விட்டேன் என்று சொல்கிறார். இங்கே திட்டக் கமிஷன் இருக்கிறது. ஆனால் அதிலே உறுப்பினர்களைப் போடவில்லை. காரணம், அங்கே வேலையில்லை. இப்படிப்பட்ட திட்டக் கமிஷன் தமிழகத்திலே இருக்கிறது என்று சொன்னால், இந்தத் திட்டக் கமிஷன் தமிழகத்திற்கு உதவுமா என்பதை நீங்கள் எண்ணிப் பாருங்கள். எனவே இன்றையதினம் ஏழைகளுக்கு பயனில்லாத திட்டங்களை உருவாக்கி, மக்களுடைய ஆதரவு இல்லாமல், பயனில்லாத பட்ஜெட்டைத்தான் இந்த அரசாங்கம் சமர்ப்பித்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)

(பிற்பகல் 12-10)

**திரு. எஸ். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக்கு எனது பணிவான நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர் அவர்கள் சிறப்பாக இந்த நிதிநிலை அறிக்கையை இந்த ஆண்டு வழங்கியிருக்கிறார்கள்.

முதலில் தொழிற் துறையில் முன்னேறியுள்ள மாநிலங்களில் தமிழகம் தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. இந்த ஆண்டு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் உதவியோடு அம்பா சமுத்திரம் ஆகிய எனது தொகுதியில் ஒரு பென்சிலின் தொழிற் சாலையை சுமார் 25 கோடி ரூபாய் மூலதனத்தில் அமைக்க உத்தரவிட்டதற்காக எனது தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒருங்கிணைந்த குழந்தை நல சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஏழை எளிய குழந்தைகள் நலன் பெறுகிறார்கள். இந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டு தமிழக அரசு சுமார் 400 கோடி ரூபாய் செலவு செய்து தாய்மார்களையும், குழந்தைகளையும் காக்க இருக்கிறது. இந்த ஆண்டிலிருந்து குழந்தைகளுக்கும், கிராமப்புறத்தில் பணி ஆற்றும் ஏழை எளிய தாய்மார்களுக்கும் இலவசமாக காலணிகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்திற்காக சுமார் 20 கோடி ரூபாய் தமிழக அரசு ஒதுக்கி இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் ஆயிரக்கணக்கான குழந்தைகளும், தாய்மார்களும் பயன்பெற வாய்ப்பு இருக்கிறது.

மேலும் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க இந்த ஆண்டு 8,625 துளைக் கிணறுகள் தோண்ட அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. மேலும் வெளிநாட்டினர் உதவியோடு குடிநீர் பஞ்சத்தைப் போக்க பல நல்ல திட்டங்களைக் கொண்டு வருவதாக இதில் கூறப்பட்டு இருக்கிறது.

ஏழை எளிய மக்களைக் காக்க மதுவிலக்கு இந்த ஆண்டு முதல் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இதன் மூலம் அரசுக்கு சுமார் 250 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டாலும், ஏழை எளிய மக்களை மதுவிலிருந்து காப்பதற்காக இந்த அரசு நல்ல நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது. மேலும் இந்த நிதிநிலை அறிக்கையில் சில குறிப்பிட்ட பொருட்களின் மீது உள்ள விற்பனை வரிச் சலுகை அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

[திரு. எஸ். பாலசுப்பிரமணியன்] [1987 மார்ச் 27

குறிப்பாக ஜெனரேட்டர் உறுப்புகள், விசைக் கலப்பைகள், நாப்தாஸ் (ஒரு சாயப் பொருள்) குறிப்பிட்ட பிளாஸ்டிக் மூலப் பொருட்கள், ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களை அடைக்கப் பயன்படும் பொருள்கள், மோட்டார் ஊர்திகள், இழுவை ஊர்திகள் இணைப்பு மற்றும் உதிரி பாகங்கள், குறிப்பிட்ட சாயப் பொருள்கள், கச்சா மற்றும் பதப்படுத்தப்பட்ட தோல் ஆகிய வற்றிற்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டு இருப்பது இந்த மாநிலத்தில் பெரும் அளவில் இப்பொருள்கள் தயாரிக்கும் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கிறது.

மாநிலத்தில் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்கள் பொருளாதார வளர்ச்சியில், அரசு மிகுந்த ஆர்வத்தைக் காட்டுகிறது. அவர்களின் பொருளாதார நிலை உயர, அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிறது.

ஸ்வீடன் நாட்டு உதவியோடு சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தை இந்த அரசு இந்த ஆண்டும் தொடர்ந்து செயற்படுத்தி வருகிறது. அடுத்த ஆண்டு சுமார் 41 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் காடுகள் வளர்க்க திட்டமிடப்பட்டு இருப்பது பாராட்டத் தக்கதாகும்.

மேலும் எனது தொகுதியில் உள்ள சில கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டு இருக்கிறேன். விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி, நகராட்சியாக மாற எல்லா தகுதியும் உள்ளதாக இருக்கிறது. இது சம்பந்தமாக கடந்த ஆண்டு அரசு பரிசீலனை செய்து இருக்கிறது. இந்த ஆண்டிலாவது நிச்சயமாக விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் விக்கிரமசிங்கபுரத்தில் குடிநீர் திட்டத்தை அமல் செய்யும்போது விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியில் ஏறத்தாழ 115 தெருக்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன. இப்படி விடுபட்ட தெருக்களுக்கு எல்லாம் குடிநீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் அம்பாசமுத்திரம் பேரூராட்சியில் சுகாதார பணிக்காகப் பயன்படும் டிராக்டர் இல்லாத ஒரு குறை இருக்கிறது. ஆகவே அரசு உதவி செய்து அந்தப் பேரூராட்சிக்கு ஒரு



1987 மார்ச் 27] [திரு. எஸ். பாலசுப்பிரமணியன்]

டிராக்டர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அம்பாசமுத்திரம் தொகுதியில் இந்த ஆண்டு அமைய இருக்கும் பென்சிலின் தொழிற்சாலையை—ஆழ்வார்குறிச்சிக்குப் பக்கத்தில் நிறைய அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடங்கள் இருக்கின்றன. நல்ல ஆற்று ஓரமாக தண்ணீர் வசதி உள்ள இடமாக நிறைய இடங்கள் இருக்கின்றன. ஆகவே அந்தத் தொழிற்சாலையை—ஆழ்வார்குறிச்சிக்குப் பக்கத்தில் அமைத்தால் அந்தப் பகுதியில் ஒரு நல்ல வளத்தை கொடுக்கக்கூடியதாக அமையும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

எனது தொகுதியில்தான் தாமிரபரணி நதி உற்பத்தி ஆகிறது. இருந்தாலும் அங்கு நிறைய ஊர்களில் குடிநீர் பற்றாக் குறை இருக்கிறது. அதற்குத் தேவையான குடிநீர்த் திட்டங்கள் அமல் செய்யப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக வெள்ளங் குளி, சிங்கம்பட்டி, செல்வந்திபுரம், அடையகருங்குளம், ஆசிர்வாதபுரம், மாதாபுரம், மேட்டூர் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வசதியை செய்து கொடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். விக்கிரமசிங்கபுரம்—மணிமுத்தாறு நெடுஞ்சாலையிலே தாமிரபரணி நதியின் மேலே ஒரு பாலம் கட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. அதை இந்த ஆண்டு நிச்சயமாக கட்டிக் கொடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மணிமுத்தாறில் சுமார் ரூ. 1 கோடி செலவில் ஒரு பெரிய மீன் பண்ணை அமைக்கின்ற திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பாபநாசம் பகுதியில் மலை ஜாதியினரின் 250 குடும்பங்களுக்கு மேல் பல நூற்றாண்டுகளாக வசிக்கிறார்கள். அவர்கள் ஜாதிச் சான்றிதழ்கள் பெறுவதற்கு அரசு அலுவலகங்களுக்குச் செல்லும்போது அங்கே ஜாதி சான்றிதழ்கள் கொடுக்க மறுக்கப்படுகின்றது. அரசு அதிகாரிகள் விசாரித்து கெசட்டில் பதிவு செய்து, அவர்கள் மலை ஜாதி வாழ் மக்கள் என்ற ஜாதிச் சான்றிதழ்களைக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். பாலசுப்பிரமணியன்] [1987 மார்ச் 27

மேலும் எனது தொகுதியில் பாபநாசம் மலையில் இன்னும் இரண்டு அணைகள் கட்டுவதற்கு சர்வே செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிற்குள் முடித்தால் நீர் மின்சாரம் 40 மெகாவாட் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு அணைகளைக் கட்டுவதற்கு திட்டங்களைப் போட்டு, அரசு கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பாபநாசம் கோயில் பக்கத்தில் சுற்றுலா மூலமாக விடுதிகள் கட்டவேண்டுமென்ற கோரிக்கைகள் வைக்கப்பட்டு, அதன் பேரில் பொறியாளர்கள், அதிகாரிகள் பார்த்துச் சென்றனர். ஆனால் இது வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே பாபநாசத்தைச் சுற்றிப் பல விடுதிகள் கட்டினால், அது சிறந்த சுற்றுலாத் தலமாக ஆக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கடயம் என்ற ஊரிலே—பாரதியார் மணம் புரிந்த ஊர்—பாரதியார் பெயரால் ஒரு நினைவு மண்டபம் எழுப்பப்பட்டு வருகிறது. மேலும் அந்தப் பகுதியிலே ஒரு சிறிய தொழிற்சாலையை ஆரம்பிக்கலாம். அதையும் பாரதியார் பெயரால் ஆரம்பித்தால் நன்றாக அமையும். மிகவும் பின்தங்கிய மக்கள் பயன்பெறுவர்.

ஆழ்வார்குறிச்சியில் காவல் நிலையம் வேண்டுமென்று கேட்டேன். அதன் பயனாக கடந்த ஆண்டு அமைக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் அது இன்னும் செயல்பாட்டிற்கு வரவில்லை. எனவே காவல் நிலையத்தை உடனடியாக செயல் பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் மலையின் வழியாக கேரளாவிற்குச் செல்ல மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு பாதையை அமைத்தால், நெல்லையிலிருந்து திருவனந்தபுரம் செல்வதற்கு ஏறத்தாழ 80 கிலோமீட்டர் தொலைவு மிச்சமாகும் என்று கூறியுள்ளேன். அரசு அதிகாரிகள் சர்வே செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாதைக்கு உடனடியாக நிதி யுதவி செய்து, அந்தப் பாதையைப் போட்டுக்கொடுக்க வேண்டு மென்று அன்போடு கேட்டு, முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.



1987 மார்ச் 27]

*திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர் களால் பேரவையினுடைய விவாதத்திற்காக வைக்கப்பட்டிருக் கின்ற நிதி நிலை அறிக்கையின் மீதும், அந்த அறிக்கையை அறிமுகப்படுத்தி நிதியமைச்சர் அவர்கள் ஆற்றியிருக்கின்ற உரையின் மீதும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன் வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக இன்றைக்கு தமிழகத்தினுடைய பொருளாதாரத் தேவைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் பற்றிய பல்வேறு விஷயங்களில் இந்த மாநிலத்தை ஆளுகின்ற அரசாங்கத்தி னுடைய கொள்கைகள் என்ன, திட்டங்கள் என்ன, நடை முறைகள் என்ன என்பதை வெளிப்படுத்துகிற ஒரு கொள்கை அறிக்கை என்ற முறையிலே, 'பாலிசி டாக்குமெண்ட்' என்ற முறையிலே ஒரு சில விஷயங்களை முன் வைக்க வேண்டி இருக்கிறது. இங்கே நிதியமைச்சர் அவர்களால் முன் வைக்கப் பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையும், அவரது உரையும் உருவத்தைப் பொறுத்தவரையில் அது நிதிநிலை அறிக்கைக்கு உரிய தகுதியைப் பெற்றிருக்கிறதே தவிர, உள்ளடக்கத்திலே அதற்கு உரிய தகுதியையும், பொருத்தமான திட்ட முன்மொழிவு களையும் பெற்றிருக்கவில்லை என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

மேலோட்டமாக ஃபிரேம் போடப்பட்டிருக்கிறதே தவிர, ஃபிரேமிற்குள் எது உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டுமோ, அந்த விஷயம் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை என்பதைத்தான் கடந்த காலத்திலே உள்ள நடைமுறைகளிலேயும் சரி, நிகழ் காலத்திலே நீங்கள் அறிவித்திருக்கின்ற திட்டங்களிலேயிருந்தும் எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. இங்கே ஒரு விஷயத்தை குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சியில் இருக்கக் கூடிய நண்பர்கள் கூட வருத்தப்பட்டு வேதனைப்பட்டு சொல்கி றார்கள். எதிர்க்கட்சியிலே இருந்துகொண்டு தொடர்ந்து குற்றம் குறைகளையும், குற்றச்சாட்டுகளையும் முன்வைக்கிறார்களே என்று. நானும் கூட பொதுவாக பாராட்டலாம் என்றுதான் இருந்தேன். ஆனால், அதற்கு வழி இல்லை. ஒரே ஒரு விஷயத்தை மட்டும் பாராட்டலாம் என்ற விருப்பம் எனக்கு ஏற்பட்டது. இருபது வருடம் தவறாமல் நிதி நிலை அறிக்கையை இந்தப் பேரவையில் சமர்ப்பிப்பதற்காகப் பாராட்டலாம்

[திரு. கே. சுப்பராயன்] [1987 மார்ச் 27

என்பதுதான் அது. அதை சமர்ப்பிக்காமல் தப்பித்துக் கொள்வதற்குரிய சந்து பொந்துகள் சட்டத்தில் இல்லை என்பதினாலேயே சமர்ப்பிக்கவேண்டிய நிர்ப்பந்தம், நெருக்கடி ஏற்பட்டிருப்பதினால் அது நிகழ்ந்திருக்கிறது. ஆகவே, இந்த விஷயத்திற்குத் தான் பாராட்ட முடிகிறதே தவிர, மற்ற விஷயங்களில் பாராட்ட என்ன இருக்கிறது? எதிர்க் கட்சி என்பது கண்ணாடியைப் போல உள்ளதை பிரதிபலிக்குமே தவிர, இல்லாத ஒன்றை பிரதிபலிக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்ப்பது பொருத்தம் அற்றது என்பதைத்தான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அண்ணா தி.மு.க. நிர்வாகத்தை நான் எதற்கு ஒப்பிடலாம் என்று ரொம்ப தூரம் யோசித்துப் பார்த்தேன். பொருத்தமான உதாரணம் எது என்று யோசித்துப் பார்த்தபோது ஒன்றே ஒன்றுதான் எனக்கு புலப்பட்டது. குழந்தைகள் ஆடுகின்ற மரக்குதிரையை நீங்கள் பார்த்திருப்பீர்கள். வேகமாக ஆடும் அற்புதமாக ஆடும். அழகாக ஆடும். ஆனால் இருக்கின்ற இடத்தை விட்டு நகரவே நகராது. இருக்கின்ற இடத்தை விட்டு நகராமல் ஆடுகின்ற மரக்குதிரையைப்போல அண்ணா தி.மு.க. ஆட்சி நிர்வாகம் மிக வேகமாக, மிகச் சிறப்பாக, மிக அழகாக இருக்கிற இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. அழகாக இருக்கிற இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர என்னால் வேறு எதையும் சொல்ல முடியவில்லை.

அடுத்து ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்—தனிப்பட்ட முறையிலே அவருடைய திறமைகள் குறித்தோ, அவருடைய பண்பட்ட ஜனநாயக நெறிமுறைகளின் மீதோ எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சிகளோ, மாறுபட்ட அபிப்ராயங்களோ என்றைக்கும் எழுந்தது இல்லை. என்னதான் திறமையும், சிறப்பும், விவேகமும், நீண்டகால அனுபவ முத்திரைகளும் தேங்கியிருந்தாலும்கூட, அவற்றைப் பயன்படுத்தக்கூடிய வகையில் பொருத்தமற்ற ஒரே இடத்தில் இருப்பதினாலேயே அவை பயனற்று போய் விடுகின்றன என்றுதான் என்னைப் பொறுத்தவரை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆரம்பத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது? வருட ஆரம்பத்திலே ரூ. 26 கோடியே 11 இலட்சம் பற்றாக்குறை, வருவாய் கணக்கிலே பற்றாக்குறை ரூ. 94 கோடியே 85 இலட்சம்,



1987 மார்ச் 27] [திரு. கே. சுப்பராயன்]

மூலதனக் கணக்கிலே பற்றாக்குறை ரூ. 122 கோடியே 97 இலட்சம், பொதுக் கணக்கிலே வந்த உபரி ரூ. 37 கோடியே 24 இலட்சம் நீங்கலாக இறுதிப் பற்றாக்குறை ரூ. 206 கோடியே 69 இலட்சம் ஏற்பட்டிருப்பதால்—இவ்வளவு பெரிய பற்றாக்குறை ஏற்பட்டிருப்பதால் வரி போட வேண்டியது தவிர்க்க முடியாத அவசியமாகி விட்டதாக நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதுவும் எப்படிச் சொல்லுகிறார் தெரியுமா? இந்தப் பற்றாக்குறையை ஈடுகட்ட என்ன செய்வது, வரி போடத்தான் வேண்டும். நோட்டு அடிக்கிற அதிகாரம் நமக்கு இல்லை. ஆகவே வரி போடுவதைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லி வரி போட ஆரம்பித்திருக்கிறார்.

அதிலும் அண்ணா தி.மு.க.விற்கு கிடைத்திருக்கின்ற ஒரு பெரிய கிஃப்டே நாவலர் அவர்கள் நிதியமைச்சராக இருப்பது தான். முடிந்தவரை அவர் தவறுகளை மறைக்க முயற்சிப்பாரே தவிர, முடிந்தவரை அவர் அண்ணா தி.மு.க. நிர்வாகத்திலே இருக்கின்ற ஓட்டைகளை அடைக்க முயற்சிப்பாரே தவிர, அதற்குத்தான் அவருடைய ஆற்றல் பயன்படுகிறதே தவிர, அவருடைய ஆற்றல் தமிழ்நாட்டின் தேவைகளை நிறைவு செய்ய பயன்படவில்லையே என்று வேதனை அடைபவர்களில் நானும் ஒருவன்.

வரி உயர்வுபற்றி இங்கே என்ன சொல்லப்பட்டிருக்கிறது? எப்படி சொல்கிறார் என்று பாருங்கள். ஏழை மக்களை பெரிதும் பாதிக்காத வகையில் புதிய நிதி ஆதாரங்களை திரட்டும் முயற்சி அணுகப்பட்டிருக்கிறது என்று. ஏழை மக்களை பாதிக்காத வகையில் புதிய நிதி ஆதாரங்களை எப்படித் திரட்டி இருக்கிறார்கள்? கூடுதல் விற்பனை வரி, ஓட்டலில் உணவுப் பண்டங்களின் மீதான வரி, சரக்குக் கட்டணங்கள் மீதான வரி, கட்டுமான பொருள்களின் மீதான வரி, இவை ஏழை மக்களை பாதிக்காதா? இந்த வரி விதிப்பு ஏழை மக்களை பாதிக்காது என்று சொன்னால்—கேழ்வரகிலே நெய் வடிகிறது என்றால் கேட்க* எதிர்க்கட்சி. ஆகவே, நீங்கள் சொல்வது ஏழை மக்களை பாதிக்காத அளவிலே வரி போடுவது என்பது எப்படி உண்மையாகும்? நான் சவால் விட்டு கேட்கிறேன். பொறுப்புணர்ச்சியோடு கேட்கிறேன். நீங்கள் போட்டிருக்கின்ற ரூ. 99 கோடி

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. கே. சுப்பராயன்] [1987 மார்ச் 27

விலையை ஏற்ற பயன்படாது என்று உத்திரவாதம் அளிக்கிறீர்களா? கடந்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டதற்கு பின்னால் உணவுப் பண்டங்களின் விலை ஏறியிருக்கிறது. இந்த ஏற்றத் திற்கு யார் காரணம்? ஒரு தோசையின் விலை நாலணா ஏறியிருக்கிறது. இந்த ஆட்சிதான் காரணம் என்பதை நான் குறிப் பாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு உவமை சொல்லும்போது உங்களை மட்டும் சொல்லுங்கள். ** என்ற வார்த்தையை நீக்குங்கள். அப்படிச் சொல்லாதீர்கள். அந்தப் பழமொழியை வேண்டுமானால் நீங்கள் உபயோகப்படுத்துகிற மாதிரி சொல்லுங்கள். இங்கே சொன்னாலும் அனுமதிக்க வேண்டிவரும். இங்கேயும் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும்.

**திரு. கே. சுப்பராயன்:** அங்கிருந்து நிறைய சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று அவர்களே சொன்னால் பரவா யில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வாய்ப்பு இருக்க லாம். அப்படி உருவாகிறபோது, நீங்கள் வருத்தப்படுவீர்கள். அவையினுடைய நேரத்திற்காகத் தான் இதைச் சொல்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** ரொம்ப நன்றி, துணைத் தலைவர் அவர்களே, அடுத்து, பழைய நகைகள்—அதற்கு ஒரு உதாரணம் முதலிலேயே சொன்னேன். துணைத் தலைவர் அவர்கள் கவனிப் பார்கள் என்று கருதுகிறேன். ஏழைகள் பாதிக்காத வகையில் ஓட்டல்களுக்கு வரி, விற்பனை வரி, வரி சீரமைப்பு என்று இந்த மாதிரி சொல்லி, செய்யப்பட்டிருக்கிறது. இடையிலே என்ன சொல்கிறார்கள் தெரியுமா? பழைய நகையை விற்கிறபோது, அந்த வணிகர்கள் விற்கப் போகிறவர்களிடமே 2 சதவீதம் வரி வாங்குவதை நிதியமைச்சர் அவர்கள் கவனித்திருக்கிறார்கள். அண்ணா தி.மு.க. ஆட்சி கவனித்திருக்கிறது. ஆகவே, வாங்குகிற வரியை வியாபாரிகள், விற்கப் போகிறவர்கள் மீதே சுமத்துவதால், அந்தச் சுமை பொதுமக்களின் மீது ஏறாமல் தடுப்பதற்காக 2 சதவீதம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



1987 மார்ச் 27] [திரு. கே. சுப்பராயன்]

எவ்வளவு அற்புதமான கருணை? எவ்வளவு அற்புதமான இரக்க உணர்ச்சி? பாராட்ட வேண்டிய விஷயம் அல்லவா, பாராட்டு கிறேன்.

நான் கேட்க விரும்புகிறேன். ஆட்சி விதிக்கிற விற்பனை வரிகளில் வாங்குகிற நகை ஒன்றுக்கு மட்டும் தான் மக்கள் தலையில் சுமத்தப்படுகிறதா? மற்ற எந்த விஷயங்களும் மக்கள் தலையில் சுமத்தப்படுவதே இல்லையா? நம்முடைய கனிவுக்குப் பெயர் போன போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த 10 நாட்களுக்கு முன்னர்கூட மிகுந்த பரிவோடும், கனி வோடும் பஸ் கட்டணத்தை ஏழைகள் பாதிக்காத வகையில் உயர்த்தினார்கள். இப்படி உயர்த்திய நிகழ்ச்சி யாரைப் பாதிக்கும்? ஏழைகளைப் பாதிக்கும். அதைத் தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கை? இல்லை. வாங்குகிற வரி 2 சதவிகிதத்தைக் குறைத்தவர்கள்—நான் நாவலர் அவர்களை பெருந்தன்மை யோடும், மரியாதையோடும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏழைகள் பஸ்ஸில் ஏறுகிறார்களா, இல்லையா? ஏழைகள் பஸ்ஸில் ஏறுகிறார்களே, ஏழைகளின் தலையில் சுமத்துவதற்கு 2 பர்சன்டை அனுமதிக்க மறுத்த நீங்கள், உங்கள் இதயத்தில் பஸ்ஸில் ஏறுகிற ஏழைகளுக்குக் கருணை காட்டக்கூடாதா? இந்த பஸ் கட்டண உயர்வை . . . .

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மிக அனுதாபத்தோடு இருக்கின்ற நம்முடைய திரு. சுப்பராயன் அவர்களுக்கு, ஐந்து கிலோமீட்டர் நடந்து வருகிறார்களே, அவர் களைப் பற்றித் தெரியுமா? தெரியாமல் இருக்க வாய்ப்பு இருக்காது. அவரும் என்னைப் போல கிராமத்திலிருந்து வரக் கூடியவர். அவர்கள் மீது உங்களுக்குக் கொஞ்சம்கூட அனுதாபப் இல்லையா? உங்களுடைய கட்சிக் கொள்கையே அதுதான என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவ அவர்களே, அமைச்சருடைய அனுதாபத்தில் அர்த்தம் இல்லை என்பதுதான் என்னுடைய குறையாகும். கையிலே தண்டத்தை, அதிகாரத்தை, செங்கோலை வைத்துக்கொண் ருப்பது, நடந்து போகிறவர்களை நடக்காமல் போகச் செய் தற்குதானே! நடந்து போகிறவர்களும் உங்களுக்கு ஓட்டு போட்டு இருக்கிறார்கள் . . . .

[1987 மார்ச் 27

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அதன் காரணத்தினால்தான் ஏறத்தாழ 7 ஆயிரம் பஸ்களை, இந்த அரசாங்கம், இந்த 8 ஆண்டுக் காலத்தில் விட்டிருக்கிறது. இதுவரை இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த அரசாங்கமும் செய்யாத சாதனை இது என்பதை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஆனால் ஏராளமான பஸ்கள் போட்டும், நடக்கிறவர்கள் இருக்கிறார்களே, அப்படி நடக்கிறவர் களுக்கு தீர்வு என்ன என்பதுதானே இன்றைக்குக் கேள்வி . . . .

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** இன்னும் 7 ஆயிரம் பஸ்கள் போடுவது தான் அதற்குத் தீர்வு. அதற்காகத் தான் இந்த ஏற்பாடே செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடந்து போகிறவர்களின் நிலை எப்போது மாற்றப்படும் என்று உத்தரவாதம் தருவார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி போய்க் கொண்டிருந்தால் போய்க்கொண்டே இருக்கலாம். அந்த உத்தரவாதத்தோடுதான் இந்த அரசாங்கம் ஒரு முடிவை எடுத்து செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட சொல்லியிருக்கிற ஆலோசனை என்ன வென்றால், எங்கெங்கே இப்போது நடந்து செல்லக்கூடிய நிலை இருக்கிறதோ, அங்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட காலத்தை வரை யறை வைத்துக்கொண்டு செய்யவேண்டும் என்று உத்தரவிட் டிருக்கிறார்கள். அதற்கான ஏற்பாட்டை நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். அதிலே பல இடையூறுகள் வராமல் இருக்குமேயானால், எப்படியாவது அதைத் தடுக்கவேண்டும் என்ற முயற்சி பல இடங்களிலே வராமல் இருந்தால் நிச்சயமாக இந்த அரசாங்கம் விரைவாக செய்துவிடும்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவர் அவர்களே, வினா ஒன்றும் இல்லை. விளக்கம் தான். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல்



1987 மார்ச் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வேறொன்றறியேன் பராபரமே' என்று சொல்லிவிட்டுப் போகலாம். அதிலே மிக மகிழ்ச்சிதான் எனக்கும். ஆனால் எனக்குச் சில விளக்கங்கள் கிடைத்தால் நல்லதுதான். மக்க ளையே பாதிக்காத அளவுக்கு உலகத்திலேயே எங்கேயாவது ஒரு அரசு இருந்தால் எனக்கு எடுத்துக் காண்பித்தால் மிக, மிக நல்லது. ஆனால், அந்த ஒரு வரியும், எந்த ஒரு ஏழையையும் பாதிக்காத அளவுக்கு ஏதேனும் ஒன்றிருந்தால் அதையும் எடுத்துக்காட்டினால், இப்போது தவறிவிடுவேனேயானாலும் கூட, அடுத்த ஆண்டுக்காவது அது எனக்குப் பயன்படுமா என்று யோசிக்கிறேன். அல்லது இந்த ஆண்டு போடாவிட்டாலும்கூட —ஏழைகள் கிட்டத்தட்ட நம்முடைய நாட்டிலே 100-க்கு 80, 90 சதவிகிதம் மக்களாவது இருக்கிறார்கள் என்கிறார்கள். நம் முடைய நாட்டிலே உள்ள நிலத்திலே 100-க்கு 90 பங்கு, 100-க்கு 10 பேர் கையிலே இருக்கிறது என்றும், 10 பங்கு நிலம்தான், 100-க்கு 90 பங்கு மக்களிடத்திலே இருக்கிறது என்று எல்லாம் கணக்கு வருகிறது. என்னைவிட மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்கு மிகத் தெளிவுபட அது எல்லாம் தெரியும். அந்த 10 பேராகச் சொல்கிற வசதி படைத்தவர்களு டைய கணக்கைச் சொல்லி, அவர்களை எவ்வளவு வேண்டு மானாலும் வாட்டச் சொல்வீர்களானாலும், நான் வாட்டத் தயார். எப்படி வாட்டலாம், எப்படி வரி போடலாம் என்ற ஒரு வழிவகை சொல்வார்களானால், எனக்கு எடுத்துக்காட்டாக இருக்கும். உதவி செய்ய முடிந்தால் செய்யுங்கள், இருக்கிற நேரத்தில். இல்லாவிட்டால் தனியாகவாவது உங்களிடத்தில் பேசிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப் பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கோபித்துக்கொள்ளக் கூடாது. ஒரு தொழிற் சங்கத்தை நடத்துவதற்கே சந்தா வசூலிக்காமல் நம்மால் நடத்த முடியவில்லை. எனவே சந்தா வாங்கி தொழிற் சங்கத்தை நடத்திக்கொண்டிருக்கிற நாம், ஒரு அரசாங்கத்தை நடத்துவது என்றால் வரி போடாமல் எப்படி முடியும்? ஒரு வேளை நீங்கள் சந்தா வசூல் . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நிதி அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். அதிலே சுவாரஸ்யமான சொல்லுங்கள் என்று. அவர்களே கேட்டு விட்டார்கள், திரும்ப அதையே பேச வேண்டாம். (குறுக்கீடு).

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கருத்துக்களை பேசும் கூட்டமைப்பாக்குவதற்கு துணை நின்ற அனைத்து உறுப்பினர்களுக்கு நான் மிகவும் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். இங்கே, மரியாதைக்குரிய தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இயல்பாக அவர்கள் கேட்ட நியாயமான கேள்வியை நான் மறுக்கவில்லை. ஆனால் அவர் கொடுத்து இருக்கக்கூடிய அறிக்கையிலே அவர் குறிப்பிட்டிருக்கிறார், எவ்வளவு பெரிய பாதிக்கக் கூடிய வகையில் வரி உயர்வு ஏற்படுத்தப்படும் என்று நான் விரிவாக அந்த விஷயங்களுக்குள்ளே போக விரும்பவில்லை. மரியாதைக்குரிய அண்ணா அவர்களை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள் மாமிச வரி போட வேண்டுமென்று. தாங்குகின்றவர்கள் யார் என்பதை இருக்க வேண்டிய இடத்தில் இருப்பவர்கள் மிக நன்றாக அறிவார்கள். எதிர்க்கட்சியிலே இருக்கிற எங்களைக் காட்டிலும் பல்வேறு உளவுத் துறைகளும், போலீஸ் இலாகாவின் ரிப்போர்ட்களும், பல்வேறு அதிகார அமைப்புகளும் மேலும், அரசு அதிகாரத்தில் உள்ளவர்கள் அவற்றை தெரிந்துகொண்டு இருக்கிறார்கள். அதனுடைய நோக்கம் என்ன? நுழைவு என்ன? எங்கு எந்த பொருட்கள் இருக்கின்றன என்பதை அறிகிற வாய்ப்புள்ள இடத்தில் அமர்ந்திருக்கிற அமைச்சர்கள் அறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்கிறோம் நாங்கள். தோழர் அன்பிற்குரிய சகோதரர் செம்மலை அவர்கள் குறிப்பிட்டார்கள், அதை ஒரு அருமையான கேள்வியாக நினைத்துக் கொண்டு, ஆனந்தத்தோடு அவரவர்கள் இருக்கைகளைத் தட்ட ஆரம்பித்து விட்டார்கள். அதுமாதிரி அவரைப் பாராட்டி விட்டீர்கள். அவரால் கேட்கப்பட்டிருக்கிற கேள்வியிலே, தொழிற் சங்கத்திலே நாங்கள் சந்தா வாங்குகிறோம் என்று இன்றைக்கும் சொல்கிறோம், யாரிடம் வாங்குகிறோம் என்பது தான் கேள்வி? உழைக்கின்ற தொழிலாளர்களிடத்திடம் சந்தாவைப் பெற்று, அவர்களைத் தொடர்ந்து ஏமாற்றிக்கொண்டிருக்கக்கூடிய பல்வேறு சமுதாய திருடர்களின் மூடுதிரைகளைக்





கிழித்து காண்பிக்கக்கூடிய கடமையை, தொழிற் சங்க இயக்கம் தொடர்ந்து செய்து வருகிறது. நாம் உயிர் வாழ்வதற்கே உண்டால்தானே? அதைப்போல தொழிலாளிகள் அவர்களை ஐக்கியப்படுத்திக்கொள்வதற்காக அவர்கள் சந்தா கட்டுவதில் தவறு இல்லை. முதலாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்களா என்பதுதான் கேள்வியே தவிர, அவர்களிடம் பெறுவதில் ஒருபோதும் தவறு இல்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே மாநில அரசினுடைய விற்பனை வரியைப் பற்றி குறிப்பிடும்போது, 15 கோடி ரூபாய்க்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டிருப்பதற்காக ஒரு காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அதற்கு அடுத்து வருகிறேன். அவசரப்பட்டீர்கள். அதற்கு என்ன காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. என்றால் மாநில அரசை, விற்பனை வரியில் சலுகை அளிக்கும்படி தொழில் அதிபர்களும், வர்த்தகர்களும் கோரிக்கை வைத்தனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 15 கோடி ரூபாய் விற்பனை வரி அளித்ததற்கு என்ன காரணம்? தொழில் அதிபர்களும், வர்த்தகர்களும் அரசாங்கத்திற்கு கோரிக்கை வைத்தார்கள். மரியாதைக் நான் குற்றம் சாட்டுவதற்காகக் குறிப்பிடவில்லை. குரிய அமைச்சர்கள் சொல்லவேண்டும். இந்த மாநில அரசாங்கத்திடம் தொழில் அதிபர்களும், வர்த்தகர்களும் மட்டும்தான் கோரிக்கை வைத்தார்களா? வேறு யாரும் கோரிக்கை வைக்கவே இல்லையா? வந்த கோரிக்கை இது ஒன்றுதானா? பல கோரிக்கைகள் வந்துள்ளன. 5 அடிப்படை குறைந்த பட்ச தேவைகள், குடிக்க தண்ணீர் இல்லை, ரோடு வசதி இல்லை. சாக்கடை வசதி இடையாது, தெரு விளக்கு கிடையாது, பொது கழிப்பறை கிடையாது என்று தினசரி ஆயிரக்கணக்கான மனுக்கள் அரசாங்கத்திற்குக் குவிந்துகொண்டே இருக்கின்றன. இவைகள் கோரிக்கை இல்லையா? இந்த கண்ணீர் கோரிக்கையில் நீங்கள் ஏன் கவனம் செலுத்தவில்லை. அந்த கோரிக்கைகள் எப்போது தீர்க்கப்படும் தயவுசெய்து சொல்லுங்கள். இந்த 15 கோடிக்கு மட்டும் . . . (குறுக்கீடு.)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எப்போது தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படும் என்று

கேட்கிறார்கள். நிச்சயமாக, உறுதியாகச் சொல்கிறேன். எங்காலத்திலே என்று தீர்க்கப்படுமோ, அதற்கு முன்னாலேயே தீர்த்து விடுகிறோம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு பொறுப்புள்ள அமைச்சரின் பொறுப்புள்ள பதிலாக நான் எடுத்துக்கொள்வதால் இதைப் பொருட்படுத்தவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்புள்ள அமைச்சரின் பொறுப்புள்ள பதிலாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொன்னார்கள். அவர் பேசும்போது இன்னொரு உதாரணத்தையும் சொன்னார்கள். துவக்கத்திலேயே குறுக்கிடக்கூடாது என்று உட்கார்ந்து இருந்தேன். அண்ணா தி.மு.க. ஆடுகின்ற குதிரை, ஆடிக்கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்குக்கூட நான் பதில் சொல்லியிருக்க முடியும். பதில் சொல்வதும் சுலபம். நாங்களாவது ஆடுகின்ற குதிரையில் இருக்கிறோம். நீங்கள் மண் குதிரையில் இருந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் மண் குதிரையில் போகிறீர்கள். எங்கே போய்ச் சேரப் போகிறீர்களோ தெரியாது. நாங்களாவது ஆடுகிற குதிரை. நீங்கள் ஏறி இருப்பதோ மண் குதிரை. எனவே உதாரணம் மூலமாகச் சொல்ல வந்தக் கருத்துக்களைச் சொல்லிவிட முடியும் என்று நம்ப வேண்டாம். அரசாங்கத்தின் மீது என்ன குற்றம் சொல்ல விரும்புகிறீர்களோ அதை நேரடியாகச் சொல்லட்டும், நாங்கள் பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். அதைவிட்டு விட்டு உதாரணம் சொன்னால் பதில் உதாரணமும் நிச்சயம் வரும்.

**திரு. கே. சுப்பராயன்:** யாருடைய குதிரை மண் குதிரை என்பதை வரலாறு ஈவு இரக்கமில்லாமல் தீர்ப்பளிக்கத்தான் போகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** வரலாறு எற்கெனவே தெரிவித்திருக்கிறது. தமிழ்நாட்டின் வரலாற்றிலிருந்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்றுதான் நினைக்கிறேன். அவருக்கு நிச்சயமாகச் சொல்லுகிறேன்; அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர் அவர்களின்





குதிரை மண் குதிரையல்ல. நல்ல குதிரை, நன்றாக ஓடுகிற குதிரை. கடந்த 3 தேர்தல்களிலும் நன்றாக ஓடி வெற்றி பெற்றிருக்கிற குதிரை. நிச்சயமாக அடுத்து தேர்தல் வந்தாலும் கண்டிப்பாக வெற்றிவாகை சூடப்போகிற குதிரை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியாகத்தான் இந்தக் கோட்டையைக் கட்டியவன்கூட இங்கேயே நீடித்து இருக்கப் போவதாகத் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தான். அவனை அடுத்து வந்தவர்களும் இதைத்தான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், இருக்க முடியவில்லை. எனவே வரலாறு என்பது இன்றைய 27 ஆம் தேதியோடு நின்று விடுவதில்லை. இது ஒரு சக்கரம், சுற்றிக்கொண்டே இருக்கும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, மற்றவர்கள் இந்த அரசாங்கத்தின் முன்பாகக் கோரிக்கை வைக்கவில்லையா? என்னுடைய அருமைக்குரிய ஆளும் கட்சிச் சகோதரர்கள் பேசுகிறபோது தங்களுடைய தொகுதியைப்பற்றிய கோரிக்கைகளையெல்லாம் வைத்தார்களே அந்தக் கோரிக்கைகளையெல்லாம் இந்த அரசு ஏற்கவில்லையே! ஏன்? ஊராட்சி மன்றங்களும், நகராட்சி மன்றங்களும் எவ்வளவோ முறையீடுகளைச் செய்திருக்கின்றனவே, நிதிப் பற்றாக்குறையைச் சொல்லியிருக்கின்றனவே! ஏன் அதையெல்லாம் கேட்கவில்லை? அவர்களுக்கு நிதி ஒதுக்கியிருக்க வேண்டாமா? அவர்களுக்கெல்லாம் விமோசனம் உண்டா என்றுதான் கேட்க விரும்புகிறேன். பல்வேறு நகராட்சிகளிலும் சுகாதாரப் பணியாளர்களை எடுப்பதற்கு இன்றைக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறதே, எப்படி அங்கெல்லாம சுகாதாரம் இருக்கும்? அதை ஏன் இந்த அரசு செய்யவில்லை என்று கேட்க விரும்புகிறேன். இறுதியாக ஒரு சில குறிப்பான செய்திகளைச் சொல்லி முடிக்க விரும்புகிறேன். (மணி அடிக்கப் பெற்றது)

பல்வேறு பிரச்சினைகள், உங்கள் ஆட்சியிலே இருக்கிற தவறுகள் ஆகியவை என்ன என்று தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த ஆட்சியின் திட்டங்கள் எல்லாம் அடிக்கல் நாட்டப்படுவதோடு சரி, நிறைவேற்றப் படுவதில்லை என்பதை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. கே. சுப்பராயன்] [1987 மார்ச் 27

தேக்கமாகியிருக்கிற பிரச்சினைகள் பல இருக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிற 49 ஆறுகள், அவைகள் வீணாக கடலில் போய்க் கலந்து கொண்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் தடுத்து அணை கட்டி இந்த மாநிலத்திற்குத் திருப்பி இங்கே தண்ணீரைக் கொண்டு வருவதற்கான ஆக்கப்பூர்வமான முறைகளில் இந்த அரசுக்கு முயற்சி இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினருடைய கட்சிதான் இப்போது அங்கே ஆட்சிக்கு வந்திருக்கிறது. இத்தகைய முயற்சியில் அவர் ஈடுபட்டு உதவினால் தமிழ்நாடு வளம் பெறும். வாழ்த்தி வரவேற்கத் தயாராக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன். எனவே இந்த அரசு சார்பில் இப்போதே நான் வேண்டுகோளை வைக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமது கட்சிக்குச் சொல்லி அந்தத் தண்ணீரை தமிழகத்திற்குத் திருப்ப முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** அந்த வேண்டுகோளை இங்கே பரிசீலிக்கிற அளவுக்கு நான் அதிகாரத்தில் இல்லை. எனவே வைக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும். இந்த மாநில அரசு அந்த மாநில அரசுடன் பேசுகிற ராஜீய சம்பந்தப்பட்ட பிரச்சினை. தனிப்பட்ட நபர்கள் சம்பந்தப்பட்ட உறவு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இத்தனை நெருக்கடிக்கும் எது காரணம் என்பதை ஒரே ஒரு இடத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கோவை மிக நன்றாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறது. "இந்திய நாடு முழுவதும் இருக்கிற பொதுவான நெருக்கடிதான் தமிழ்நாட்டையும் இப்போது பாதித்திருக்கிறது. இந்த நாடு முழுவதும் இருக்கிற பொதுவான விலைவேற்றம்தான் தமிழ்நாட்டையும் இப்போது பாதித்திருக்கிறது" என்று அவர் தம்முடைய அறிக்கையிலேயே குறிப்பிட்டிருக்கிறார். ஆக தமிழ்நாட்டின் பொருளாதார நலன் மற்றும் மக்களுடைய பொருளாதார நலன் பாதிக்கப்படுகிறது என்றால், அதற்குக் காரணம் அதில இந்திய அடிப்படையில் இயங்குகிற இந்த அமைப்புதான் என்று மிகத் தெளிவாக அவர் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியானால் நான் கேட்க விரும்புவது மாண்புமிகு நாவலர் அவர்களுடைய 'அட்சரம் லட்சம் பெறும்



1987 மார்ச் 27] [திரு. கே. சுப்பராயன்]

உரை' தவறே இல்லை. அவ்வளவு தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அப்படி மாண்புமிகு நாவலர் அவர்கள் தெளிவாக இங்கே அறிக்கையில் சொல்லும்போது இந்த அமைச்சரவையின் மூலவர், முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் கைதட்டி மத்திய அரசின் பட்ஜெட்டை வரவேற்றிருக்கிறார்கள். இந்த மாநிலத்தின் தற்போதைய நெருக்கடிக்கு காரணம் அந்த இந்திய கொள்கை என்று நிதிநிலை அறிக்கையிலேயே வரையறுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லுகிறார் "அது வரவேற்கப்பட வேண்டிய பட்ஜெட் என்று" எவ்வளவு முரண்பாடு? எது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரிஜினல் முகம் என்று தெரிய வேண்டாமா? எது உங்களின் உண்மையான குரல் என்று தெரிய வேண்டாமா? மத்திய அரசுதான் இந்த நிலைக்குக் காரணம் என்றால் அந்த மத்திய அரசை சரியான பாதையில் திருப்புவதற்கு உங்களின் ஆக்கப்பூர்வமான நிலை என்ன, திட்டம் என்ன என்பதைத் தயவுசெய்து தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக தமிழ்நாட்டு மக்களின் பொதுவான நலனை முன்னுக்குக் கொண்டு வருவதிலும், அவற்றைப் பாதுகாப்பதிலும், இந்த மாநிலத்தின் தொழில் வளர்ச்சியிலும், மாநிலத்தின் பாசனத் திட்டத்திலும், மின் உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்திலும், வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்திலும், நிலச் சீர்திருத்தத்திலும் மூடிய மில்களைத் திறப்பதிலும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுடைய பொதுவான நிதிக்கோரிக்கைகள் பற்றிய பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், ஆக்கப்பூர்வமாக எதுவும் சொல்லப்படவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

இறுதியாக சாதி உணர்ச்சியில் இந்த ஆட்சி தங்களுடைய மூதாதையர்களின் கொள்கையிலிருந்து விலகி வேறு வழியில் இறங்கியிருக்கிறது. சாதி மாநாடுகளில் பங்குபெறுகிற மந்திரிகள் இருக்கிறார்கள், எம்.எல்.ஏ.க்கள் இருக்கிறார்கள். இந்த ஆட்சியை ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். பெரியார் உண்மையிலே காலம் எல்லாம் போற்றிய, பாதுகாத்த அந்த சாதி எதிர்ப்பு உணர்ச்சியை நீங்கள் மதிக்க வேண்டும் என்பதற்காகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எந்த அமைச்சர்களும், எம்.எல்.ஏ.க்களும், ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும்,

அரசு அதிகாரிகளும் எந்தச் சாதியைச் சேர்ந்த பேராக்களுக்குள்ளும் மறையக்கூடாது. சாதி மாநாடுகளில் பங்குபெறக் கூடாது என்பதைத் தடுக்க ஒரு தடைச் சட்டத்தை இயற்ற அரசு முன்வர வேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்பு ஏழையெளிய, தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்களுக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி இந்த நாட்டு மக்களுக்கு அர்ப்பணம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலேதான் தமிழ்நாட்டு மக்களுக்காக ஏழையெளிய மக்களுக்காக, கல்வி பயிலும் பள்ளி சிறார்களுக்காக 85 இலட்சம் குழந்தைகளுக்கு இலவசமாக சத்துணவுத் திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு இலவச சீருடை வழங்கும் திட்டம், அதற்குப் பிறகு இலவச பாடப் புத்தகம் வழங்கும் திட்டம், அதற்குப் பிறகு பல்பொடி வழங்கும் திட்டம், அதற்குப் பிறகு ஏழையெளிய தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மக்களுக்காக இலவசமாக மின்சாரம் வழங்கும் திட்டம் என்று இப்படி எண்ணற்ற இலவசத் திட்டங்களை புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்த ஆண்டு இலவசமாக காலணி வழங்கும் திட்டம் என்ற மகத்தான திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டு அதற்காக சுமார் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். இதன் வாயிலாக பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு இலவச காலணி வழங்குவதோடு கிராமப்புறத்தில் பணியாற்றும் ஏழைத் தாய்மார்களுக்கு இலவசமாக காலணி வழங்கும் திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். அதோடு காலணி செய்யும் தொழிலில் பணியாற்றுகின்றவர்களுடைய வாழ்வை மேலும் அபிவிருத்தி செய்கின்ற வகையில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பிழைப்பு நடத்த புரட்சித் தலைவர் இப்படி ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.





எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் ஒரு கருத்தைச் சொன்னார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு மாக் குதிரை போன்றது என்று சொன்னார். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயனுக்குச் சொல்லிக்கொள்வது மஞ்சள் காமாலை என்ற வியாதி இருக்கிறது, அந்த வியாதி உள்ளவர்களுக்கு எதைப் பார்த்தாலும், எப்படிப்பட்ட கருத்தைச் சொன்னாலும் மஞ்சளாகத்தான் தோன்றும். அப்படி திரு. சுப்பராயன் அந்த நோயின் அடிப்படையில் இந்த அரசின் நல்ல திட்டங்களை யெல்லாம். இந்த அரசு கொண்டு வந்திருக்கின்ற பல்வேறு இலவசத் திட்டங்களையெல்லாம் குறை கூறிக்கொண்டு பேசுகிற நிலையை உருவாக்கி இந்த நிதிநிலை அறிக்கையின் மீது கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகத்தான் சொல்லியிருக்கிறேன். எந்த விதமான மஞ்சள் காமாலை நோயும் எனக்கில்லை, நல்ல நிலையில்தான் நான் இருக்கிறேன். நல்ல நிலையில் பார்த்துத் தான் சொன்னேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. தங்கமணி: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனக்கு மஞ்சள் காமாலை நோய் இல்லை என்று சொன்னார். இல்லாமல் இருப்பது எனக்கும் நல்லதுதான். இருந்தாலும் அவர் பேசிய போது, இந்த நாட்டிலே ஆட்சி செய்கின்ற முதலமைச்சர் அவர்கள் எந்த வரியும் போடாமல் ஆட்சி நடத்த வேண்டும் என்ற நோக்கத்தோடு போடுகின்ற திட்டத்தைப் பார்த்து பொருளாதார அடிப்படையை வைத்து போடுகின்றார்கள் என்ற எண்ணம் எனக்குத் தோன்றவில்லை என்று சொன்னபோது நாவலரவர்கள் இடையிலே கருத்தைச் சொல்லுகிறபோது, "வரியே போடாமல் ஆட்சி நடத்துகிற பொருளாதாரத் திட்டத்தைத் தாருங்கள்" என்று கேட்டார்கள். மரியாதைக்குரிய கம்யூனிஸ்ட் கட்சியின் நண்பர் அவர்கள் அந்தப் பொருளாதாரத் திட்டத்தை அறிவிப்பார்களேயானால் அதை நாங்கள் ஏற்று வருகின்ற [illegible] அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை [illegible]

[திரு. மு. தங்கமணி] [1987 மார்ச் 27

வாக்க ஏதுவாக இருக்கும். நாவலர் அவர்களின் கருத்துக் கேற்ப அவர் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

அதற்குப் பிறகு, புரட்சித் தலைவருடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு வறட்சி, வெள்ளம் மாறி, மாறி வந்து கொண்டிருந்தாலும் புரட்சித் தலைவர் வறட்சியானாலும், வெள்ளமானாலும் போர்க் கால அடிப்படையில் சமாளித்துக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த மன்றத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டு வறட்சி வரும் என்று தெரிந்தவுடனே உயர் அதிகாரிகளைக் கூப்பிட்டு அதற்காக 35 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து போர்க்கால அடிப்படையில் நட வடிக்கை எடுக்கப்பட்டு சுமார் ஒன்றரை மாத காலத்திலே 1,233 ஆழ் துளைக் கிணறுகளை அமைத்திருக்கிறது என்றால் இந்த அரசின் வேகத்தை அது காட்டுகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

கிராமப்புறமாக இருந்தாலும் சரி, நகர்ப்புறமாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு, சுத்தமான, பாது காக்கப்பட்ட குடிநீரை வழங்க வேண்டுமென்ற நோக்கத் தோடு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் குடிநீர் பிரச்சினையைச் சிறப்பாகச் சமாளித்துக்கொண்டிருக்கிறார் கள். அந்த வகையிலே கிராமப்புறமாக இருந்தாலும் சரி, நகர்ப் புறமாக இருந்தாலும் சரி, மக்களுக்குக் குடிநீர் வழங்க வேண்டு மென்ற நோக்கத்தோடு, இன்றைக்கு லாரிகள் மூலமாக தண்ணீரை வழங்கிக் கொண்டிருக்கிறோம். இதன்மூலம் இந்த ஆட்சி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெருக்கி, மேலும் நன்மை செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு மக்களுடைய நலனில் எந்த அளவுக்கு அக்கறை கொண் டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். குறிப்பாக கிராமங் களில் உள்ள மக்களுக்கு மருத்துவ வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு 7200 துணைச் சுகாதார நிலையங் கள் நிறுவப்படுமென்று நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட் டிருக்கிறார்கள். மேலும் இந்த ஆண்டு இறுதிக்குள் 58,000 மக்களுக்கு ஒரு சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலே



1987 மார்ச் 27] [திரு. மு. தங்கமணி]

அந்தச் சுகாதார நிலையங்களை நிறுவ வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டு மென்ற எண்ணத்தோடு, இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மது விலக்கைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் சொன்னதைச் செய்யக் கூடியவர்கள் என்பதை நிரூபித்திருக்கிறார்கள். மது விலக்கைக் கண்டிப்பாகக் கொண்டுவருவேன் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே மதுவிலக்கைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மதுவிலக்கு கொண்டு வந்ததால் தமிழ் நாட்டுக்கு, தமிழ் நாட்டு மக்களுக்கு 250 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. 250 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருந்தாலும், அதைப் பற்றி கவலைப்படாமல், மக்களுடைய நலன்மீது அக்கறையுள்ள அரசு என்பதை நிலைநாட்டும் வகையில் மது விலக்கைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மது விலக்கால் ஏற்படும் இழப்பில் 50 சதவிகிதத்தைத் தரவேண்டுமென்ற வேண்டுகோளை மத்திய அரசின் தலைமை அமைச்சருக்கு நம்முடைய முதலமைச்சரவர் கள் நேரடியாகவும், கடிதம் மூலமாகவும் தெரிவித்திருக்கிறார் கள். ஆனால் மத்திய அரசின் தலைமை அமைச்சரவர்கள் இந்த இழப்பில் 50 சதவிகிதத்தை நமக்குத் தரவில்லை என்று நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே நல்ல திட்டங்களுக்கெல்லாம் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கும் மத்திய அரசின் தலைமை அமைச்சரவர்கள் மது விலக்கால் நமக்கு ஏற்பட்டுள்ள இழப்பில் 50 சதவிகிதத்தை உடனடியாகத் தந்து, நல்ல திட்டங்களை நிறைவேற்ற ஆக்கம் தர வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டம். ஏழை எளிய மக்களுக்காக 30 இலட்சம் வீடுகள் கட்டித் தருவேன் என்று நிதி நிலை அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அதைக் கிண்டலும், கேலியும் பேசிக் கொண்டிருக்கிற மாற்றுக் கட்சி உறுப்பினர் களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அந்தத் திட்டம்பற்றி விளக்கமாக நிதிநிலை அறிக்கையில் கூறி இருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் வட்டங்கள், வட்டாரங்களில் உள்ள கட்டுமானப் பொருள்கள் தயாரிக்கும், அதாவது செங்கல், ஓடு தயாரிக்கும் நிலையங்கள் அரசாங்கத்தின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களாக [illegible]

[திரு. மு. தங்கமணி] [1987 மார்ச் 27

அமைத்து, அந்தப் பகுதியிலே கட்டப்படும் வீடுகளுக்கு அந்தச் சங்கங்களின் மூலம் கட்டுமானப் பொருள்கள் விநியோகம் செய்து, வீடுகளைக் கட்டித் தருவோம் என்று சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து தொலைக்காட்சி பெட்டிகளையும், வீடியோ கேசட் பிளேயர்களையும் வழங்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இவைகள் எல்லாம், கிராமப்புற மக்கள்மீது இந்த அரசு வைத்துள்ள நம்பிக்கையையும், ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, வறுமைக் கோட்டுக்குக் கீழேயுள்ள மக்களுக்கு இந்த அரசு செய்யும் நல்ல காரியங்களையும் எடுத்துக் காட்டுகின்றன. வீடியோ கேசட் பிளேயர்கள் மூலமாக கிராமப்புறங்களில் இலவச சத்துணவுத் திட்டம், முதியோர் கல்வி, கல்வி, விவசாயம் போன்ற துறைகள் குறித்து நல்ல பல திட்டங்களை எடுத்துச் சொல்ல முடியும் என்று, இந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இங்கே பேசிய மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கையில் எந்தவிதமான நிதி ஒதுக்கீடும் இல்லை என்று சொன்னார்கள். கல்வியைப் பொறுத்தளவில் சென்ற ஆண்டு 551 கோடி ரூபாய் ஒதுக்கிய இந்த அரசு, இந்த ஆண்டு 597 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. வேளாண்மையைப் பொறுத்தளவில் சென்ற ஆண்டு 110 கோடி ஒதுக்கிய அரசு இந்த ஆண்டு 141 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. நகராட்சி, ஊராட்சி நிறுவனங்களுக்காக சென்ற ஆண்டு 177 கோடி ரூபாய் ஒதுக்கிய அரசு இந்த ஆண்டு 193 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.

(பிற்பகல் 12-50)

அதைப்போன்று நீர்ப்பாசனத்திற்கு 129 கோடி ரூபாய் ஒதுக்கிய அரசு அதை 142 கோடி ரூபாயாக ஒதுக்கியிருக்கிறது. இப்படி நாட்டு நலனுக்காக, நாட்டு மக்களுடைய பணிகளுக்காக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்றைக்கு புரட்சித் தலைவருடைய அரசு தந்துகொண்டிருக்கின்றது. அதற்குப் பின்னாலே என்னுடைய தொகுதி பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்லிக்கொள்வதை இந்த நேரத்திலே என்னுடைய கடமை யாகக் கருதுகிறேன்.

புரட்சித் தலைவர் அவர்கள் பெரிய மாவட்டங்களையெல்லாம் நிர்வாக வசதி கருதி இரண்டாகப் பிரிக்கின்ற ஒரு திட்டத்தைத் தமிழகத்திலே தந்துகொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே



1987 மார்ச் 27] [திரு. மு. தங்கமணி]

தஞ்சாவூர் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்படுவதாக நான்
சில கருத்துக்களை, சில பரிசீலனைகளை அரசின் மூலமாக
கேள்விப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே பார்க்கின்றபோது
தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூரையும், திருவாரூரையும், நாகப்
பட்டினத்தையும் மாவட்டத்தினுடைய தலைநகரங்களாக ஆக்கி
செயல்படுகின்ற ஒரு செயற்குறிப்பை நான் அறிகிறேன். அந்த
வகையிலே பார்க்கின்றபோது, இன்றைக்கு மயிலாடுதுறையைப்
பார்க்கின்றபோது, அதைப் பொறுத்த அளவில், நாகப்பட்டினத்
திற்கும் திருவாரூருக்கும் இடையில் கிட்டத்தட்ட 25 கிலோ
மீட்டர்தான் இருக்கிறது. அப்படி பிரிக்கப்படுகின்ற மாவட்டம்
25 கிலோ மீட்டர் தூரத்திலேயே இருக்கின்ற காரணத்தினாலே
எதிர்காலத்திலே அந்த மாவட்டங்களை ஒன்றாக ஆக்கக்கூடிய
நிலைகூட உருவாகக்கூடும். எனவே மயிலாடுதுறையை வள்ளி
யம்மை மாவட்டத்தினுடைய தலைநகராக ஆக்கித் தந்தால்
சீர்காழி, மயிலாடுதுறை, அதைப்போன்று தரங்கம்பாடி, குட
வாசல், குத்தாலம் போன்ற தாலுக்காக்கள் அதிலே அடங்கும்.
புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணத்தை எதிர்காலத்திலே
பிரதிபலிப்பதற்கு அது வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி
மயிலாடுதுறையை வள்ளியம்மை மாவட்டத்தினுடைய தலைநக
ராக ஆக்கித் தரவேண்டும் என்ற வேண்டுகோளை நான் புரட்சித்
தலைவர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வர
விரும்புகிறேன்.

அதற்குப் பின்னாலே, மணல்மேடு பகுதியில் ஒரு தீ
அணைப்பு நிலையம் வேண்டும். அதைப் போன்றே, அங்கே
இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலைக்கு ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை
வேண்டும்.

மயிலாடுதுறையில் இருக்கின்ற அரசு ஞானாம்பிகை மகளிர்
கல்லூரிக்கு இந்த ஆண்டு பி.எஸ்ஸி. கெமிஸ்ட்ரி பாடத் திட்டம்
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஆனைதாண்டவபுரம் பகுதியில் உள்ள அரசு
உயர்நிலைப் பள்ளிக்கு புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற
ஆண்டு சென்றார்கள். அந்தப் பள்ளிக்குக் கட்டட வசதியில்லாமல்
அங்குள்ள மாணவர்களும் மாணவிகளும் மிகவும் சிரமப்பட்டுக்
கொண்டு இருக்கின்றார்கள். எனவே அந்தப் பள்ளிக்குக் கட்டட
வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. தங்கமணி] [1987 மார்ச் 27

அதற்கும் மேலாக மயிலாடுதுறை நகரத்திற்கு மாற்று வழிப்
பாதை வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களிடமும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்
களிடமும் சொல்லியிருக்கிறேன். அந்தச் சாலை இன்று
சர்வே செய்யப்பட்டு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு அரசினுடைய
பரிசீலனையில் இருக்கிறது. எனவே இந்த நிதி ஆண்டிலே
யாவது அந்த மாற்றுவழிப் பாதையை அமைத்துத் தரவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய பகுதியில் பாலாஜி பேப்பர் மில்ஸ்
என்று ஒரு தனியார் நிறுவனம் இருக்கின்றது. அந்த நிறுவனம்
கடந்த 2 ஆண்டுகளாக மூடியிருக்கின்றது. அங்கே வேலை செய்
கின்ற கிட்டத்தட்ட 200 தொழிலாளர்கள் வேலை இழந்திருக்
கின்றார்கள். அந்தத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்
கின்ற நோக்கத்தோடு நம்முடைய கூட்டுறவு சர்க்கரை ஆலை
இன்றைக்குத் தொடங்கப்பட்டு இருக்கின்றது. அந்தக் கூட்டுறவு
சர்க்கரை ஆலையிலிருந்து வருகின்ற கரும்புச் சக்கைகளைக்
கொண்டும் அந்த பேப்பர் மில்லை மீண்டும் அரசாங்கம் ஏற்று
நடத்தி அந்த ஏழைத் தொழிலாளர்கள் 200 பேர்கள் குடும்பத்தை
வாழ வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு வாய்ப்புத் தந்த
மைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவையினுடைய மாற்றுத்
தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை
யின் மீது எனது கருத்துக்களைக் கூறுவதற்கு முன்பு உலகம்
போற்றிய உத்தமத் தலைவி அன்னை இந்திராகாந்தி அம்மையார்
அவர்களுடைய திருவுருவப் படத்தை இந்த அவையில் வைக்க
வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து
இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக ஆகிறது. சென்ற ஆண்டுகூட
இந்த அவையிலே பேசுகின்றபோது அதைப்பற்றிக் குறிப்பிட்
டேன். என்ன காரணத்தாலேயோ அன்னையினுடைய திரு
வுருவப்படம் இன்னும் வைக்கப்படவில்லை என்பதை நினைவுப்
படுத்தி, இன்னும் காலதாமதம் செய்யாமல் இந்தச் சட்டமன்றக்
கூட்டத் தொடரிலேயே அன்னையினுடைய திருவுருவப்படத்தைத்
திறப்பதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கி
கிறேன்.



1987 மார்ச் 27] [திரு. த. புஷ்பராசு]

அடுத்ததாக, தீரர் சத்தியமூர்த்தி அவர்களுடைய நூற்றாண்டு விழாவினை இந்த ஆண்டு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் பிறந்த மண்ணாகிய திருமயத்திலே அந்த நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாட தமிழக அரசு ஏற்பாடு செய்யவேண்டும்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு அந்த விழாவை சிறப்பாக நடத்துகின்ற அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் திருமயத்திலே பிறந்து இந்திய அளவிலே அவர்கள் தீரச் செயல்களைச் செய்திருக்கிறார்கள். அவர் பெருந்தலைவர் காமராசர் அவர்களின் குருவாகத் திகழ்ந்து நமது தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டச் செய்தவர். அவர்களுடைய பெயரிலே, தீரர் சத்தியமூர்த்தி மாவட்டம் என்ற பெயரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு இட வேண்டுமென்று நான் அரசை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் பிறந்த திருமயத்திலே, அவர்களுடைய நினைவாக, பின்தங்கிய மாவட்டமாக புதுக்கோட்டை மாவட்டம் இருக்கிறபடியால், திருமயத்திலே காகித தொழிற்சாலை ஒன்றைத் துவக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல் அவர்களுடைய நூற்றாண்டு விழா நடப்பதற்கு முன்பே, தொடங்கப்பட இருக்கிற தொழிற்பேட்டையை திருமயத்திலே தொடங்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழகத்திலே நிலவுகின்ற வறட்சி நிலையைச் சமாளிக்க நிதி நிலை அறிக்கையிலே கிராமப்புறங்களிலே வேலை வாய்ப்பை அதிகப்படுத்த 5 கோடி ரூபாயும், திறந்த வெளி கிணறு அமைக்க 1 கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இந்தத் தொகை மிகக் குறைவு என்று நான் நினைக்கிறேன். உதாரணத்திற்கு இன்றைக்குத் தமிழகத்திலே பல மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தைப்பற்றி நான் சொல்லித்தான் ஆக வேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக புதுக்கோட்டை மாவட்டத்திலே பருவ மழை சரியாகப் பெய்யவில்லை என்பதை இந்த அரசு அறியும். குறிப்பாகச் சென்ற ஆண்டு [illegible]

[திரு. த. புஷ்பராசு] [1987 மார்ச் 27

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி நிலை நிலவியது. தமிழகத்திலே பிற மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்று அறிவித்த நேரத்திலே புதுக்கோட்டை மாவட்டத்தை வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்காமல் கடைசி நேரத்திலே அறிவித்தார்கள். அதன் காரணமாக புதுக்கோட்டை மாவட்டத்திற்கு என்று வறட்சி நிவாரணத் தொகை தனியாக ஒதுக்கப்படவில்லை. ஆனால் பல் வேறு துறைகளிலிருந்து நிதியை சற்று முன்னதாக எடுத்துச் செலவழித்தார்களே தவிர வறட்சி நிவாரண நிதி என்கிற வகையில் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து செலவு செய்யப்பட வில்லை. அதனால் புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டும் வறட்சி நிவாரண வேலைகள் சரியாக நடைபெறவில்லை. அதனால் இந்த ஆண்டு ஆரம்பத்திலேயே புதுக்கோட்டை மாவட்டம் வறட்சியின் பிடியிலே சிக்கித் தவிக்கின்ற மாவட்டம் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், குறிப்பாக கிராமப்புறத்திலே குடிநீருக்கு கஷ்டமான நிலைமை இருக்கிறது. அரசு உடலர் குடிநீர் வழங்க தனி முயற்சி எடுத்துக்கொண்டாலும் கூட தொடர்ந்து 10 ஆண்டுகளாக அங்கே மழை பெய்யாததால் நிலத்தடி நீர் மட்டம் ஆழத்திற்குச் சென்றுவிட்டது. குழாய்களில் குடிநீர் வருவதில்லை. இன்னும் ஒருமாத காலம் இந்த வறட்சி நிலை நீடிக்குமேயானால் அந்த மாவட்டத்தை விட்டு மக்கள் பிற மாவட்டங்களுக்குச் செல்லுகின்ற நிலை ஏற்படும் என்பதை நான் அரசுக்கு இச்சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்துகிறேன். கால்நடைகளுக்குத் தீவனம் இல்லை. கால்நடைகளைக் குறைந்த விலைக்கு விற்று அவர்கள் எப்படியோ உயிர் வாழ்ந்தால் போதும் என்று புதுக்கோட்டை மாவட்டத்திலே, கிராமப்புறங்களிலே வாழ்கின்ற மக்கள் நினைக்கிறார்கள். இனியும் காலம் தாழ்த்தாமல் எவ்வளவு விரைவில் அறிவிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக புதுக்கோட்டை மாவட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டம் என்று அறிவித்து வறட்சி நிவாரண வேலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று இச்சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், வறட்சி நிலை நிலவுகின்ற இந்தச் சூழ்நிலையில் புதுக்கோட்டை மாவட்டம் என்றாலே அது எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லாத மாவட்டம் என்பது எல்லோரும்



1987 மார்ச் 27] [திரு. த. புஷ்பராசு]

அறிந்த ஒன்று. அங்கே இரண்டு நூற்பாலைகள் இருக்கின்றன. காவேரி நகரில் காவேரி நூற்பாலை இருக்கிறது. நமன சமுத்திரத்தில் லட்சுமி சண்முகா நூற்பாலை இருக்கிறது. இந்த நூற்பாலை என்னுடைய தொகுதியிலே இருக்கின்றது. இரண்டு நூற்பாலைகளும் கடந்த இரண்டு ஆண்டுகளாக இயங்கவில்லை. இதன் காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு எந்த ஒரு வாழ்க்கை வசதியுமின்றி அந்தக் குடும்பங்கள் பட்டினியால் சாகின்றன என்கிற சூழ்நிலை ஏற்பட்டு விடும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த இரண்டு நூற்பாலைகளையும் உடனடியாக அரசே ஏற்று நடத்தி அந்தத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதோடு அந்தத் தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

தமிழக அளவிலே இந்த வறட்சி நிலை தொடர்ந்து வருகின்ற சூழ்நிலையை மாற்றியமைக்க அரசு நிலையான திட்டத்தை உருவாக்க வேண்டும். அதற்கு என்னுடைய ஆலோசனையாக நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற வகையிலே ஆழ்குழாய்க் கிணறு பம்பு செட்டுகளை வைத்து விவசாயம் செய்வதற்கு எந்தவிதமான நிபந்தனையுமின்றி அவர்களுக்கு வட்டியில்லாத கடன் கொடுக்கின்ற திட்டத்தை இந்த அரசு அறிவிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் இன்றைய சூழ்நிலையிலே ஆழ் குழாய்க் கிணறுகள் மூலம் விவசாயம் செய்தால்தான் நிச்சயமாக விவசாயம் செய்ய முடியும் என்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, நிலத்தடி நீர் ஆழமாகச் சென்றதன் காரணமாக இதை அரசு உணர்ந்து உடனடியாக இந்தத் திட்டத்தை அறிவிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பாக கிராமங்களிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற வகையிலே செங்கல், மரம் போன்றவைகளுக்கு வரி உயர்வை அறிவித்திருக்கிறீர்கள். இந்த வரி உயர்வை ரத்து செய்ய வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டம் சிறந்த திட்டம். அதிலே யாருக்கும் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் அதே நேரத்திலே கிராமங்களிலே இருக்கின்ற அந்த ஏழை எளிய மக்களுடைய குழந்தைகள் உடல் வலிவை மட்டும் பெற்றால் போதாது. கல்வி அறிவும் பெற வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளின் நிலையை இங்கே எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக் கிறேன். ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டிட வசதி இல்லை. போதிய ஆசிரியர்கள் இல்லை. ஓர் ஆசிரியர் குறைந்தது நூறு குழந்தைகளுக்கு மேலாக பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஒரு நிலையில் இன்றைக்கு ஆரம்பப் பள்ளிகள் இருக்கின்றன. கட்டிடங் களிலே இருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளினுடைய தரைகள் குண்டும் குழியுமாக இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் சில ஆசிரியர்கள் ஒழுங்காக கிராமப்புறங்களிலே பள்ளிகளுக்குப் பணியாற்றச் செல்வதில்லை. இந்த நிலைமையிலே அவர்கள் எப்படி கல்வி யறிவு பெற முடியும் என்பதை இந்த அரசாங்கம் நினைத்துப் பார்க்க வேண்டும். அதற்காக தலைவரவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம், உடனடியாக இந்த நிலையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, மதுவிலக்கை அமல்படுத்தியிருப்பதாக கவர்னர் உரையிலே முதலிலே தெரிவித்திருக்கிறீர்கள். ஆனால் உண்மை நிலை என்ன என்பது இங்கே ஆளுங்கட்சியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஏனென்றால் அநேக சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங்களிலேயிருந்து இங்கே வருகை தந்தவர்கள் என்பது தெரியும். இன்றைக்குக் கிராமங் களிலே நிச்சயமாக மதுவிலக்கு இல்லை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் முன்பு அரசுக்கு வந்த வருமானமும் போய், இன்றைய சூழ்நிலையிலே யார் இதற்கு முன்பு சாராயக் கடையை எடுத்து நடத்தினார்களோ அவர்களே இன்றும் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்று அந்தக் கிராமத்தை அடிமைப்படுத்தி அந்தக் கிராமத்திலே அவர்கள் சர்வாதிகாரியைப் போல சாராயம் விற்கின்ற ஒரு சூழ்நிலை இன்று அந்த கிராமங் களிலே ஏற்பட்டுள்ளது. [illegible] கிராமப்புறங்களிலே





இருக்கின்ற மக்களுக்கு அரசாங்க சாராயக் கடைகளை முன்பிருந் ததைவிட அதிகமாகத் திறந்துவிட்டு இன்றைக்கு மதுவிலக்கு என்று சொன்னால் எப்படி அதை ஒத்துக்கொள்ள முடியும் என்று நான் இந்த நேரத்திலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இதற்குக்கூட சொல்வார்கள், மது குடிப்பவர்களெல்லாம் பர்மிட் வாங்கிக் குடிக்கின்றார்கள் என்று. ஆனால் நிச்சயமாக அந்த நிலைமை இல்லை. எல்லோரும் குடிக்கின்றார்கள். ஆகவே, முழுமையான பூரணமான ஒரு மதுவிலக்கை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

குடிதண்ணீர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகக் குடிதண்ணீர் விநியோகம் செய் வதற்கு கிராமப்புறங்களிலே பல வழிகளைச் செய்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் இங்கே பொறுப்பேற்றவுடன் குடிதண்ணீர்ப் பிரச்சினையைக் கிராமங்களிலே முதலிலே தீர்த்து வைப்போம் என்று சொன்னார்கள். அதற்கான திட்டத்தையும் அறிவித்தார்கள். திட்டத்திலே எந்தவிதமான குறையும் இல்லை. ஆனால் நிறைவேற்றுகின்ற நிலையிலேதான் குறையிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட் டிருக்கின்றேன். மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முடிக்கப் பட்டு எத்தனையோ ஆண்டுக் காலமாகியும் இன்னும் இயங்காத நிலை; அதே நேரத்திலே அந்தத் தொட்டிக்கு மின்இணைப்பு கொடுக்காத நிலை; அதே நேரத்திலே கட்டிய தொட்டி ஒழுகிக் கொண்டிருக்கின்ற நிலை; இன்னும் அங்கே ஒப்பந்தக்காரர்கள் குறிப்பிட்ட அளவிற்கு மேல் பைப் லைன்களை அதிகப்படுத் தியதன் காரணமாகத் தண்ணீர்ப் பற்றாக்குறை நிலை. இந்த நிலையிலே எப்படி நாம் குடிதண்ணீர் கொடுக்க முடியும் என்பதை அரசு ஆராய வேண்டும். தவறு செய்கின்ற ஒப்பந்தக்காரர்கள் மீதும், இலாபம் கருதி அந்த வேலைகளை ஒழுங்காகச் செய்யாத ஒப்பந்தக்காரர்கள் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா இன்றைக்குக் கிராமங்களிலே வழங்கப் படுகிறது. ஆனால் ஆதிதிராவிட மக்களுக்கும், அங்கே இருக் கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் 20 ஆண்டு, 40 ஆண்டு, 50 ஆண்டு என்று குடியிருந்தும்கூட அவர்களுக்கு அந்த வீட்டுமனை

பட்டா வழங்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக அரசு இந்த ஆண்டு முடிவிற்குள் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துக் கிராமங்களிலேயும் உள்ள அந்த மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டுமென்ற ஒரு அறிக்கை அனுப்ப வேண்டுமென நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

முடிவாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் திருமயம் தொகுதியில் திருமயம் தாலுக்கா மிகப் பெரிய தாலுக்காவாக இருப்பதால் அதை இரண்டாகப் பிரிக்க வேண்டும். இரண்டாகப் பிரித்து, பொன்னமராவதியை ஒரு தனித் தாலுக்காவாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிமளம் ஒன்றியத்தில் வெள்ளாற்றில் சேத்துக் கண்மாய் அணை கட்டும் திட்டத்திற்கான எல்லா வேலைகளும் முடிந்து நிறைவேற்றக்கூடிய அளவில் இருக்கின்றன. அந்த சேத்துக்கண்மாய் அணை கட்டும் திட்டத்தை இந்த ஆண்டில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பொன்னமராவதி ஒன்றியத்தில் சடையம்பட்டி, கணேசபுரம் ஆகிய இரண்டு ஊர்களிலும் கால்நடை மருந்தகங்களை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று அரிமளம் ஒன்றியத்தில் கண்ணன்காரன்குடியில் ஒரு கால்நடை மருந்தகத்தை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று, கொப்பனாபட்டியில் இருக்கிற கலைமகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும். அதோடு புதுப்பட்டி ஊராட்சியில் இருக்கிற கழனிவாசல் அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, பொன்னமராவதியில் மருதுபாண்டியர் போக்குவரத்துக் கழகத்திற்கு பணிமனை அமைக்கும் வேலையை அரசாங்கம் செயல்படுத்த உறுதியளித்திருந்தது. அதற்கான வேலை இன்னும் தொடங்கப்படவில்லை. அந்த வேலையை உடனே தொடங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து, புதுக்கோட்டை அரசு மருத்துவமனையானது அந்த மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனையாக இருக்கிறது; தலைமை மருத்துவ மனையாக இருந்தும் அங்கே விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவு இல்லாமல் இருக்கிறது. ஆகவே, விபத்து அவசர சிகிச்சைப் பிரிவை உடனடியாகக் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய சொந்த ஊர் வடகாடு. இதுவரை எந்தவிதமான வைத்திய வசதியையும் பெற வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது; அங்கே மருத்துவமனை இல்லை. மாண்புமிகு ஆலங்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வெங்கடாசலம் அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். நாலும் அவர்களும் சேர்ந்து சென்ற ஆண்டிலும் அதற்கு முந்தைய ஆண்டிலும் வடகாடு கிராமத்தில் ஒரு மருத்துவமனை தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. கே. முத்துவேல்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிற 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது நான் சார்ந்திருக்கிற அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒருசில நாட்களுக்கு முன்பு அரியலூருக்கு அருகில் மருதையாற்றுப் பாலத்தில் கொடியவர்கள், சண்டாளர்கள் வெடி குண்டு வைத்து திருச்சி மலைக்கோட்டை துரித இரயிலைக் கவிழ்த்து விட்டார்கள். அதன் காரணமாக சுமார் 25 பேர்களுக்கு மேல் உயிரிழந்திருக்கிறார்கள்; நூற்றுக்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே தமிழர்களே தமிழர்களை அழிப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். இதற்குக் காரணமான வன்முறையாளர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும். இதற்குப் பின்னணியாக இருந்தவர்களின் முகத்திரையைக் கிழித்து, அவர்களை முச்சந்திக்குக் கொண்டுவந்து, வீதிக்குக் கொண்டுவந்து கடுமையான தண்டனை கொடுக்க

வேண்டும். அதற்கு நான் சார்ந்திருக்கிற அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சி உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மனிதத் தன்மையற்ற, கயமைப் பண்பு படைத்த கொடியவர்களை, இரயிலைத் தகர்த்த கொடியவர்களை, குற்றவாளிகளை வெகு விரைவில் கண்டுபிடிக்க துரித நடவடிக்கை எடுத்துவரும் காவல்துறை அதிகாரிகளையும் பொறுப்போடு மீட்புப் பணியில் ஈடுபட்ட அனைத்து அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன்.

அடுத்து, இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப் படுகிறார்கள். இலங்கை அரசு தமிழர்களை அழித்து வருகிறது. உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத ஒரு கொடுமையாக ஒரு நாட்டின் இராணுவமே அந்நாட்டின் மக்களை அழிக்கிறது. இதை நாமும் மத்திய அரசும் பேச்சுவார்த்தை மூலமாக ஒரு சுமுக நிலைக்குக் கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறோம். ஆனால் இலங்கை அரசு பேச்சுவார்த்தைக்கு சம்மதிப்பதாகத் தெரிவித்து, அங்கே இருக்கிற தமிழர்களை அழிக்கிறது. தமிழர்கள் வாழும் பகுதிக்கு உணவுப் பொருள்கள் செல்ல தடை விதித்திருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் பேச்சுவார்த்தைக்கு எந்தவகையிலும் இலங்கை அரசு ஒத்துவராது என்பது என்னுடைய நம்பிக்கையும் கருத்தும் ஆகும். ஆகவே, முன்னால் பிரதமர் அன்னை இந்திரா காந்தி எப்படி வங்காள தேசத்தை உருவாக்கினாரோ அதைப்போன்று இன்னாள் பிரதமர், பாரதத்தின் இளைய தலைவர், இணையற்ற தலைவர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு முடிவு எடுத்து இலங்கையில் வாழுகின்ற தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

இலங்கையிலே இந்த நிலை நீடித்துக்கொண்டிருப்பதால் இராமேஸ்வரத்தில் வாழ்கின்ற மீனவர்களின் தொழில்களைப் பொறுத்தவரையில் பாதிப்பு ஏற்பட்டு அவர்கள் நலிவடைந்திருக்கிறார்கள். அவர்களைக் காப்பாற்றுவதற்காகவாவது இலங்கைப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டவேண்டும்.



சுவாமி விவேகானந்தர் அவர்களை சிகாகோவில் நடைபெற்ற இந்து சமய மாநாட்டுக்கு அனுப்பி வைத்த மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களுடைய வழித்தோன்றலும், தூத்துக்குடிக்கும் இலங்கைக்கும் சுதேசிக் கப்பல் விடுவதற்கான முயற்சியில் ஈடுபட்ட தேசபக்தர் வ.உ.சி.க்கு பொருளாதார உதவி செய்தவரும், மதுரையில் 1901 ஆம் ஆண்டு நான்காவது தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தவருமான பெரியவர் வள்ளல் பாண்டித்துரைத் தேவர் பெயரால் இராமநாதபுரத்தில் ஒரு தமிழ்க் கல்லூரி இந்த ஆண்டே ஆரம்பிக்கவேண்டுமென்று நான் மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு காலணி வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறது. அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒன்று முதல் எட்டாவது வகுப்பு வரையில் படிக்கின்ற மாணவர்களுக்கும், கிராமங்களில் இருக்கின்ற தாய்மார்களுக்கும் காலணி வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கிராமத்தில் இருக்கிற ஆண்களுக்கும், நகர்ப்புறங்களில் இருக்கின்ற குடிசைவாழ் மக்களுக்கும், வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் காலணி வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் 20 கோடி என்பது போதாது என்றும், தரமான நல்ல காலணிகளை வாங்கித் தரவேண்டும் என்றும் நான் மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

தற்சமயம் தமிழகத்தில் 16 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கின்றன. அதிலும் குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டம் மிக அதிகமாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து 4 ஆண்டுக் காலமாக வறட்சியால் பாதிக்கப் பட்டு வருகிற மாவட்டம் இராமநாதபுரம் மாவட்டம். அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் அண்டை மாவட்டங்களுக்குக் கூட இந்த ஆண்டு செல்லாமல் வெளி மாநிலங்களுக்கே பஞ்சம் போக்க சென்றுவிட்டார்கள். அவர்களைத் திரும்ப இங்கே கொண்டு வரவேண்டும் என்றால் அந்த மக்களுக்கு உரிய வகையில் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். தமிழக அரசு சுமார் 22 கோடி ரூபாய்த் திட்டத்தில் அமைக்கின்ற

[திரு. கே. முத்துவேல்] [1987 மார்ச் 27

தோண்டுவதற்கும், ஒரு கோடி ரூபாயில் திறந்த வெளிக் கிணறு தோண்டுவதற்கும், 5 கோடியில் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கும் என்று பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் அதேநேரத்தில் மற்ற மாவட்டங்களுக்கெல்லாம் 20 இலட்சம் ரூபாய் வறட்சி நிவாரண வேலைகளுக்காக ஒதுக்கிவிட்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு மட்டும் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். இது எந்த அளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. எனவே இனிமேலாவது இராமநாதபுரம் மாவட்டத்திற்கு அதிகமான நிதியினை ஒதுக்க வேண்டுமென்று நான் மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய வகையில் முதுகுளத்தூர் தொகுதியில் உள்ள நாராயணகாவேரி, ரெகுநாதகாவேரி ஆகிய இரண்டு பெரிய கால்வாய்களையும் தூர் வாரும் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய பட்ஜெட்டில் சுமார் 80 கோடிக்கு வரிகள் உயர்த்தப்பட்டு இருக்கின்றன. அவை ஏழை, எளிய மக்களை வாட்டி வதைக்கக் கூடியதாக இருக்கிறது. வெல்டிங் கம்பிகள், ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள், செங்கற்கள் போன்றவற்றிற்குக் கூடுதலாக வரி விதிக்கப்பட்டு இருக்கிறது. அவற்றை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

1986-87 ஆம் ஆண்டு கல்விக்காக 551 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு அதாவது 1987-88 ஆம் ஆண்டுக்கு 597 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதாவது கூடுதலாக 46 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. குக்கிராமப்புறங்களில் இருக்கின்ற பள்ளிக்கூடங்கள் எல்லாம் கல்வித் துறையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. ஆனால் அங்கே இருக்கின்ற கட்டிடங்கள் எல்லாம் ஊராட்சி ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பள்ளிக் கட்டடங்களை மராமத்து செய்ய வேண்டுமென்றால் ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலை இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அங்கே



1987 மார்ச் 27] [திரு. கே. முத்துவேல்]

அதிகமான நிதியினை ஒதுக்கி இடிந்து விழும் தறுவாயில் இருக்கின்ற பள்ளிக்கூடங்களை எல்லாம் பொதுப்பணித்துறையின் மூலம் பழுதுபார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய பிரிக்கப்படாத இராமநாதபுரம் மாவட்டம் நீண்ட நெடு நாட்களாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இருப்பதால் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளை எல்லாம் கிழக்கே திருப்பி காமராஜர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் போன்ற வறட்சி மிகுந்த மாவட்டங்களுக்கு நிரந்தர பாசனவசதி செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் கமுதியில் குந்தா என்ற ஆறு இருக்கிறது. அங்கே மழைக் காலங்களில் தண்ணீர் வரும். அவ்வாறு வருகின்ற தண்ணீர் மலட்டாறு வழியாகக் கடலில் வீணாகக் கலக்கிறது. அந்த மலட்டாற்றிலே ஒரு அணைக்கட்டு கட்டும் திட்டம் நீண்ட நெடுநாட்களாகப் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று மெத்தப் பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்தோடு மட்டுமல்லாமல் இராமநாதபுரம் மாவட்டத்தில் குடிதண்ணீர் பஞ்சம் மிகவும் மோசமாக இருக்கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க மத்திய அரசு உதவியுடன் தொழில் குழு இராமநாதபுரம் மாவட்டத்தை தேர்வு செய்து இருப்பதை நான் பாராட்டுகிறேன். அதை உடனடியாகச் செயல்படுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உலக வங்கி நிதி உதவியுடன் அபிராமம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்ட அனுமதி அளித்து ஒரு ஆண்டுக்கு மேல் ஆகியும் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. அந்த வேலையை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் எல்லாம் கட்டி முடிக்கப்படாமலும்; கட்டி முடிக்கப்பட்டவை திறக்கப்படாமலும் இருக்கின்றன. அவைகளைச் சீர் செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். இராமநாதபுரம்

[திரு. கே. முத்துவேல்] [1987 மார்ச் 27

மாவட்டம் முழுவதும் ரேஷன் கடைகளில் பச்சை அரிசி கொடுப்பதனால் அங்கிருக்கிற மக்கள் அதை வாங்குவதே இல்லை. ஆகவே அங்கிருக்கிற மக்களுக்காக புழுங்கல் அரிசி சப்ளை செய்யவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் 14 போக்குவரத்துக் கழகங்கள் சிறப்புமாய் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் பஸ் கட்டணத்தை உயர்த்தியிருப்பதை மறுபரிசீலனை செய்து அவற்றை எல்லாம் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, கமுதியை மையமாக வைத்து நகரப் பேருந்து விடப்படவில்லை. என்ன காரணத்தினால் என்று தெரியவில்லை. டவுன் பஸ் விடலாம் என்று உத்தரவு வழங்கியிருந்தும் இன்னும் நகரப் பேருந்துகள் விடப்படவில்லை. ஆகவே கமுதியை மையமாக வைத்து சுற்றியுள்ள கிராமங்களுக்கெல்லாம் நகரப் பேருந்துகள், விடப்பட வேண்டும் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைக்கும் கமுதிக்கும் திருச்சி வழியாக திருவள்ளுவர் வண்டி. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஓடிக் கொண்டிருந்தது. அது தற்சமயம் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதை மறுபடியும் ஓட ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொண்டு, சாலைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை எல்லாம் சீரமைத்துக் கொடுக்க வேண்டும். நாம் சுதந்திரம் பெற்று 40 ஆண்டுகள் ஆகியும் இன்னும் சாலை வசதி இல்லாத கிராமங்கள் என் தொகுதியில் இருக்கின்றன. அவற்றை எல்லாம் சீரமைக்க, சாலை வசதி செய்து தர வேண்டுமாய் கேட்டுக் கொண்டு, சேதுக் கால்வாய்த் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு பாம்பன் பாலத்தையும் விரைவில் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என் தொகுதியில் 3 பேரூராட்சிகள் இருக்கின்றன. அங்கே போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் துப்புரவுத் தொழிலாளர்களுக்குக்கூட சம்பளம் கொடுக்காத நிலை இருக்கிறது. அவர்களுக்கு போதிய நிதி வசதியைக் கடனாகவோ, மானியமாகவோ கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்



1987 மார்ச் 27] [திரு. கே. முத்துவேல்]

தோடு, அபிராமம் ஊராட்சியிலே கடந்த 3 ஆண்டுகளாக மின் விளக்குகள் எரியவில்லை, அவற்றை சீர்செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பிற்படுத்தப்பட்ட மாணவர் இல்லங்கள் என் தொகுதியில் இருக்கின்றன. அவர்களுக்கு நல்ல உணவு அளிக்க கட்டணம் அதிகரித்திருப்பதைப் பாராட்டுகிறேன். அத்தோடு மாணவர்களின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு என் தொகுதியில் நீராவி என்னுமிடத்தில் ஒரு புதிய மாணவர் விடுதியை இந்த ஆண்டு திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருக்கும் மருத்துவமனைகளில் போதிய மருத்துவர் இல்லாத நிலைமை இருக்கிறது. போதிய மருந்து வசதியும் இல்லாத நிலை இருக்கிறது. முதுகுளத்தூர் மருத்துவமனையில் எந்தவிதமான வசதியும் இல்லை. கட்டடமே இடிந்து விழும் நிலையில் இருக்கின்றது. இந்தச் சீர்கேடுகளைப் போக்க தக்க வசதிகளுடன் புதிய மருத்துவமனையைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பெருநாழி என்னுமிடத்தில் மருத்துவமனைக் கட்ட பத்தாயிரம் ரூபாயும், ஐந்து ஏக்கர் நிலமும் அளித்தும், 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னமும் ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படவில்லை. அங்கே உடனடியாக ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் பெருநாழி என்னுமிடத்தில் மருத்துவமனையைக் கட்ட அளிக்கப்பட்டுள்ள 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து, வரவேற்று என்னுடைய கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடுமையான வறட்சி ஏற்பட்டாலும், எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும், தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே வயிற்று உணவு [illegible]. [illegible] வேலை செய்து கடுமையாக உழைக்கின்ற [illegible] [illegible] மாலைவரை உழைத்து வீடு திரும்[illegible] [illegible] வயிற்று உணவுப் பொருள்களை [illegible]

கொள்கிற நிலைமை, இரும்பைத் துணைக் கண்டத்தில் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்த ஆட்சியில் மட்டும்தான் இருக்கிறது என்பதை இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

கடந்த கால வரலாறுகளை எடுத்துக் கொள்வீர்களானால் அரிசி, பாமாயில், பருப்பு போன்ற விலைபொருள்கள் எந்த அளவிற்கு விலையேற்றம் பெற்றிருந்தன என்பதெல்லாம் நமக்குத் தெரியும். ஆனால் இன்றையதினம் தமிழகத்தில் நியாயவிலைக் கடைகளில், சந்தைகளில், பொதுக் கடைகளில் எல்லாம் கூட தாம் விரும்புகிற அரிசியை குறைந்த நியாயமான விலையில் மக்கள் பெற்றுச் செல்கிற ஒரு நிலைமை இன்றைக்கு தமிழகத்தில் உண்டு. அது புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில்தான் என்பதை நினைவு படுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்றைக்கு அருமை நண்பர் சுப்பராயன் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அண்ணா தி.மு.க. அரசு நகராத குதிரை மேல் ஆடிக்கொண்டிருக்கிற அரசு என்று சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்வதெல்லாம் தமிழகத்தைப் பொறுத்தவரையில், தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அமர்ந்திருக்கிற குதிரையான இந்த அரசு மக்கள் விரும்புகிற வேகத்தில் செல்லக்கூடியது என்றும், அப்படி வேகமாக ஓடுகிற குதிரையைப் பெற்றிருக்கிற அரசு இது என்பதை நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் இரண்டு சக்கர வண்டிகளுக்கு வரிக் குறைப்பை அறிவித்திருக்கிறார்கள். இதனால் முழுமையாகப் பயன் பெறுகிறவர்கள் கிராமத்திலே இருக்கிற சாதாரண விவசாயிகள், குறைந்த வருமானம் பெறுகிற அரசு ஊழியர்கள், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் போன்றவர்கள்தான். இப்படிப்பட்ட ஏழை எளியவர்கள்தான் இதனால் பயன் பெறுகிறார்கள் என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சத்துணவைப் பொறுத்தவரையில் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். சத்துணவு என்பது இன்றைக்கு வளர்கிற சாதாரண குழந்தைகளுக்காக அளிக்கப்படுகின்ற. ஒரு மாபெரும் புரட்சிகரமான சமுதாயத்தை உருவாக்குகிற திட்டமென்பதைத்





தெரிவித்துக் கொள்கிறேன். சின்னஞ்சிறு வயதிலே இருக்கிற குழந்தைகள் நல்ல முறையில் வளர வேண்டுமென்று தாயமார்கள் விரும்புவார்கள். இந்தத் திட்டத்தின் மூலம் தாய்மார்கள் விரும்பும் வகையில் குழந்தைகளை வளரச் செய்ய முடியும், உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் இன்றைக்கு சத்துணவைக் கொடுக்கிறார்கள். இந்தச் சமுதாயத்தில் தாழ்த்தப் பட்ட நிலையில் இருக்கும் ஏழைக் குழந்தைகள் வளர வேண்டும், குறிப்பாகக் கல்வி அறிவில் வளர வேண்டும். மனிதனை மனிதனாக மதிக்கிற அளவிற்கு சமுதாயம் நல்லமுறையில் வளர வேண்டுமென்றால், இன்றைக்குக் கொடுக்கப்படுகிற சத்துணவு, சீருடை, இலவசமாகக் கொடுக்கப்படுகிற பாடப் புத்தகங்கள் இவைகளால்தான் இயலுமே தவிர வேறு எந்த முயற்சியாலும் இப்படி ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குக் காலணிகள் இலவசமாக வழங்கப்படுவதைப் பற்றிச் சொன்னார்கள். எனக்கு கடந்த கால தேர்தல் நேரம் நினைவிற்கு வருகிறது. மரியாதைக்குரிய கருணாநிதி அவர்கள் தேர்தல் நேரத்தில் ஒன்றைச் சொன்னார்கள். தமிழக மக்கள் என்னை வெற்றி பெறச் செய்வார்களானால் நான் அவர்களின் காலுக்குச் செருப்பாக உழைப்பேன் என்று சொன்னார்கள். ஆனால் உண்மையில் தமிழக மக்களுக்கு காலணிகள் கொடுத்து சிறப்பாக உழைக்கின்ற பணியை மேற்கொண்டவர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர்தான் என்பதை நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தேர்தலுக்காக, ஓட்டைப் பெறுவதற்காக ஒருவர் சொல்கிறார். ஆனால் உள்ள உயர்வோடு தமிழக வாக்களித்த மக்களுக்கு நன்றியோடு இந்தக் காலணிகளை வழங்கியிருக் கிறார்கள் என்றால் அது எவ்வளவு பெரிய பொருத்தம் என்பதை மக்களுக்கு தமிழக முதல்வர் எண்ணிப் பார்க்க வேண்டும். காலுக்கு செருப்பில்லாமல் கிராமப் பகுதிகளில் மக்கள் 10, 15 மைல்கள் நடந்து செல்வார்கள். நடை பாதையில் கூட செல்லாமல், பாதையின் ஓரமாக, கால்களைப் பின்னிக்கொண்டு அவர்கள் நடந்து செல்கிற நிலைமைகளை கிராமப்புறங்களிலிருந்து வந்திருக்கிற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் அறிவோம். அதை எண்ணிப் பார்த்து பாதையின் ஓரத்தில் கூட செல்லாமல், ஓரமாக செல்பவர்களுக்கும்,

இந்த சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருக்கிற குடும்பத் தலைவர்களுக்கும் தாய்மார்களுக்கும் காலணிகள் வழங்கியிருப்பதை மனதாரப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றையதினம் கீழ்பவானி அணையில் இரண்டாம் போகச் சாகுபடிக்குத் தண்ணீர் திறந்து விடப்படாத நிலைமை இருந்து வருகின்றது. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுகிறேன், கீழ்பவானி அணையில் இரண்டாம் போகச் சாகுபடிப் பகுதியில் தண்ணீர் விடப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிறது. அங்கே இருக்கிற தென்னை மரங்கள் எல்லாம் காய்ந்து விடுகிற நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமை எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் மரியாதைக்குரிய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியும். இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட ஒரு அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதைப்போல நீர்ப்பாசனத் துறை தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியிருக்கிறார்கள். கீழ்பவானி அணையில் இரண்டாம் போகம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தண்ணீர் கொடுத்து, காய்ந்து போகிற தென்னை மரங்களை காப்பாற்ற வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் கோரியிருக்கிறார்கள். நாங்களும் இதை வலியுறுத்தியிருக்கிறோம். ஆகவே உடனடியாக தண்ணீர் திறந்துவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.இ.பி. திட்டங்களின் மூலம் கட்டப்படுகின்ற வீடுகள், டவுன் பஞ்சாயத்துக்களுக்கு, பேரூராட்சிகளுக்கு இல்லை என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஏற்கனவே ஒருசில இடங்களில் அப்படிப்பட்ட வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. இடையில் அது நிறுத்தப்பட்டால் பேரூராட்சிகளிலே இருக்கிற ஏழை எளியவர்கள், அரிசன மக்கள், உண்மையிலேயே இதனால் பாதிக்கப்படுவார்கள். எனவே இந்த ஆர்.எல்.இ.ஜி.பி. மற்றும் என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்கள் மூலமாக கட்டப்படுகிற வீடுகளில் அவர்களுக்கும் ஒரு பங்கை ஒதுக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். [illegible]





சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசாங்கம் உத்தரவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் குடிநீரைப் பொறுத்தவரையிலும் நான் சட்ட மன்றத்திலே ஏற்கெனவே பேசியிருக்கிறேன். பெரியார் மாவட்டத்திற்கு என்று தனியாக ஆய்வு செய்கின்ற ஒரு டிவிசனை அமைத்துத்தரவேண்டும் என்று கேட்டிருந்தோம். அதை ஏற்று, பெரியார் மாவட்டத்திற்கு என்று குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக, தனியாக ஒரு பி.எப். டிவிஷனை, ஒரு ஆய்வு செய்யும் டிவிசனை தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அமைத்துத் தந்திருக்கிறார்கள். அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே வறட்சியைப் போக்குகின்ற துரித நடவடிக்கையின் மூலமாக, இதை அமைத்துத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பெரியார் மாவட்டத்திலே மட்டும் 48 கூட்டுக் குடிநீர் திட்டங்களை இந்த ஆண்டு ஆய்வுப் பணியிலே எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள். அதிலே காசிப்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று. இந்த காசிப்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காசிப்பாளையம் பேரூராட்சி மற்றும் 9 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய திட்டமாகும். இந்த 48 திட்டங்களிலே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த காசிப்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் முதல் திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கம் செய்து, அதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அரியப்பன்பாளையம் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டம், அரியப்பன்பாளையம் பேரூராட்சி மற்றும் உக்கிரம், தோணகமலை ஆகிய ஊராட்சிகளை உள்ளடக்கிய திட்டமாகும். இதையும் இந்த ஆண்டு நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கிட்டப்பாளையம் மற்றும் 52 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் இன்றையதினம் ஆய்வுப் பணியிலே இருந்து வருகின்றது. [illegible] இந்த ஆண்டே எடுத்து நிறைவேற்றித்தர வேண்டுமென்று [illegible] என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக குள்ளம்பாளையம் என்ற ஒரு இடம்—அதாவது சத்தியமங்கலத்திற்கும், ஈரோடுக்கும் இடையிலே இருக்கிற குள்ளம்பாளையம் என்ற இடத்தில்—எங்களுடைய கோபி சட்டமன்ற உறுப்பினரும் அந்த ஊரிலேதான் இருக்கிறார்கள்—உள்ள ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித் தர மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்து, இந்த ஆண்டு பார்ட்-டு ஸ்கீமிலே இதைச் சேர்த்து, பாலம் அமைத்துத் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அக்கரைக்கொடிவேரியிலேயிருந்து கரும்பு எடுத்துச் செல்லுகின்ற விவசாயிகள், புதிதாகத் துவங்கப்பட்டிருக்கிற பண்ணாரிமலைக்கு எடுத்துச்செல்லவேண்டும் என்றால், சத்தியமங்கலம் வந்து 20 கி. மீட்டர் சுற்றிச் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. அதேபோல் தாக்கனாச்சிமலை வழியாகச் செல்லவேண்டுமென்றாலும் 20 கி. மீட்டர் சுற்றிச் செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே அக்கரைக்கொடிவேரியையும், காட்டேட்டையும் இணைக்கின்ற வகையிலே அரை கோடி ரூபாய்ச் செலவில் ஒரு பாலம் அமைத்துத் தந்தால்—அங்கே செல்லுகின்ற லாரிகளின் மூலமாக நாம் அந்தப் பணத்தைக் கூட வசூல் செய்துகொள்ளலாம்—நன்றாக இருக்கும். எனவே இதையும் இந்த ஆண்டு அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே உள்ள பனையம்பள்ளியிலே ஒரு உயர்நிலைப்பள்ளியை இந்த ஆண்டு உருவாக்கித்தர வேண்டும். பொதுமக்கள் சார்பாக 5 ஏக்கர் நிலத்தை 30 ஆயிரம் ரூபாய் செலவில் வாங்கி, அதை அரசாங்கத்திற்கு ஒப்படைக்க இருக்கிறார்கள். 22,500 ரூபாய் பணத்தை கட்டவிருக்கிறார்கள். ஆகவே இந்த ஆண்டு பவானிசாகர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட, பனையம்பள்ளியிலே ஒரு உயர்நிலைப் பள்ளியை உருவாக்கித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது.)

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-88-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது ஒருசில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். விற்பனை



வரியிலே சலுகை அளித்திருப்பதால் தமிழ் நாட்டிலே வியாபாரம் பெருகுவதற்கு வாய்ப்பு ஏற்படும். செங்கல், மரத்திற்கு வரி விதித்திருப்பது அதிகப்படியான வீடுகளைக் கட்ட நினைப்பதைப் பாதிக்கும். இதை யோசிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[illegible] நாட்டிலே வறட்சி இருக்கிறது. இந்த வறட்சி எங்கும் இருக்கிறது. ஓட்டப்பிடாரத்திலே இருக்கிறது என்று சொல்லித் [illegible]வேண்டியதில்லை. அங்கே எந்தக்காலத்திலும் வறட்சி இருக்கிறது. ஆனால் இப்போது மிக மோசமான நிலைமையில் இருக்கிறது. இதை நான் விவரித்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் சாதுரியமாகச் [illegible]த்து வருகிறார். ஓட்டப்பிடாரம் தாலுக்காவில் உள்ள [illegible]ளில் தூர் எடுக்கவேண்டும். அங்கே தண்ணீர் பெருக [illegible]ப்பில்லை. வானம் பார்த்த குளங்கள். நீர் வரத்து கிடையாது. [illegible] மழைத் தண்ணீர் எல்லாம் கடலுக்குப் போய்விடுகிறது. அங்குள்ள மக்கள் அந்தக் குளங்களை எல்லாம் தூர் வார வேண்டும் என்று வேண்டுகிறார்கள். எனவே மாண்புமிகு நாவலர் அவர்கள் அந்தக் குளங்களில் தூர் வாருவதற்கு நிதி ஒதுக்கி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு நாவலர் அவர்கள் 3,700 கோடி ரூபாய்க்கு வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

புராதனத் தமிழனுக்குப் பெருமை கொடுக்கக்கூடிய இந்தக் குளங்களைத் தூர் எடுத்து ஒரு ஆறு மாத காலத்திற்காவது தண்ணீர் பெருகக்கூடிய அளவுக்கு அதை ஆழமாக்கச் செய்யுமாறு மிகப் பணிவோடு எனது வேண்டுகோளாக நான் உங்கள் மத்தியில் சமர்ப்பிக்கிறேன். எங்கள் பகுதியில் பூமியைத் தோண்டினால் உப்புத் தண்ணீராக இருக்கும். இதற்கு முன்னால் ஒவ்வொரு தடவையும் அதை நான் வேண்டுகோளாக வைத்து இருக்கிறேன். நான் பெருமைப்படுகிறேன், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்த வேண்டுகோளைப் பரிவோடு கவனித்து, அங்குள்ள மக்களுக்கு 10 கோடி ரூபாய் திட்டத்தில் தாமிரபரணி, சித்தாறில் இருந்து இனிமேல் நல்ல தண்ணீர் கிடைக்கக்கூடிய அளவுக்கு, ஒரு ஆய்வை நடத்த இப்போது ஓட்டப்பிடாரம் ஒன்றியத்திற்கு குழுவை அனுப்பி அந்

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [1987 மார்ச் 27

ஆய்வைச் செய்து கொண்டிருக்கிறது. அதற்கு என் அன்பார்ந்த நன்றியையும், என் வணக்கத்தையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இன்னும் ஓரிரு மாதங்களில், இந்த 1987-ம் ஆண்டிற்குள் முதல்வர் திருக்கரத்தால் திறந்து வைக்கும் அந்த நினைவாலயத்தை, அந்தப் பொன்னாளை நானும் எனது ஒட்டப்பிடாரம் தொகுதி மக்களும் பார்த்து கண்டு களிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பேருந்துகள். கட்டபொம்மன் பிறந்த அந்த நாட்டிலே கட்டபொம்மன் பஸ் செல்லவில்லையே என்று வருத்தத்தோடு பல தடவை பேசியிருக்கிறேன். இப்போது ஓரிரு பஸ்கள் ஓட ஆரம்பித்து இருக்கின்றன. அதற்கு நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அங்கே குறுக்கே ரயில் பாதை ஒன்று வருகிறது. அது காட்டு வழியாகச் செல்கிறது. இப்போது கயத்தாறிலிருந்து கழுகாசலபுரத்திற்கும் கே. கைலாசபுரம் என்ற ஒரு அரிசன கிராமத்திற்கும் ரயில்வே பாதையைக் கடந்து பஸ்கள் விடப்படுகின்றன என்பதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதில் எல்லாப் பஸ்களையும் போடுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டப்பிடாரம் தாலுகா தலைமை ஸ்தாபனம். அங்கிருந்து டவுன் பஸ்கள் புறப்படக்கூடிய ஒரு நகராக, ஒரு பஞ்சாயத்தாக, அதைச் செய்யாத காரணத்தால் டவுன் பஸ்கள் செல்லவில்லை. அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறும், கயத்தாறில் ஒரு கே.டி.சி. பஸ் டெப்போ அமைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றை பணிவோடு அந்தக் கடமைக்கு நான் சொல்லுகிறேன். தமிழகச் சாலைகள் வேறு எங்கே எப்படி இருக்கின்றனவோ தெரியாது. எங்கள் பகுதியில், எங்கள் தொகுதியில் படுமோசமாக இருக்கின்றன. புளியம்பட்டியில் இருந்து கடம்பூருக்குச் செல்லும்



1987 மார்ச் 27] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

சாலை, சீவலப்பேரியிலிருந்து தூத்துக்குடி செல்லும் சாலை, மணியாச்சியிலிருந்து ஓட்டப்பிடாரத்திற்குச் செல்லும் சாலை, குறுக்குச் சாலையிலிருந்து கயத்தாறு வழியாக கழுகுமலைக்குச் செல்லும் சாலை ஆகிய இந்தச் சாலைகளில் போனால் தமிழகச் சாலைகள் என்று யாராவது சொன்னால் நம்ப மாட்டார்கள். எனக்கு சொந்த கார் கிடையாது, நான் பஸ்களில்தான் போக வேண்டும். அந்தச் சாலைகளின் வழியாக வருகிறபோது நான் தோழமைக் கட்சிக்காரன் என்ற முறையில் என்னையும் ரோட்டையும் பார்க்கிறார்கள், பார்த்துச் சிரிக்கிறார்கள். தமிழக நெடுஞ்சாலைகளை அந்த நிலையில் விடுவது நல்லது அல்ல. அவைகளை எல்லாம் கவனிக்க வேண்டும் என்று அன்போடும், பணிவோடும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு சில கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் இல்லை. கீழப்பாரைப்பட்டி, மேலப்பாரைப்பட்டி, கீம்மா மும்மலைப்பட்டி, செச்சலாபுரம், வேப்பங்குளம் என்ற கிராமங்களுக்கு இது வரைக்கும் யாரும் போனது கிடையாது. நடந்துதான் போக வேண்டும். அதுவும் கல்லிலும், முள்ளிலும் செல்ல வேண்டும். சுதந்திரம் பெற்று இவ்வளவு நாட்களுக்குப் பிறகும்—1987 ஆம் ஆண்டு வரைக்கும் பெரும்பாலும் அரிசனங்களுடைய இடங்கள் இப்படிப்பட்ட நிலையில் இருக்க வேண்டுமா? அவர்களும் பஸ்ஸில் செல்ல வேண்டாமா? அதை நீங்கள் செய்ய வேண்டாமா என்பதை மிக அன்போடு கேட்டுக் கொள்கிறேன். சில இடங்களில் தமிழகச் சாலைகளிலே தெற்கு, சோனார்கோட்டை, வடக்கு-தெற்கு, வண்டானம் போன்ற இடங்களில் பாலங்கள் இல்லை. அதை எல்லாம் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பத்து பேருக்கு மேல் வேலை செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலைகூட எங்கள் தொகுதியிலே கிடையாது. ஒட்டப்பிடாரத்திலே வ.உ.சி. பெயரிலும், கயத்தாறில் கட்டபொம்மன் பெயரிலும் தொழிற்சாலை அமையுங்கள் என நான் பல தடவை வேண்டியிருக்கிறேன். அதைப்பார்த்து அருள் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். எஸ். ஆறுமுகம்] [1987 மார்ச் 27

மணியாச்சியை அடுத்து மருதாள்வாழ்வு என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்குப் பக்கத்திலே மத்திய அரசு டைட்டேனியம் தொழிற்சாலையை அமைப்பதற்கு ஆய்வு செய்து பார்த்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள். அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்பட்ட சமூகத்தார் அதிகமாக வாழ்கிறார்கள். மாண்புமிகு நாவலர் அவர்களை அந்தத் தொழிற்சாலையை அங்கே கொடுக்கக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், அந்தக் காலத்திலே உள்ள ட்ரான்ஸ்பார்மர்கள்—எங்கள் அப்பா காலத்தில் உள்ளது தான் இன்றும் இருக்கின்றன. தெரு விளக்குகள் சரியாக எரியவில்லை. நமது தமிழக முதல்வர் அவர்கள் ஏழைகளுக்கு இலவச மின்சாரம் போன்ற உதவிகள் செய்து வருகிறார்கள். இந்த மின்சாரம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமானால் நல்ல ட்ரான்ஸ்பார்மர்களைப் போட்டு, நல்ல அளவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கல்வி விஷயத்திலே பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு பல கிராமங்களில், என்ன தாத்தா, எம்.எல்.ஏ.-வாக இருக்கிறீர்கள், எங்க ஊர் பள்ளிகளுக்கு கட்டடங்கள் இல்லையே என்று கேட்கிறார்கள். ஆளுநர் உரையிலே அதைப்பற்றி ஆளுநர் அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்று மக்கள் அதை இன்னும் கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

குமாரகிரி, லக்கம்மாதேவி, வி. வள்ளியம்மாள்புரம், கயத்தாறு, கழுகுமலை, நெச்சவெபுரம் இவைகளில் எல்லாம் ஏன் காணவில்லையே என்று கேட்கிறார்கள். பழைய கூரைக் கட்டடம், ஓட்டைக் கட்டடம், ஒழுகலான கட்டடத்தை வைத்துக் கொண்டு பள்ளிக்கூடம் நடத்துகிறார்கள். சிறிது கண் பார்வை வைத்து, அதையெல்லாம் கட்டிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கழுகுமலையில் ஒரு மேல்நிலைப் பள்ளியினுடைய கட்டடம் தீப்பிடித்து எரிந்து 2 வருஷமாகிறது. திண்ணையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் செய்ய வேண்டாமா? அவர்களுக்கு ஒரு பள்ளிக்கூடத்தை நீங்கள் உண்டாக்க வேண்டாமா?



1987 மார்ச் 27] [திரு. ஆர். எஸ். ஆறுமுகம்]

கயத்தாறில் கட்டபொம்மன் பெயரால் ஒரு மேல்நிலைப் பள்ளியை மங்கம்மா காலத்திலே கட்டிய ஒரு இடத்திலே வைத்து, நடத்துகிறார்கள். அங்கே ஒரு பள்ளிக் கூடத்தை நீங்கள் கட்டிக் கொடுக்க வேண்டாமா என்பதைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர் விடுதி. தமிழக முதல்வர் நமக்கு உணவுக்காக அதிகமாக இந்த ஆண்டு கொடுத்திருக்கிறார்கள். காமநாயக்கன் பட்டியிலும், கயத்தாறிலும் இரு ஆதிதிராவிட மாணவர் விடுதி கொடுங்கள். காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டி 120 கிராமங்களில் மனு கொடுத்திருந்தார்கள். இரண்டு ஊர்களுக்குத்தான் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்கள் அத் தொகுதியில் அதிகம் இருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கு வீடு வேண்டாமா என்றும் ஆதிதிராவிடர்களுக்கு முதல்வர் அவர்கள் நல்லது செய்கிறார்கள், இந்தத் தொகுதிக்கு அதிகம் செய்யவில்லை என்றும் என்னிடம் கேட்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட தொகுதி அது. தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகம். இரண்டு கிராமங்களுக்கு மேல் இந்த மூன்று வருடமாக வீடு வரவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிகப்படியான கிராமங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காலணி வழங்குகிறீர்கள். அது ஏழைகளுக்குச் செய்யும் நல்ல காரியம். அது நல்ல திட்டம். அதை நான் வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

கடைசியாக, மதுவிலக்கு. ஏழைகளுக்கு அதைவிட நன்மைகள் செய்யும் திட்டம் எதுவும் இருக்க முடியாது. நான் தாழ்த்தப்பட்டவன். தாழ்த்தப்பட்ட வகுப்பின் சார்பாக, பல ஆண்டுகள் அந்தச் சங்கத்தின் தலைவனாக இருந்தவன். அந்த மக்களின் சார்பாக, அன்பான நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[illegible] சாராயக் கடைகளினால் தாழ்த்தப்பட்ட மக்கள் [illegible] இடையிலே ஒருவர் கொண்டு வந்தார். [illegible] முதல்வர் அவர்கள் மீண்டும் அந்த ஒழிப்பு [illegible] சாராயம் [illegible] என் குற்றம் சொல்லுகிறார்கள். [illegible] சாராயம் குடித்தால் அதைத் தண்டிக்க போலீஸ் [illegible]

இருக்கிறது, அரசாங்கம் இருக்கிறது. அதைச் சொல்லி எடுத்துக் கொள்கிறேன். பகுதிகளுக்கு கொண்டுவந்த அரசை நான் மீண்டும் பாராட்டுகிறேன். நான் சொன்னவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நேரமாகாதபடியால், இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-40)

*திரு. கே. உச்சி: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில், நடைபெறும் பல்கலைக்கழகம் டாக்டர் நாவலர் அவர்களுடைய நிதிநிலை அறிக்கையைப் பற்றி என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் என்னுடைய மாவட்டத்தினுடைய நிலைமைகளைப் பற்றிச் சொல்லி இறுதியாக நேரம் இருந்தால் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

கோடைவாசஸ்தலம் என்று உலகப் புகழ் பெற்று பாராட்டக்கூடிய நீலகிரி மாவட்டத்தில் கடந்த ஆண்டு போதுமான மழை இல்லை என்பதை விட மிகக் குறைந்த அளவே மழை பெய்திருப்பதால் கடுமையான வறட்சியைச் சந்திக்க வேண்டிய ஒரு நிலையில் இருக்கிறது என்பதையும் அந்த வறட்சிக்கு மழை மாத்திரம் காரணம் அல்ல என்றும் வாளாமின்ற நீர்ப்பிடிப்புள்ள பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்து சில தொழிற்சாலைகளுக்காக, கற்பூர மரங்களை நட்டிருக்கிறார்கள். அந்தக் கற்பூர மரங்களால் அந்த நீர்ப்பிடிப்புப் பகுதிகள் எல்லாம் வறண்டிருக்கின்றன. ஆகவே, நீலகிரி மாவட்டத்தில் கற்பூர மரத்தை வளர்ப்பதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். உலகப் புகழ் பெற்ற உல்லாசப் பகுதியான முதுமலைக்காடு போன்ற பகுதிகளிலும் கடுமையான வறட்சியால் விலங்குகளுக்குக் குடிக்க தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் நீலகிரி மாவட்டத்தில் உள்ள பள்ளி ஆசிரியர்கள் எண்ணிக்கை, மாணவர்களுடைய விகிதாசாரத்திற்கு ஏற்றபடி இல்லை என்ற குறை இருப்பது மாத்திரம் அல்ல, அந்த ஆசிரியர்கள் சரியாகப் பணியாற்றுகின்றார்களா என்பதைப்





பார்க்க மாவட்டக் கல்வி அதிகாரி நீலகிரியில் ஒரே ஒருவர்தான் இருக்கிறார். மற்ற சமவெளிப் பகுதியைப்போல் அல்லாமல் அது மலைப்பகுதியாக இருப்பதால், குறைந்தது நான்கு மாவட்டக் கல்வி அதிகாரிகள் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் எல்லாப் பள்ளிக்கூடங்களையும் நிர்வாகம் செய்ய முடியும். எனவே, தற்காலிகமாக இரண்டு மாவட்டக் கல்வி அதிகாரிகளை [illegible] நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்கின்றேன்.

நீலகிரி அழகு குலையாமல் இருக்க இன்னொரு காரணம் அங்கு நீர்ப்பிடிப்புப் பகுதிகள் மாத்திரம் அல்ல, சுடுகாடு போன்ற பகுதிகளில் ஏராளமானவர்கள் ஆக்கிரமிப்புச் செய்துகொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக அந்த நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அந்த ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றி செக் டேம்களைக் கட்டி அந்தத் தண்ணீரைத் தேக்கி வைத்தால் குடிநீருக்கு வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரியில்—உதகையில் ஸ்டேடியம் ஒன்றைக் கட்டவேண்டுமென்று பத்து ஆண்டுகளாகக் கோரிக்கை இருந்தது. அந்த ஸ்டேடியம்—விளையாட்டு அரங்கம் கட்டுவதற்குப் பணம் இல்லை என்று சொல்வதற்கு இடமில்லை. கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய் அதற்கென்று மாவட்ட ஆட்சித் தலைவர் ஒதுக்கி வைத்திருக்கிறார். இருந்தும் கூட எங்கிருந்தோ வந்தவர்கள் ஒரு சிலர் அங்கே ஸ்டேடியம் வரக்கூடாது என்ற கெட்ட நோக்கத்தில் அதைத் தடுத்து நிறுத்துவதாக நான் அறிகிறேன். நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அந்த ஸ்டேடியத்தை உடனடியாகக் கட்ட அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரை இதுகுறித்து வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[illegible] உலகப் புகழ்பெற்ற முதுமலைக் [illegible] குடிதண்ணீர் இல்லை என்று [illegible] அங்குள்ள வனவிலங்குகள். யானைகள், [illegible] [illegible] விதிக்கப்பட்டிருக்கிறது [illegible] ஒரு [illegible]

மேற்பட்ட ஆண் யானைகளை விஷமிகள்—எங்கிருந்தோ வந்தவர்கள்—எப்படி வந்தார்கள் என்று தெரியவில்லை—பிடித்து அவைகளுடைய தந்தங்களை அறுத்து எடுத்துச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் மிகச் சிலரே. வரக்கூடிய விஷமிகளோ கையிலே போதிய ஆயுதங்களோடு வருகிறார்கள். போதுமான ஆயுதங்களை வைத்துக்கொண்டு எதிர்ப்பவர்களைச் சுட்டு விடுகிறார்கள். நம்முடைய அதிகாரிகளிடம் அத்தகைய பலிக்க ஆயுதம் இல்லை. ஆகவே திருப்பிச் சுடவும் முடியவில்லை. தற்கால மனிதர்கள் உபயோகப்படுத்தக்கூடிய ஆயுதங்கள் போன்ற துப்பாக்கிகளை வைத்திருக்கிறார்கள். அந்தத் துப்பாக்கியில் தோட்டாவும் இல்லை. துப்பாக்கியால் சுடக்கூடிய அதிகாரமும் இல்லை. ஆகவே, புரட்சித் தலைவர் அவர்கள் அந்த முதுமலையில் உள்ள விலங்குகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்ல நோக்கம் உடையவர். உலக மக்களை ஈர்க்கக்கூடிய முதுமலையைக் காக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அங்கேயுள்ள அதிகாரிகளை அதிகரிக்கவேண்டும்.

இந்த வனத்துறை அதிகாரிகளை அதிகரிப்பதோடு மட்டுமல்ல, அவர்களுக்கு நல்ல ஆயுதங்களை, துப்பாக்கிகளை, சுடக்கூடிய உத்தரவோடு அளிக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீலமலையைப் பொறுத்தவரையில், கூடலூர், உதகை, குன்னூர், கோத்தகிரி வட்டங்கள் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால், முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால், மின்சாரமும் அங்கே தடைப்பட்டுள்ளது. ஆகவே, நீலகிரி மாவட்டத்தை நீங்கள், வறட்சி மாவட்டப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்ற எனது வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நீலகிரியில் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை தமிழகத்தில் பல்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்கிறோம். ஆனால் நீலகிரியில் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கிறது. அங்கே குறைவழுத்தத்தினால்





தெருவிளக்குகள் எரிவது இல்லை. வீட்டிலே உள்ள விளக்குகள் சரியாக எரிவது இல்லை. எனவே, அந்தக் குறைவழுத்தத்தை நீக்கி, நல்ல மின்சார சக்தியைக் கொடுக்கும் அளவுக்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி தஞ்சையில் அரிசித் தட்டுப்பாடு வரக்கூடாது என்று நினைக்கிறோமோ, அதுபோல், நீலகிரியில் மின்சாரத் தட்டுப்பாடு வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீல்கிரி மாவட்டத்தில், தமிழகத்திலுள்ள சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்பட்ட கோயில் மற்றும் மானிய நிலங்களுக்கு குத்தகைதாரர்கள் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்படவேண்டும். கடந்த இரண்டாண்டுக் காலமாக இப்பிரச்சினையை வற்புறுத்தியுள்ளேன் என்பதை இந்த நேரத்தில் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். உதகையினுடைய குடிதண்ணீர்க் கஷ்டத்தைப் போக்குவதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் 4½ கோடி ரூபாய் அளவில் பார்சன் வேலி இரண்டாவது திட்டத்தை அளித்துள்ளார். அந்தத் திட்டத்தை வேகமாகச் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செயல்படுத்தியதற்குப் பிறகு, உதகைக்கு மட்டுமல்ல, அதையொட்டியுள்ள கிராமங்களுக்கும் பார்சன் வேலி இரண்டாவது திட்டத்தை, கிராம மக்களுக்கு அக்குடிதண்ணீர்த் திட்டத்தை அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, கூடலூர் பகுதியில், கூடலூர் நகரம் மாத்திரம் அல்ல, கூடலூர் வட்டத்தில் இன்று கடுமையான வறட்சி நிலவுகிறது. அந்த வறட்சியை நீக்குவதற்கு ஹெலன் வாட்டர் சப்ளை என்ற திட்டத்தை உலக வங்கியின் மூலமாகச் செயல்படுத்துவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரைக்கும், எந்த நிலையிலும் அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. அந்தப் பணிகளை உடனடியாக ஆரம்பித்து கூடலூர் பகுதியிலுள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரி மாவட்டத்தில் எந்தக் கிராமத்திற்கும் பஸ் இல்லை என்ற குறை இல்லை. ஆனால், தோட்டங்கள் நிறைந்த பகுதியான டி.ஆர். பஜாரிலிருந்து டெரால்ட் எஸ்டேட் என்ற பகுதிக்கும், ஓவேலி என்ற பகுதியிலிருந்து புலிகுந்தா என்ற

பகுதிக்கும்—தோட்டத் தொழிலாளர்கள், இலங்கைத் தமிழர்கள் வசிக்கக்கூடிய பகுதியாக இருப்பதால்—அந்தப் பகுதிகளுக்கு பஸ் விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாக, அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்ற அளவில் அங்கே நிலமற்ற ஏழைகள், ஆங்காங்கு வைத்துள்ள நிலங்களை அவர்களுக்குப் பட்டா செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, இந்துஸ்தான் போட்டோ பிலிம்சைப் பொறுத்தவரையில், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், மைய அரசோடு வாதாடிப் பெற்ற 170 கோடி ரூபாயில் ஒரு திட்டம்—எக்ஸ்ரே படச் சுருள் திட்டம். அந்தத் தொழிற்சாலை மிக வேகமாக அங்கே செயல்பட்டுக் கொண்டிருக் கிறது. ஆனால், கடந்த காலத்தில் ஏற்பட்ட அந்தத் தொழிற் சாலையில், பின்தங்கிய மாவட்டமான நீலகிரி மாவட்டத்தில், அங்கு பிறந்து வளர்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். அப்படி அளித்தார்களா என்றால் முன்பு இல்லை. 3,000 பேர் வேலை செய்யக்கூடிய அந்தத் தொழிற்சாலையில் கிட்டத்தட்ட 500 பேர்கள் கூட நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. இது மிகவும் வருந்தத்தக்கது. ஆகவே, வருங்காலத்தில் தொழிற்சாலையில் நீலகிரி மாவட்டத்திலிருக் கிறவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும், அப்படி வேலைவாய்ப்பில் தேர்வு செய்ய ஒரு குழுவை—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழுவை—ஏற்படுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, நீலகிரி மாவட்டத்தில், உதகமண்டலத்தை, உதகமண்டலம்—குந்தா என்றும், கூடலூரை, கூடலூர்—பந்தலூர் என்றும், இரண்டு வட்டங்களாகவும், இரண்டு ஊராட்சி ஒன்றியங் களாகவும் பிரித்துத் தரவேண்டும். காரணம், நிலப்பரப்பில் அதிகமாக, மக்கள் தொகை அதிகமாகக் கொண்ட ஒரு வட்டம் கூடலூர் வட்டம். அடுத்து, ஊட்டி. இந்த இரண்டு வட்டங் களையும் இரண்டாகப் பிரித்துக் தரவேண்டும். அதாவது இரண்டு யூனியன்களாகவும், இரண்டு வட்டங்களாகவும் பிரித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



(பிற்பகல். 1-50)

அடுத்தது, நீலகிரி மாவட்டத்தில் கிட்டத்தட்ட ஐந்து ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு நல்ல வகையில் செயல் பட்டு வருகின்றன. ஆனால் அந்த ஐந்து சுகாதார நிலையங் களுக்கும் கட்டிடங்கள் இல்லை, கட்டிடங்கள் கட்டப்படவில்லை. அந்த ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டு வதற்கு உடனடியாக ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கட்டபெட்டு, சோலூர், இத்தலார், ஓவேலி, அம்பலமூலா என்ற இடங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கான ஏற்பாட்டினைச் செய்யவேண்டுமென்றும், புதிதாக, தேனாடுகம்பை என்ற பகுதியிலும் இலங்கைத் தமிழர்கள் அதிகமாக வசிக்கின்ற கொளப்பள்ளி என்ற பகுதியிலும் புதிய ஆரம்பச் சுகாதார நிலையங்களை இந்த ஆண்டு ஆரம்பிக்கவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். கூடலூர்-குந்தா வழியாக மேட்டுப் பாளையத்திற்கு மிகக் குறுகிய வழி ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். கூடலூரைச் சேர்ந்த ஓவேலி பகுதியில் சுண்ணாம்புப் பாலம் ஒன்று இருக்கிறது. அந்தப் பாலம் எந்த நேரத்திலும் இடியக்கூடிய ஒரு ஆபத்தான நிலையிலே இருக்கிறது. எனவே அந்தப் பாலத்தை புதிதாகக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, தேவர்சோலை ஊராட்சியைச் சேர்ந்த மண்வயல் என்ற ஊருக்கும் ஸ்ரீமதுரை பஞ்சாயத்தைச் சேர்ந்த புத்தூர் வயல் என்ற ஊருக்கும் இடையில் ஓடக்கூடிய காட்டாற்றுக்கு ஒரு பாலம் கட்டவேண்டுமென்றும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

அதுமாத்திரமல்ல, அத்திக்கல், கடசோலை, சோலூர் ஆகிய இடங்களுக்கு இணைப்புச் சாலைகளை ஏற்படுத்திக் கொடுத்து, அங்கே ஒரு பாலம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூடலூர் நகரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 120 வீடுகள் ஐந்து ஆண்டுகளாகியும் கட்டி முடிக்கப் படாமல் இருக்கிறது. இது மிகவும் வேதனைக்குரியது. அங்கே

அதிகாரிகள் வந்தால் அவர்கள் தங்குவதற்கு வீட்டுவசதி இல்லை. ஆகவே அந்த வீடுகளைக் கட்டி முடிக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**திரு. ஆ. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். ஆளுநர் உரையிலே கள் சாராயக் கடைகள் மூடப்பட்டிருப்பதாக அறிவித்திருப்பதற்கு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அதைப்போல கள் இறக்கும் தொழிலாளிகளுக்கு நஷ்டஈட்டுத் தொகை சுமார் இரண்டாயிரம் தரப்படும் என்று அரசு சொல்லியிருக்கிறது. ஆனால் இதுவரை அந்த நஷ்டஈட்டுத் தொகை யாருக்கும் தரப்படவில்லை. மரம் ஏறுகின்ற தொழிலாளர்கள் பல பேர் பதிவு செய்திருக்கிறார்கள். இன்னும் பல பேர் பதிவு செய்யாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இந்த நிவாரணம் கிடைக்கின்ற வகையிலே வழிவகை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, மின் சக்தியைப் பொறுத்தவரையிலே இங்கே குடிநீர்த் திட்டத்திற்கு முன்னுரிமை தரப்பட வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே, முள்ளிப்பள்ளம், திருவேடலம், தென்கரை போன்ற கிராமங்களுக்கு இன்னும் மின் இணைப்பு தராத காரணத்தினால் அங்கே குடிநீர்த் தொட்டி கட்டப்பட்டும், மற்ற வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன. ஆகவே இதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, 'ஆன் தி லைன் சர்வீஸிலே' கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே கொடுக்கப்பட்ட இணைப்புகளிலே கிணற்றிலே தண்ணீர் இல்லாதபோது தண்ணீர் ஒரு இடத்திலிருந்து மற்றொரு கிணற்றிற்கு மாற்றப்படுகின்ற அந்த ஷிப்டிங் முறை இன்னும் அங்கே வழங்கப்படவில்லை. அந்த ஷிப்டிங் முறையினைக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல,



வேளாண்மையைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததன் காரணமாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே பெரியாறில் தண்ணீர் இல்லாத காரணத்தினாலே, அதனை வறட்சிப் பகுதியாக ஏற்று, அதற்கான வேலைகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்தவரையிலே, அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக நான் உங்களைப் பாராட்டுகிறேன். ஆனால் கல்வியைப் பொறுத்தவரையிலே மாணவர்கள் விரும்பிப் படிக்கின்ற கல்வியைப் பயில்வதற்கு, நீங்கள் வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் ஆசிரியர்கள் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய போராட்டத்திற்கு சமரச முறையிலே தீர்வு காணுவதற்கு அரசு முயற்சி செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் உணவுப் பண்டங்களுக்கு நேரடியாக வரி விதிக்கப்படாவிட்டாலும், அது நடுத்தர மக்களையும், பாமர மக்களையும் மிகவும் பாதிக்கின்றது. ஆகவே அதை அரசு கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலே, இன்றையதினம் பல்வேறு காலங்களாக தேர்தல் நடத்தப்பெறாத காரணத்தால் கூட்டுறவுத் துறையிலே ஊழல் மலிந்து கிடக்கின்றது.

பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்கூட இந்தியாவில் உள்ள பல்வேறு அரசுகளுக்கும் தாக்கீது அனுப்பி, கூட்டுறவுத் துறையில் சீக்கிரத்தில் தேர்தல்களை நடத்தியாக வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே கூட்டுறவு அமைப்புகளுக்கு விரைவில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சியைப் பொறுத்தவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள் என்கிற முறையில் நாங்கள் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்ய வேண்டும் என்று சொல்லி ஜீப்புகளைக் கேட்டு

[திரு. ஆ. சந்திரசேகரன்] [1987 மார்ச் 27

10 அல்லது 15 நாட்களுக்கு முன்னாலேயே கடிதம் எழுதினாலும், அந்த ஜீப்புகள் வழங்க அவர்கள் முன்வருவதில்லை என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே ஊராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் அங்குள்ள எழுத்தர்கள் பல காலமாகவே நிரந்தரமாக்கப்படாமலேயே இருக்கிறார்கள். அவர்கள் அங்கே பல்வேறு வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஊராட்சிமன்ற எழுத்தர்களை நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் இரண்டு வகையாக இருக்கிறது. அதாவது 1974-ஆம் ஆண்டுக்கு முன்னால் ஓய்வு பெற்றவர்களுக்குக் குடும்பப் பென்ஷன் இல்லாமல் இருக்கிறது. ஆனால் 1974-ஆம் ஆண்டுக்குப் பின்னாலே ஓய்வு பெற்றவர்களுக்கு குடும்பப் பென்ஷன் வழங்கும் முறை இருக்கிறது. எனவே அதையும் கருத்தில் கொண்டு ஒரு நியாயமான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சோழவந்தான் வாடிப்பட்டியில் உள்ள மருத்துவ மனையைப் பெரிதாகக் கட்ட வேண்டும். அங்கே அறுவை சிகிச்சைப் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே எங்களுடைய சோழவந்தான் நகரத்தைப் பொறுத்தவரையில் அதற்கு ஒரு பை-பாஸ் ரோடு அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாகவே கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அந்த நகரம் மிகவும் நெருக்கடியாக இருப்பதால் விரைவில் ஒரு பை-பாஸ் ரோடு அமைத்துத் தர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே மஞ்சமலை நீர்த்தேக்கம் ஒன்றை அலங்காநல்லூர் ஒன்றியப் பகுதியில் அமைக்க வேண்டுமென்று மதிப்பீடு செய்யப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. அதையும் அரசு விரைவில் கவனித்து செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரி அல்லது பாலிடெக்னிக் அமைக்க



1987 மார்ச் 27] [திரு. ஆ. சந்திரசேகரன்]

வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் இரண்டு சர்க்கரை ஆலைகள் இருப்பதால் அங்கே தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

**திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்தமைக்காக பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதோடு புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் இந்த நிதிநிலை அறிக்கை 11-வது நிதிநிலை அறிக்கையாக வந்திருக்கிறது. இதற்கு முன்பாக அளிக்கப்பட்ட 10 நிதிநிலை அறிக்கைகளிலும் ஏழை எளிய மக்களுக்காக, குறிப்பாக கிராமப் புறங்களில் வாழ்கிற ஏழை எளிய மக்களுக்காக, என்னென்ன திட்டங்கள் தீட்டி செயல்படுத்தப்பட்டனவோ அவற்றைப் பின்தொடர்ந்தே இந்த 1987-88 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலும் குறிப்பிடத்தகுந்த பல நல்ல திட்டங்கள்—பாராட்டுக்குரிய திட்டங்கள்—அறிவிக்கப்பட்டிருப்பது பெருமகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 30 லட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிட மக்களுக்கு இலவசமாக வீடுகளைக் கட்டித் தருவதைப்போல் பிற்பட்டவர்களுக்கும் இலவசமாக வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்றும் இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டுமென்றும் நான் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். பிற்பட்டவர்களுக்கும் அவர்களுடைய வீடுகள் தீப்பிடித்தால்—அதாவது அவர்களுடைய வீடுகள் தீப்பிடித்து எரிந்துபோனால் அதற்கும் முக்கியத்துவம் கொடுத்து, அவ்வாறு வீடு இழந்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிதிநிலை அறிக்கையின் மூலமாக இலவசமாகக் காலணி வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இலவசமாகக் காலணி வழங்கும் திட்டம் என்பது எவ்வளவு பெரிய

உன்னதமான திட்டம் என்பதைக் கிராமப்புறத்தில் வாழும் ஏழை எளிய மக்கள் பாராட்டுகிறார்கள். அவர்கள் எல்லாம் பயன் பெறுகிற வகையில் அந்தத் திட்டம் அமைந்திருக்கிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காலணி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலமாக காலணி தைக்கக் கூடியவர்களும் பயன் பெறுகிற வகையில், இன்றைக்குப் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அந்தத் திட்டத்தால் பயன் அடையக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இப்படிப்பட்ட திட்டங்களைக் கொண்டு வந்த புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களை மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர்கள் குறை கூறுகிறார்கள். முப்பது லட்சம் வீடுகளை எப்படிக் கட்டிக் கொடுக்கப் போகிறீர்கள், இலவசமாக எப்படி காலணி வழங்க முடியும் என்று சொல்லி இதெல்லாம் ஏமாற்றுகிற வேலையாக இருக்கிறது என்று எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் சொல்லுகிறார்கள். நான் அவர்களுக்கு மெத்தப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வதெல்லாம், புரட்சித் தலைவர் அறிவித்த திட்டங்கள் எந்தத் திட்டங்களாக இருந்தாலும், அந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்திக் காட்டியதை இந்த நாடு அறிந்து கொண்டிருக்கிறது. சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வருகிறபோது அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியாது என்று சொன்னவர்கள்தான் இப்போது இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஸ்ரீரங்கத்திலே—பழங்கதை போற்றி பாதுகாக்கப்பட வேண்டும் என்று மையமாக கருதினாலும். . . .

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** அவையின் முன் அனுமதியோடு அவையின் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி:** இன்றைக்கு ஸ்ரீரங்கத்திலே ஆசியாவிலேயே மிகப் பெரிய கோபுரமாக கட்டப் பட்டிருக்கிறது என்று சொன்னால், அது புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் நடந்திருக்கிறது என்றால் ஆட்சியை நடத்த வேண்டியவர்கள் நடத்தினால் நடக்க வேண்டிய காரியங்கள்



எப்படிப்பட்டக் காரியங்களாக இருந்தாலும் நிறைவேற்றப்படும் என்பதை அது மெய்ப்பித்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருச்சியிலே சட்டக் கல்லூரி வாடகை கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சட்டக் கல்லூரிக்கு கட்டிடம் கட்டித்தர வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள் கிறேன்.

இன்றைக்கு ரஷ்யாவில் இரண்டு தலைநகரங்களை வைத்துக் கொண்டு செயல்பட்டுக் கொண்டிருப்பதைப் போல தமிழகத் திலேயும் சென்னையில் ஒரு தலைநகரம் என்றும், திருச்சியில் ஒரு தலைநகரம் என்றும் வைத்துக்கொண்டு செயல்படுத்துவதற்காக ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கிராமப்புறங்களில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினாலும் இன்னும் பல்வேறு பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வறட்சியை மாறி மாறி சந்தித்துக் கொண்டிருக்கக் கூடிய தொகுதியான என்னுடைய தொகுதியில் பிற்பட்டவர்களுக்காக சமுதாயக் கிணறுகளை அமைக்கிற ஒரு திட்டத்தை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிக்குளம் பகுதியில் உடையார்பாளையம் தாலுக்காவைச் சேர்ந்த அனைத்துக் கிராமங்களிலும் முந்திரியை சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே விளையக்கூடிய முந்திரிக் கொட்டையை பயன்படுத்துகிற வகையில் ஒரு தொழிற்சாலையை அங்கே அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று செந்துறை ஒன்றியத்திலும், அதனைச் சுற்றி யுள்ள பல்வேறு கிராமங்களிலும் கரும்பு சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் மூலமாக துணை ஆலை ஒன்றை நிறுவ வேண்டும் என்ற ஆய்வு இருந்து கொண்டிருக்கிறது. அப்படி பெரம்பலூர் துணை ஆலை அமைப்பதை செந்துறை ஒன்றியத்தில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் சட்டமன்றத்திலே பல்வேறு நேரங்களில் எடுத்துச் சொன்னதைப் போன்று கோட்டைக்காடு சுந்தர சோழபுரம் குறுக்கே பாலம் கட்டுவதால் தென்னார்க்காடு மாவட்டத்தையும், திருச்சி மாவட்டத்தையும் ஒன்றாக இணைக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆண்டிமடம் ஒன்றியத்தில் பொதுப்பணித் துறையின் மூலமாக செய்யக் கூடிய பாசன ஏரிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே இருப்பவைகள் சிறு சிறு குட்டைகளாக இருக்கின்றன. வறட்சி நிவாரணப் பணியின்கீழ் அந்தச் சிறு குட்டைகளை ஆழப்படுத்தும் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

செந்துறை ஒன்றியத்தில் குழுமூர் கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட வேண்டும் என்று சொல்லி ஐந்தாண்டு களுக்கு முன்பு பத்தாயிரம் ரூபாய் கட்டியதற்குப் பிறகு அதற்குத் தேவையான நிலத்தைத் தருவதற்கு அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்று தெரிவித்த பிறகும், பணம் கட்டி ஐந்தாண்டுகள் ஆகியும், இன்னும் அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படாமல் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செந்துறை ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் கிராமங்களில் குடிதண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. குடிதண்ணீர் இல்லாமல் இருக்கக்கூடிய அந்த கிராமங்களில் உள்ளவர்கள் ஏரி தண்ணீரை குடிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்போப்பட்ட கிராமங்கள் அரிசன காலனிகள், சேடக்குடிகாடு, பெரியகுறிச்சி, கீழகுறிச்சி, இராசபாளையம், நீழமாளிகை, சோழன்பட்டி, சின்னமேலகுடிகாடு, நைனார்குடிகாடு, அங்கனூர் ஆகிய கிராமங் களில் உடனடியாக வறட்சி நிவாரணப் பணியை மேற்கொண்டு, கைபம்பு போட்டு அங்கேயிருக்கக் கூடிய ஏழை மக்களுக்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மிக முக்கியமாக ஆண்டிமடம் ஒன்றியத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக ஓவர்-ஹெட் டாங்க் கட்டி ஜெட் மோட்டார்களை பொருத்தியிருக்கிறார்கள். பொருத்தப்பட்ட ஆறு மாதங்களுக்குள், ஒரு வருடத்திற்குள்ளாக அந்த ஜெட்





மோட்டார்கள் இயங்குவதில்லை. அதற்குக் காரணம், அந்தப் பகுதியில் 120 அடியில் இருந்து 150 அடிக்குக் கீழேதான் நீர்மட்டம் இருக்கிறது. எனவே இப்படி நீர் மட்டம் மிகவும் ஆழமாக இருக்கக் கூடிய அந்தப் பகுதிகளில் ஜெட் மோட்டார்களை வைத்தால் தண்ணீர் எடுக்காது என்று சொல்லு கிறார்கள். எனவே அந்த ஜெட் மோட்டார்களை அகற்றிவிட்டு, சப்-மெர்சிபிள் மோட்டார்களைப் பொருத்தினால்தான், இப்படிப் பட்ட வறட்சிக் காலங்களில் நிரந்தரமாக அவர்களுக்குக் குடிநீர் கொடுக்க முடியும் என்பதால், வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ஜெட் மோட்டார்களை அகற்றிவிட்டு, சப்-மெர்சிபிள் மோட்டார்களைப் பொருத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல இன்றைக்கு ஓ.எச்.டி. (ஓவர் ஹெட் டாங்க்ஸ்) இருந்து செயல்பட்டாலும், பைப்லைன் போடாமல் இருக்கிறது. சிலம்பூர் ஆதி திராவிடர் காலனி, இளையூர் மேலவெளி, கூவத்தூர் மேலத்தெரு, விழுதுடையான் ஆகிய இடங்களில் பைப் லைன் போட்டு, அந்தத் திட்டத்தை செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியில் சாலைகள் மிகவும் சீர்கேடாக இருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் மாத்தூர்-சிலுப்பனூர் சாலை இல்லாமல் அந்தப் பகுதி தீவுபோல் காட்சி அளிக்கிறது. அந்தச் சாலையை உடனடியாக தார் சாலையாக மாற்றினால் அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்களுக்கு பேருந்து வசதி கிடைக்கும் நிலை ஏற்படும். ஸ்ரீமுஷ்ணம்-கருக்கை-அழகாபுரம்-திருக்கோணம்-பாசிளம் சாலையை தார் சாலையாகப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ரெட்டிதத்தூர்-தென்னூர், வாரியங்காவல்-வீரராக்கன், பெரியதத்தூர்-நெட்டியக் குறிச்சி சாலைகளையும் அமைத்துத் தர வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றிகூறி, முடிக்கிறேன்.

## 7. அறிவிப்பு.

### பேரவை அலுவல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளியீடு 11-4-1988

Issued 11-4-1988

2964

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

529/4/88

சனிக்கிழமை, மார்ச் 28, 1987-தொகுதி 35-எண் 3
Saturday, the 28th March 1987-Volume 35-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

[Price Rs-3.00 paise

விலை ரூ.3.00 காசுகள்]

மானியக் கோரிக்கைகள் எண் 26—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் மற்றும் 35—நுகர்பொருள் வழங்கல் 9—4—1987 ஆம் தேதியன்றும், மானியக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு 11—4—1987 ஆம் தேதியன்றும் விவாதத்திற்கும், வாக்கெடுப்பிற்கும் எடுத்துக் கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (28—3—1987) காலை 10 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.07 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

81. இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் 1973-74 ஆம் ஆண்டுக்கான அறிக்கை (வருவாய் வரவினங்கள்) குறித்து பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாம் அறிக்கை (1977-78) பத்தொன்பதாம் அறிக்கை (1982-83) ஆகியவற்றில் உள்ள பரிந்துரைகள் மீது அரசு மேலும் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்திநான்காவது அறிக்கை.

82. 1979-80 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் அறிக்கையில் பொதுப் பணித்துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தைந்தாவது அறிக்கை.

83. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை

84. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (முதல் பட்டியல்).

## உள்ளடக்கம்.

28—3—1987


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வி..ாக்கள—விடைகள்— உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 3 5—355 |
| 2. | உறுப்பினர்கள், அமைச்சர்கள் பற்றி "கேலிச் சித்திரம்" வெளியிட்ட "ஆனந்த விகடன்" பத்திரிகை மீதான நடவடிக்கை .. | 356—359 |
| 3. | கவன ஈர்ப்பு— | |
| | (அ) பாலக்கோடு மருத்துவமனைக் கட்டிடத்தைப் பழுது பார்த்தல் .. | 259—361 |
| | (ஆ) அனுமதியின்றித் தொடங்கப்பட்ட கிள்ளியூர் அன்னை வேளாங்கன்னி கல்லூரி மாணவர்கள் பாதிப்பு .. | 361—366 |
| | (இ) மணப்பாறை வட்டத்தில் கால் நடைகள் நோயால் பாதிப்பு .. | 366—368 |
| | (ஈ) திருவொற்றியூரில் விஷச் சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட இறப்பு .. | 368—373 |
| | (உ) கொள்ளிடம் ஒன்றிய கிழக்குப் பகுதியில் நீர் இல்லாததால் "குள்ளக்கார்" பயிர்கள் பாதிப்பு .. .. | 373—375 |
| 4. | அறிக்கை அளித்தல்— | 376 |
| | (அ) பொதுக் கணக்குக் குழு .. .. | 376 |
| | (ஆ) பொது நிறுவனங்கள் குழு .. | |
| 5. | வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொது விவாதம்—(தொடர்ச்சி)— | 376—475 |
| | திரு. ஜி. கே. ஜெ. பாரதி .. | 376—384 |
| | *திரு. ஜி. கிருஷ்ணராஜ் .. .. | 384—390 |
| | திரு. கு. ரமணி .. .. | 390—403 |
| | திரு. என். சண்முகம் .. .. | 403—412 |
| | திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் .. | 412—422 |
| | திரு. அ. ரகுமான்கான் .. .. | 422—436 |
| | திரு சி பழனிமுத்து .. .. | 436—445 |
| | திரு. எஸ். என். இராசேந்திரன் .. | 445—449 |
| | *திரு. வை. பாலச்சந்திரன் .. | 449—454 |
| | திரு. தமிழ்மணி .. | 454—458 |
| | திரு. ஆர். செங்காளியப்பன் .. | 459—464 |
| | *திரு. கே. பி. கே. சேகர் .. | 463—467 |
| | திரு. ஜெ. ராஜாபாபு .. .. | 467—470 |

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இத்திட்டத்திற்கான இறுதி பணி மதிப்பீடுகள் தயாரிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தினால் இத்திட்டம் முடிவடையாமல் உள்ளது. திட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் இவ்வாண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**மதுரை மாவட்டம் பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலை.**

217—(*வினா எண் 9141)—**திரு. வே. இரா. ஜெயராமன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், பாண்டியராஜபுரம் சர்க்கரை ஆலையில் கரும்புக்கு, அலங்காநல்லூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கொடுக்கப்படுகின்ற விலை கொடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அது இந்த ஆண்டுக்கும் பொருந்துமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மதுரை மாவட்டம், பாண்டிய ராஜபுரம் சர்க்கரை ஆலையில் அலங்காநல்லூர் ஆலைப் பகுதியிலிருந்து பெறப்படும் கரும்பிற்கு மட்டும், அலங்காநல்லூர் ஆலைக்கு மாநில அரசு தரும் கரும்பு விலையான டன் ஒன்றுக்கு ரூ. 247.50 அளிக்கப்படுகின்றது.

(ஆ) இது 1985-86 அரவைப் பட்டத்திற்கு மட்டும பொருந்தும்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 10 கிலோ மீட்டர் தூரத்திலே இருக்கிற இரண்டு சர்க்கரை ஆலைகளில் ஒரு சர்க்கரை ஆலையிலே கூடுதலான விலையும் பக்கத்திலே அதே வட்டத்திலே இருக்கிற மற்றொரு சர்க்கரை ஆலையிலே வேறுவிதமான விலையும் மிகுந்த வேறுபாட்டுடன் இருப்பதற்கு என்ன காரணம்? அந்த நிலையைப் போக்குவதற்காக அடிப்படை விதிகள் தளர்த்தப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, எல்லா சர்க்கரை ஆலைகளிலும் ஒரேவிதமான விலைதான் தற்போது இருந்து வருகிறது. அந்தச் சர்க்கரை ஆலையில் விலை ரூ. 195 விதம் மாநில அரசு நிர்ணயித்து வந்தது. அதை ரூ. 210 ஆக உயர்த்தித் தர பரிந்துரை செய்யப்பட்ட காரணத்தால் அந்த விலை இந்த ஆண்டு மட்டும் உயர்த்தித் தரப்பட்டது.

**உத்திரமேரூர் தாலுக்கா, பெருநகர் மற்றும் மானாம்பதி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

218—(*வினா எண் 9835) **திரு. க. நரசிம்மபல்லவன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உத்திரமேரூர் தாலுக்காவில் உள்ள பெருநகர் மானாம்பதி கூட்டுக் குடிநீர்த் திட்டம் பூர்த்தி அடைந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், பெருநகர் காலனி மக்களுக்கு இத்திட்டம் பயன் அளித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): ஆம்.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் பெருநகர், மானாம்பதி போன்ற கிராமங்களில் தன்னிறைவுத் திட்டம் மூலம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் எடுக்கப்பட்டு, அந்தத் திட்டங்கள் தற்போது நல்ல முறையிலே நிறைவேற்றித் தரப்பட்டிருக்கின்றன. காலனியில் தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கிறது. அதை சரியான முறையில் நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன். அதோடு தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட அனுமந்தாங்கலம், ஆரணிப் பண்டிகை கூட்டுக் குடிநீர்த் திட்டமும் அதைப்போல், களியாப்பேட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டமும் ஓர்க்காபேட்டை நிறைவேற்றித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 28

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலமாக, பெருநகர், பெருநகர் காலனி, பெருநகர் நடுக் காலனி, பெருநகர் மேட்டுக் காலனி, மானாம்பதி, சேத்துப்பட்டு, மேட்டூர் காலனி ஆகிய 7 பகுதிகள்—ஏறக்குறைய 4,820 குடியிருப்புகளைக் கொண்ட பகுதிகள்—பயன் அடைகின்றன. அதோடு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் கட்டி 38 பொதுக் குழாய்கள் மூலமாக, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நிலையில், இந்தத் திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்கான செயற்குறிப்புகள் ஏதும் இல்லை.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 காலனிகளில், குறிப்பாக நடுக் காலனியில் மட்டும்தான் சரியான முறையில் தண்ணீர் தரப்படுகிறது. எஞ்சிய இரண்டு காலனிகளுக்குத் தண்ணீர் தரப்படவில்லையென்ற சூழ்நிலையில் தயவுசெய்து அந்த இரண்டு காலனிகளுக்கும் தண்ணீர் தரும் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

(திருவாளர்கள் குமரி அனந்தன் மற்றும் எஸ். என். இராமசாமி ஆகியோர் அவைக்குள் நுழைந்தபோது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் மேசையைத் தட்டினர்).

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நடுக் காலனிக்குத் தண்ணீர் கொடுத்ததற்காக திரு. சித்தன் அவர்கள் மேசையைத் தட்டியதற்கு நன்றி. (சிரிப்பு) திருமங்கலத்துக் காரருக்கு நடுக் காலனிக்குத் தண்ணீர் கொடுப்பதிலே என்ன மகிழ்ச்சி என்று எனக்குத் தெரியவில்லை. சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**வேடசந்தூர் தாலுக்காவில் தக்காளி தொழிற்சாலை ஆரம்பித்தல்.**

219—*வினா எண் 10205) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுக்காவில் தக்காளி சாறு மற்றும் தக்காளியில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்களுக்கான தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



1987 மார்ச் 28]

**மாண்புமிகு திரு க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை; (ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளிப் பழச் சாறுக்கு வெளிநாடுகளில் ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது. இசான் போன்ற தனிப்பட்ட நிறுவனங்கள் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து பெரிய அளவில் லாபத்தைச் சம்பாதிக்கிற சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்தில் குறிப்பாக அண்ணா மாவட்டத்தில் ஏராளமான இடங்களில் தக்காளி விளைவிக்கப்படுகிறது. உண்மையிலேயே அப்படிப் பட்ட ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமானால் அதன் மூலமாக அரசுக்குப் பெரிய அளவில் லாபம் கொடுக்கிற தொழிற் சாலையாக அது இருக்கும். அதே சமயத்தில் விவசாயிகளுக்கும் உதவுகின்ற தொழிற்சாலையாகவும் அது இருக்கும். 'இல்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளித்திருக்கிறார்கள். இதையெல்லாம் கருத்திலே கொண்டு—தனிப்பட்டவர்கள் பெரிய அளவிலே லாபம் ஈட்டுவதால் வெளிநாடுகளில் நிறைய மார்க்கெட் இருக்கிற—இந்தத் தொழிற்சாலையை இனிமேலாவது அந்தப் பகுதியிலோ அல்லது வேறு எங்காவதோ ஆரம்பிப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தக்காளி அந்தப் பகுதியிலே மட்டுமல்லாது மற்ற எல்லாப் பகுதிகளிலும் நிறையக் கிடைக்கிறது. ஆகவே வேளாண் தொழிற் கழகம் தக்காளி பழச்சாறு உற்பத்தித் தொழிற் சாலையை வெளிநாட்டுக் கூட்டுறவோடு உருவாக்கி அதன் மூலம் வெளிநாட்டுச் சந்தையைப்பெற இயலுமா என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

[1987 மார்ச் 28

**கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் வட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

220—(*வினா எண் 10544) திரு. மா. சின்னராசு: மாண்புமிகு தொழில் மறறும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுக்கா இரும்பி பாறை, மூடுதுறை, இலுப்பநத்தம், சின்னக்கள்ளிப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ள அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் தாலுக்கா, இரும்பி பாறை, மூடுதுறை, இலுப்ப நத்தம், சின்னக்கள்ளிப்பட்டி ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு எது மில்லை. இக்கிராமங்களில் தற்போது செயற்பட்டு வரும் குடி நீர்த் திட்டங்களினால் போதுமான அளவு நீர் மங்களுக்குக் கிடைத்து வருகிறது.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் குறிப்பிட்ட இந்த நான்கு கிராமங்களும் அதோடு தேக்கம்பட்டி என்ற ஒரு கிராமமும் ஆண்டு முழுவதும் தண்ணீர் தட்டுப்பாடுள்ள கிராமங்கள் ஆகும். வறட்சிக் காலங்களிலே மட்டுமல்ல, மற்ற நேரங்களிலும் நீர் ஆதாரமே இல்லாமல் குடிநீர் கிடைக்காத பகுதிகளாக இருக்கின்றன. அந்தப் பகுதிகள் பவானி ஆற்றிற்கு அருகாமையில் இருக்கிற காரணத்தினால், பவானி ஆற்றிலிருந்து அந்தப் பகுதிக்கு நீர் வழங்குவதன் மூலம் ஏற்கெனவே பொய்த்து விட்ட நீர் ஆதாரங்களுக்கு ஒரு சப்ஸ்டிட்யூட் என்ற முறையிலே பவானி ஆற்றிலிருந்து நீர் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் கொடுத்து நிர்வாகப் பொறியாளர்களும் அதை ஆய்வு செய்திருக்கிறார்கள். ஆகவே குடிநீர் வடிகால் வாரியம் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு அதை விரைவுபடுத்தி இந்த ஆண்டிலேயே



1987 மார்ச் 28]

அந்தப் பகுதிக்கு—வறட்சிப் பகுதி என்பதை முன்னிட்டு— குடிநீர் கொடுக்கச் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக்குடிநீர்த் திட்டம் என்பது நீண்ட காலத்திற்குத் தொடர்ந்து பயன்படுகிற ஒரு திட்டம் ஆகும். வறட்சியை ஒட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொண்டு செயல்படுத்துவது என்பது சாத்தியமற்ற ஒன்று. வறட்சிக் காலத்திலே போர்க் காலப் பணிகளைப் போல், வேகமாகச் செயல்பட்டு முடிந்த அளவுக்கு தண்ணீர் சேதப்படாமல் பயன்படுத்துவதுதான் இப்போது குடிநீர் வாரியத்தின் வேலையாக இருக்கிறது. ஆகவே அந்த வகையில் எந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் தற்போது எடுத்துக் கொள்வதற்கு இல்லை.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய தொகுதியாக இருக்கிற காரணத்தினால் அங்கே குடிநீர்ப் பிரச்சினை மிகவும் கடுமையாக இருப்பதால் தான் இந்தத் திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டு குடிநீர் வடிகால் வாரியமும் அதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அதை விரைந்து நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வ திலே எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் இந்த வறட்சிக் காலத்திற்குள்ளே அதை நிறைவேற்றித் தர முடியுமா என்று கேட்டதற்குத்தான் நான் பதில் சொன்னேன். இப்போது பல திட்டங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதைப் போல் இந்தத் திட்டத்தையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதில் ஆட்சேபணை இல்லை.

[1987 மார்ச் 28

## தஞ்சை மாவட்ட நவீன அரிசி ஆலைகள்.

**211—(*வினா எண் 10252) திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் நவீன அரிசி ஆலைகளை தமிழ்நாடு உணவுப்பொருள் கழகம் வாங்க கருதி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இந்திய உணவுக் கார்ப்பரேஷனுக்கு சொந்தமான மூன்று நவீன அரிசி ஆலைகள் தஞ்சை மாவட்டத்திலும், மற்றொன்று தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சிதம்பரத்திலும் இயங்கி வருகின்றன. இந்த ஆலைகளை இந்திய உணவுக் கார்ப்பரேஷன் விற்பதாக தெரிய வந்ததால் வாங்கலாமா என தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

(ஆ) இந்திய உணவுக் கார்ப்பரேஷன் இதைப் பற்றி இறுதியான முடிவு ஒன்றும் எடுக்கவில்லை.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான மதிப்பீடு எவ்வளவு? இந்திய உணவுக் கழகத்தினால் கோரப்படுகின்ற விலை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய உணவுக் கார்ப்பரேஷன், தான் நடத்துகின்ற நவீன அரிசி ஆலைகளுக்குப் போதிய நெல் கிடைக்காததனால், அவைகளை மூடுகின்ற நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. நாம் இப்போது நெல் தருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களே அதை நடத்தலாம். நாம் வாங்க வேண்டிய அவசியம் இல்லை.



1987 மார்ச் 28]

**திரு. த. புஷ்பராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே நவீன அரிசி ஆலை தொடங்கப்படுகின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா? அப்படி என்றால், எந்த ஊரில் எப்போது தொடங்கப்படும் என்ற கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திலே அத்தகைய புதிய நவீன அரிசி ஆலை தொடங்குகின்ற கருத்துரு இல்லை.

**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அரிசி ஆலைகளைத் தொடங்குவது அல்லது மத்திய அரசுக்குச் சொந்தமானவற்றை எடுத்துக் கொள்வது என்பதைவிட ஏ, பி, சி, என்று பிரிக்கப்பட்டிருக்கின்ற 'ஏ' குரூப்பிலே உள்ள மாவட்டங்களில் முழுமையாக இருக்கின்ற, சிறிய ஹல்லிங் சென்டர்ஸ் வைக்கக்கூடிய அளவுக்கு இருக்கின்ற சிறிய மில்கள் நலிவடைகின்ற காரணத்தினால், அதைக் கருத்திலே கொண்டு அவைகளுக்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக ஹல்லிங் சென்டர்ஸ் உரிமையை வழங்கி அந்த மில்களுடைய குறையைப் போக்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும்கூட சுமார் 600 தனியார் அரிசி ஆலைகளுக்கு நாம் பெறுகின்ற நெல்லைத் தருகிறோம். நாமே எல்லாவற்றையும் அரைத்து விடுவது என்பது இயலாத காரியம். இப்போது அந்த முறை உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் குறிப்பாக சொல்கின்றார்கள். தஞ்சை மாவட்டத்தினுடைய நிலைமை பற்றிப் பரிசீலிக்க வேண்டும் என்று நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்கெனவே கேட்கப்பட்டுள்ளது.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது, தஞ்சை மாவட்டத்திலே ஒரு அரிசி ஆலையையும் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்திலே இருக்கின்ற

[1987 மார்ச் 28

அரிசி ஆலையையும் இந்திய உணவுக் கழகத்திலிருந்து தமிழ்நாடு
உணவுப் பொருள் வழங்கு கழகம் எடுத்துக் கொள்வதாகச்
சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலே எடுத்துக் கொள்ளப்
படுகின்ற உணவுக் கழகத்திலுடைய அரிசி ஆலையானது
எருக்கூரிலே தமிழ் நாடு உணவுப் பொருள் கழகத்தால் கட்டப்
படுகின்ற அரிசி ஆலைக்குப் பக்கத்திலே இருக்கிறது. அந்த
சிறிய ஆலை இந்திய உணவுக் கழகத்திற்குச் சொந்தமானது.
அதையும் சேர்த்து எடுத்துக்கொள்ள அரசு நினைத்திருக்
கின்றதா? அதையும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்திய உணவுக் கார்ப்பரேஷன் நிறுவனங்
களை நாம் எடுத்துக்கொள்வதாக இல்லை. அவை நன்றாக நடை
பெறுவதற்கு அவர்கள் என்னென்ன உதவிகளை நம்மிடம்
கேட்கிறார்களோ அவைகளைத் தருவதுதான் நம்முடைய
நிலைமை. அவர்கள் கேட்பதெல்லாம் நெல்தான் கேட்கிறார்கள்.
நாம் தருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே எடுத்துக்
கொள்கின்ற பிரச்சினை இல்லை.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, நமது அமைச்சர் அவர்கள் சொல்லும்போது அந்த
ஆலையை அவர்கள் விற்கப் போவதாகவும், அப்படியானால்
அதை நாம் வாங்கிக் கொள்ள இருப்பதாகவும் கூறினார்கள்.
நவீன அரிசி ஆலைகள் ஏற்பட்டு வெகு நீண்ட காலம்
ஆகவில்லை. அதற்குள்ளேயே அந்த ஆலை விற்கப்படக்கூடிய
அளவுக்கு டேமேஜ் ஆகி இருக்கின்றது என்று சொன்னால்
அப்படிப்பட்ட ஆலையை எடுக்காமல், ஏராளமான நெல்லை
நாமே கொள்முதல் செய்து, பல லட்சம் டன்கள் கொள்முதல்
செய்திருக்கக்கூடிய இடத்தில், நம்முடைய அரிசி ஆலையிலேயே
அதிகப்படியான அரிசி அரைக்க——நாமே ஒரு ஆலையை ஏன்
ஏற்படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்திய உணவுக் கார்ப்பரேஷன் நேரடிக்
கொள்முதலில் ஈடுபட முடியவில்லை. நாமே அந்தக் கொள்
முதலை செய்கிறோம். அதனாலே அவர்களுக்கு கொள்முதல்
செய்ய முடிவதில்லை. ஆகவே அந்தப் பிரச்சினை ஏற்பட்டது.



1987 மார்ச் 28]

அண்மையிலே மத்திய உணவுத் துறை அமைச்சர் அவர்கள்
என்னைச் சந்தித்தார்கள். போதுமான அளவுக்கு அந்த
ஆலைகளுக்கு நெல் தர வேண்டும் என்று கேட்டுக்
கொண்டார்கள். நாம் தருவதாக ஒத்துக் கொண்டிருக்கின்றோம்.
ஆகவே அந்த ஆலைகள் இயங்கும். அதைப் பொறுத்தவரையில்
நாம் எடுத்துக் கொண்டு அமைக்க இருக்கின்ற புதிய ஆலைகளை
அமைக்காமல் இருக்க வேண்டிய அவசியம் நிச்சயமாக இல்லை.

**திரு. சா. ஞானசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் எப்.சி.ஐ. மூலம் நடத்தப்
படுகிற நெல் உலர்த்தும் ஆலைகள் பல கட்டப்பட்டும் அவை
பயன்படுத்தப்படாமல், இயங்காமல் இருக்கின்றன. அவைகளை
இந்த அரசே எடுத்துக்கொள்வதாக முன்பு தெரிவிக்கப்பட்டது.
பிறகு அதிலே பிரச்சினைகள் இருக்கின்றன என்றும் சொல்லப்
பட்டது. எனவே இந்த அரசு அவற்றை மேற்கொண்டு, அரிசி
அரவை ஆலைகளாகப் பயன்படுத்த உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அத்தகைய உத்தேசம் அரசுக்கு இல்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்
போது தஞ்சாவூர் மாவட்டத்தில் 600 ஆலைகளுக்கு நெல் வழங்கு
வதாகச் சொன்னார்கள். இந்த 600-ஐத் தவிர 2,200-க்கு மேற்
பட்ட மில்கள் இன்றையதினம் இயங்காமல் பூட்டிக் கிடக்கின்றன.
மேலும் அவர்களிடமிருந்து 35 ஆயிரம் ரூபாய் டெப்பாசிட் வாங்கு
கிறார்கள். சில ஆலைகள் இந்த டெப்பாசிட்டைக் கட்ட முடியாமல்
இருக்கின்றன. இந்த டெப்பாசிட் தொகை குறைக்கப்பட
வேண்டும். மேலும் ஆலைகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய
நெல்லும் அதிகரிக்கப்பட வேண்டும். இந்த 2,200 மில்களும்
இயங்குவதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்
கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட 600 ஆலைகளுக்கு
வழங்கப்பட்ட நெல்லைப் பொறுத்தவரையில் அது தஞ்சை

மாவட்டத்தைப் பொறுத்து மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும்
வழங்கப்பட்டதாகும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த
வரையில் தனிக் கேள்வி கேட்டால் தக்க பதில் தர முடியும்.

**திரு. கே. ஆர். கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, காட்டுமன்னார்கோவிலில் உற்பத்தியாகின்ற நெல்லைக்
கொண்டு போவதற்கு போக்குவரத்துச் செலவு அதிகமாக
ஆகிறது. மேலும் கள்ளக்குறிச்சி, உளுந்தூர்பேட்டை போன்ற
இடங்களுக்கு நெல்லைக் கொண்டு செல்ல போக்குவரத்து
வசதி இருக்கின்ற காரணத்தால் சிதம்பரத்தில் ஏற்கெனவே
உள்ள மத்திய அரசு ஆலையை தமிழக அரசே வாங்கும்
உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நாம் நம்மிடம் இருக்கும் பணத்தைப்
போட்டு இந்திய அரசு நடத்தும் ஆலைகளை வாங்குவதை விட
நாமே புதிதாகக் கட்டலாம். நாமே கட்டுவது தான்
ஆதாயமாதலால் அதை நாம் எடுத்துக் கொள்வது நிச்சயமாக
நன்மை தராது.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
தமிழக அரசு நவீன அரிசி ஆலைகள் தொடங்க இருப்பதை நான்
வரவேற்கிறேன். இந்த நவீன அரிசி ஆலைகளில் தவிடு நீக்கப்
படாத அரிசியை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்து அதன் மூலம்
நம் நாட்டு மக்கள் சத்தான அரிசி பெற அரசு வழி வகுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, என் அறிவுக்கு அப்பாற்பட்ட தொழில்
நுட்பக் கேள்வியாக இருப்பதால் தனிக் கேள்வி போட கேட்டுக்
கொள்கிறேன்.

### மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தொகுதி சோழவந்தானில் புதிய தொழிற்பயிற்சி நிலையம்.

212—(*வினா எண் 1215) திரு. ஆ. சந்திரசேகரன்:
மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், சோழவந்
தான் நகரில் தொழிற்பயிற்சி நிலையம் தொடங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) தற்பொழுது மதுரை மாவட்டம் வாடிப்
பட்டி வட்டம் சோழவந்தான் நகரில் தொழிற்பயிற்சி நிலையம்
அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில்
இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சோழவந்தானைச் சுற்றிப் பல்வேறு கிராமங்கள்
இருக்கின்றன. சோழவந்தான் தொகுதியில் இரண்டு சர்க்கரை
ஆலைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில் சோழவந்
தானில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்தினால் அங்குள்ள
பல்வேறு கிராமங்களிலுள்ள வேலையற்ற வாலிபர்களுக்கு வேலை
வாய்ப்புப் பெற, பயிற்சி பெற, உதவிகரமாக இருக்கும்.
இப்போது அங்குள்ளவர்கள் மதுரை, திண்டுக்கல் போன்ற
இடங்களுக்கு போக வேண்டியிருப்பதால் ஒரு தொழிற்
பயிற்சி நிலையத்தை சோழவந்தான் நகரில் அரசு அமைக்க
முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் தற்போது முறையே
மதுரை, தேனி, செக்கானூரணி ஆகிய இடங்களில் ஏற்கெனவே
தொழிற் பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. எனவே புதிதாக
சோழவந்தானில் ஆரம்பிக்கின்ற உத்தேசம் இல்லை.

### பட்டுக்கோட்டை நகராட்சியில் திருமணக் கூடம்.

213—(*வினா எண் 3895) திரு. ப. ந. இராமச்சந்திரன்:
மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகராட்சியில் திருமணக் கூடம்
கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : தற்சமயம் இல்லை.

[1987 மார்ச் 28

**திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை விரைந்து பெருகி வருகின்ற நகரமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கேயிருக்கின்ற தனியார் திருமணக் கூடங்களில் ஏறத்தாழ ஐயாயிரம் ரூபாய், ஆறாயிரம் ரூபாய் என்று திருமணத்திற்கு ஒரு நாளைக்கு வாடகை வசூலிக்கிறார்கள். இதைக் கருத்திற்கொண்டு இனி வருகின்ற ஆண்டுகளிலேயாவது—இந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் அல்லது மைய அரசு கூட அண்மையில் 55 இலட்சம் ரூபாயைப் பட்டுக்கோட்டை நகராட்சி வளர்ச்சிக்காக அளித்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்—இதையெல்லாம் கொண்டு அந்த நகரத்திற்கு ஒரு திருமணக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அமைச்சரவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திருமணக் கூடம் கட்ட கடன் உதவி அளிப்பதில்லை என்று நகர் ஊரமைப்பு இயக்குநர் தெரிவித்துள்ளார். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

## தமிழகத்தில் குறைந்த வருவாயுடைய நகராட்சிகள்

214—(*வினா எண் 5277) **திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மிகவும் குறைவான வருவாயை உடைய நகராட்சிகள் எத்தனை இருக்கின்றன?

(ஆ) அவைகளின் வருவாயைப் பெருக்குவதற்கு அரசு எடுத்துக்கொண்ட மாற்று ஏற்பாடு என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழகத்தில் மிகவும் குறைவான வருவாயை உடைய நகராட்சிகள் 13 உள்ளன.

(ஆ) இந்த நகராட்சிகள் யாவும் மூன்றாம் நிலையில் உள்ளன. இவைகளின் ஆண்டு வருமானம் 30 இலட்ச ரூபாய்க்கும் குறைவாக உள்ளன. இந்நகராட்சிகளில் அபிவிருத்தித்



1987 மார்ச் 28]

திட்டங்களைச் செயற்படுத்த இந்நகராட்சிகளுக்கு நிதி வசதி இல்லாததால், அரசு பல திட்டங்களைச் செயல்படுத்த நிதி உதவி அளித்து வருகிறது.

**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 13 நகராட்சிகள் நிதி உதவி இல்லாமல் மூன்றாம் தர நகராட்சிகளாக இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட நகராட்சிகளுக்கு அரசே நிதியுதவி அளிப்பதாகவும் தெரிவித்தார்கள். அதற்காக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், சீர்காழி நகராட்சியும் அதிலே அடங்கும் என்று கருதுகிறேன். ஆனால் வருவாய் குறைவாக இருக்கின்ற நேரத்திலே கூட இப்பொழுது இருக்கின்ற நகராட்சி நிர்வாகம் முறைகேடான செலவுகளையும், முறைகேடான வசூல்களையும் செய்து நிர்வாகத்தைச் சரிவர நடத்தவில்லையே. அதற்கு அரசாங்கம் தடுப்பு நடவடிக்கையாக எதாவது செய்யவிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட 13 நகராட்சிகளில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்த்ததைப்போல சீர்காழி நகராட்சி இல்லை. வீண் செலவும், விரயமும் செய்கின்ற திட்டங்களையும் மேற்கொண்டு நகராட்சியின் செலவை அதிகரித்துக் கொண்டு பற்றாக்குறையை உருவாக்கிக் கொண்டே போவார்களேயானால், அதுபற்றி அரசு உரிய கண்காணிப்பை மேற்கொள்வது கட்டாயம் அவசியம் என்றுதான் இந்த அரசு கருதுகிறது. ஆகவே, வருகிற ஆண்டிலே நாம் நிதியுதவி செய்கிறபோது ஒவ்வொரு திட்டம் என்று தனித்தனியே இப்பொழுது வழங்குவதை விட நகராட்சிகளைப் பொறுத்த வரையில் Block Grant என்று மத்திய அரசிலேயிருந்து மாநில அரசு பெறுகிறதே அதைப்போல Block Grant என்ற வகையில் நகராட்சிகளுக்கு வழங்குகின்ற மானியம், அவர்களுடைய மூலம் வருவாயை செலவினத்தை வைத்துக்கொண்டு அதற்கேற்ப அவர்கள் நிதியாதாரத்தைப் பெருக்குவதையும் வைத்துக்கொண்டு வழங்குவது பொருத்தமாக இருக்கும் என்கின்ற யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கின்றது.

[1987 மார்ச் 28

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நகராட்சியினுடைய நிர்வாகத்திலே அந்த மாதத்தினுடைய கடைசிக் காலத்திலே ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட முடியாத நிலையிலே பல நகராட்சிகள் இருக்கின்றன. அதிலும், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சத்துணவுக் கூடங்களிலே பணியாற்றுகின்றவர் களுக்குக் கூட 300 ரூபாயைக் கடந்த பொங்கல் தினத்தன்று அறிவித்தார்கள். அந்தத் தொகைகூட இன்னும் சில நகராட்சி களிலே கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நகராட்சிகளிலே ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை முன்னுரிமை கொடுத்து வழங்கிவிட்டு இதர செலவுகளைச் செய்ய வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசு இதையெல்லாம் வற்புறுத்த ஆரம்பித்தால் அப்புறம் உள்ளாட்சி மன்றத்தில் தலையீடு என்ற குற்றச்சாட்டுகளெல்லாம் வரும். ஆனால் நம்முடைய மாநில அரசு சில நிதி ஆதாரங்களைக் கடன் என்றும் மற்ற வகையிலேயும், மேம்பாட்டுத் திட்டங்கள் என்ற வகையிலேயும் தருகிறது. அப்படித் தருகின்றபொழுது அவர்களுடைய "Financial performance, financial discipline, their efforts to raise the resources must be taken into consideration." ஏனென்றால் இப்பொழுது சொத்து வரியை உயர்த்த வேண்டு மென்றால் மாநில சர்க்கார் உயர்த்தச் சொல்கிறது. உயர்த்து வதிலே கொஞ்சம்கூட எங்களுக்கு விருப்பம் இல்லை என்று சொல்லிவிட்டு அவர்கள் மாநில அரசின்மீது பழி போட்டுவிட்டு, தாங்கள் அந்த நிதி ஆதாரங்களைத் திரட்டாமல் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையும், ஒரு அரசியல் காரணத்திற்காகப் பயன்படுத்தக் கூடிய நிலைமையும் உருவாகி வருவதனால் இதைப்பற்றி நன்றாக ஆய்ந்து அரசு முடிவு எடுக்கும்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்குக்கூட வழியற்ற நகராட்சிகளுக்கு அளிக்கின்ற கடன் தொகைகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தையாவது மானியமாக அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1987 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இதைப்போன்ற எல்லா வகையான அம்சங்களையும் பற்றி அரசு விரிவாக ஆராயும்.

**திரு. எம். அண்ணாதாசன்:** தலைவரவர்களே, குறைந்த வரு மானமுடைய நகராட்சிகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி மாவட்டத்தில் திருச்சி நகராட்சி, பொன்மலை நகராட்சி ஆகிய இரண்டு நகராட்சிகளும் ஓரே வட்டத்திற்குள் இருப்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள். பொன்மலை நகராட்சி மிகவும் பின்தங்கிய நக ராட்சியாக இருக்கிறது. அங்கே தொழில் கூடங்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் தொழிலாளர்களுக்கு வருகின்ற வருமானம் அத்தனையும் பக்கத்தில் இருக்கிற திருச்சி நகராட்சிக்குப் போய்ச் சேருகின்ற வாய்ப்பு இருக்கிறது. உற்பத்தி செய்கின்ற உற்பத்திப் பொருள்கள் பொன்மலை நக ராட்சியிலும் வருமானம் திருச்சி நகராட்சியிலும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக் கிற நகராட்சிக்கு முன்னுரிமை கொடுத்து நிதி உதவி செய்ய முறையான ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ரொம்பவும் சிக்கலான கேள்வியாக இருக்கிறது. தனியாக கேள்வி போட்டால் விவரங்கள் பெற்றுத் தர முடியும்.

## திருப்பத்தூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் அங்காடிகள் கட்டுதல்.

215—(*வினா எண் 9732) **திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் அங்காடிகள் கட்டிடம் கட்ட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) திருப்பத்தூர் நகராட்சியில் மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் அங்காடி கட்ட திட்டம் உள்ளது.

(ஆ) இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எஸ். பி. மணவாளன்:** தலைவரவர்களே, திட்டம் உள்ளது என்று சொன்னதற்கு நன்றி. ஆனால் இந்தத் திட்டத்திற்கான ஆய்வு 1985-ல் முடிவுற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார். இந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இதை விரைவில் செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யும்.

**திரு. எஸ். பி. மணவாளன்:** தலைவரவர்களே, 80 இலட்சம் ரூபாய் மதிப்பீடுள்ள இந்தத் திட்டத்தில் மத்திய மாநில அரசுகளுடைய பங்கு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அதை எல்லாம் அனுமதிக்கப்பட்ட பிறகு தான் விரிவாகச் சொல்ல முடியும். ஆனால் மத்திய அரசு உதவி பெற்று அமல்படுத்தப்படுகின்ற நகர மேம்பாட்டுத் திட்டத்தில் இது சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மாநில அரசு வகுத்துள்ள நகர் மேம்பாட்டுத் திட்டத்தில்தான் இது வருகிறது. அனுமதிக்கப்பட்ட பிறகு விவரமான பதில் தாப்படும்.

**காந்தியச் சிந்தனைகளைக் கல்லூரிப் பாடமாக்கல்.**

221—(*வினா எண் 1753) **திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் பின்வரும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காந்தியச் சிந்தனைகளைக் கல்லூரிப் பாடமாக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, கல்லூரிகளில் பாடத் திட்டங்கள் பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்படுகின்றன. குறிப்பிட்ட பாடத் திட்டத்தைப் பாடமாக



வைக்க வேண்டுமென்றால் பல்கலைக் கழகப் பாடத் திட்டத்தில் அதைச் சேர்த்தால்தான் அவ்வாறு செய்ய முடியும். மேலும் கல்லூரிகளில் காந்தியச் சிந்தனைகளைப் பாடமாக வைக்க தகுந்த பாடத் திட்டத்தை உருவாக்க பல்கலைக் கழகங்களுக்கு அரசு அறிவுரை வழங்கியிருக்கிறது.

**திரு. குமரி அனந்தன்:** கனம் சபாநாயகர் அவர்களே, சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'காந்தியன் சேர்' என்ற பிரிவினை அமைக்க வேண்டும் என்பதற்காக காந்தியச் சித்தாந்தத்தில் ஈடுபட்டிருக்கிற சில நிறுவனங்கள் சேர்ந்து 6 இலட்சம் ரூபாய் கொடுத்து, அந்தப் பிரிவினை ஆரம்பிக்கச் சொன்ன நேரத்தில் அதை ஆரம்பிக்காமல் இருந்ததோடு அந்தப் பணத்தை எறத்தாழ இரண்டரை ஆண்டுகளாக வைத்திருந்தால் அந்த நிறுவனங்களே அந்தப் பணத்தைத் திருப்பிப் பெறுகின்ற நிலைமை ஏற்பட்டது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு வந்ததா? இவ்வளவு தூரம் வசதியை பிறர் செய்து கொடுக்கும்போது நம்முடைய கல்வி அமைச்சர் ப்ரோ சான்சலராக இருக்கிற பல்கலைக் கழகத்தில் இந்தப் பிரிவினை ஆரம்பிக்காமல் இருப்பதற்கு இருக்கிற இடையூறு என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, அத்தகைய தகவல் இதுகாறும் அரசின் கவனத்திற்கு வரவில்லை. சென்னைப் பல்கலைக் கழகம் காந்தியச் சிந்தனைகளைக் கல்லூரிகளில் பாடமாக வைக்கும் உத்தேசம் இல்லை என்று தற்போது அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. ஆனாலும் அரசு சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு காந்தியச் சிந்தனைகளைப் பாடமாக வைக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கிறது.

(முற்பகல் 10-30)

**திரு. குமரி அனந்தன்:** கனம் சபாநாயகர் அவர்களே, மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஏற்கெனவே இந்தத் திட்டத்தை அங்கீகரித்து, அவர்கள் கூட கல்லூரிகளில் இதை நடைமுறைப் படுத்தாமல் சென்னையில் இருக்கிற 'காந்தி அமைதி நிறுவனத்திடம்' அந்தத் திட்டத்தை விட்டிருக்கிறார்கள். ஆனால் சென்னை பல்கலைக் கழகம் போன்ற உயர்ந்த தத்துவங்களை எடுத்துச் சொல்கிற் ஒரு பல்கலைக் கழகம், ஜாதிச் சண்டை

[1987 மார்ச் 28

இல்லாத ஒரு சமுதாயத்தை மத வேறுபாடு இல்லாத ஒரு சமு தாயத்தை, வெடி குண்டு இல்லாத ஒரு சமுதாயத்தைப் படைப் பதற்கு தன்னுடைய வாழ்நாள் முழுவதும் போதித்த காந்தி அடிகளினுடைய அந்த சித்தாந்தங்களைப் போதிப்பதற்கு மறுத்து வருவது மிக வருத்தத்திற்குரியது. அந்த நிலையில் அதனை எடுத்து நன்றாக அழுத்திச் சொல்லி அவர்கள் அதைக் கொண்டுவர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிற அல்லது ஆலோசனை சொல்லி இருக்கிற நமது தமிழக அரசுக்கு நான் பாராட்டு தெரிவித்து, ஊசியைத் தொடர்ந்த நூல் போல—அதை அவர்கள் செயல்படுத்துவார்கள்—செயல்படுத்தவேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள் கிறேன். அந்த காந்தியச் சிந்தனையால் மட்டும்தான் இந்த நாடு வாழ முடியும் என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அதை வலியுறுத்துவார்களா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அரசு பல்கலைக் கழகத்தை வலியுறுத்தி இருக்கிறது. மீண்டும் வலியுறுத்துவோம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாய விழிப்புணர்ச்சிக்கு நல்லபல சிந்தனைகளை வழங்கிய பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கைகளையும், இன்றைக்கு சமுதாய நல நோக்கத்தோடு சமுதாய நலத்திட்டங் களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிற தமிழகத்தினுடைய நாயகன் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களது சமுதாய நல சிந்தனை களையும் கல்லூரிப் பாடமாக வைக்க அரசு நடவடிக்கை எடுக் குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பல்கலைக் கழகத்தில் 'சென்டர் ஃபார் அண்ணா ஸ்டடீஸ்' என்ற ஆராய்ச்சி மையம் துவக்கப் பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25 இலட்சம் ரூபாய் நிதியினை வழங்கி இருக்கிறார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, ரஷ்ய நாட்டில் ரஷ்ய நாட்டு கம்யூனிச சித்தாந்தத்திற்காகவும் மற்றும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்ட லெனினு



1987 மார்ச் 28]

டைய சித்தாந்தங்களை ரேடியோ மூலமும், டெலிவிஷனிலும் அடிக்கடி பரப்புகிறார்கள். அந்த மாதிரி நமது இந்திய நாட்டில் காந்தியினுடைய சித்தாந்தத்தை நமது நாட்டு மக்களுக்கு நாட்டுப் பற்று உண்டாகிற அளவுக்கு ரேடியோவிலும், டெலிவிஷனிலும் பரப்ப மத்திய அரசிற்கு மாநில அரசு வேண்டுகோள் விடுக்குமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இதுபோன்ற பணிகளில் ஏற் கெனவே தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தான் மாநில அரசு நம்புகிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித குல சிக்கலை அடிப்படையிலே தீர்க்க வல்லமையுள்ள மார்க்சிய தத்துவத்தைப் பாடமாக போதிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகத்திற்கு அத்தகைய உத்தேசம் தற்போது இருப்பதாக அரசுக்குத் தகவல் இல்லை.

**திரு. ஆ. பிரேம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம் காந்தி கிராமத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் 'காந்தியன் தாட்' அங்கே பயிற்சியாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. அவ்வாறு பயின்று அதன் மூலம் தேர்ச்சி அடைந்த மாணவர்களுக்கு அரசு எப்படிப்பட்ட முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Life oriented or utility oriented என்ற முறை யிலே அங்கே படிக்கிற படிப்பைப் பொறுத்து, வேலைவாய்ப்பு தரக்கூடிய பாடமாக இருந்தால் கட்டாயம் வேலைவாய்ப்பு தரப் படுகிறது. காந்தியினுடைய கொள்கைகளைப் பொறுத்தவரையில் "Gandhian approach to Science and Technology" "constructive works for the restructure of humanity"

போன்ற சில சப்ஜெக்டை அங்கே சொல்லித் தருகிறார்கள். அவற்றை முடித்துவிட்டு வருகிற மாணவர்களுக்கு கிராமத் தொழில் வாரியத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கிற அமைப்பு களில் வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தாய்மொழி, தமிழ் பண்பு, சுதந்திரம், சுயசிந்தனை, பெண்கள் உரிமை, சமுதாயச் சீர்திருத்தம், அரசியல் விதி, ஆக்கப்பூர்வமான உணர்வு இப்படி பல்வேறு கருத்துக்களை உள்ளடக்கிய தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருடைய சிந்தனைகள் கல்லூரிப்பாடமாக வைக்கப்பட்டுள்ளதா? இல்லை என்றால் எதிர் காலத்தில் இதை எல்லாம் மனதில் கொண்டு பாடமாக வைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குப் பலன் அளிக்கக்கூடிய பல்வேறு அரிய கொள்கைகளை ஈந்த பெரியவர்களுடைய கொள்கைகளை எல்லாம் எந்தெந்த அளவிற்குக் கொண்டுவருவது என்பதுபற்றி அரசு ஆயும்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு மட்டும் சட்டமியற்றும் அதிகாரம் இருந்தால் நான் மதமாற்றத்தைத் தடை செய்வதற்கு சட்டத்தைக் கொண்டு வருவேன் என்று காந்தி மகான் சொன்னார். அதை மனதில் கொண்டு இந்த மத மாற்றத்தை எதிர்த்து ஒரு பிரச்சாரம் அரசாங்கமே செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மனம்மாறி தானாக மாறுவது சட்டத்திற்குட்பட்டது. அதை யாரும் தடுக்க முடியாது. கட்டாயப்படுத்தி ஒருவரை மதமாற்றம் செய்வதுதான் சட்டத்திற்கு உட்பட்டதல்ல. அதுதான் தவறு.





## ஜெயங்கொண்டத்தில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதி மன்றத்திற்கு புதிய கட்டிடம் கட்டுதல்

222—(*வினா எண் 9934) **டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் நகரில் உள்ள இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றத்திற்கு புதிதாக கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு?

(இ) திட்டப் பணி எப்போது துவக்கப்படும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**டாக்டர் ந. மாசிலாமணி:** தலைவர் அவர்களே, இந்த ஜெயங்கொண்டம் நீதிமன்றம் துவக்கப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அந்த நீதிமன்றக் கட்டிடமும் கட்டப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அக் கட்டிடம் இடிந்த நிலையில் மேற்கூரையும் இல்லாமல் பெயர்க்கப்பட்டு, சுவர்களும் பழுதடைந் திருக்கின்றன. அந்த நீதிமன்றம் தற்போது மாட்டுத் தொழுவம் போல் இருக்கிறது. எனவே அந்தக் கட்டிடத்தினுடைய அவசரத்தையும், அவசியத்தையும் உணர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதியதாக கட்டிடம் கட்டித்தர மறுபரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதிக்கு புதியதாக கட்டிடம் கட்ட வேண்டும் என்று அரசுக்கு உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்ய வில்லை. பிரையாரிட்டி என்ற முறையில் பல பரிந்துரைகளை செய்திருக்கிறார்கள். அதிலே இது இடம் பெறவில்லை. வேண்டு மானால் மீண்டும் இதுகுறித்து உயர்நீதிமன்றத்திடம் அரசு கேட்கும்.

[1987 மார்ச் 28

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போதுள்ள நீதிமன்றம் வருவாய் துறையினுடைய வட்டாட்சியர் அலுவலக வளாகத்தினுள் இயங்கி வருகிறது. அங்கே இருக்கிற பார்-கவுன்சில் சார்பாகவும் மாவட்ட அளவில் உள்ள நீதித் துறையின் சார்பாகவும் அரசுக்கு பரிந்துரை செய்திருக்கிறார்கள். வருவாய் துறையிலே இருந்தும் வேண்டிய இட வசதியைச் செய்வதாக அவர்கள் உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். எனவே அந்தக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு விரைவில் புதிய கட்டிடம் இந்த நீதிமன்றத்திற்கு கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, Priority is being decided only in consultation with the High Court உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையை பெற்ற பிறகுதான் செய்ய முடியும். உயர்நீதிமன்றத்தை கலந்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள பல மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் வாடகைக் கட்டிடங்களிலேயும், பழைய கட்டிடங்களிலேயும் இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற கட்டிடங்கள், வழக்குகள் அதிகமாகியிருக்கிற காரணத்தால் அடிஷனல் கோர்ட் அமைப்பதற்கு போதுமான அளவுக்கு இல்லை. எனவே குறிப்பிட்ட கால கெடுவுக்குள் தமிழ்நாட்டில் உள்ள வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கு சொந்த கட்டிடங்கள் கட்டிக் கொடுத்தும், அடிஷனல் பில்டிங் தேவைப்படுகிற நீதிமன்றங்களுக்கு அடிஷனல் பில்டிங் கட்டிக் கொடுத்தும் நிறைவுசெய்கிற செயற்குறிப்பு ஒன்றை அரசே உருவாக்கித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வரும் எல்லா நீதிமன்றங்களுக்கும் அரசு சொந்தக் கட்டிடம் கட்ட வேண்டும் என்றால் கிட்டத்தட்ட ரூ. 500 கோடிக்கு மேல் உடனடியாக தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. நீதித்துறைக்கு நிதி ஒதுக்குவதைப் பொறுத்த வரைக்கும் கோர் செக்டார் என்று



1987 மார்ச் 28]

சொல்லக்கூடிய பிரையாரிட்டி செக்டாரில் அமையாத காரணத்தால் மத்திய அரசிடமிருந்து வருகிற நிதி மிக மிக சொற்பமாக இருப்பதால் மாநில அரசே தன்னுடைய நிதி ஆதாரங்களிலிருந்து அதைச் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறது. நிதிநிலைமைக்கு ஏற்ப அவ்வப்போது இவைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி அவர்கள் கூறியது போல் இடிந்த நிலையில் இருக்கிற கட்டிடங்களுக்குத்தான் முன் உரிமை கொடுத்து, இருக்கிற நிதிக்கு ஏற்ப நாம் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பெண்ணாகரத்தில் ஒரு மாஜிஸ்ட்டிரேட் கோர்ட் இருக்கிறது. அந்த கோர்ட் துவக்கப்பட்டு சுமார் 5 வருடம் ஆகிறது. அந்த கோர்ட் பழைய இடிந்த கட்டிடத்தில் நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதற்குத் தனியாக கட்டிடம் கட்டித் தரும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு நடவடிக்கை எடுக்கும்.

நீலகிரி மாவட்டம், கூனூர் வட்டம், மஞ்சக்கொம்பை பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

223—(* வினா எண் 10350) திரு. கே. உச்சி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூனூர் வட்டம், மஞ்சக் கொம்பை பகுதியில் உள்ள பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டி கோரிக்கை மனு ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 1986-87 கல்வி ஆண்டில் நீலகிரி மாவட்டம் மஞ்சக்கொம்பை என்னுமிடத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன.

[1987 மார்ச் 28

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவிற்கு விடை வருவதற்கு முன்னரே வெகு விரைவில் கூனூர் வட்டம் மஞ்சக்கொம்பை பகுதியில் இருந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றியதற்காக புரட்சித் தலைவர் அவர் களுக்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றி தெரிவித்துக் கொண்டு, அதே நேரத்தில் என் தொகுதியான நெலாக்கோட்டை ஸ்ரீமதுரை, தேவாலா கையுண்ணி ஆகிய பகுதிகளில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்க அரசு முன்வருமா என்பதையும், பிதிர்காடு என்ற இடத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியை பிளஸ் 2 பள்ளியாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இவைகுறித்து அரசுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களிட மிருந்து பரிந்துரை வரப் பெற்றிருக்கிறது. நீலகிரி மாவட்டம் மலைசூழ் பகுதியாக இருப்பதால் நெடுந்தொலைவு குழந்தைகள் நடந்து செல்கிற இன்னல் இடர்ப்பாடு இருக்கிற காரணத்தால் இதற்கு முன்னுரிமை கொடுத்து அரசு நடவடிக்கையெடுக்கும்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நீலகிரி மாவட்டம் மலைப்பகுதி என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். சமவெளிப் பகுதியில் இருக்கிற பள்ளிகளையும், பணியாற்றுகின்ற ஆசிரியர் களையும் கண்காணிக்கும் அளவிற்கு மலைப்பகுதியில் கண்காணிக்க முடியாது. அங்கு மாவட்ட கல்வி அதிகாரி ஒருவர் தான் இருக்கிறார். குறைந்தது நான்கு கல்வி அதிகாரிகளாவது இருந்தால்தான் அந்த மாவட்டத்தில் உள்ள பள்ளிகளை முழுமையாகக் கண்காணிக்க முடியும். ஆகவே முதலில் இருவரையாவது நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, இரண்டு மாவட்ட கல்வி அதிகாரிகள் நியமிக்க வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசுக்கு வந்திருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்து வருகிறது.



1987 மார்ச் 28]

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, அரசாங்க கொள்கையின்படி ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்த வேண்டு மென்றால் அரசாங்கத்திற்கு கல்வி டெபாசிட்டாக 25 ஆயிரம் ரூபாய் கட்ட வேண்டும். ஐந்து ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டும். அதோடு போதுமான மாணவர்கள் ஸ்ட்ரெங்த் இருக்க வேண்டும். இவைகள் இருந்தால் உயர்நிலைப் பள்ளி அமைக்க அனுமதி வழங்கலாம் என்று அரசாங்கக் கொள்கை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் தொங்கனூர் என்ற இடத்தில் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஐந்து ஏக்கர் நிலம் வழங்கி, 25 ஆயிரம் ரூபாய் பணமும் கட்டி, போதுமான மாணவர்கள் இருக்கிறார்கள் என்று இலாக்காபூர்வமாக அறிக்கை அனுப்பியும் இன்னும் அதற்கு அனுமதி வழங்கப்படாமல் இருக்கிறது. அந்த உயர் நிலைப் பள்ளிக்கு அனுமதி வழங்க அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துவதற்கு நகரங்களில் மட்டுமின்றி கிராமப்புறங்களிலும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. நெடுந்தூரம் பல கல் தொலைவிற்கு மாணவர்கள் நடந்து செல்ல வேண்டிய நிலை இருக்கிறதால் கிராமப்புற மாணவர்கள் சுமையைப் போக்குவதற்கு கிராமப்புறங்களில் அதிகப்படியான நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர் நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உருவாக்கு வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதுகுறித்து தக்க நடவடிக்கையெடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையும் கவனிக்கப்படும்.

[1987 மார்ச் 28

**கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கல்.**

**224—(* வினா எண் 11254) திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரிக்கு பல்கலைக் கழக அந்தஸ்து வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே,

(அ) பல்கலைக் கழக மானியக் குழு மற்றும் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) கோவையிலுள்ள அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் கல்லூரியை 'கருதப்படும் பல்கலைக் கழகமாக' உயர்த்த கருத்துரு அக்கல்வி நிறுவனத்தாரால் மைய அரசிற்கும் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. பல்கலைக் கழக மானியக்குழு மாநில அரசின் கருத்தினை கோரியது. இக்கருத்துருவினைப் பரிசீலித்து அரசு தக்க நடவடிக்கையெடுக்க இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, கோவைக்கு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே பெருமை சேர்க்கக்கூடிய இந்த அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் கல்லூரியை பல்கலைக்கழக அந்தஸ்து பெறத்தக்க அளவிற்கு செய்வதற்கு கருத்துரு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பரிசீலனை எப்போது நிறைவு பெறும்? நிறைவுபெற்று பல்கலைக் கழக அந்தஸ்திற்கு உயர்த்து வதற்கு அரசு எப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, 'டீம்ட் யூனிவர்சிட்டி' என்ற தகுதியைப் பெறுவதற்கு சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டியிருக்கிறது. அது குறித்து யு.ஜி.சி.. மற்றும் மாநில அரசு அந்த நிறுவனத்திற்கு



1987 மார்ச் 28]

அறிக்கைகளை அனுப்பி இருக்கின்றன. அவர்கள் சிலவற்றிற்கு
பதில் தந்திருக்கிறார்கள். சில கோரிக்கைகளும் கேட்கப்பட்
டிருக்கின்றன. அதெல்லாம் வந்த பிறகு விரைவில் அதுகுறித்து
நடவடிக்கையெடுக்கப்படும்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, அவினாசிலிங்கம் மகளிர்
மனையியல் கல்லூரியை பல்கலைக்கழக அந்தஸ்திற்கு
உயர்த்துவது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது என்று
சொல்லப்பட்டது. அந்தக் கல்லூரி, சத்துணவுத் திட்டம் போன்ற
காரியங்களில் பெரிய ரிசர்ச் நடத்தி பல இன்வென்ஷன்களைக்
கொண்டு வந்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் பல
சந்தர்ப்பங்களில் பி.காம்., போன்ற வகுப்புகளையெல்லாம் மூடி
பலவிதமான தொல்லைகள் ஏற்பட்டதை இதே அவையிலே
ஞாபகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அப்படிப்பட்ட
நிலைமையில் ஒரு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கும்போது
மேற்கண்ட தன்மைகள் அந்த நிறுவனத்தில் இல்லாமல்
இருப்பதற்கு என்ன பந்தோபஸ்தை அரசாங்கம் உண்டாக்கப்
போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஒரு Deemed University என்ற
முறையிலே அதைப் பல்கலைக்கழகமாக நாம் உயர்த்துகின்ற
போது, குறிப்பாக புதிய கல்விக் கொள்கையையொட்டி,
Life-oriented, utility-oriented Education தரமுள்ள
கல்வி என்ற முறையில், பயனுள்ள வகையில், ஈர்க்கக்கூடிய
வகையில் இருக்கின்ற கோர்ஸ்களை அவர்கள் கொண்டுவர
வேண்டும் என்று அரசு பிரத்யேகமாகக் கருதுகிறது. சில
நேரங்களில் சில பட்டப் படிப்புகள் ஈர்க்கக்கூடிய வகையில்
இல்லை என்றால், அவைகளை மூடுவதற்குக் கூட அதிகாரம்
அந்தக் கல்லூரிகளுக்கு இருக்கிறது, அரசின் அனுமதியைப்
பெற்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய
பிரச்சினையைப் பற்றிய தகவல் அரசிடம் இல்லை. இருந்தாலும்
இதுகுறித்தும் அரசு ஆயும்.

[1987 மார்ச் 28

**வடஆற்காடு மாவட்டம், ஆற்காடு மற்றும் திமிரி ஒன்றியங்களில் புதிய சத்துணவுக் கூடம்.**

**225—(* வினா எண் 9336) திரு. த. பழனி :** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், ஆற்காடு, திமிரி ஒன்றியங் களில் புதிதாக எத்தனை சத்துணவுக்கூடம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளது ?

(ஆ) அது எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**திருப்பூர் மங்கலம் பஞ்சாயத்தில் கிராமிய நூற்பு மையம்.**

**226—(* வினா எண் 11401) திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மங்கலம் பஞ்சாயத்தில் கிராமிய நூற்பு மையம் அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலம் ஊராட்சி, அதுபோல் திருப்பூர் ஒன்றியம் இதுகுறித்து தீர்மானங்களைப் போட்டு அரசுக்கு அனுப்பியிருக் கிறார்கள். இதுவரையில் அரசுக்கு கோரிக்கை வரவில்லை என்றாலும் கூட இதையே கோரிக்கையாக ஏற்றுக்கொண்டு, மங்கலம் பகுதியில் கிராமிய நூற்பு மையத்தை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



1987 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மங்கலம் பஞ்சாயத்தைச் சேர்ந்த
இடுவாய் என்ற கிராமத்தில் 2—5—1975 முதல் ஆறு கதர் ராட்டை
களைக் கொண்ட கிராமிய நூற்பு மையம் இயங்கி வருகிறது.
இதில் 30 நூற்பாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு
வருகிறது.

**திரு. க. சோலைராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்படிப்பட்ட கிராமிய மையங்களில் பல பகுதிகளில்
போதிய பயிற்சியாளர்கள் இல்லை என்பதையும், அங்கே இயங்கி
வருகிற கட்டிடங்களுக்கான வாடகை பல இடங்களில் பாக்கி
இருக்கிறது என்பதையும் அரசு அறியுமா ? மேலும் 3, 4 லட்ச
ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்களை அரசுக்கு இலவசமாக வாடகை
யின்றித் தரத் தயாராக இருந்து, பணியாட்கள் தயாராக
இருந்தால் அத்தகைய இடங்களில் இப்படிப்பட்ட கிராமிய
மையங்களை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, கிராமிய நூற்பு நிலையங்களைத்
துவங்குகிறபோது, போதுமான அளவிற்கு நூற்பு நிலையங்
களுக்கு வந்து, பணிகளைக் கற்றுக் கொண்டு, பின்பு தொடர்ந்து
பணிகளை ஆற்றுகின்றவர்களுடைய எண்ணிக்கை தேவைப்
படுகிறது. சில கிராமங்களில் இப்படி நூற்பு மையங்கள் துவங்கப்
பட்ட பிறகு, அங்கே இருக்கிறவர்கள், தங்களுடைய வருவாய்
போதுமானதாக இல்லை என்ற நிலையில் அதை விட்டுவிட்டுப்
போய்விடுகிறார்கள். அப்படிப்பட்ட இடங்களில் அதனுடைய
பணிகள் தொடர்ந்து நடைபெற முடியாத நிலைமை ஏற்பட்டு,
வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய நிலைமை ஏற்படுகிறது.
ஆகவே ஆர்வத்தோடு மட்டுமல்லாமல் இதைத் தொடர்ந்து செயல்
படுத்துவதற்கான வாய்ப்பு எந்தெந்த ஊரிலே இருக்கிறதோ,
அந்தந்த ஊர்களிலேதான் நூற்பு நிலையங்களை ஆரம்பிப்பதற்கு
நம்முடைய கதர் கிராமத் தொழில் வாரியம் உரிய
நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

[1987 மார்ச் 28

## நிலையூர் கால்வாயை நவீனப்படுத்தல்.

227—(* வினா எண் 13488) **திரு. மு. மாரிமுத்து மற்றும் திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகையிலிருந்து பிரிந்து செல்கின்ற நிலையூர் கால்வாயை நவீனப்படுத்தும் பணி எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நிலையூர் கால்வாயை நவீனப்படுத்தும் திட்டத்திற்கான முதல்நிலை ஆய்வு அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ரூபாய் 1,807 இலட்சங்கள் (1985-86 ஆம் ஆண்டு விலைப் பட்டியல்படி).

**திரு. மு. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதியினுடைய நெடுநாளைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்கிட ஒப்புக்கொண்ட எங்களுடைய புனிதத் தலைவர், புரட்சித் தலைவருடைய அரசுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தின்கீழ், வலையங்குளம் கண்மாய், சோளங்குருணை, புளிக்குளம், நல்லூர் பெரிய கண்மாய், ராமங்குளம், எலியார்பத்தி, பாரப்பத்தி, பாப்பான் ஓடை, ஆணைக்குளம், குதிரைக்குத்தி, விராதனூர், மூத்தாகுளம், நெடுங்குளம், சகடகட்டி, குசவப்பட்டி, குசவன்குண்டு, கூடல்செங்குளம் ஆகிய கண்மாய்கள் பயன்பெறுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அத்தனை கண்மாய்களும் இந்தத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கின்றன.



1987 மார்ச் 28]

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதிக்கு அருகே உள்ள திருமங்கலம் தொகுதியிலே இருக்கிற வலையங்குளம், எலியார்பத்தி, பாரப்பத்தி போன்ற பல கிராமங்கள், பொருளாதாரத் துறையிலேயும், சமுதாயத்திலேயும் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிற காரணத்தால், தொடர்ந்து பருவ மழை பொய்த்து அங்கேயிருக்கிற மக்கள் ஜீவ மரணப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நான் உங்கள் மூலமாக விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு இந்தக் கேள்வியை நான் கேட்டபோது, அப்போது இருந்த பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் முதல் நிலை ஆய்வு அறிக்கை வந்திருக்கிறது என்று அன்றைக்கே சொன்னார்கள். இன்றைக்கும் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே 1,807 இலட்சங்கள் என்பது, 1985-86 ஆம் ஆண்டு உள்ள விலைவாசிப் பட்டியை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் விலைவாசி கூடிப்போகிற காரணத்தால் அந்தப் பகுதியில் வாழ்கிற மக்களுடைய நிலையை எண்ணிப் பார்த்து, இந்த ஆண்டாவது இந்த முதல் நிலை ஆய்வு அறிக்கை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டம், காமராஜ் மாவட்டம், மதுரை மாவட்டம் ஆகிய மூன்றிற்கும் சேர்த்து, இந்தத் திட்டத்தின் மூலமாக பயன் கிடைக்கும் என்று குறிப்பு இருக்கிறது. ஆகவே மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைமைக்கு ஏற்ப, மிக வேகமாக விரைந்து செயலாற்றப்படும்.

(முற்பகல் 10-50)

**திரு. ஆ. சிவக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையூர் கால்வாயில் சிலயிடங்கள் குறுகிய நிலையில் இருக்கின்றன. காரணம், அதன் அருகில் உள்ள சில நிலவுடைமையாளர்கள் அதை ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள். அதைச் சரி செய்து வேலை துவக்கப்படுமா என் அறிய விரும்புகிறேன்.

[1987 மார்ச் 28

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை ஆரம்பிக்கிற நேரத்தில் ஆக்கிரமிப்புகள் சீர்செய்து தரப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலையூர் கால்வாயை நவீனப்படுத்துகிற திட்டத்திலே திருமங்கலம் தொகுதியில் இருக்கிற இன்னும் சில குளங்கள், கண்மாய்கள் விடுபட்டுப் போய் இருக்கின்றன. அவைகளை எல்லாம் சேர்த்து—இதை எடுத்துக்கொள்கிற நேரத்தில் அந்தக் கண்மாய்களுக்கும் குளங்களுக்கும் இந்தப் பயன் விஸ்தரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த எந்தக் கண்மாய்கள் விடுபட்டு போய் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பைத் தருவார்களானால் அவைகளை ஆராய்ந்து பார்த்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வைகை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சென்ற முறை—1985-வது ஆண்டு அசெம்பிளி இல்லை—அதற்கு முன் 1980 வது ஆண்டு அசெம்பிளி நேரத்தில் நிலக்கோட்டை, வத்தலகுண்டு பகுதிக்கு மூன்று ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டு நான்கு கோடி ரூபாய் அதற்கு ஒதுக்கப்பட்டது. அந்த வேலை இன்னும் ஆரம்பிக்கப் படாமல் இருக்கிறது. அதையும் தயவுசெய்து இந்த ஆண்டு ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற திட்டம் எதில் சேர்க்கப்பட்டு இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே தனிக் கேள்வி போட்டால் தகுந்த பதில் கிடைக்கும்.



1987 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்
**திரு. மு. மாரிமுத்து :** அவர்களே, இந்த நிலையூர் கால்வாயினுடைய ஆரம்பப் பகுதியில் இருக்கின்ற நேரடி பாசன வசதியுள்ள கிராமங்களுக்கு இந்தப் பாசன வசதியில், இந்தத் திட்டத்தின்கீழ் உறுதி அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வாயிலாக இப்போது தண்ணீர் பெற்றுக் கொண்டு இருக்கிற நீர்ப் பாசன ஆதாரத்திற்கு உறுதி செய்வதோடு, புதிய நீர் ஆதாரங் களும் பெற்றுத் தரப்படும் என்பதுதான் இந்தத் திட்டத் தினுடைய குறிக்கோள் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்
**திரு. வி. எஸ். பஞ்சவர்ணம் :** அவர்களே, இந்த வைகையிலிருந்து பிரிந்து செல்லுகின்ற நிலையூர் கால்வாய் திட்டத்தின்மூலம் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காமராஜ் மாவட்டத்தினுடைய ஒரு பகுதி பலன் பெற வேண்டுமென்று நீண்ட நெடுங்காலமாக அந்தப் பகுதி மக்கள் அரசுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த நிலையூர் கால்வாயிலிருந்து காமராஜ் மாவட்டத் தில் எத்தனை கண்மாய்களுக்கு நீர் விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் அதை அந்தப் பகுதி மக்களுக்கு அரசு நிறைவேற்றிக் கொடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜ் மாவட்டத்தில் உள்ள சுமார் 33 கண்மாய்களுக்கு நீர் வரத்து கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு இந்தத் திட்டத்தில் இருக்கிறது. எவ்வளவு வேகமாக திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ அவ்வளவு வேகமாக திட்டங்களை நிறைவேற்ற முயற்சிகளைச் செய்து கொண்டு இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்
**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** அவர்களே, நிலையூர் கால்வாயை நவீனப்படுத்தும்போது காமராஜ் மாவட்டமும் அதில் பயன்பெறும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காமராஜ் மாவட்டத்தில்

எந்த தாலுக்கா அந்த வகையில் பயன்பெறும் என்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை
நிறைவேற்றுகிற நேரத்தில் குறிப்பாக அருப்புக்கோட்டைத்
தொகுதியில் இருக்கின்ற சுமார் 33 கண்மாய்கள் இதன் மூலம்
பாசனம் பெறும்.

**திரு. க. பாரமலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சொல்லிய பதிலில் மதுரை மாவட்டமும், காமராஜ் மாவட்டமும்
பயன்பெறும் என்று சொன்னார்கள். பசும்பொன் முத்துராம
லிங்கம் மாவட்டமும் பயன்பெற திட்டம் இருக்கிறது. அதிலே
காஞ்சிரங்குளம், நெடுங்குளம் போன்ற கிராமங்களுக்கு மத்தியில்
இருக்கும் வடிகங்குளம் விடுபட்டுப் போய் இருக்கிறது. அதையும்
சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று நான் ஏற்கனவே மாண்புமிகு
அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் கொடுத்து இருக்கிறேன்.
அந்த வடிகங்குளம் சேர்க்கப்பட்டு இருக்கிறதா என்ற விவரத்தை
அறிய விரும்புகிறேன். இப்போதுதான் முதல்நிலை ஆய்வு
அறிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்
கிறார்கள். மூன்று ஆண்டுகளாக அது பரிசீலனையில் இருக்கிறது.
ஆகவே அதைத் தாமதம் செய்யாமல் விரைவாகச் செய்வதற்கு
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க
இருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன்
முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உள்ள சுமார் மூன்று
கண்மாய்கள் இதில் சேர்க்கப்பட்டு இருப்பதாக கணக்கு
இருக்கிறது. அதிலே எந்தக் கண்மாய்கள், கால்வாய்கள்
விடுபட்டுப் போய் இருக்கின்றன என்பதை மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் தனியாகச் சொல்வார்களானால் அதன்மீது
ஆராய்ந்து பார்த்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள உள்ளார் அணை
நீர்த்தேக்கத் திட்டத்திற்கு 15 கோடி ரூபாயில் மதிப்பீடு செய்தும்,
72 கிராமங்களுக்கும் இரண்டு நகராட்சிகளுக்கும் குடிநீர் வசதிக்
காக மூன்று கோடி ரூபாயில் மதிப்பீடு செய்தும் மாவட்ட ஆட்சித்
தலைவர் அவர்கள் மாண்புமிகு பொதுப் பணித் துறை
அமைச்சர் அவர்களுடைய அலுவலகத்திற்கு அனுப்பியிருக்
கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்களும்,
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் இந்த
நிதி ஆண்டிலாவது அந்த வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய
நிதியை ஒதுக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :**
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம்
அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. நிதியாதாரங்களைப்
பொறுத்து, துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, வைகைப் பாசனத்தை நவீனப்படுத்துவதன்
வாயிலாகவும், நிலையூர் கால்வாயை நவீனப் படுத்துவதன்
வாயிலாகவும் சேமிக்கப்படுகின்ற நீரின் அளவு என்ன? அந்தக்
கால்வாயின் நீரைப் பகிர்ந்தளிப்பதற்கான முறை என்ன
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :**
தலைவர் அவர்களே, திட்டங்களைத் தீட்டுகின்ற நேரத்தில்,
எவ்வளவு தண்ணீர் மிச்சப்படுகின்றது என்று பார்த்துத்தான்
கண்மாய்களுக்குக் கொடுக்கின்ற அந்தக் கணக்கைப் போட்டிருக்
கிறார்கள். தனியாகக் கேள்வி போட்டால், எந்தெந்த ஆண்டில்
எவ்வளவு மிச்சப்படுகின்றது என்பதை நான் சொல்லமுடியும்.

## அடையாற்றை ஆழப்படுத்தும் திட்டம்

**228—(* வினா எண் 7695) திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடையாறு ஆற்றினை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) பணி விரைவில் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இந்தப்பணி நடைபெற்று வருகிறது.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு ஆற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் கட்டுகின்ற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணியின் வாயிலாக அந்தப் பகுதி மக்கள் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடையாறு ஆற்றினை ஆழப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அதிகமாக வெள்ளம் வரும்பொழுது, குறிப்பாக பாரி நகர், சாரதி நகர், விநாயகபுரம், ஆஸ்பத்திரி சாலை, கிஃஉர் நகர், ஆற்றுமா நகர், கோட்டூர்புரம், செட்டித்தோட்டம், கஸ்டம்ஸ் காலனி போன்ற பகுதிகள் கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கப்படுகின்ற காரணத்தினால் அந்தப் பகுதிகளிலே ஆற்றை ஆழப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, அதற்கான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசுக்கு வெள்ள நிவாரணத்திட்டத்தின்கீழ் ரூ. 12 கோடி மதிப்பிட்டு நிதி கேட்டிருந்தோம். ஆனால் அதிலே ரூ. 2 கோடிதான் ஒதுக்கீடு செய்தார்கள். அந்த ரூ. 2 கோடிக்கான வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த ஆற்றினை ஆழப்படுத்தினால் மட்டும்





போதாது. நடுவிலேயுள்ள பல பாலங்களை உயர்த்திக்கட்ட வேண்டும். அதற்கு வேண்டிய நிதிகளைப் பெற்று, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு ஆற்றுக்குத் தண்ணீர் வருவது செம்பரம்பாக்கம் ஏரி முழுமையும் நிரம்பியதற்குப் பிறகுதான். அதைத் திறந்துவிடுகிறபோது அந்நீர் வந்து அடையாறு நிரம்புகிறது. முன்பு கூட வெள்ளம் வந்தபோது நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் படகிலே வந்து அதற்குப் பிறகு காரிலே சென்னைக்கு வந்தார் என்று பத்திரிகையிலே பார்த்தோம். அதுபோன்று செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பியதற்குப் பிறகு அங்கே திறந்து விடப்படுகின்ற நீர் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய வீட்டிற்கு முன்னால் இருக்கிற மணப்பாக்கம் பகுதியிலே வந்துதான் இந்த அடையாறு ஆற்றுக்கு வருகிறது. ஆகவே அதனைத் தடுப்பதற்கு செம்பரம்பாக்கம் ஏரியையும் ஆழப்படுத்த வேண்டுமென்ற நிலையில், இந்த ஏரியைத் திறந்து விடுவதன் காரணத்தால், இயற்கையாக வெள்ளம் ஏற்படாமல், செயற்கையான முறையிலே பாதிக்கப்படுகின்ற அந்த மக்களுக்கு நிரந்தரமான தீர்வு காண செம்பரம்பாக்கத்திலிருந்து வெளியேறுகின்ற நீரைத் தேக்கி வைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசினுடைய கவனத்தில் இல்லை. ஆற்றின் கரைகளைப் பலப்படுத்தக்கூடிய செயற்குறிப்பு அரசின் கவனத்தில் இருக்கிறது.

## பழனி தொகுதி பாப்பம்பட்டி பஞ்சாயத்திலுள்ள பச்சை ஆற்றில் அணைக்கட்டு.

**229—(* வினா எண் 2134) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பழனி தொகுதி பாப்பம்பட்டி பஞ்சாயத்து அருகில் உள்ள பச்சை ஆற்றில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

[1987 மார்ச் 28

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அரசு ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட பின் வேலை தொடங்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த எஸ்டிமேட்டிற்காக போடப்பட்டுள்ள தொகை எவ்வளவு? இந்த வேலை இன்னும் எத்தனை மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். இந்தப் பழனி தொகுதி, பாப்பம்பட்டி ஏரியாவில் இன்றைக்கு தண்ணீர் ஒரு குடத்திற்கு எட்டணா வீதம் வாங்கப்படுகிறது. அப்படியும் சில சமயங்களில் கிடைக்கவில்லை. சீக்கிரமாக தண்ணீர் கிடைக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், பெர்குலேஷன் வாட்டர் கிணறுகளுக்குக் கிடைக்கும். எனவே தயவுசெய்து விரைவிலே ஆரம்பிக்க வேண்டும். இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த பச்சையாற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு ரூ. 1,120 இலட்சம் ஆகும் என்ற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பு அரசினுடைய கவனத்தில் இருக்கிறது. நிதியாதாரத்தைப் பொறுத்து வேலைகள் எடுக்கப்படும்.

### உசிலம்பட்டி வட்டத்தில் அசுவமா நதித் திட்டம்

230—(*வினா எண் 8696) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தாலுகாவில் நடைபெற்று வந்த அசுவமா நதித் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசுவமா நதித் திட்டம் முதல் நிலை ஆய்வில் (Preliminary Investigation) உள்ளது.



1987 மார்ச் 28]

(முற்பகல் 11-00)

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அசுவமா நதித் திட்டம் கடந்த சில ஆண்டு களாகவே ஆய்வில் இருந்துகொண்டு இருக்கிறது என்ற பதிலை நாங்கள் பெற்றுக்கொண்டு இருக்கிறோம். உள்ளபடியே இன்றைக்கு வைகையைப் பொறுத்தமட்டில் பாசனத்திற்கு என்று பல்வேறு வகைகளில் கால்வாய்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற நேரத்தில், அந்த வைகை அணையினுடைய தண்ணீர் விவசாயத்திற்கு மட்டும்தான் பயன்படப்போகிறதா என்ற கேள்வி எழுந்து, அது குடிதண்ணீர் அணையாக மாறக்கூடிய அளவிலே அந்த அணை இருக்கக்கூடிய காலகட்டம் இன்றைக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமாதிரி காலகட்டத்திலே இன்றைக்கு இந்த அசுவமா நதித் திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமாகத்தான் வறண்ட பகுதியாக இருக்கின்ற உசிலம்பட்டி தாலுக்காவிலே கிடைக்கக்கூடிய தண்ணீரைத் தேக்கிவைத்து அணையைக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, கூடிய விரைவிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அசுவமா நதித் திட்டம் குண்டார் படுகையில் அமைய இருக்கிறது. அதை தற்போது கேஜிங்ஸ் செய்துகொண்டிருக்கிறோம். அது நீண்ட கால ஆய்விலே இருந்ததால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்று பார்க்க வேண்டிய காலகட்டம் இருக்கிறது. உறுப்பினருடைய உணர்வைப் புரிந்துகொண்டு, மிக வேகமாக ஆய்வுகளை முடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. உறுப்பினர்கள், அமைச்சர்கள்பற்றி கேலிச்சித்திரம் வெளியிட்ட "ஆனந்த விகடன்' பத்திரிகை மீதான நடவடிக்கை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களின் சார்பிலே, தமிழகத்திலே அனைமையிலே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு வேதனையான நிகழ்ச்சியினை, கண்டிக்கத்தக்க நிகழ்ச்சியினை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். ஜனநாயக அமைப்பிலே ஏடுகளுக்கு மிகப்பெரிய பங்கு உண்டு—தின ஏடுகளாக இருந்தாலும், வார ஏடுகளாக இருந்தாலும், மாத ஏடுகளாக இருந்தாலும் ஆனால் அந்த ஏடுகள் தரமான செய்திகளை வழங்குவனவாகவும், நாட்டுக்கு பயன்பெறத் தக்க கட்டுரையை வழங்குவனவாகவும், பொது வாழ்விலே பங்கு பெறுபவர்களுக்கு உறுதுணையாக—முடிந்தால்—இருப்பனவாகவும், அவர்களுக்குத் தேவைப்பட்டால் ஆலோசனை சொல்லக்கூடிய அளவுக்குப் பணியாற்றுவது அவர்களுடைய கடமையாகும். ஆனால் அண்மைக்காலத்திலே, சட்டசபை கூடுகின்ற நேரத்திலே, சட்டசபையை அதிலே குறி வைத்து எழுதுவது, கேலிச் சித்திரம் வரைவது, அவர்கள் மனம் புண்படும்படியான பல்வேறு நிகழ்ச்சிகளைச் செய்வது என்பது வேண்டுமென்றே செய்யக்கூடிய ஒரு நிகழ்ச்சியாக தமிழகத்திலே நடந்து வருவது வேதனைக்குரிய செயலாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னால் கூட, ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் சட்டசபையாளர்களைக் குறித்து எழுதியதைப் பற்றி, உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தோம். அதனுடைய தொடர்ச்சியாக இந்த வாரம் 'ஆனந்த விகடன்' என்ற பத்திரிகையிலே, அட்டைப் படத்திலே கேலிப் படம் வரைந்திருக்கிறார்கள். உங்களுடைய அனுமதியோடு நான் அதை வாசிக்கிறேன். அதிலே இரண்டு பேர் சமுதாய விரோதிகள் படத்தை முதல் பக்கத்திலே போட்டு விட்டு, கேலிச் சித்திரமாகப் போட்டுவிட்டு, சிரிப்பு என்ற பெயரிலே சில செய்திகளை வெளியிட்டிருக்கிறார்கள். மேடையிலே இருக்கின்ற இரண்டு பேரிலே யார் எம்.எல்.ஏ., யார் மந்திரி என்று ஒருவர் கேட்பது போலவும், அதற்குப்



பக்கத்திலே இருக்கின்ற இன்னொருவர் பதில் சொல்வது போல— ஜேப்படித் திருடனாக இருப்பவர் எம்.எல்.ஏ., முகமூடித் திருடனாக இருப்பவர் மந்திரி என்ற ஒரு கேலிச் சித்திரத்தைப் போட்டிருக்கிறார்கள். இதுமட்டுமல்ல. இந்தப் பத்திரிகையின் நடுப்பக்கத்திலே பார்ப்போமானால் சட்டசபையாளரை எந்த அளவுக்குத் தரம் குறைந்து சமுதாய விரோதிகளாகக் காட்ட முடியுமோ, அந்த அளவுக்கு இரண்டு கேலிச் சித்திரங்களை வரைந்து இருக்கிறார்கள். நான் அதற்குள்ளே போக விரும்ப வில்லை. பொதுவாகவே சில பத்திரிகைகளில் இந்த மாதிரிச் செய்திகள் வருகின்றன. அதை நாம் கண்டுகொள்வதில்லை. ஆனால் ஆனந்த விகடன் பத்திரிகைக்கு ஒரு பாரம்பரியம் உண்டு, ஒரு வரலாறு உண்டு. அமரர் வாசன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, நாடு அடிமைப்பட்டு இருந்த காலத்தி லிருந்து இன்று வரை மக்களுக்கு தரமான செய்திகளைக் கொடுப்பதோடு, நல்ல ஹாஸ்யமான துணுக்குகளை வெளியிட்டு ஆனந்த விகடனுக்கு நிகர் இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு இந்தப் பத்திரிகையினுடைய கடந்தகால வரலாறு இருந்தது. நான் இன்னுமொன்றைச் சொல்வேன். ஆனந்த விகடன் . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : போதும். அதற்கு மேலே வேண்டாம். இந்தப் பத்திரிகையைப் பற்றி சொல்லிவிட்டீர்கள். சில பத்திரிகைகள் விளம்பரத்திற்காக—இப்படி எழுதினால்தான் விளம்பரம் கிடைப்பது போலவும், இங்கே எழுப்பப்பட்டால் அவர்களுக்கு அதிக விளம்பரம் கிடைப்பது போலவும் வியாபாரத்தில் முன்னேறலாம் என்றும் அவர்கள் இந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். (கூச்சல்—குழப்பம்) அவர்களைப்பற்றி எழுப்புவதற்கு உங்கள் கையிலே ஒன்றும் இல்லை. ஆயுதம் உங்கள் கையிலே இல்லை. சட்டசபையில் தனியாக ஒரு இதழ் இருக்குமானால் அதைப் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலத்தில், இங்கிலாந்திலிருந்து வெளிவருகின்ற 'பஞ்ச்' பத்திரிகைக்கு இணையாகக்கூட ஒரு நேரத்திலே ஆனந்த விகடனை நான் நினைப்பதுண்டு. பத்திரிகையாளர் கையிலே இப்படி ஒரு வலுவான ஆயுதம் இருக்கிறது என்பதற்காக

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மார்ச் 28

கேவலப்படுத்துவது முறையாக இருக்குமா? ஆகவே நான் உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன். இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும்.

Mr. SPEAKER : I condemn that publication.

It is brought to my notice by some sections of the House regarding the publication on the front cover page of 'Ananda Vikatan', carrying a defamatory statement, which I do not want to mention here—and which was aimed and calculated to damage the reputation of the Members of the House in general and more so the Ministers in particular.

A man's reputation is a man's property and under the guise of freedom of press, one would expect to preserve and promote the freedom of citizen first and then talk about democracy. Under the guise of democracy, it is not the duty of the press to damage the reputation of the M.L.As. and the Ministers in general and to push and promote the sales in the market. They have stooped to the low level of injuring the reputation of M.L.As.

I demand on behalf of the Members of the House and order 'Ananda Vikatan' to publish in the front page their apology for this publication failing which summary sentence will be passed by the House itself. (Cheers).

Our defamatory laws are not so stringent and hence this irresponsible gutter publication. Writers and Editors know that with a protracted and prolonged trial, one would not normally resort to legal remedy in a Court of Law.

I appeal to the journals with good heritage — a long heritage — to condemn this irresponsible publication to preserve the freedom of the Members.

I also come to know about some recently-started gutter yellow journals, publications. Their aim is only to mar the reputation of M.L.As. in the eyes of the public and thereby cause irreparable damage to democracy itself. I mention and warn these irresponsible press that the Legislature is a Court of Record and it will take cognizance in future such publications and deal with them straight-away to prevent such gutter publications.



1987 மார்ச் 28] [Mr. Speaker.]

I would like to mention at this juncture that one journalist in Tamil Nadu was sentenced to undergo three months imprisonment by the Supreme Court and was also ordered to go to every Judge's house and apologise before entering the jail to serve the sentence. I request these to be construed as precedents and followed as precedents.

Nobody has a right to mar the reputation of M.L.As. and Ministers. I would like to mention that the recently-started certain weeklies and magazines are prone to these libellous gutter publications and tend to lower the reputation of the Dailies and Journals with long heritage like 'Ananda Vikatan'. That is all.

### 3. கவன ஈர்ப்பு

### (அ) பாலக்கோடு மருத்துவமனைக் கட்டிடத்தைப் பழுதுபார்த்தல்.

**திரு. ப. தீர்த்தராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடு தொகுதி, பாலக்கோட்டி லுள்ள அரசு மருத்துவமனை, சுகாதாரக் கேடுகளுடனும், பழுதடைந்த நிலையிலும் உள்ளதால் பொது மக்கள் சுகாதார வசதி பெற முடியாத நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அரசு மருத்துவமனை பழைய கட்டிடத்தில் இயங்கினாலும், எவ்வித சுகாதாரக் குறையுமின்றி இயங்கிவருகிறது. இம்மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளுக்குத் தேவைப்படும் மருந்துகள் போதுமான

[திரு. ப. உ. சண்முகம்] [1987 மார்ச் 28

அளவில் இருப்பில் உள்ளன. அனைத்துப் பணியாளர்களும் பணியிலுள்ளனர். அங்கு 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மட்டும் சிகிச்சை பெற்றோர் விபரம் வருமாறு :—

| | |
|---|---|
| (1) வெளிநோயாளிகள் | 4124 |
| (2) உள்நோயாளிகள் | 272 |
| (3) மெடிகோலீகல் | 40 |
| (4) பிணப்பரிசோதனை எண்ணிக்கை | 30 |
| (5) பெரிய அறுவை சிகிச்சை | 2 |
| (6) சிறிய அறுவை சிகிச்சை | 20 |
| (7) மகப்பேறு எண்ணிக்கை | 24 |

எனவே பாலக்கோடு அரசு மருத்துவமனை நல்லமுறையில் இயங்கிவருகிறது. பழைய கட்டிடத்தில் சில பழுதுகள் உள்ளன. அப்பழுதுகளைக் களைய ரூ. 64,000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் வசம் சிறு வேலைத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதி தீர்ந்துவிட்டதால் இம்மதிப்பீடுகளை அரசின் ஒப்புதல் பெறவேண்டி அனுப்பப்பட்டுள்ளது. உறுப்பினர் குறிப்பிட்டது போலல்லாமல் பொதுமக்களுக்கு தேவைப்பட்ட மருத்துவவசதி, இன்னல் எதும் இன்றி, இம்மருத்துவமனையில் அளிக்கப்பட்டு வருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. ப. தீர்த்தராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே உண்மைக்குப் புறம்பான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். உதாரணமாக, அங்கே பிணப் பரிசோதனை எண்ணிக்கை இந்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மட்டும் 30 என்று கூட தவறான தகவலைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல்தான் இந்த அறிக்கையும் இருந்து கொண்டிருக்கிறது. 1985—பட்ஜெட் கூட்டத் தொடரில் இந்த கவன ஈர்ப்பை நான் கொடுத்திருந்தேன். 1985 ஆம் ஆண்டு கூட்டத்தொடரில் இதே கவன ஈர்ப்பைக் கொடுத்தபோது, அன்று மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு டாக்டர் ஹண்டே அவர்கள் அதற்கு பதில் அளிக்கும்போது பொதுப்பணித் துறையின் மூலமாக ரூபாய் 75,000 ஒதுக்கீடு



1987 மார்ச் 28] [திரு. ப. தீர்த்தராமன்]

செய்யப்பட்டு, அந்தக் கட்டிடத்தைப் பழுது பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள். இரண்டாண்டுகள் ஆகியும் அது செய்யப்படவில்லை. பன்னெடுங்காலத்திற்கு முன்பாகக் கட்டப்பட்ட அக்கட்டிடம் பழுதடைந்து மிகவும் மோசமான சூழ்நிலையில் இருக்கிறது. கழிவறை மிக மோசமாக இருக்கிறது. சாக்கடை நீர் வெளியேறாமல் மிகவும் நாற்றம் அடிக்கிற நிலையிலே அந்த இடம் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால், அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு வருகிறேன். அதை மறுபரிசீலனை செய்து, நல்ல கட்டிடமாக அதைச் சீர்படுத்திட முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, அந்த மருத்துவமனைக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு தயார் நிலையிலே வைக்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு அதனை எடுத்து ஒரு நல்ல கட்டிடம் கட்டித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை அரசு அறியும். பழுதுபட்டிருக்கிற கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கு இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

## (ஆ) அனுமதியின்றித் தொடங்கப்பட்ட கிள்ளியூர் அன்னை வேளாங்கன்னி கல்லூரி மாணவர்கள் பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ், திருவாளர்கள் மா. சுந்தரதாஸ், எஸ். ரெத்தினராஜ், ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர், அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு வட்டம், கிள்ளியூர் பகுதியில், 1986 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அன்னை வேளாங்கன்னி கல்லூரியில் பயிலும் மாணவர்கள் 121 பேர் தேர்வு எழுத முடியாது பாதிக்கப்பட்டிருக்கும் நிலை

குறித்து [illegible] பொது மக்களுக்கும் [illegible] மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கையை வைக்கிறேன்.

## அறிக்கை.

சொந்த நிதிக் கல்லூரிகள் [illegible] குறித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் [illegible] அறக்கட்டளை ஏற்படுத்த வேண்டும் என்பதும் — ஆண்கள் கல்லூரியாக இருப்பின் [illegible] புறங்களில் 40 ஏக்கர் நிலமும் நகர்ப்புறங்களில் 15 ஏக்கர் நிலமும் [illegible] மகளிர் கல்லூரியாக இருப்பின் நகர்ப்புறங்களில் 10 ஏக்கர் நிலமும் கிராமப் புறங்களில் 30 ஏக்கர் நிலமும் [illegible] என்பதும் இரண்டு முக்கியமான நிபந்தனைகள். [illegible] மாணவர்களின் சேர்க்கை, பல்கலைக்கழகம் அனுமதி வழங்கும் பாடப் பிரிவுகள் பற்றியே அமைய வேண்டும் என்பதும் மாணவர்களுக்கு கட்டணச் சலுகைகள் வழங்குவது குறித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பிப்ரவரி 1986-ல் 'கோட்டூர் நண்பர்கள்' என்ற கல்வி நிறுவனத்திடமிருந்து "அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரி" என்ற பெயரில் கல்லூரி தொடங்க முறையான விண்ணப்பம், கட்டணத்துடன் பெறப்பட்டது. அரசு விதித்துள்ள நிபந்தனைகளை இந்நிறுவனம் நிறைவு செய்திருந்தால், தேவையிருப்பின் அரசின் அனுமதிக்கு கருத்துரு அனுப்புமாறு கல்லூரிக் கல்வி இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இக்கல்வி நிறுவனம் நிறைவு செய்ய வேண்டிய நிபந்தனைகள் குறித்து கல்லூரிக் கல்வி இயக்குநர் தனது 17—12—1986 மற்றும் 19—1—1987 நாளிட்ட கடிதங்களில் [illegible] விபரங்கள் அனுப்பியிருந்தார். ஆனால் இந்நிறுவனம் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்து விட்டதா என்பது குறித்து இயக்குநரது கருத்தும், மேலும் நிறுவனம் உரிமையாகப்





பெற்றுள்ள நிலங்களின் [illegible] கிலோமீட்டர் [illegible] முதல் 1½ கிலோமீட்டர் தூரம் இடைவெளியுள்ளது என்பது குறித்த கருத்தும் கேட்கப்பட்டது.

இந்நிறுவனம் அறக்கட்டளை, நிலம் ஆகிய நிபந்தனைகளை முறையே பூர்த்தி செய்துள்ளதாகவும், நிலங்கள் இரு பகுதிகளாக இருப்பதால், ஒரு பகுதியை கல்லூரிக் கட்டடத்திற்கும் மறு பகுதியை மாணவர் விடுதிக்கும் பயன்படுத்தலாம் எனவும் கல்லூரிக் கல்வி இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார். இக்கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையிலுள்ளது.

திருநெல்வேலி மண்டலக் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநர் முன்பே இக்கல்வி நிறுவனத்திற்குக் கீழ்க்கண்ட விபரங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார்:—

(1) விதிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்தால்தான் புதிய கல்லூரி தொடங்குவதற்கான விண்ணப்பத்தினைப் பரிசீலனை செய்ய இயலும்.

(2) கல்லூரி ஆரம்பிக்க அரசின் அனுமதியின்றி மாணவர்களைச் சேர்த்து கல்விக் கட்டணம் பரீட்சைக் கட்டணம் ஆகியவை வாங்குவது தவறு என்று சுட்டிக் காட்டப்படுவதோடு, மாணவர்களுக்கு இதனால் ஏற்படும் பாதிப்புகளுக்கும் நிர்வாகத்தினர் தான் பொறுப்பாகும்.

அரசின் அனுமதியின்றியும் பல்கலைக்கழகத்தின் இணைவு பெறாமலும், கல்லூரியைத் தொடங்கி மாணவர்களைச் சேர்த்து அவர்களை அவதிக்கு உள்ளாக்கியிருப்பதற்கான முழுப் பொறுப்பும் நிர்வாகத்தையே சாரும்.

**டாக்டர் கே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரிகள் துவக்குவது பற்றி விவ[illegible] சில நிபந்தனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அறிக்கையிலே ஆண்கள் கல்லூரியாக இருந்தால் 40 ஏக்கர் நிலமும் [illegible] இலட்ச ரூபாயும் டெபாசிட் செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது 40 [illegible]. இந்த நிர்வாகம் ஒரே சேரியில் [illegible] ஏக்கர் நிலத்தையும், 5 இலட்சம் ரூபாயையும் கட்டியிருக்கிறது. [illegible] நேர்ச்சி பெறவேண்டுமென்ற காரணத்துக்காக மாணவர்கள் சேர்ந்து இருக்கிறார்கள். அதை அரசு [illegible] அங்கே 121 மாணவர்கள் சேர்ந்து இருக்கிறார்கள்.

அறியுமா? அங்கே மாணவர்கள் பர்ஸ்ட் செமஸ்டர் எக்ஸாமினேஷனை இன்னும் எழுதவில்லை. மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தினுடைய செகண்டு செமஸ்டர் எக்ஸாமினேஷன் 9 ஆம் தேதி வருகிறது. ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மாணவர்களுடைய நலனைக் கருதி அவர்கள் தேர்வு எழுதுவதற்கு ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியைப் பொறுத்தவரைக்கும் அரசினுடைய முன் அனுமதியைப் பெறாமல், பல்கலைக்கழகத்தினுடைய இணைவு பற்றிய அனுமதியையும் பெறாமல் துவக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல், செல்ப்-பைனான்சிங் கல்லூரிகளைப் பொறுத்தவரைக்கும் 10 நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. அந்த 10 நிபந்தனைகளில் 9 நிபந்தனைகளை அந்தக் கல்லூரி நிறைவேற்றாமல் இருந்தது. அதை நிறைவேற்றிய பிறகுதான் அதற்கு அனுமதி வழங்கப்படும் என்று அதற்கு தாக்கீது அனுப்பப்பட்டது. அவற்றில் சிலவற்றை நிறைவேற்றி இருக்கிறார்கள். இன்னும் சிலவற்றை நிறைவேற்றவேண்டி இருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்து வருகிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, லிவா அறிக்கையிலே கிராமப்புறங்களிலுள்ள கல்லூரிகளுக்கு 40 ஏக்கரும், நகர்ப்புறங்களில் 15 ஏக்கரும் இருக்க வேண்டுமென்று ஒரு கண்டிஷன் வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது, கன்னியாகுமரி மாவட்டத்திலே நிலத்தினுடைய விலை அதிகமாக இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே அங்குமட்டும் 40 ஏக்கர் நிலம் வேண்டுமென்ற அந்த நிபந்தனையைத் தளர்த்துவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா? மேலும் இப்படி கல்லூரிகள் துவங்கப்பட்டு மாணவர்கள் 1 வருடம் படித்ததற்குப் பிறகு அவர்கள் பரீட்சை எழுதமுடியாத ஒரு நிலையை ஏற்படுத்துவதைவிட, கல்லூரிகளிலே மாணவர்களை அட்மிட் செய்து அவர்களுக்குப் பாடம் கற்பிப்பதற்கு முன்னாலேயே இப்படிப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ததற்குப் பிறகுதான் மாணவர்களை அட்மிட் செய்யவேண்டு





மென்று தெரிவித்து அப்படிப்பட்ட ஒரு கஷ்டமான நிலை மாணவர்களுக்கு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நேரங்களில், சில அமைப்புகள் வியாபார நோக்கத்தோடு இதுபோன்ற கல்லூரிகளைத் துவக்கி விடுகிறார்கள். உண்மையிலேயே மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கவேண்டுமென்பது அவர்களுடைய நோக்கமாக இருக்குமேயானால் நிபந்தனைகளையெல்லாம் பூர்த்தி செய்து அரசினுடைய அனுமதியையும் பெற்று, பல்கலைக்கழகத்தினுடைய அனுமதியையும் பெற்றுத்தான் அவர்கள் கல்லூரியைத் துவக்கவேண்டும். எப்படியும் துவக்கிவிடலாம் என்று சொல்லி மாணவர்களைச் சேர்த்து, அவர்களுடைய வாழ்வையும் பாழாக்கக்கூடிய இந்த அணுகுமுறையை சில நிறுவனங்கள் கடைப்பிடித்துவருவது, வருத்தத்திற்குரியது, கண்டிக்கத்தக்கது. அதைக் கண்டிக்கிறோம். இதுபற்றித் தெளிவாக பத்திரிகையிலேகூட விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. அரசு அனுமதி இல்லாது பல்கலைக்கழகத்தினுடைய அனுமதி இல்லாது துவக்கப்பட்ட கல்லூரிகளில் மாணவர்கள் சேரக்கூடாது எனத் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இடத்தைப் பொறுத்தவரைக்கும் ஒரு கல்லூரிக்கு இவ்வளவு ஏக்கர் நிலம் கட்டாயம் தேவை என்பது பல்கலைக்கழகத்தால் முடிவு செய்யப்பட்டு அந்த முடிவுக்கு ஏற்ப அது நடைமுறையில் இருந்து வருகிறது. நிலத்தினுடைய விலை சில இடங்களில் அதிகமாக இருக்கிற காரணத்தால் அதைச் சுருக்கவேண்டுமென்பது சரியாக இருக்காது. அதுவும் கலைக் கல்லூரி போன்ற கல்லூரிகள் துவக்கப்படக்கூடாது என்பது இந்த நாட்டிலே பரவலாக இருந்து வருகிற ஒரு கருத்து. Arts education has outlived its utility என்பதுதான் கருத்து. இந்த நிலையில் இதையெல்லாம் கருத்தில் கொண்டு அரசு இதைப் பரிசீலித்து வருகிறது.

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோட்டாறு நண்பர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற அன்னை வேளாங்கன்னி கல்லூரி, அரசு விதித்த அனைத்து நிபந்தனைகளையும் நிறைவேற்றிவிட்ட பிறகுகூட முதல் செமஸ்டர் தேர்வு எழுத மாணவர்களுக்கு அனுமதி

கொடுக்கவில்லை. இந்த நிலைமையில் வருகிற 9-ஆம் தேதி இரண்டாவது செமஸ்டர் பரிட்சை ஆரம்பமாக இருக்கிறது. எனவே அந்த மாணவர்களின் நலன் கருதியாவது இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமாவது பரிட்சை எழுத அனுமதி கொடுக்க அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்வதோடு—இனி கல்லூரிக்கு அனுமதி கொடுத்த பிறகுதான் புதிய மாணவர்களைச் சேர்க்க வேண்டும் என்று அரசு ஒரு நிலையை எடுத்தாலுங்கூட—இந்த ஆண்டு சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிற மாணவர்களைப் பொறுத்தவரையில் 2வது செமஸ்டர் பரிட்சை எழுத அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னிச்சையாக மாணவர்களுக்கு இன்னல் தருகிற முறையில் அந்தக் கல்லூரி நடந்திருக்கிறது. நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படவில்லை. பூர்த்தி செய்யப்பட்ட பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

**(இ) மணப்பாறை வட்டத்தில் கால்நடைகள் நோயால் பாதிப்பு.**

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "மணப்பாறை வட்டத்தில், குறிப்பாக மருங்காபுரி தொகுதியில், கால்நடைகளுக்கு திடீரென்று தொண்டை அடைப்பான் வியாதி ஏற்பட்டு 1,000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்துவிட்டதால் பாதிக்கப்பட்ட கால்நடை உரிமையாளர்களைக் குறித்து" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு [illegible], மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:—

### அறிக்கை.

திருச்சி மாவட்டம், மருங்காபுரி பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த சீகம்பட்டி கிராமத்தில் 21—2—1987 அன்று கால்நடைகளுக்கு நோய் கண்டிருப்பதாக அறிந்து, அன்றைய தினமே நோய் புலனாய்வு மேற்கொண்டு, சப்பை நோயினால் கால்நடை





கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கண்டறிந்து அந்த கிராமங்களிலுள்ள 310 கால்நடைகளில் 306 கால்நடைகளுக்கு மறுநாள் 22—2—1987 அன்று சப்பை நோய் தடுப்பூசி போடப்பட்டது. இந்த நோய் கிளர்ச்சியில் 8 கால்நடைகள் பாதிக்கப்பட்டு அவற்றில் 7 மரணம் அடைந்தன. சீகம்பட்டியைச் சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சீகம்பட்டி கிராமம் சப்பை நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் பகுதி என்று கண்டறிந்து, இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்து 8,331 கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. எனினும் செப்டம்பர் 1986 முதல் இந்த வருடத்தில் ஆறு நோய் கிளர்ச்சிகள் கண்டு 9 கால்நடைகள் மரணம் அடைந்துள்ளதாகத் தெரிகிறது. ஆகமொத்தம் இந்த வருடத்தில் (1986-87-ல்) நோய் கிளர்ச்சிகள் கண்டு மரணம் அடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை 16 ஆகும் (9 7).

2. தற்போது இந்நோய் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் சீகம்பட்டி பகுதியில் இப்படிப்பட்ட நோய் கிளர்ச்சி ஏற்பட்டு கால்நடைகள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் ஆரம்பத்திலேயே கால்நடைத் துறை அதிகாரிகளிடத்தில் புகார் கொடுத்தோம். மருங்காபுரி ஒன்றியத்தில் உள்ள முத்தால்வார்பட்டி என்கிற ஊராட்சி மன்றப் பகுதியில் சுமார் 200 கால்நடைகள் இறந்த பிறகுதான் புகார் கொடுத்தோம். அதற்குப் பிறகு அதிகாரிகள் வந்து, பார்வையிட்டு சிறப்பாகப் பணியைச் செய்தார்கள். அப்போது அவர்கள் சொன்னது— "கால்நடைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அடிப்படையான மருந்துகளை—தொண்டை அடைப்பான் போன்ற வியாதிகளுக்கான மருந்துகளை—கையிருப்பில் வைத்துக் கொள்வதற்கான வசதிகள் இல்லை" என்றார்கள். மணப்பாறை ஒன்றியத்தில் கோழிகள் மிகவும் அதிகமாகச் செத்துக் கொண்டிருக்கின்றன. இதற்குத் தேவையான மருந்துகளைக்கூட போதுமான அளவுக்கு கையிருப்பில் வைத்துக் கொள்ள வசதியில்லை என்று சொன்னார்கள். எனவே கால்நடைகள் என்பது

[திரு. க. சோலைராசு] [1987 மார்ச் 28

சாதாரணமாகத் தோன்றினாலும்கூட அவைகள் எல்லாம் விவசாயிகளுக்கு ஒரு மிகப் பெரிய சக்தியாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே இவைகளுக்குத் தேவையான மருந்துகளை மொத்தமாக வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுமா என்று கேட்டுக் கொள்வதுடன் கால்நடைகளுக்கு இன்சூரன்ஸ் செய்கிற திட்டம் ஒன்று இருக்கிறது. கால்நடைத் துறையில் பணியாற்றக்கூடியவர்கள் விவசாயிகள் மத்தியில் அதிகமாகப் பழகுகிற தன்மை இருக்கிற காரணத்தால் கால்நடைக்கான இன்சூரன்ஸ் திட்டத்தையும் கால்நடைத் துறை அதிகாரிகள் மூலமாகவே, அரசு, விவசாயிகளிடத்தில் பரப்ப முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடைகள் மற்றும் கோழிகள் ஆகியவற்றிற்குத் தேவையான தடுப்பு ஊசி மருந்துகளை போதிய அளவு தயாரிக்கவும், அவைகளை இருப்பில் வைத்துக் கொள்வதற்கு தற்போது வசதி இல்லை என்ற குறையைப் போக்கவும் நடவடிக்கை எடுக்க உத்தரவிடப்படும்.

## (ஈ) திருவொற்றியூரில் விஷச் சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட இறப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் ஜி. கே. ஜெ. பாரதி மற்றும் சா. ஜெயச்சந்திரன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருவொற்றியூரில் கடந்த மாதம் கள்ளச் சாராய விபத்தில் 30 பேர்கள் உயிர் இழந்ததினால் அவர்கள் குடும்பம் அவதிப்படும் நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1987 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருவொற்றியூரில் 1987 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 24 மற்றும் 25 ஆகிய நாட்களில் விஷச் சாராயம் சாப்பிட்டதின் விளைவாக 9 ஆண்கள் இறந்தனர். இறந்து போன 9 பேர்களும் திருவொற்றியூரைச் சேர்ந்த கூலி வேலை செய்து பிழைப்பவர்கள். இவ்விஷச் சாராயம் சாப்பிட்டதின் விளைவாக மேலும் 40 நபர்கள் பார்வை மங்கல், வயிற்று எரிச்சல் மற்றும் வயிற்று வலி ஆகியவற்றுக்காக அரசாங்க மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின்னர் அனுப்பப்பட்டனர்.

இறந்தவர்களின் விபரங்கள் பின்வருமாறு :

| | பெயர் | வயது | இறந்த தேதி | இறந்த இடம் |
|---|---|---|---|---|
| 1. | சாந்தகுமார் | 23 | 25.1.87 | ஸ்டான்லி மருத்துவமனை |
| 2. | யுவராஜ் | 35 | 26.1.87 | ஸ்டான்லி மருத்துவமனை |
| 3. | வெங்கடேஸ்வரலு | 25 | 26.1.87 | ஸ்டான்லி மருத்துவமனை |
| 4. | செல்வராஜ் | 30 | 26.1.87 | பொது மருத்துவமனை |
| 5. | நடராஜன் | 25 | 26.1.87 | ஸ்டான்லி மருத்துவமனை |
| 6. | ராதா | 46 | 27.1.87 | துறைமுக மருத்துவமனை |
| 7. | பலராமன் | 47 | 27.1.87 | ஸ்டான்லி மருத்துவமனை |
| 8. | சுவாமிநாதன் | 50 | 27.1.87 | ஸ்டான்லி மருத்துவமனை |
| 9. | அண்ணாமலை | 45 | 27.1.87 | கீழ்ப்பாக்கம் மருத்துவமனை |

2. இச்சம்பவம் குறித்து ஒன்பது வழக்குகள் திருவொற்றியூர் காவல் துறையினரால் பதிவு செய்யப்பட்டு 9 நபர்கள் கைது செய்யப்பட்டு தற்போது நீதிமன்றக் காவலில் இருக்கின்றனர். இவர்களைத் தவிர திருவொற்றியூரைச் சார்ந்த குருத்து முனுசாமி என்பவர் நீதிமன்றத்தில் சரண் அடைந்து அவரும் நீதிமன்றக்

காவலில் வைக்கப்பட்டுள்ளார். அதே ஊரைச் சேர்ந்த குள்ள முனுசாமி என்ற நபர் மட்டும் தலைமறைவாக உள்ளார். அவரைக் கைது செய்வதற்காக தீவிர முயற்சிகள் எடுக்கப் பட்டுள்ளன. குற்றவாளிகளில் ஒருவரான திரு. தாஸ் நாடார் என்பவர் 2—1—1987 ஆம் தேதி 200 லிட்டர் மிதைல் ஆல்கஹாலை ரூபாய் ஆயிரத்திற்கு வாங்கி அதனை கள்ளச் சாராயம் விற்கும் நபர்களுக்கு, கள்ளச் சாராயத்தில் அதனைக் கலந்தால் ஏற்படும் தீவிர விளைவுகளைப் பொருட்படுத்தாமல் விற்றுள்ளார். மற்றொரு குற்றவாளி திரு. குருக்கா முனுசாமி என்பவர் தன் கூட்டாளிகளுடன் சேர்ந்து கள்ளச் சாராயத்துடன் விஷத் திரவமான மிதைல் ஆல்கஹாலினைக் கலந்து கள்ளச் சாராயம் குடிக்க வந்தவர்களுக்கு ஜனவரி 24, 25 ஆகிய தேதிகளில் திருவொற்றியூரில் விற்றார். அதனை வாங்கிக் குடித்தவர்களில் பலருக்கு அதைக் குடித்ததினால் கண் பார்வை மங்கிவிட்டது, வயிற்று வலியும், வயிற்று எரிச்சலும் ஏற்பட்டது என்று முறையிட்டுள்ளனர். இவ்வழக்குகள் சம்பந்தமாக 30 லிட்டர் விஷச் சாராயம் கொண்ட கேன்கள் 5 மற்றும் மெட்டாடர் வேன் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன. விஷச் சாராயத்தின் மாதிரிகள் நீதிமன்றம் மூலமாக பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் இறந்தவர்களின் வயிற்றிலிருந்து எடுக்கப்பட்ட திரவங்கள் ரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப் பட்டுள்ளன. குற்றவாளிகளின் சார்பாக கொடுக்கப்பட்ட ஜாமீன் மனுக்கள் செங்கல்பட்டு மாவட்ட நீதிபதியினால் தள்ளுபடி செய்யப்பட்டன. மேலும் குற்றவாளிகள் மூன்று பேர் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஜாமீன் மனுக்களையும் சென்னை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இவ்வழக்குகள் குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு தீவிர விசாரணையில் உள்ளன. விசாரணை முடிந்தவுடன் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

3 சட்டமன்ற உறுப்பினர் கூறியுள்ளதுபோல கள்ளச் சாராயம் அருந்தி திருவொற்றியூரில் இறந்தவர்கள் 30 பேர்கள் அல்ல. இறந்தவர்களின் எண்ணிக்கை 9 தான். இறந்தவர்களின் குடும்பங்களின் சார்பாக, நிவாரணம் கோரி அரசால் எந்தவித விண்ணப்பமும் இதுநாள் வரை பெறப்படவில்லை. எனினும்,



இறந்தவர்களின் குடும்ப நிலை பற்றி ஒரு விவரமான அறிக்கையை அரசுக்கு அனுப்பும்படி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு துணை நாயகர் அவர்களே, விவர அறிக்கையில் இந்த விடத்தில் 9 பேர்கள் மட்டும்தான் இறந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இறந்தவர்களின் சடலங்களைப் பார்த்தவன் நான். அந்த முறையில் சொல்லுகிறேன். 30 பேருக்கும் மேலாகத்தான் இறந்திருக்கிறார்கள். எனவே முறையான எண்ணிக்கையைச் சொல்ல முடியாது. இறந்தவர்களின் வீட்டில் கேட்கிறபோது அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் "எல்லோரும் தொழிற்சாலையில் வேலை செய்கிறார்கள். எனவே அவர்களின் பெயரைக் கொடுத்தால் அவர்களுக்குச் சேர வேண்டிய பணம் வராது என்ற அச்சத்தின் காரணமாகச் சொல்லவில்லை" என்றார்கள். மேலும் இறந்தவர்களின் குடும்பத்திற்கு நிவாரணம் யாரும் கேட்கவில்லை என்று குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. விபத்து நடந்த அன்றே தமிழகத்தினுடைய தலைமை அமைச்சரின் உதவியாளரிடம் விண்ணப்பம் கொடுத்திருக்கிறோம். அந்த விண்ணப்பத்தில் நிவாரணம் கேட்டிருக்கிறோம். அந்த விபத்தில் இறந்தவர்கள் எல்லாம் மிகவும் ஏழைகள்—குறிப்பாக ஹரிஜன மக்கள். எனவே அவர்களுக்கு அரசு நிவாரணம் அளிக்குமா என்று கேட்க விரும்புவதோடு, விவர அறிக்கையில் 40 பேருக்கு கண் பார்வை மங்கல் ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அது சரியல்ல. 100 பேருக்கு மேல் கண்ணை இழந்திருக்கிறார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி யாகக் கேளுங்கள்.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: தாங்கள் தமிழ் அறிந்தவர்கள். அவர்களுடைய வாழ்வுக்காக கேள்விதான் கேட்கிறேன். அந்த விபத்தையொட்டி ஏதாவது நிவாரணம் வழங்கப்படுமா? மாவட்ட ஆட்சித் தலைவர் நிவாரணம் பார்வையிட்ட கொடுக்கப்படுமென்று தெரிவித்தார்கள். ஆனால் அவர்களும் கொடுக்கவில்லை. அரசும் மாவட்ட ஆட்சித் தலைவரைக்

கேட்டிருப்பதாக அறிக்கையில் சொல்லியிருக்கிறது. இதிலே எது உண்மை என்று புரியவில்லை. ஆகவே அவர்களுக்கு அரசு நிவாரணம் அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ப்ரொஹிபிஷன்' தடுப்பு சிறப்பு இலாக்கா மூலம் மாதம் ஒன்றுக்கு பத்தாயிரம் பேர் கைது செய்யப்படுகிறார்கள். பல பேர் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகிறார்கள். ஆண்களும் கொண்டு வரப் படுகிறார்கள், பெண்களும் கொண்டு வரப்படுகிறார்கள். இதை விஷம் என்று அறிந்தே சாப்பிட்டிருக்கிறார்கள். இறந்தவர்கள் 9 பேர் என்பதை மருத்துவமனை சான்றிதழின் அடிப்படையிலும், உள்ளூரில் உள்ள மணியக்காரர் அளித்த சான்றிதழின் அடிப்படையிலும், பரிசோதனை நடத்தியபோது அளித்த "Inquest report"-ன் அடிப்படையிலும்தான் சொல்லுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் 30 பேர் என்று சொல்லுகிறார். பத்திரிகையில் அந்தச் செய்தி வந்தபோதே அதற்கு மறுப்பு கொடுத்திருக்கிறோம். 30 பேர் இறக்கவில்லை என்பதை உறுதியாகச் சொல்லிக் கொண்டு, 9 பேர்தான் இறந்தார்கள்— அவர்கள் ஏழைகள் என்று தெரிவித்துக் கொண்டு, இறந்தவர்களுக்கு பணம் கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பது கொள்கை முடிவு; அதைப் பற்றி பிறகுதான் அரசு முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது இதுபோல கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்கிறவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வருவதாகக் குறிப்பிட்டார்கள். திருவொற்றியூரில் கள்ளச் சாராயம், விஷச் சாராயம் குடித்து இறந்தவர்களை நானும் போய்ப் பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 9 பேர் இறந்தார்கள் என்று சொன்னார்கள். 9 பேருக்கு மேல் இறந்திருக்கிறார்கள். அதிலே அதிகபட்சமாக ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். சில பேர் தொழிலாளர்களாக இருந்தார்கள், தொழிலாளர் அல்லாதவர்களும் இருந்தார்கள். அதுமட்டுமல்லாமல்





அவர்களிடத்திலேயிருந்து நிவாரணம் கோரும் மனுக்களை வாங்கி நேரிடையாகக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் ஏழ்மை நிலைமையில் உள்ள குடும்பங்கள் என்பதாலும் அவர்களுக்கு தனிக் கவனம் செலுத்தி தனிச் சலுகையாக நிவாரணம் கொடுக்க வேண்டுகிறேன்.

அதுமட்டுமல்லாமல் தமிழகத்திலே பல ஊர்களில் கள்ளச் சாராயம் தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதைத் தடுக்க தனி காவல் படை இருந்தும் கூட சரியான முறையில் நடவடிக்கை எடுப்பது கிடையாது. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் எப்படி தடுக்கப்படுகிறது, எப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்பதைப் பற்றி தனியாக இந்த அவை விவாதிக்கலாம். அதற்கு நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். தினமும் 'ரெய்ட்' நடத்தப்பட்டு பல ஆண்களும், ஆயிரக்கணக்கான பெண்களும் கைது செய்யப்படுகிறார்கள். குண்டர்கள் சட்டத்தின் கீழ் பலர் கைது செய்யப்படுகிறார்கள். உள்ளே போன பிறகும் இது தொடர்ந்து நடக்கிறது. போதுமான போலீஸ், வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

**(உ) கொள்ளிடம் ஒன்றிய கிழக்குப் பகுதியில் நீர் இல்லாததால் "குள்ளக்கார்" பயிர்கள் பாதிப்பு.**

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டத்தின் கடைகோடிப் பகுதியான சீர்காழி வட்டம் கொள்ளிடம் ஒன்றியத்தில் கிழக்குப் பகுதியில், சுமார் 50,000 எக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப் பட்டு தண்ணீர் இல்லாமல் வாடிக் கிடக்கும் 'குள்ளக்கார்' பயிரைச் சாகுபடி செய்த விவசாயிகளின் துயர் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

### அறிக்கை

குள்ளக்கார் பயிர் தஞ்சை மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை பாசனம் செய்யப்படுகிறது. அதன் விவரங்கள் வருமாறு :

**தஞ்சை மாவட்டம்**

| | |
|---|---|
| தெற்கு ராஜன் வாய்க்கால் | 1750 ஏக்கர்கள் |
| புது மன்னியார் | 1750 ,, |
| | 3500 ,, |

**தென்னாற்காடு மாவட்டம்**

| | |
|---|---|
| கொள்ளிடம் வடக்கு ராஜன் வாய்க்கால் | 500 ,, |
| கவரப்பேட்டை வாய்க்கால் | 500 ,, |
| வீராணம் ஏரி | 1150 ,, |
| கான்சாஹிப் கால்வாய் | 4000 ,, |
| | 6150 ,, |

இந்த ஆண்டு மேட்டூர் நீர்த் தேக்கத்தில் நீரினளவு மிகவும் குறைவாக இருந்ததால் இவ்வாண்டு குள்ளக்கார் பயிரை சாகுபடி செய்ய வேண்டாம் என்று ஏற்கனவே அறிவிப்பு செய்யப் பட்டுள்ளது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் போதிய நீரில்லாத காரணத்தினால் இந்த குள்ளக்கார் பயிர்களுக்கு நீரளிப்பது இயலாத காரியம்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே, சீர்காழி தாலுக்காவில் 3,500 ஏக்கர் நிலத்தில் குள்ளக்கார் பயிர் செய்திருப்பதாகவும் சிதம்பரம் தாலுக்காவில் 6,150 ஏக்கர் நிலத்தில் குள்ளக்கார் பயிர் செய்திருப்பதாகவும், ஆக மொத்தம் 9,650 ஏக்கரில் குள்ளக்கார் இருந்ததாகவும், மேட்டூரில் தண்ணீர் இல்லாததால் அதை சாகுபடி செய்ய வேண்டாம் என்று



விவசாயிகள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் குள்ளக்கார் சாகுபடி என்பது ஜனவரி மாதத்தில் மேட்டூர் பகுதியில் சாகுபடி முடிந்த பிறகு, அந்த மேட்டூரில் உபரியாகவுள்ள தண்ணீரை கல்லணையில் தேக்கி வைத்து ஜனவரியில் விதை விதைத்து மே மாதத்தில் அறுவடை செய்யக்கூடிய வழக்கம். இது காவிரி ஒப்பந்தத் தோடு சொந்த ஒப்பந்தமாகும். காரணம், காவிரி தண்ணீர் கடைகோடிப் பகுதியாக உள்ள பகுதியிலே சரிவர வராத காரணத்தால் அந்தப் பகுதி மக்கள் பின்னாலே சாகுபடி செய்யலாம் என்பதும் அதற்குப் போதுமான தண்ணீரை கல்லணையில் தேக்கி வைத்துக் கொடுக்க வேண்டும் என்பதும் நீர்ப் பாசனத் துறையில் நீண்ட நாட்களாக இருந்து வந்த வாடிக்கையான வழக்கம். ஆகவே அப்படிச் செய்வதற்கு அதிகாரிகள் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. இனிமேலாவது தொடர்ந்து அந்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், அது முடியவில்லை என்றால் 1972-ல் கொள்ளிடத்தில் ராட்சஸ இயந்திரங்களை வைத்து தண்ணீரை இறைத்து விவசாயிகளுக்குக் கொடுத்த அந்தத் திட்டத்தை இப்போது செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கூற்றெல்லாம் மேட்டூரிலே தண்ணீர் இருக்குமென்றால் சரியாக இருக்கும். ஒவ்வொரு தடவையும் கர்நாடகத்தோடு போராடித்தான் தண்ணீர் வாங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்லி, கடந்த 2 தினங்களுக்கு முன்பாக 3 டி.எம்.சி. தண்ணீர் பெற்றிருக்கிறோம். நம்மால் முடிந்த அளவுக்கு சிறப்பாக, இருக்கிற தண்ணீரைப் பிரித்து இந்த ஆண்டு நாம் கொடுத்திருக்கிறோம். ஏற்கெனவே இந்தப் பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்க முடியாது என்று அறிவித்தாலும், அங்கே உள்ள விவசாயிகள் குள்ளக்கார் பயிரை வைத்திருக்கிறார்கள். இருந்தாலும் முடிந்த அளவுக்கு குள்ளக்கார் பயிருக்கு தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். அதிகாரிகளும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

[1987 மார்ச் 28

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

Thiru T. VENKATA REDDY: Hon'ble Deputy Speaker Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee:

1. Forty-sixth Report of the Committee on the paragraphs pertaining to Public Works Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1980-81 (Civil).

2. Forty-seventh Report of the Committee on the paragraphs pertaining to Public Works Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1981-82 (Civil).

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த பத்திகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை.

5. வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு சட்டப் பேரவையின் தலை நாயகர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை பற்றி பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தாயாக நின்று, கருணையாக நிதியை அள்ளித் தருவதில் சிறப்புடையவர்கள். எப்படிப்பட்ட தாய் என்று மாணிக்கவாசகப் பெருந்தகை சொல்லுகிறபோது, "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்று சொல்லுகிறார். குழந்தை அழாமலேயே, பால் கொடுக்க வேண்டுமென்று எண்ணுபவள் ஒரு தாய். குழந்தை அழுத பின்னாலே, பால்



1987 மார்ச் 28] [திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

கொடுப்பவள் ஒரு தாய். குழந்தை அழுதாலும், ஊர்க் கதையும், சினிமாக் கதையும் பேசிக் கொண்டிருப்பவள் ஒரு தாய். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது, நம்முடைய அமைச்சர் பெருந்தகை எத்தகைய தாய் என்பது செம்மையாகத் தெரிகிறது. எனவே இந்த நிதிநிலை அறிக்கையில் பேசுகின்ற வாய்ப்புக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கத்திற்குரிய இந்தியப் பேரரசின் தலைமை அமைச்சராக இருக்கும் இதய வேந்தன் திரு. ராஜீவ் காந்தியின் நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது, நம்முடைய உள்ளமெல்லாம் பூரிக்கின்ற வகையில் இருக்கிறதென்பதை மறந்துவிட முடியாது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு கட்சிகள் ஆண்டுகொண்டிருந்தாலும், எல்லா மாநிலங்களுக்கும் இந்த ஆண்டுதான் 37 சதவிகிதம் அதிகமான உபரி நிதிநிலையை அள்ளித் தந்திருக்கிறார்கள். எதிர்க் கட்சி என்று பார்க்கவில்லை, எல்லா மாநிலங்களுக்கும் எதிர்க் கட்சி என்று பார்க்கவில்லை. உள்ளபடியே அவர் அள்ளித் தந்துள்ளதைப் பார்க்கிறபோது அந்த நிதிநிலை அறிக்கை மகிழ்ச்சிக்குரியதாக இருக்கிறது. இந்தியாவைக் கட்டிக் காப்பதற்கும், இந்தியா சிறந்த எழுச்சி பெறுவதற்கும், இந்தியப் பாதுகாப்புக்கும் 12,000 கோடி ரூபாய் ஒதுக்கி, பலம் பொருந்திய இராணுவத்தை அமைப்பதால், இந்திய நாடு உலகத்திலுள்ள எந்த வல்லரசு நாடுகளையும் எந்த நேரத்திலும் சந்திக்கும் தன்னம்பிக்கை பெற்ற நாடாக மாறும் அளவுக்கு நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11-30)

மேலும் ஏழை விவசாயக் குடிமக்களுக்கு உரத்திற்கு இரண்டு [illegible] ஒதுக்கியிருக்கின்றார்கள். வேளாண்மைத் [illegible] கோடியினை ஒதுக்கியிருக்கின்றார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் [illegible] இருக்கின்ற [illegible] வேண்டும் என்று நிதி ஒதுக்கி செம்மையாக வாழ Unorganised agricultural sector [illegible] வேளாண்மைத் துறையினுடைய [illegible] சொல்கின்ற, விவசாயக் குடிமக்கள் பாதிக்கப்பட்ட [illegible] உழைத்து உழைத்து வேதனை கேள்விக்குறியாக, வேளாண்மைக் குடியைச் சேர்ந்த அடைந்திருக்கின்ற, [illegible] செம்மைப்பட்டு வாழ வேண்டுமென்பதற்காக, வளம [illegible] வேண்டுமென்பதற்காக, ஒரு குழுவை அமைத்து அந்த

விவசாயிகளுடைய துயரைத் துடைக்கின்ற செயலைப் பார்க்கிறபோது, அந்தச் செயலை, உலக அளவிலே இருக்கின்ற அரசியல்வாதிகள் மிகப் பெரியவர்கள்கூட, எதிர்க்கின்றவர்கள் கூட, வாயடைத்துப் போகின்ற அளவுக்கு விவசாய மக்களுக்கு ஒரு சிறப்பான தன்மையை உருவாக்கியிருக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால் இன்னும் அவருடைய திட்டங்களாக I.R.D.P., N.R.E.P., R.L.E.G.P. போன்ற எந்தத் திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டங்களை எல்லாம் ஏழையெளிய மக்கள், பாட்டாளி மக்கள், தொழிலாள மக்கள், வாழ்விலே வளம் பெற வேண்டுமென்ற அளவிலும், அந்தத் தொழிலாள மக்கள் வாழ்வில் நல்ல சிந்தனை உருவாக வேண்டுமென்பதற்காகவும் தீட்டியிருக்கின்றார்கள். அவர்களுடைய சிந்திக்கின்ற தன்மை, இளைஞர் உலகத்திற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அவர்களுடைய திட்ட எண்ணங்கள் வெளிப்படுகின்றபோது, இந்தியாவிலே இருக்கின்ற 70 கோடி மக்களுடைய வாழ்விற்கு வளத்தை உருவாக்கப் போகின்றார்கள் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது. அப்படி ஏற்படுகின்றபோது India is steered to Twenty-first Century என்ற உணர்வை, இந்தியாவை 21 ஆம் நூற்றாண்டிலே அழைத்துச் செல்கின்ற ஒரு மாபெரும் தலைவரைப் பெற்றிருக்கிறோம் என்ற நம்பிக்கை உணர்வைப் பெறுகிறோம். அந்த அளவுக்கு ஒரு எழுச்சியை உருவாக்கி இருக்கின்றார்கள். இன்று வெளியிட்டுள்ள அந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது நாம் உள்ளபடியே மகிழ்கிறோம்; பெருமையும் அடைகிறோம். அந்தப் பெருமையை அடைவதற்குக் காரணம், இங்கே இருக்கின்ற இலங்கை அகதிகளுக்குக்கூட தலைமை அமைச்சர் அவர்களுடைய நிதியிலேயிருந்து அள்ளி அள்ளித் தந்திருக்கின்றார்கள். அந்த அகதிகளுடைய வாழ்க்கையை செம்மைப்படுத்துகின்ற சூழ்நிலையை நாம் பார்க்கிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையினுடைய வளமான சிந்தனையின் அடிப்படையில்தான் இங்கே கூட நம்முடைய மாநிலத்தைச் சார்ந்திருக்கின்ற அமைச்சர் அவர்கள் தோல் பொருள்களுக்கு வரிகளைக் குறைத்திருக்கிறார்கள். அதை இந்தியப் பேரரசினுடைய தலைமை அமைச்சர் அவர்கள் அறிவித்து





இருக்கின்றார்கள். அதன் பிறகுதான் நம்முடைய தமிழகத்தினுடைய அமைச்சர் அவர்கள் இங்கே வெளியிட்டிருக்கின்றார்கள். அதிலே ஒரு ஒற்றுமை இருக்கின்றது. அங்கே தோல் பொருள்கள் வரியைக் குறைத்ததனாலே நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், தமிழக அரசினுடைய தலைமை அமைச்சர் அவர்கள் இங்கே காலணிகளை ஏழையெளிய மக்களுக்கு அளிக்கின்றார்கள். 'கால் வயிற்று கஞ்சியில்லை, காலுக்கு செருப்பில்லை, என்ற ஜீவா அவர்களுடைய ஜீவனுள்ள உணர்வுகளை ஒட்டி ஏழையெளிய மக்களுக்கு காலணிகளைத் தந்திருக்கின்றார்கள். வரலாற்று சிறப்புடைய ஒரு செய்தியை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. பாராட்டத்தான் வேண்டும். எதிர்க்கட்சியாக இருக்கிறோம் என்பதற்காக பாராட்டாமல் இருக்க முடியாது. வரலாற்று சிறப்புடைய காலணி வழங்கு திட்டத்தை அளித்திருப்பதற்கு நாம் முதலமைச்சர் அவர்களைப் பார்த்து உள்ளபடியே மகிழ்வு அடைகிறோம். மேலும் இந்தியாவினுடைய நாயகர் ஆக இருக்கும் ராஜீவ் காந்தி அவர்களும், அவரைச் சார்ந்த நம்முடைய தலைமை அமைச்சர் அவர்களும் தமிழக மக்கள் செம்மையாக வாழ வேண்டும் என்றுதான் இந்த நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கின்றார்கள்.

மேலும் சில வரலாறுகளை சொல்ல வேண்டுமானால், அரியலூர் விபத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கே புகைவண்டிகள் ஓடிக்கொண்டிருக்கின்ற போது பாலங்களைத் தகர்த்தெறிந்து இருக்கின்றார்கள். அந்தக் கயவர்களை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அவர்கள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும், எப்படிப்பட்ட இயக்கங்களிலே இருந்தாலும், அவர்களுடைய செயல்களை, இழிசெயல்களை, கயவர் தன்மைகளை அறவே அறுத்தெறிகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நிலைமைகளை எல்லாம் மாற்றி முறைப்படுத்தியாக வேண்டும். மேலும் நம்முடைய தமிழகத்தினுடைய நிதிநிலை அறிக்கையில் பாராட்டுகின்ற அம்சங்கள் நிறைய இருந்தாலும்கூட நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1987 மார்ச் 28

நம்முடைய தமிழகத்திலே ஒரே ஒரு மொபட் நிறுவனம்
நடைபெறுகிறது. அந்த மொபடுக்கு வரிவிலக்கு அளித்திருக்
கின்றார்கள். ஆனால் அந்த மொபட் நம்முடைய தமிழகத்திலே
ஒன்றுதான் செய்கிறார்கள். அந்த ஒரே ஒரு தொழிற்சாலைக்கு
மட்டும் வரிவிலக்கு அளித்திருப்பது அவ்வளவு சிறப்புடையதாக
எனக்குத் தெரியவில்லை.

தங்கத்திற்கு 2 சதவிகிதம் வரிவிலக்குக் கொடுத்திருக்
கின்றார்கள். அது வரவேற்கத்தக்கதுதான். தங்க நகைக்கு
வரியை எடுத்துவிட்டால், நகை, வட்டி வியாபாரம் செய்பவர்கள்
ஒரு முறையான கணக்கு வைத்து இருப்பார்களா என்ற
அச்சமும் ஏற்படலாம்.

அடுத்து வெல்லத்திற்கு வரிவிதித்து இருக்கின்றார்கள். அந்த
வெல்லம் தமிழருடைய பண்பாட்டிற்குரிய உணவு. அந்த
உணவுப் பொருளுக்கு 8 சதவிகிதம் என்று வரி போட்டிருக்
கின்றார்கள். தங்கத்திற்கு வரியை நீக்கிவிட்டு வெல்லத்திற்கு
வரிவிதித்திருப்பது சரியல்ல.

இரும்பு, டயர், மோட்டார் வாகனங்களுக்கு ஒரு முனை
வரியாக இருந்ததை இருமுனை வரியாகப் போட்டிருக்
கின்றார்கள். மேலும் அதே நேரத்திலே திரைப்பட அரங்கங்
களுக்கு பல முனை வரி என்று இருந்ததை எல்லாம் ஒரு முனை
வரியாக ஆக்கியிருக்கின்றார்கள். அதுவும் ஒரு மாறுபட்ட
கருத்தைத் தோற்றுவிப்பதாக இருக்கின்றது. ஓரிடத்திலே பல
முனை வரியை ஒருமுனை வரியாக மாற்றினால் ஊழல்கள்
ஒழிக்கப்படும் என்று சொல்கிறோம். ஆனால் அதேநேரத்தில்
பலமுனை வரிகளை நீக்கிவிட்டு ஒரு முனையாக ஆக்கியிருப்பது
எந்தவகையில் பயன் தரும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.
(மணி அடிக்கப்பெற்றது) ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்து
விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொகுதி பற்றி
பேசி முடியுங்கள்.



1987 மார்ச் 28]

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** அடுத்து, 30 லட்சம் வீடுகளைக்
கட்டுவதாக சொல்லியிருக்கிறார்கள். இப்படித் திட்டத்தை
அறிவித்திருக்கிறபோதே செங்கல், மரம், ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்
போன்றவைகளுக்கு ஏற்கெனவே இருந்த வரியை உயர்த்தியிருப்
பது எந்தவகையில் நியாயம்? இப்படி வரியை உயர்த்திவிட்டு
30 லட்சம் வீடுகளைக் கட்ட முடியுமா? மேலும் வீடுகளைக்
கட்டுகின்றபோது சவுக்குக் கட்டைகளால் கட்டி விட்டு
மேலே மங்களூர் ஓடு போட்டுவிடுகிறார்கள். ஆனால் நான்
ஒன்றை சொல்லிக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ் கட்டுகின்ற
வீடுகளை எல்லாம் உறுதியாக சிமெண்டினால் கட்ட வேண்டும்.
இந்த வீடுகளை சிமெண்ட் மூலம் கட்டி ஏழையெளிய மக்களுக்கு
வழங்கினால் அவர்கள் இந்த அரசை சிறப்போடு பாராட்டுவார்
கள். அந்தவகையில் அன்னை இந்திரா காந்தி அவர்களின்
பெயரால் கட்டுகின்ற வீடுகளையும் சிமெண்ட் மூலமாக, உறுதி
யாகக் கட்ட வேண்டும். செங்கல், மரம், ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்
போன்றவைகளுக்கு போட்டுள்ள கூடுதல் வரிகளைக் குறைக்க
வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை குடிநீர் பிரச்சினையைப் பொறுத்த
வரையில் திருவான்மியூரிலுள்ள நிலத்தடி நீரை எடுத்து
வழங்குவோம் என்று அரசு சொல்லியிருக்கிறது. ஆனால்
அதுகுறித்து தெளிவாக திட்டமில்லை அதுபோல் தெலுங்கு-
கங்கைத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள்
என்பதும் குறிப்பில் தெளிவாக சொல்லப்படவில்லை. அவை
களைச் சொன்னால் சிறப்பாக இருக்கும். நீதி நிர்வாகத்தை
செம்மைப்படுத்த அதிகமாக கட்டடங்களைக் கட்டுவதாகச்
சொல்லியிருப்பதை வரவேற்கிறேன். ஆனால் கண்ணப்பர் திட
லில் மெட்ரோபாலிடன் 9-வது மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டிலே
கடந்த இரண்டு ஆண்டுகளாக நீதிபதி நியமிக்கப்படவில்லை. இம்
மாதிரி தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நிலைமை இருக்கிறது.
இம்மாதிரி காலியாக இருக்கின்ற பணியிடங்களில் நீதிபதிகளை
நியமிக்காமல் இருக்கும் போது புதிதாக கட்டடங்களை
மாத்திரம் கட்டுவதில் என்ன பிரயோஜனம்? ஆகவே, காலியாக
இருக்கிற இடங்களில் எல்லாம் உடனடியாக நீதிபதிகளை
நியமித்து, நீதி நிர்வாகத்தை இன்னும் நல்லமுறையில் செம்மைப்
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1987 மார்ச 28

அடுத்து, மராட்டிய மாநிலத்தை ஒப்பிட்டுக்காட்டி அந்த மாநிலத்தைப் போல நம்முடைய மாநிலமும் வரலாற்று சிறப்புடைய தொழில் மையத்தின் மூலம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அதே மராட்டியம் தான் சுகாதாரத்தில் முதன்மை இடத்தில் இருக்கிறது. ஆனால் தமிழகமோ கடைநிலையில் இருப்பதாக புள்ளிவிவரம் கூறுகிறது. ஆகவே கொசு ஒழிப்பு மற்றும் மலேரியா நோய் ஒழிப்பு போன்றவற்றில் மராட்டிய மாநிலத்தை நாமும் பின்பற்ற முடியுமா என்ற உயர்வான எண்ணத்தை உருவாக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிதி நிலை அறிக்கையில் Plan Expenditure தெரியவில்லை. Non-Plan Expenditure அதிகமாக பொருளாதார தேக்க நிலை தான் அதிகமாக இருப்பதால் இன்பிளேஷன் அதிகமாக ஆகி, நம்முடைய தமிழகம் கடைசியாக வரக்கூடிய நிலைமை உள்ளது. இதனால் வேண்டும். இதுகுறித்தும் ஆவன செய்ய

அடுத்து, திருவொற்றியூர் தொகுதியில் இன்னும் ஒரு காவல் நிலையம் திறக்க வேண்டும். இல்லையென்றால் அந்தப் பகுதியை சென்னையோடு சேர்க்க வேண்டும். இதைப் பரிசீலிப்பதாகச் சொல்கிறார்கள். ஒற்றியூரில் ஒரு காவல் நிலையத்தை திறக்க வேண்டும், அல்லது அந்தப் பகுதியை சென்னையோடு சேர்க்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே காவலர்கள் அதிகம் இல்லாத காரணத்தால் பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றதை நான் பல நேரங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதுபோல அங்கே ஒரு தீயணைப்பு நிலையத்தையும் அமைக்க வேண்டும். திருவொற்றியூர் நகரசபையாக இருந்தாலும் சரி, கத்திவாக்கம் நகரியமாக இருந்தாலும் சரி, புழல் ஒன்றியத்தில் மொத்தமுள்ள 19 பஞ்சாயத்துக்களிலே 15 பஞ்சாயத்துக்களை எடுத்துக் கொண்டாலும் சரி, மாதவரம் நகரியமானாலும் சரி. அங்கேயிருந்து சென்னை முதல் வட்டம் வரை, எல்லா இடங்களிலும் தண்ணீர் பிரச்சினை அதிகமாக இருக்கிறது. அதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். அந்தப்



1987 மார்ச் 28] [திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

பகுதிகளில் எல்லாம் தமிழக அரசு தயவுசெய்து பாதுகாக்கப்பட்ட நல்ல குடிநீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மணலியில் படுக்கை அறை வசதி கொண்ட, சுகாதார வசதியுடைய நல்ல மருத்துவமனை இல்லை. ஆகவே அங்கே அதிக படுக்கை அறைகள் கொண்ட, சுகாதார வசதியுடைய நல்ல மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியிலுள்ள காற்று மண்டலத்திலே அதிகமாக தூசு காணப்படுகிறது. வீசுகின்ற தென்றல் காற்றில் கூட தூசுத் தன்மை இருக்கிறது. காற்றில் பொலூஷன் அதிகமாக இருக்கிறது. அங்கே தொழிற் கூடங்கள் அதிகமாக இருக்கின்றன. மாசுக் கட்டுப்பாடு நிறுவனத்தின் மூலமாக தூசை கட்டுப்படுத்த வேண்டும். இப்படித்தான் புகை போக வேண்டும், இப்படித்தான் புகை அகற்றப்பட வேண்டும் என்று அங்கேயுள்ள பெரிய தொழிற்கூடங்களுக்கெல்லாம் தைரியமாகச் சென்று ஆலோசனை வழங்க வேண்டும். எப்படி பெரிய தொழிற் கூடத்திற்குள் நுழைவது, ஏதாவது தீங்கு வந்துவிடுமோ, பாதகம் வந்துவிடுமோ ஏதாவது அச்சுறுத்தல் வந்துவிடுமோ என்றெல்லாம் எண்ணிப்பார்க்காமல் நல்லுணர்வோடு இதிலே ஈடுபட வேண்டும். நேரடியாக தொழிற்கூடங்களுக்குச் சென்று அங்கே இப்படிப்பட்ட முறையிலே புகை [illegible] என்று சொல்ல வேண்டும். அங்கேயுள்ள நிலத்தடி நீர் முழுவதும் கெட்டு, [illegible] விவசாயம் [illegible] ஏராளமான விவசாயிகள் இதன் [illegible] பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காற்றிலுள்ள [illegible] பொலூஷனைப் போக்க, காற்றிலுள்ள விஷத் தன்மையைப் போக்க மாசுக் கட்டுப்பாடு நிறுவனம் தகுந்த நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். என்னுடைய தொகுதி முழுவதும் கள்ளச்சாராயம் ஆறாக பெருக்கெடுத்து ஓடுகிறது. தயவுசெய்து மன்னிக்க வேண்டும். [illegible] நான் சொல்லாமல் போனால் தவறாக ஆகிவிடும். [illegible] போட்டாலும் நம்முடைய காவல் துறையினரே

அயற்றை ஏலம் போடுவதாகச் சொல்கிறார்கள். ஏலத்தை அவர்களே நடத்துகின்றபோது வருமானமும் அவர்களுக்கு போய்ச் சேர்ந்து விடுகிறது. மேலும் இவர்கள் பல சமுதாய விரோதிகளைச் சேர்த்துக்கொண்டு நல்லவர்களுக்குக் கூட தீங்கு விளைவிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, கள்ளச் சாராயத்தினுடைய கோட்டினை அறிந்த மாண்புமிகு அமைச்சரவர்கள் தயவு செய்து அதை எப்படி கட்டுப்படுத்த வேண்டும் என்று அறிந்து விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இதோடு நான் நிறுத்திக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

**திரு. ஜி. கிருஷ்ணராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் அளிக்கப்பட்ட 1987-88 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையினை வரவேற்கிறேன், போற்றுகிறேன். வரிவிலக்கு குறித்து சம்பந்தப்பட்ட துறையின் வியாபாரச் சங்கங்கள் பாராட்டுதலையும், மகிழ்ச்சியையும் தெரிவித்திருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்திலே வாழும் ஏழை நலிந்த பிரிவு மக்கள்மீது தாயுள்ளத்தின் பாசமிகு கருணையோடு 3 ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகளைக் கட்டும் திட்டத்தையும், கிராமப்புறங்களிலே பணிக்குச் செல்லும் ஏழைத் தாய்மார்களுக்கு இலவசக் காலணிகளை வழங்குகின்ற திட்டத்தையும் இச்சபையிலே அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சபையில் குறை சொல்லிக் கூறியிருப்பவர்கள் கவனித்திருக்க வேண்டும். இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்திலேயும் இதுவரை அறிவித்திராத ஒரு மாபெரும் உன்னதமான திட்டமாகிய இலவசக் காலணி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஒப்பற்ற சாதனை எனும் வைரங்கள் கொண்ட மணிமகுடத்தில் இந்தத் திட்டம் விலைமதிப்பிட முடியாத மாணிக்கக் கல்லாகவும் கோஹினூர் வைரம் போன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்றால் அது மிகையாகாது.



வருமுன் காப்பது நல்லது, 'பிரிவென்ஷன் ஈஸ் பெட்டர் தேன் க்யூர்' என்பதற்கேற்ப மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டு இறுதியில் அனைத்து மாவட்ட கலெக்டர்களையும் அழைத்து, குடிநீர்ப் பற்றாக்குறையினைப் போக்கவும், வறட்சியினை இவ்வாண்டு சமாளிக்கவும் தமிழக மக்களுக்கு உதவும்பொருட்டு ஆழ்குழாய்க் கிணறுகளை உடனடியாக அமைக்கவும், லாரி, டிராக்டர் மூலம் குடிநீர் வழங்கும்படி செய்யவும் போர்க்கால நடவடிக்கையைப் போல் எடுத்து உத்தரவு வழங்கியதை இம்மாமன்றத்தில் இருப்பவர்கள் மறந்திருக்க முடியாது என்று கருதுகிறேன். இப்படி எதிர்நோக்கிச் செயல்படும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியைக் குறை கூறுகின்றவர்கள் இவற்றையெல்லாம் கவனித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், நலிந்த பிரிவினருக்கும், ஆதரவற்ற முதியோர்களுக்கும், அன்றாடம் உழைத்து கூலி பெற்று வாழும் தொழிலாளர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அளித்துள்ள சமூக நலத் திட்டங்களை மணிமேகலையின் அமுதசுரபியோடு ஒப்பிடலாம்; அள்ளி வழங்கும் காமதேனுவோடு ஒப்பிடலாம். கற்பக விருட்சமாக ஒப்பிடலாம் என்று தோன்றுகிறது.

வரிச்சலுகையால் 15 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும் அதை அறிவித்திருப்பதற்காக இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டத்தான் வேண்டும். தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கிராமப்புற மக்கள் தொலைக்காட்சியிலே மகிழ்ச்சியோடு கண்டு களிக்கின்ற விதத்தில், வாழ்க்கையை வளமாக்கவும், சத்துணவு, வேளாண்மை, சுகாதாரம், முதியோர் கல்விக்காக 87 இலட்சம் ரூபாய் செலவில் வீடியோ கேசட்டுகளை மையத் தொலைபரப்பு தகவல் அமைப்பது அறிக்கையில் கூறியிருப்பதைப் போற்றத்தான் வேண்டும். உடன், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வீடியோ கேசட், வி.சி.பி.களை வழங்குகின்ற திட்டமானது சிறப்பான திட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராமப்புற மக்களின் மேம்பாடான வாழ்க்கைக்கு இந்த [illegible] திட்டம்

[திரு. ஜி. கிருஷ்ணராஜ்] [1987 மார்ச் 28

ஊன்றுகோல் போன்று அமைந்து அவர்களுக்குத் துணையாக
இருக்கும் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.
கிராமப்புற மக்கள் இதை வரவேற்கிறார்கள்.

தமிழகத்தில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும், கைத்தறி
தொடக்க சங்கங்களுக்கும் தள்ளுபடி விற்பனைக்கு வழங்குகின்ற
தற்போதுள்ள கைத்தறிக் கொள்கையில், வரையறுக்கப்பட்ட
தொகை 10 கோடி ரூபாயாக இருக்க, 37 கோடி ரூபாய்
அளவிற்குத் தமிழக அரசு அளித்ததற்காக கைத்தறி
நெசவாளர் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

சேலம் அம்மாப்பேட்டை கைத்தறி சொசைட்டியில் தேங்கிக்
கிடக்கும் 100 ஆம் நம்பர் வேட்டிகளும், மற்றும் சில ரகங்களும்
சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு உள்ளது. இதனால் நிதிநிலைமை
மிகவும் மோசமான நிலையிலே உள்ளது. இந்தச் சங்கத்தைக்
காப்பாற்றவும், கைத்தறி நெசவாளர்களை வாழவைக்கவும் அரசு
அருள்கூர்ந்து கோ-ஆப்டெக்ஸ் மூலம் இந்த ஒரு கோடி ரூபாய்
ஸ்டாக்கை கொள்முதல் செய்ய நான் அன்புடன் வேண்டுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே கைத்தறித் துணிகளுக்கு
சாயம் தோய்க்கும் சாயச் சாலை பயன்படுத்தும் நாப்தாவுக்கு
வரி விலக்கு அளித்திருப்பதை அவர்கள் பாராட்டுகிறார்கள்;
நானும் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன்.

லேபர் காண்ட்ராக்ட் அடிப்படையில் குடிசைத் தொழிலாக
கையினால் சாயம் தோய்க்கும் தொழிலை நடத்துகின்றவர்கள்
வரி விதிப்பின் மூலம் அவதிப்பட்டுக்கொண்டிருப்பது அரசுக்கு
நன்றாகத் தெரியும். இது குறித்து என்னுடைய தொகுதியி
லிருந்து கைத்தறித் துணிக்கு சாயம் தோய்க்கும் உரிமையாளர்
சங்கத்திலிருந்து ஒரு வேண்டுகோள் மனுவை மாண்புமிகு நிதி
அமைச்சர் அவர்களிடம் வழங்கியிருக்கிறார்கள். அரசு அதைப்
பரிசீலனை செய்து, குடிசைத் தொழிலாக சாயம் தோய்க்கும்
தொழிலை நடத்தி வருகின்றவர்களுக்கு வரி விலக்கு அளித்து,
ஆவன செய்ய வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு மாண்புமிகு
நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தாய்
உள்ளம் கொண்டு நிதி அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து இதைச்
செய்ய வேண்டுமென்று வேண்டுகிறேன்.





1987 மார்ச் 28] [திரு. ஜி. கிருஷ்ணராஜ்]

இணக்க வரி இல்லாத இடங்களில் திரை அரங்குகளுக்கு தனித்
தனியாக ஆறு வகையான வரிவிதிப்பு இருந்துவந்ததை ஒட்டு
மொத்தமாக ஒரே வரியாக மாற்றியிருப்பதை நான் பாராட்டி
வரவேற்கிறேன். திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நான்
இதை மனதார வரவேற்று, இதுகுறித்து எனது சொந்தக்
கருத்தை இந்தச் சபையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கெனவே டி.வி. மூலமாகவும் வீடியோ கேசட் மூலமாகவும்
தமிழ்நாட்டில் தமிழ் திரைப்படத் தொழில் பெரிதும் பாதிக்கப்
பட்டிருக்கிறது. அதனால் சில இடங்களில் திரையரங்குகள்
மூடப்பட்டிருக்கின்றன. இன்னும் சில இடங்களில் மூடப்பட
விருக்கின்றன. அது மட்டுமல்லாமல் ஆங்கிலப் படங்களினால்
இன்று தமிழ்த் திரைப்படங்களுக்கான வசூல் சற்று
குறைந்துள்ளது. அதனால் நலிவடைந்துள்ளார்கள் என்பதை
இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படி இருக்கும் இந்தக் கருணத்தில் அண்டை மாநிலமான
கேரளத்தில் ஒட்டுமொத்தமாக மொத்த வசூலில் (கிராஸ்
கலெக்ஷன்) சுமார் 40 சதவீதத்தைத்தான் வரியாக வசூல்
செய்கிறார்கள். இந்த அளவுக்குத்தான் அங்கே வரி விதிக்கப்
பட்டுள்ளது. எனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
கருணையோடு திரையரங்கு உரிமையாளர்கள் சங்கம், திரைப்
பட விநியோகஸ்தர்கள் சங்கம் ஆகியவற்றின் கோரிக்கைகளை
[illegible]த்து, நல்முறையில் பரிசீலனை செய்து, தற்போது
இருக்கும் [illegible] சதவீத வரியை [illegible] சதவீதமாக குறைக்க வேண்டு
மென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தற்போதுள்ள வரி
விதிப்பினால் திரைப்படத் தொழில், இந்தத் துறை சம்பந்தப்
பட்டவர்கள் நலிந்துவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின்
அடிப்படையிலே நான் இந்த வேண்டுகோளை வைக்கிறேன்.
இதை நல்முறையில் பரிசீலித்து மொத்த அனுமதிக்
கட்டணத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவான வரியை விதிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் [illegible] புளியந்தோப்பு
[illegible] சமாதி இடத்தில் இருந்த ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தி
[illegible] இந்த இடத்தில் கைத்தறி வேலைச்
வேலி போடப்பட்டிருக்கிறது. [illegible] செய்திருக்
[illegible] மல்டிபர்ப்பஸ் காம்ப்ளக்ஸ் கட்டுவதற்கு முடிவு

[திரு. ஜி. கிருஷ்ணராஜ்] [1987 மார்ச் 28

இறோம். இப்போது மீண்டும் வேலி போடப்பட்ட அந்த இடத்தில் ஆக்கிரமிப்பு செய்திருப்பதனால் அவர்களை அப்புறப் படுத்தி, உடனடியாக கோ-ஆப்டெக்ஸ் கட்டடம் போல் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒரு கட்டடத்தை அங்கே கட்ட வேண்டு மென்ற ஒரு வேண்டுகோளை அவைமுன் வைக்கிறேன்.

சேலம் மாவட்டம் கைத்தறி-விசைத்தறி அதிகமாக உள்ள ஒரு மாவட்டம். அவர்கள் எல்லாம் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளுகின்ற வகையில் அந்தக் கட்டடம் அமைய வேண்டு மென்று வேண்டுகிறேன். ** அவர் அரசுக்கு ஒத்துழைப்பு நல்காததால் அச்சுவான் ஏரி என்ற இடத்தில் பேருந்து நிலையம் கட்டுவதற்கான அந்தப் பணி நின்றுவிட்டது. . .

திரு. மா. மணிமாறன்: துணைத் தலைவரவர்களே, தனிப் பட்ட நபரைப்பற்றி குற்றச்சாட்டு சொல்வது சரியல்ல. அதை நீக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தனிப்பட்டவர் மீது குற்றச்சாட்டுச் சொல்வது சரியல்ல. அதை அவைக் குறிப்பி லிருந்து நீக்கிவிடுகிறேன். மற்ற உறுப்பினர்களும் இந்த நெறி முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

(நண்பகல் 11-50).

திரு. ஜி. கிருஷ்ணராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட ஆண்டுகளாக உயர்நீதி மன்றத்தில் விக்டோரியா பார்க்கின் இடத்தை காலி செய்ய வழக்கு இருந்தது. சேலம் மையப் பேருந்து நிலையத்தை விரிவு செய்ய அந்த இடம் அவசியம் தேவை என்ற அடிப்படையில் உச்சநீதிமன்றத்தில் வாதாடிப் பெற்ற நிலைமையில் சேலம் நகராட்சித் தலைவர் அவர்கள் அறிக்கையிலே அந்த இடத்திலே கடைகளைக் கட்டி வாடகைக்கு விடுகின்ற வகையில் அறிவிப்பு விடுத்திருப்பது மிகவும் வருத்தத்திற்குரியது. எனவே அந்த இடத்திலே பேருந்து நிலையத்தை விரிவாக்கம் செய்கின்ற பணிக்கான

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 மார்ச் 28] [திரு. ஜி. கிருஷ்ணராஜ்]

உத்தரவை உடனே வழங்க வேண்டுமென்று பொது மக்கள் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த இடத்தில் உள்ள போக்குவரத்து நெரிசலைப் போக்கவும், மற்றும் அந்த இடத்தில் பயணிகளின் அவசியத்தை முன்னிட்டும் போர்க் கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க உத்தரவு வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

சேலத்தில் குகைப் பகுதியில் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். எனவே அங்கே குகைப் பகுதிக்கென்று குடிநீர் வழங்க தனியாக மேல்நிலைத் தொட்டிகளை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். உலக வங்கியின் நிதியுதவியோடு 10 மேல்நிலைத் தொட்டிகள் குடிநீர் வழங்க கட்டிக் கொடுக்கப்பட இருக்கின்றன. அந்தப் பணிகளை ஒரே நேரத்தில் அதாவது இந்த ஆண்டுக்குள்ளாக பூர்த்தி செய்து கொடுக்க அரசு உத்தரவு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குகை, கருங்கல்பட்டி, களரம்பட்டி போன்ற பகுதிகளில் உள்ள மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு ஒரு காவல் நிலையம் அமைக்க வேண்டும். இரண்டாண்டுகளுக்கு முன்பிருந்தே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அந்தக் கோரிக்கையை ஏற்று இவ்வாண்டு அந்தக் காவல் நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் 80 போல்வெல்கள் போடப்பட்டிருக்கின்றன. ஆனால் அவற்றைப் பொறுத்தவரையில் எந்தவிதமான விழாக் களையும் ஆளும் கட்சியினராகிய நாங்கள் கொண்டாடவில்லை. நாங்கள் விளம்பரம் செய்துகொள்ளவில்லை. ஆனால் மற்றவர்கள் விழா நடத்துகிறார்கள். இதிலிருந்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் எப்படி [illegible] ஒற்றுமையோடும் நடந்துகொண்டிருக்கிறோம் என்பதை [illegible] சட்டமன்ற உறுப்பினர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களும் நடந்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. ஜி. கிருஷ்ணராஜ் [1987 மார்ச் 28

சேலம் நகரில் கோர்ட் கட்டிடம் அமைப்பதற்கான வரைபடம் நீண்ட நாட்களாக அரசுத் துறையில் இருக்கிறது. எனவே இவ்வாண்டு புதிய கோர்ட் கட்டிடம் கட்டித் தர வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரி வகுப்புகளை இக்கல்வியாண்டு துவக்கத்திலேயே சேலம் நகரில் உடனடியாகத் துவக்க ஆவன செய்ய வேண்டுமென்று அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

1987-88-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை பாராட்டப்பட வேண்டியது, போற்றப்படவேண்டியது. இதனைக் குற்றம் கூறிக் கொண்டிருப்பவர்கள் ஏற்ற நல்ல ஆலோசனைகளைத் தந்தால் அது அரசுக்கு நல்ல வாய்ப்பாக இருக்கும். எனவே குற்றம் கூறுவதைத் தவிர்த்து, இனிமேல் நல்ல ஆலோசனைகளைத் தருமாறு எதிர்க்கட்சித் தரப்பில் இருக்கும் ஆன்றோர்களையும், சகோதரர்களையும் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையினை நான் நிறைவு செய்கிறேன்.

திரு. கு. ரமணி: மதிப்பு மிக்க அவையின் துணைத் தலைவர் அவர்களே, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த நிதிநிலை அறிக்கையின் மீது சில சுருக்கமான கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். முக்கியமான விஷயங்களை எங்களுடைய தோழரான திரு. வி. பி. சிந்தன் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் மிக முக்கியமான விஷயமாக இன்றைக்குக் கூறிக் கொள்ள விரும்புவதெல்லாம் வறட்சி சம்பந்தப்பட்ட விஷயங் களில் அரசினுடைய நடவடிக்கைகள் பற்றித்தான். ஏற்கெனவே ஆளுநர் உரையின்மீது நான் பேசும்போது எடுத்துச் சொல்லி யிருக்கிறேன். வறட்சியின் பயங்கரமான நிலைமையை, ஆழமான நிலைமையை அரசு சரியானபடி உணரவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து. இன்றைக்கும் அதையே நான் சொல்ல விரும்புகிறேன். நிவாரணப் பணிகள் என்ற அடிப்படையில் குழாய்க் கிணறுகள் அமைப்பது, மற்றும் பல ஏற்பாடுகளைச் செய்வது அத்தனையும் சரியானதுதான். அவற்றைச் செய்ய வேண்டியதுதான். ஆனால் இவற்றுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரத்தைக் காணாமல் இந்த நிலைமையைப் போக்குவது



1987 மார்ச் 28] [திரு. கு. ரமணி]

சாத்தியம் இல்லை என்ற உண்மையை எக்காரணம் கொண்டும் நாம் மறக்க முடியாது. அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு தள்ளிப்போட்டுக்கொண்டே போகக்கூடாது. உதாரணம், நமக்கு இருக்கும்படியான தண்ணீர் ஆதாரம் ( Water resources மிகவும் குறைவு. மற்ற மாநிலங்களிலிருந்து கிடைக்கின்ற தண்ணீரை அதிகமாகக் கேட்டு வாங்கி நாம் காரியங்களைச் செய்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே பெய்யும் மழையிலிருந்து வரும் தண்ணீரை ஒரு துளிகூட வேஸ்ட் ஆகாமல் எல்லா வற்றையும் பயன்படுத்தக் கூடிய அளவுக்கு நாம் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் அல்லது தேக்கி வைக்க வேண்டும். கண்மாய்கள், குளங்கள் ஆகியவை தூர்ந்து போய் இருக்கின்றன. சில இடங்களில் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். சில இடங்களில் செயல்பட முடியாத அளவுக்குச் சின்னதாகப் போய் இருக்கிறது. அநேகமாக எல்லா உறுப்பினர்களும் வறட்சி யைப் பற்றி பேசியிருக்கிறார்கள். கட்சி பேதமின்றி அனைவரும் சொல்லியிருக்கிறார்கள் என்பது மிக முக்கியமான அம்சம். அத்தோடு தமிழ்நாட்டில் உள்ள 4½ கோடி மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே கண்மாய்கள், குளங்கள் ஆகியவற்றை முழுவதுமாக ஆழப்படுத்துவதும், கரைகளை பலப் படுத்துவதுமான பணிகளைச் செய்வதோடு புதிய குளங்களை, ஏரிகளை உருவாக்குவதற்கும் அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதற்கு எவ்வளவு பெரிய செலவு ஆனாலும் பரவாயில்லை, நிரந்தரமான ஒரு பிரச்சினை ஆண்டுதோறும் கோடை காலத்தில் ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாடு பிரச்சினை, தீர்க்கப்படும். அதற்கு ஒரு நல்ல ஏற்பாடாக அது இருக்கும். இந்தக் காரியங்களை அரசு செய்ய வேண்டும். அதன் நோக்கு தொலைநோக்காக இருக்க வேண்டும். அப்படிச் செய்யப்படவில்லை என்பது தான் எங்கள் கருத்து. அதை நாங்கள் சொல்ல வேண்டியிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய நாட்டின் பொருளாதார நிலைமை மிக நெருக்கடிக்கு போய்க் கொண்டிருக்கிறது. எல்லா நெருக்கடிகளும் ஒன்று சேர்ந்து [illegible] நிலையில் இருக்கும்படியான சந்தர்ப்பத்தில் இந்தியா முழுவதும் [illegible]கின்றன. அப்படி ஒரு [illegible] பல மாநில அரசுகள் மக்கள் மீது [illegible] கொண்டு பார்த்தால்

புதிய வரிகளைப் போடவில்லை. அவர்களுக்கு பணம் போதும் என்ற நிலைமை அல்ல, அவர்களுக்கும் பற்றாக்குறை பட்ஜெட் தான். ஆனால் வரி போடவில்லை.

நம்முடைய மாநிலத்தில் எப்படி வந்திருக்கிறது? 20.69 கோடி பற்றாக்குறை நமக்கு இருக்கிறது. அதற்கு மேலும் 90 கோடிக்கு வரியைப் போட்டிருக்கிறார்கள். இந்த வரி ஒரு கடுமையான தாக்குதலைத் தமிழக மக்கள் மீது விடுவதற்கு ஒப்பாக மாறப் போகிறது. இந்த நிலைமையை மாநில அரசால் மட்டும் சமாளிக்க முடியும் என்று நாங்கள் கருதவில்லை.

இந்தக் கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு அஸ்திவாரம் 40 ஆண்டுகளுக்கு மேலாக அரசாட்சி செய்து கொண்டிருக்கிற மத்திய அரசின் தவறான கொள்கையின், தவறான நடைமுறைகளின் விளைவுதான். 1986-87-ஆம் ஆண்டில் அவர்களின் பட்ஜெட்டில் 3700 கோடி ரூபாய்க்குப் பற்றாக்குறை வந்தது. ஆனால் அது வருடக் கடைசியில் 8,580 கோடி ரூபாய் வரை பற்றாக்குறையாகப் போய்விட்டது. இந்த ஆண்டு 5250 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் கொடுத்திருக்கிறார்கள். அது நிச்சயம் 12 ஆயிரம் கோடி ரூபாய் பற்றாக்குறைக்கு வழி வகுக்கும், இந்த வருடம் முடியும்போது. இப்படி பற்றாக்குறை பட்ஜெட் போட்டு, ஏராளமான நோட்டுகளை அடித்து அடித்து நாட்டிலே பண வீக்கம் ஏற்பட்டு அது இன்னமும் நிலைமையை சீரழித்துக் கொண்டிருக்கிறது. இப்படி ஏராளமான நோட்டு களை வெளியிடும்போது, நமது தமிழக அரசாங்கம் மட்டுமல்ல, மற்ற மாநில அரசுகளும் எந்த நிலைமையில் இருக்கும்? மாநில அரசாங்கங்கள் என்ன ஆகும்? அது முற்றிலும் மாநில அரசின் அதிகார வரம்புக்குள் இல்லை. அதுபற்றி நிதி அமைச்சர் இந்தப் பட்ஜெட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதைத்தான் எங்கள் தோழர் திரு. சிந்தன் அவர்களும் குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தையை நமது அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் பாராட்டுகிறேன் என்று அவர் சொன்னார்.



இப்படி வருடா வருடம் பற்றாக்குறை கூடி, அதனால் கட்டுக் கடங்காத பண வீக்கம், கட்டுக்கடங்காத விலைவாசி ஏற்றம் ஏற்படுகிறது. இவை எல்லாவற்றையும் நாம் மட்டும் திருத்தி விட முடியும் என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட கொள்கையை நிச்சயமாக எதிர்த்து நிற்கக் கூடிய அளவுக்கு இந்த அரசும் நாட்டு மக்களும் வரவில்லை என்று சொன்னால், எதிர்காலத்தில் ஒன்றுமே செய்ய முடியாது. 40 வருடங்களாக இருக்கிற விலைவாசி ஏற்றம் பண வீக்கம் இதெல்லாம் ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடி 76 கோடி மக்கள் தலைமேல் வந்து விழுந்திருக்கிறது. இதற்கு மேல் அவர்கள் வரி உயர்வு செய்திருக்கிறார்கள். பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் களுக்கு வரி உயர்வு செய்திருப்பதால், ரெயில், சரக்கு போக்குவரத்து போன்ற சகலத்திற்கும் வரி உயர்வு செய்திருப்பதால் மாநிலத்தில் இருக்கிற மக்கள் அனைவரையும் இது பாதித்து வருகிறது.

(நண்பகல் 12.00)

இந்த நிலைமையில் நாம் என்ன செய்கிறோம்? இப்படிப்பட்ட நடவடிக்கையால் பாதிப்பு ஏற்பட்டு மாநிலங்கள் தவிப்பதை எதிர்த்து நின்று, இது சரியல்ல என்று சொல்லி, நாடு முழுவதும் இருக்கிற ஜனநாயக சக்திகள், இடதுசாரி சக்திகள் இது எப்படி தவறு என்று எடுத்துச் சொல்கிறோமே அந்தப் பாதையில் செல்வதற்குப் பதிலாக 80 கோடி ரூபாய்க்கு விற்பனை வரிகளை உயர்த்தி, ஓட்டல் பண்டங்கள் முழுமைக்கும் வரி உயர்வு செய்திருக்கிறார்கள். வீடு கட்டுகிற பொருளான செங்கல்லுக்கும் விற்பனை வரி வந்தாகிவிட்டது. செங்கல்லுக்கு 5 சதவீதத்தி லிருந்து 10 சதவீதம் ஆகியிருக்கிறது. மரத்திற்கு 5 சதவீதத்தி லிருந்து 8 சதவீதம். வெல்டிங் செய்து இரும்புத் தொழில் செய் கிறார்களே அவர்களுக்கு 8 சதவிகிதத்திலிருந்து 10 சதவீதம் வரி உயர்வு. இப்படி பூராவும் வரிகளை உயர்த்தி சரக்கு எடுத்துச் செல்கிற மோட்டார் வண்டிகள் அனைத்துக்கும் வரி உயர்வு, டெம்போவிலிருந்து பெரிய வண்டிகள் வரைக்கும் சகலத்திற்கும் வரி உயர்வு. பஸ் கட்டண உயர்வு. இப்படி கட்டணங்கள் உயர் வின் மூலமும், விற்பனை வரி உயர்வின் மூலமும் இரண்டின் மூலமாக மோட்டார் வரி, விற்பனை வரி என்ற இரண்டின் மூலமும் இப் போது 90 கோடி ரூபாய் அளவிற்கு வரிகள் போடப்பட்டிருக்

[திரு. கு. ரமணி] [1987 மார்ச் 28

கின்றன. விற்பனை வரியும் அப்படித்தான். வரி விதிப்பிற்கு உட்பட்ட விற்பனை தொகைக்கு மட்டுமின்றி மற்ற அனைத்து முன்விற்பனைக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது. விற்பனை வரி விலக்குப் பெற்ற பொருள்கள் விற்பனைத் தொகைக்கும் கூடுதல் வரி விதிப்பு என்பதும் இதில் ஏற்பட்டிருக்கிறது. சர், சார்ஜ் தற்போது சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் இவற்றின் புறநகர்ப் பகுதிகள் மற்றும் 38 நகராட்சிகளில் விதிக்கப்பட்டு வருகிறது. விற்பனை வரி மீதான 5 சதவிகிதம் உபரி வரி மாநிலம் முழுவதிலும் கொண்டு வந்தாகிவிட்டது. ஏனென்று கேட்டால் இதைச் சமன்படுத்துவதற்கு என்று சொல்கிறார்கள். சமப்படுத்துவது அல்ல இது, எல்லோருக்கும் சுமையை ஏற்றுவது என்று தான் இதற்குப் பெயர். அந்த நிலையில் மாநிலம் முழுமைக்கும் இந்த வரியை விஸ்தரித்தாகி விட்டது. தற்போது சென்னை நகரைச் சுற்றி 32 கி.மீ. தூரத்திற்கு உள்ள உபரி வரி கோவை, மதுரை மாநகரங்களுக்கும் புதியதாக போடப்பட்டிருக்கிறது. ஏனென்றால், அவை இரண்டும் மாநகராட்சிகள்.

"இந்த வரிகள் யாரைத் தாக்குகின்றன? அனைத்து மக்களையும் தாக்குகின்றன. ஒருவரும் பாக்கி கிடையாது. வசதி படைத்தவர்கள் இதுபற்றி கவலைப்பட மாட்டார்கள். ஆனால் சாதாரண மக்களுடைய வாழ்வு என்ன கதியாகும்? ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், மத்திய தர மக்கள், தொழிலாளர்கள் ஒரு சிறிய வீடு கட்டுவதற்கோ மற்றதற்கோ எப்படிப் பொருள்களை வாங்குவார்கள்? செங்கல்லே வாங்க முடியாது. மண் கூட வாங்க முடியாது. அந்த அளவிற்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. கடுமையான விலையேற்றத்தின் காரணமாக மக்கள் இன்னும் அதிகமாக பாதிக்கப்படுவார்கள். ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள், தொழிலாளர்கள், வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்கள், விவசாயிகள், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அத்தனைபேரும் இதனால் பாதிக்கப்படுவார்கள். இப்படி வரும்போது ஒரு கேள்வி வருகிறது. அப்படியானால் வரியே இல்லாமல் எப்படி சர்க்காரை நடத்துவது என்று. அப்படி நாங்கள் யாரும் சொல்லவில்லை. ஒரு முதலாளித்துவ சமுதாய அமைப்பில் வரியே இல்லாமல் அரசாங்கத்தை நடத்துவது சாத்தியமல்ல. அப்படி யாரும்



1987 மார்ச் 28] [திரு. கு. ரமணி]

சொல்லவில்லை. யாருக்கு வரி போட வேண்டும்? எப்படி வரி போட வேண்டும்? என்பது தான் கேள்வி. அப்படியானால் உதாரணத்திற்குச் சொல்கிறேன். அதுபற்றி முழுவதுமாக விவாதித்து, கணித்து நாம் விவரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இப்போது இரண்டு சக்கர வண்டிகளுக்கு வரி குறைப்பு செய்திருக்கிறார்கள். டி.வி.எஸ். கம்பெனி உற்பத்தி செய்கிற இரண்டு சக்கர வண்டிகளுக்கு ஏக்கச்சக்கமாக டிமாண்ட் இருக்கிறது. அநேகமாக மில் தொழிலாளர்கள் எல்லாம் கூட அதை வாங்கி உபயோகப்படுத்துகிறார்கள். பிரச்சினை என்ன வென்றால் வாங்கி உபயோகப்படுத்துவது யார் என்பதல்ல. அப்படிப்பட்ட பெரிய கம்பெனிக்காரர்களுக்கு நீங்கள் ஏன் சலுகை கொடுக்கிறீர்கள்? அதற்காக 15 கோடி ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட வரிச்சலுகை என்று சொல்லி அந்தமாதிரி செய்யக்கூடாது. இரண்டாவது, வரி கொடுக்கக்கூடிய சக்தி உள்ளவர்கள் மீது வரி போடுவது எப்படி யென்று பரிசீலிக்க வேண்டும். எதிர்க்கட்சிகளையும் சேர்த்துக் கொள்வீர்களானால் நாங்களும் ஆலோசனை சொல்லத் தயார். பெரிய பணக்கார வர்க்கத்திற்கு எப்படி வரி போடுவது? வருமான வரி. இண்டஸ்ட்ரிகளுக்கு எப்படி வரி போடுவது? சகல வரிகளையும் சொத்து வரி, மரண வரி என்று இப்படி அதே அவர்களே போடுகிறார்களே, நாம் என்ன செய்வது? நிதியாதாரங்களை நேரத்தில் மாநிலங்களுக்கு இப்படிப்பட்ட போராட்டம் அதிகமாக ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று ஜனநாயகத்தை செய்வதைத்தானே ஒரு உண்மையான போராட்டம் என்று நாம் சொல்வது. அந்த சிருஷ்டிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அது இல்லை என்று முறையில் நிதியாதாரம் பெறுவது சாத்தியமில்லை. சொன்னால் நிச்சயமாக தொழில்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக் இந்த கவர்னர் உரையிலே தொழிற்சாலைகள் இன்றைக்கு அதிக கிறார்கள். தமிழ் நாட்டில் தொழிற்சாலைகள் இருந்தாலும் அளவில் பூட்டப்படுகிற வேலை நடந்து வருகிறது. உருவாக்கப்பட்டும் சில பெரும் தொழில்கள் இன்றைக்கு உற்பத்தி கொண்டு இருக்கின்றன. அன்னிய நாட்டில் முதலாளிகள் செய்யப்படும் சாக்குகளை, பன்னாட்டு சாக்குகளை ஏகபோக முதலாளிகளின் கம்பெனிகளுடைய முழுவதும் இங்கே, தமிழ்நாடு உட்பட இந்திய நாடு மார்க்கெட்டிலே வெள்ளம் போல் வருவதற்கு அனுமதி தந்திருக்

கிறார்கள். இதனுடைய விளைவு என்ன? சாதாரணமாக மக்களுக்கு வேண்டிய பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய மத்திய தரத் தொழில்கள், கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய சிறு தொழில்கள் அத்தனையும் இதனால் நாசமாகும். ஒரு லட்சத்திற்கும் அதிகமான தொழிற்சாலைகள் இன்றைக்கு நாடு முழுவதும் பூட்டப்பட்டு இருக்கின்றன என்று சொல்கிறார்கள். தொழிற்சாலைகள் என்பது பூட்டுவதற்காக அல்ல, நடத்துவதற்கு. ஒரு கொள்கையினுடைய விளைவு இப்படிப்பட்ட ஆபத்தைக் கொண்டு வருகிறது. இதை வலியுறுத்தி எடுத்துக் காட்டவேண்டியது மாநிலத்திலே இருக்கிற அரசும், அதற்குப் பின்னாலே அணி வகுத்து இருக்கிற மக்களும்தான். அனைத்துக் கட்சிகளும் செய்யவேண்டும். அப்படிச் செய்யவில்லை என்றால், நம்முடைய வாழ்க்கை ஆபத்திலே போய்முடியும்.

இங்கே தமிழ்நாட்டிலே உள்ள தொழில் வளர்ச்சியைப் பற்றிச் சொல்லும்போது, 77,332 தொழிற்சாலைகளுக்கு நிரந்தர லைசென்ஸ் கொடுத்திருக்கின்றோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், இதிலே எத்தனை பூட்டப்பட்டிருக்கின்றன? எத்தனை புரடக்ஷனை நடத்திக்கொண்டிருக்கின்றன? எத்தனை தொழிற்சாலைகள் புல் கெபாசிட்டி பங்சனில் நடந்து வருகின்றன? புல் கெபாசிட்டியையும் பயன்படுத்துகிற தொழிற்சாலைகள் எத்தனை என்பதைச் சொல்ல வேண்டாமா? அதைச் சொல்லவில்லை என்றால், நாம் பட்ஜெட்டிலே பேசி என்ன பிரயோஜனம்? நடைமுறையில் எப்படி சமாளிக்க முடியும்? ஆகவே, சிறு தொழில்களில், அதுவும் குறிப்பாக என்ஜினியரிங் தொழில்கள் முழுவதும் இன்றைக்கு ஏற்பட்டுள்ள போட்டியினால் பல கஷ்டங்களுக்கு ஆளாகிக் கொண்டு இருக்கின்றன.

கோவையிலே இருக்கக்கூடிய என்ஜினியரிங் பவுண்டரிஸ் அசோசியேசனில் ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த அசோசியேசனிலிருந்து ஒரு அறிக்கையும் வெளியிட்டு இருக்கிறார்கள். ஃபிரைட் ஈக்குவலைசேஷன் ஏற்படவில்லை என்று சொன்னால், பீகாரிலே, மேற்கு வங்கத்திலேயிருந்து கோக் என்ற நிலக்கரியைக் கொண்டு வந்து





சின்னத் தொழிற்சாலைகளிலே போட்டு உற்பத்தி பண்ணுகிற பொருட்களை மார்க்கெட்டிலே விற்க முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இந்தத் தொழில்கள் நாசமாகிவிடும். நூற்றுக்கணக்கான தொழில்கள் பூட்டப்பட்டு விடும்.

இன்றைக்கு ஒரேமாதிரியான பிரைஸ் இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் கல்கத்தாவிலே விற்றாலும், பம்பாயிலே விற்றாலும், கான்பூரிலே விற்றாலும், கோயம்புத்தூரிலே விற்றாலும் ஒரே விலைக்கு வாங்க முடியும். முன்காலத்திலே சிமெண்டுக்கு இப்படி போடப்பட்டது உண்டு. அப்படிச் செய்யவில்லை என்று சொன்னால், இந்தத் தொழில்களுக்கு நெருக்கடி ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட ஒரு கொள்கையை நம்முடைய அரசாங்கம் கையாள வேண்டாமா? அப்படியில்லை என்றால் பல ஆயிரக்கணக்கான பேர்களுக்கு எப்படி வேலை கொடுக்க முடியும். பல ஆயிரக்கணக்கான பேர்களுக்கு வேலை போகும்.

மின் உற்பத்திக்கு அரசாங்கத்திலே அதிக மூலதனம் செய்து இருக்கிறார்கள். நல்ல விஷயம். உதாரணமாக, 1986, 1987, மற்றும் 1988-க்கு 1,067 கோடிக்கு மேலே இன்வெஸ்ட்மெண்ட் பண்ணியிருக்கிறார்கள். இது ஒரு நல்ல அம்சம், இருந்தும், மின்சார உற்பத்தி இந்தச் சமயத்தில் இன்னும் மோசமாக போகக்கூடிய நிலைமை வந்தால், இன்னும் கேவலமான நிலைமை தான் உண்டாகும். இப்போதே 40 சதவீதம், ஆயிரம் தொழில் களுக்கு, எச்.டி. சப்ளை கட் பண்ணப்பட்டிருக்கிறது. இந்த மின்சார உற்பத்திக்கு இவ்வளவு பண்ணியும் கூட, வீடுகளிலே உபயோகப்படுத்தக்கூடிய மின்சாரத்திற்கு கிட்டத்தட்ட 70-லே யிருந்து 75 பைசா வரையிலும் ஒரு யூனிட்டுக்கு வசூலிக்கிற நிலைமை இருக்கிறது. மின்சாரப் பற்றாக்குறை அதிகமான அளவிலே இருந்து வருகிறது. இவ்வளவு தொகையை நாம் இன்வெஸ்ட் பண்ணியிருந்தும், அது இன்னும் சீராகவில்லை. இதற்கு நீங்கள் கணக்கு புள்ளிவிவரம் சொன்னால் போதாது, நடைமுறையில் என்ன நிலைமை இருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதுதான் முக்கியம். இந்தத் தொழிற்சாலைகளில் வேலை செய்து கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்களைப் பற்றி இந்த அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று

[திரு. கு. ராமணி] [1987 மார்ச் 28

பார்க்க வேண்டும். மிகவும் வேதனைக்குரிய விஷயமாக இருக்
கிறது. தொழிலாளர்களுக்கு ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ்
ஆஸ்பத்திரி கட்டுகிறோம். சில ஏற்பாடுகளைச் செய்கிறோம்.
சுகாதாரத்தைப் பெருக்குகிறோம். அதேமாதிரி, சேலத்திலேயும்,
சிவகாசியிலேயும் உள்ள குழந்தைத் தொழிலாளர்களைப் பரா
மரிப்பதற்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறோம் என்பது நல்ல
விஷயம். ஆனால் பிரச்சினை அதுவல்ல. இந்தத் தொழிலில்
ஈடுபட்டிருக்கும்படியான அந்தத் தொழிலாளர்கள் சம்பந்தப்
பட்ட மரபுகளையும், சட்டங்களையும் முழுவதுமாக
அமுல்படுத்தப்பட வேண்டும். திடீரென்று லாக்-அவுட்
பண்ணுகிறபோது, பெர்மிசன் கேட்டால், லேபர்
டிபார்ட்மெண்டில் பெர்மிசன் கொடுத்தால், அதனால்
ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் போய்
விடுகிறார்கள். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை
யற்றவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை ஏன்?
இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் தடுப்பதற்கு என்ன
கொள்கை, திட்டங்களை நீங்கள் வைத்திருக்கிறீர்கள் என்பது
எனக்குப் புரியவில்லை. திரு. வி. பி. சிந்தன் அவர்கள்
சொல்லும்போதும் இதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்,
தொழிலாளர் இலாக்கா ஒரு கொள்கை இல்லாமல் போய்க்
கொண்டிருக்கிறது என்று.

அதேமாதிரி 10-பி சட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட பேக்டரியை
நடத்தவிடமாட்டேன் என்று ஒரு முதலாளி சொல்கிறார்.
சட்டத்தை மீறியிருக்கிறார். அந்த முதலாளி பேரிலே கடுமையான
நடவடிக்கை எடுக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்த
பின்னால், இங்கேயிருக்கக்கூடிய அரசாங்கம் அதை அமுலாக்கப்
போனால், என்போர்ஸ் பண்ணத் தடுக்கிறார்கள்.

அதேமாதிரி திருப்பூரைச் சேர்ந்த ஒரு பனியன் கம்பெனி
முதலாளி கதவடைப்புச் செய்தபோது, இந்த அரசாங்கம் ஒரு
உத்தரவு போட்டு, அவர்களுக்கு பஞ்சப்படி கொடுக்க வேண்டும்
என்று சொன்னது. இருந்தாலும் அந்த உத்தரவு அமல்படுத்தப்
படவில்லை. இது சம்பந்தப்பட்ட கேஸ், 3, 4 வருடங்களுக்கு
மேலாகப் போய்க் கொண்டிருக்கிறது. இன்னும் நடக்கவில்லை.
அப்படி என்றால் ஒரு சர்பளத் திட்டமோ அவர்களுக்கு, தனியே



1987 மார்ச் 28] [திரு. கு. ராமணி]

போகிறது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் இந்த
பட்ஜெட்டிலே நீங்கள் கொண்டு வரவேண்டும். அதை
செய்யாமல் இருக்கிறீர்கள். அது எல்லாம் இதில் வரவில்லை.
தொழிலாளர்களைப் பற்றி சிந்திக்கிற கவனம் எல்லாம் மிகவும்
குறைவாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

[பிற்பகல் 12.10]

அதேபோல் பொது வினியோக முறை. ஒரு கோடியே
20 லட்சம் கார்டுகளை வைத்துக் கொண்டு நாம் வினியோகம்
செய்து கொண்டு இருக்கிறோம். இந்த கார்டுகளுக்கு எல்லாம்
முழுமையான பொருட்கள் அல்ல, ஒரு சில பொருட்களை நாம்
வினியோகம் செய்கிறோம். அதாவது அரிசி, கோதுமைப்
பொருட்கள், எண்ணெய், லெவி சர்க்கரை, மண்ணெண்ணெய்,
துணிகள். இந்தத் துணிகள்கூட எல்லாக் கடைகளிலும்
கிடையாது. நான் சொல்கிறேன், இன்று பிய்த்து பிடுங்குகிற
மாதிரி இருக்கக்கூடிய இந்த விலைவாசி ஏற்றத்தை கொஞ்ச
மாவது சமன்படுத்தி, அதை பெரும் அளவுக்கு குறைத்துவிட
முடியாது. மத்திய அரசின் கொள்கையை மாற்றாமல், கொஞ்ச
மாவது அதை சமன் செய்து அனேகமான பொருட்களை 14, 15
விதமான பொருட்களை சேமிப்புச் செய்து சகல கடைகளிலும்
அதை வினியோகிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
அப்படிப்பட்ட ஒரு பப்ளிக் டிஸ்ட்ரிபியூஷன் சிஸ்டத்தை நல்ல
உறுதியான, திட்டமான ஒரு சிஸ்டத்தை அமல் ஆக்காமல்—
அதைக்கூட அங்கே இருந்து பெருமதிப்பிற்குரிய பாரதப் பிரதமர்
ராஜீவ் அவர்கள் Please strengthen Public Distribution System
என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால்
அப்படி நடக்கவில்லை இங்கே. பருவ காலத்தில் ஒவ்வொரு
பொருளையும் வாங்கி சேமித்து ஒவ்வொரு கடையிலும் அந்தப்
பொருட்கள் இருப்பு போகாமல், விலை ஏறாமல், அளவு குறை
யாமல் கொடுக்க வேண்டும். அதற்காக சட்டம் போடலாம்.
ஆனால் ஒவ்வொரு மனிதனும் கோர்ட்டுக்குப் போய் கேஸ்
போட்டுக் கொண்டு இருக்க முடியாது. அந்தத் திட்டத்தை பலம்
ஆக்க வேண்டும், அப்போது தான் கொஞ்சமாவது இதைச் சீர்
செய்ய முடியும் என்று நான் கருதுகிறேன், ஆகவே அப்படிப்

[திரு. கு. ராமணி] [1987 மார்ச் 28

பட்ட திட்டத்தை ஒரு நடவடிக்கையின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப் பெற்றது) ஒன்று, இரண்டு பாயிண்டுகள் சொல்லி முடித்து விடுகிறேன்.

30 லட்சம் வீடுகள் கட்டுகிற ஒரு பிரச்சினையைப் பற்றி நாம் அடிக்கடி பேசிக் கொண்டு இருக்கிறோம். இப்போதும் பேசிக் கொண்டு இருக்கிறோம். இந்த வீடுகள் கட்டுகிற திட்டத்திலே நமக்கு ஒரு சரியான விளக்கம் அமைச்சரிடமிருந்து கிடைக்க வேண்டியிருக்கிறது. இந்த 30 லட்சம் வீடுகள் கட்டுவது என்றால் வருடத்திற்கு 10 லட்சம் வீடுகள். இப்படி வருடத்திற்கு 10 லட்சம் வீடுகள் கட்டுவதற்கு எவ்வளவு பெரிய மூலதனமும், முதலீடும் தேவை. ஆனால் இந்த அறிக்கையில் அதைப் பற்றி தெளிவாகச் சொல்லப்படவில்லை. அறிக்கையில் சொல்லப்பட்டு இருப்பது தெளிவாக விளக்கப்படவில்லை. மதிப்பிற்குரிய ஆளுநர் உரையில் இது சொல்லப்பட்டு இருக்கிறது. ஆளுநர் உரையில் 18-வது பக்கத்தில் இருக்கிறது. என்ன சொல்லப்பட்டு இருக்கிறது என்று கேட்டால் செங்கல் உற்பத்தி, ஓடு உற்பத்தி, வீட்டுக்குத் தேவையான மரங்கள் உற்பத்தி, இரும்புப் பொருட்கள் உற்பத்தி இப்படிப்பட்ட உற்பத்திகளை முழுமையாக முதலில் செய்வது இன்பிராஸ்டக்ச்சர்க்கு வேண்டிய பொருட்களை முழுமையாக முதலில் செய்வது. அதைச் செய்வதற்கு கிராமம் கிராமமாக பல நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி அந்த கூட்டுறவுச் சங்கங்கள் வங்கிகளிடமிருந்து பணத்தை வாங்குவதற்கு அந்த கேபிட்டல் ரேஷியோ கணக்குப் பார்த்து அவர்கள் கடன் வாங்குவதற்கு அந்த கூட்டுறவுச் சங்கங்களை ஊக்கப்படுத்துவதற்கு வேண்டி பட்ஜெட்டில் ஒதுக்கும் தொகை எதுவோ அந்தத் தொகை அந்த கூட்டுறவுச் சங்கங்கள் உண்டாக்குவதற்காக கொடுக்கப்படும் என்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி என்றால் அர்த்தம் என்ன? இச்சங்கங்கள் நிதி உதவி நிறுவனங்களிட மிருந்து வணிக வங்கிகளிடமிருந்து 3:1 என்ற கடன் மூலதன விகிதாச்சாரப்படி கடன் பெற்று அவர்களுக்கு இந்தப் பணத்தை நாம் உபயோகம் செய்யப் போகிறோம். இது தான் அதில் சொல்லப்பட்டு இருக்கிறது. இதனுடைய அர்த்தம் என்ன? 10 லட்சம் வீடுகள் நேரடியாக அரசு கட்டப் போகிறது என்ற



1987 மார்ச் 28] [திரு. கு. ராமணி]

அர்த்தம் இதில் இல்லை என்னைப் பொறுத்தவரையில். அதை தெரியப்படுத்தினால் நல்லது. அப்போது இதில் பலவிதமான கேள்விகளைக் கேட்கலாம். அப்படி 10 லட்சம் வீடுகள் கட்டுகிறோம் என்று சொல்லுவது என்றால் சொல்லுங்கள். எப்படி எந்த எந்த சமயத்தில் தனித்தனியாக கொடுக்கிறோமா, ஒன்றாக கொடுக்கிறோமா என்று சொன்னால் எங்களுக்கு புரிந்து போகும். ஆனால் இந்தத் திட்டத்தினுடைய நிலைமை இதுதான். ஒரு வருடத்தில் 10 லட்சம் வீடுகள் கட்டுவது என்பது, அதை உங்களால் செய்ய முடியுமா? உங்களுக்கு சக்தி இருக்கிறதா என்பது எல்லாம் வேறு விஷயம். இந்த அறிக்கையில் அப்படி இல்லை. கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் அதற்கு ஒரு 40 ஆயிரம் வீடுகள் கட்டுவதாக ஏற்பாடு இருக்கிறது. அடுத்து 12 கோடி ரூபாய் வேறு ஒரு திட்டத்திற்கு பணம் ஒதுக்கி யிருப்பதாக இருக்கிறது. வேறு ஒரு திட்டத்தின் மூலம் 25,504 வீடுகள் கட்ட திட்டம் இருக்கிறது. இது எல்லாம் உண்மை. இது எல்லாம் சாதாரண வீடு கட்டும் நடவடிக்கைகள். ஏற்கனவே நடந்து கொண்டு இருக்கிறவைகளுடைய தொடர்ச்சி. அது எல்லாம் இந்த 10 லட்சம் வீடுகள் கட்டும் விஷயத்தில் அல்ல. இது இல்லாமலா என்று சொல்லி நான் கேட்கவில்லை. நீங்கள் அதையும் இதில் சேர்த்துக்கொள்ளலாம். ஆட்சேபணை இல்லை. அப்போது கூட 10 லட்சம் வீடுகள் கட்டுவது என்பது சாத்தியம் அல்ல என்பது உங்களுடைய அறிக்கையிலிருந்து தெரிகிறது. அதைச் சொல்லும்போது, நாம் இப்படிச் சொல்லி, அப்படி நடக்கலாமா? 5 வருஷத்திற்குப் பிறகு அது சாத்தியம் அல்லது 3 வருஷத்திற்குப் பிறகு சாத்தியமாகலாம். ஆயிரக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்கள் இதையெல்லாம், செய்ய வேண்டிய காரியங்கள் அத்தனையும் பண்ணிய பிறகு, முடிப்போம் என்று சொல்லுங்கள். நடக்கக் கூடிய உண்மைகளைச் சொல்லுங்கள். அப்படி இல்லையென்றால், இதையெல்லாம் சரி செய்ய வேண்டும். நீங்கள் 10 இலட்சம் வீடுகள் கட்டுவதை நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. நீங்கள் எத்தனை வீடுகள் கட்டினாலும் அதை நாங்கள் ஆதரிக்கத் தயார். 'காலுக்கு செருப்புமில்லை, ஆள்களுக்குக் கூறுமில்லை, பாருக்கு உழைப்போமடா தோழா' என்று பல ஆண்டுகளாக நாங்கள் சொல்லிக் கொண்டு வருகிறோம். நீங்கள் எத்தனை இலட்சம் கட்டினாலும் அத்தனையையும் நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் சொல்வதைச் செய்ய

[திரு. கு. ரமணி] [1987 மார்ச் 28

வேண்டும். சொல்வது செயலில் வரவேண்டும். ஆனால் நீங்கள்
அப்படி செய்வதில்லை. (குறுக்கீடு) நான் கொஞ்சம்
உபயோகமான விஷயங்கள் பேசலாம் என்றிருக்கிறேன். அப்படி
அந்த மாதிரி இந்த வீடுகளைக் கட்டுகின்ற நிலைமையை நீங்கள்
தெளிவுபடுத்த வேண்டும்.

அதற்கடுத்தபடியாக நீர்ப்பாசனம். என்னைப் பொறுத்த
வரையில் ஒரு விஷயத்தை இந்தச் சட்ட மன்றத்திலே வைக்க
வேண்டுமென்று விரும்புகிறேன். அது புதியதல்ல. ஏற்கனவே
வந்தது. 1967-ல் திராவிட இயக்கத்தின் சார்பில் இங்கே மந்திரி
சபை அமைக்கப்பட்ட நேரத்தில் நாங்களும் உடன் இருந்து
தேர்தல் நடத்தி, வெற்றி பெற்று முதன் முதலாக மந்திரிசபை
அமைக்கப்பட்ட நேரத்தில், அன்றைக்குத் தலைவராக இருந்த
மாண்புமிகு அண்ணாதுரை அவர்கள் இடத்தில், நாங்கள்
சொன்னோம், குந்தா கழிவு நீர்த் திட்டம் ஒன்றை அமுலுக்குக்
கொண்டுவர வேண்டும். பல்லடம், அவினாசி, கோவை தாலுக்கா
வடக்குப் பகுதிகள் முழுவதற்கும் பாசனத்திற்கு அது ஒன்று
தான் வழி என்று. பரம்பிக்குளம், ஆளியாறு தண்ணீர்
கிடைக்காது. இன்றைக்கு நாம் கேட்டுக் கொண்டிருக்கிற
பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தின் கீழ் பரிகாரம்
கிடைத்தால், தண்ணீர் கிடைத்தால் கொஞ்ச சந்தோஷம். அது
ஒரு பாசனத் திட்டம் அல்ல. அது ஒரு மின்சாரத் திட்டம்.
பாசனத்திற்கு வேறு போராட வேண்டியிருக்கிறது. அது
100 மெகாவாட் கிடைக்கக் கூடிய திட்டம். அந்த விஷயமாக
காம்ப்ரமைஸ் பண்ணலாம், பேசலாம். இப்போது உங்களுக்கு
இணங்கி பேசக்கூடிய அரசாங்கம் வந்திருக்கிறது. நீங்கள்
அவர்களுடன் பேசலாம். அதைச் செய்யலாம். ஆனால் அது
வரைக்கும் காத்திருக்க வேண்டாம். அந்த குந்தா கழிவு நீர்த்
திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவது ஒரு நல்ல நடவடிக்கை,
அன்றைக்கு அவர் இருந்தபோது, மாண்புமிகு முதலமைச்சராக
அவர் பதவியில் இருந்தபோது இன்வெஸ்டிகேஷன் ஆரம்பித்து,
மேட்டுப்பாளையத்திற்கு 5 மைலில் காரமடையில் ஆபீஸ் செட்-
அப் பண்ண. ஏற்பாடுகள் நடைபெற்று, அந்தப் பூமியில் சர்வே
நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு வருஷம், 1½ வருஷம்
அந்த ஆபீஸ் செயல்பட்டது. பிறகு நின்று விட்டது. என்ன
காரணம்? மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம்



1987 மார்ச் 28] [திரு. கு. ரமணி]

பேச வேண்டும். அதன் தன்மை அவர்கள் கையில் தான்
இருக்கிறது. பவானிசாகரில் போகக் கூடிய தண்ணீரைக்
கொடுப்பது அல்ல. கே. எஸ். ராவ் சர்வே செய்து
கொடுத்திருக்கக் கூடிய கடிதத்தை முதலமைச்சர் அவர்களிடம்
கொடுத்து, அந்த விஷயத்தைப் பொறுத்து, அதைப் பற்றிய
நடவடிக்கைக்கு வந்தது. அந்த நடவடிக்கையை எடுக்க
வேண்டும். கோவை மாவட்டத்தில் இருக்கும்படியான, கோவை
தாலுக்கா, அவினாசி தாலுக்கா, பல்லடம் தாலுக்கா மக்களை
பாதுகாப்பதற்கு வேறு எந்த நடவடிக்கையும் கிடையாது,
வழியுமில்லை. அதை ஆரம்பிக்க வேண்டுமென்று மறுபடியும்
கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த அளவிற்கு பேச அனுமதித்த
மைக்கு நன்றி, வணக்கம்.

**திரு. என். சண்முகம்:** மாண்புமிகு சட்டப் பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, தமிழக பட்ஜெட்டைப் பற்றி
இந்த வார டி.வி.யில் பேட்டி கொடுத்தபோது, முன்னாள் அகில
இந்திய சார்டர்டு அக்கௌண்டண்ட் தலைவர் என். சி. கிருஷ்ணன்
அவர்கள் இப்படிப்பட்ட பட்ஜெட்டை நான் பார்த்ததேயில்லை
எனக் கூறியதை இங்கே நான் பெருமையோடு கூறிக்
கொள்கிறேன்.

தமிழக அரசினுடைய நிதியாதாரங்களைத் திரட்டக் கூடிய
ஒரு சில காரணங்களையும் எடுத்துக் கூற விரும்புகிறேன்.
பத்திரப் பதிவைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டு டாக்டர்
நாவலர் அவர்கள் அவையில் பேசிய நேரத்திலே, இந்தப்
பத்திரப் பதிவைச் சிறிது வேகமாகப் பார்த்தாலே தமிழகத்தில்
வரி விதிப்பைச் சிறிது தவிர்க்கலாம் என்று கூறினார்கள்.
பத்திரப் பதிவுத் துறையில் சரியான சட்டங்கள் இல்லாத கார
ணத்தால் எப்படியெல்லாம் மக்களுடைய வரிப் பணம் பாழா
கிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

முன்னாள் நிதியமைச்சர். வி. பி. சிங் அவர்கள் கொண்டு வந்த
சட்டத்தின் மூலமாக சென்னை அண்ணா சாலையில்
ரூ. 1½ கோடிக்கு விலை போகிற ஒரு பங்களா ரூ. 2½ கோடிக்கு
விற்பனை ஆனது. அதனால் மட்டும் பத்திரப் பதிவுத் துறைக்கு,

[திரு. என். சண்முகம்] [1987 மார்ச் 28

தமிழக அரசுக்கு ரூ. 15 இலட்சம் உபரி நிதி வந்திருக்கிறது
என்பதையும், இப்போது மத்திய அரசு வாங்கயிருக்கின்ற
10, 15 கட்டிடங்களுக்கு எல்லாம் உபரித் தொகையாக
ரூ. 50 இலட்சத்திற்கு மேல் கிடைக்கவிருக்கிறது என்பதையும்,
இப்படி இந்தத் துறையிலே நிதியாதாரங்களை ரியல்
எஸ்டேட்காரர்கள் தந்து எடுத்துக் கொள்வார்களானால்,
நிதியாதாரங்கள் கோடிக்கணக்கான அளவிலே உருவாகிற
வாய்ப்பிருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.
வேலூர் சுற்று வட்டாரங்களில் ஒரு சென்ட் நிலம் 5,000, 6,000
என்று விற்பனை செய்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையிலே,
பத்திரப் பதிவிலே 500, 600 என்று காட்டுகின்ற காரணத்தினாலே
அரசினுடைய நிதி ஆதாரங்கள் பாதிக்கப்படுகின்றன. மாவட்ட
ஆட்சித் தலைவர்களையும், வருவாய்க் கோட்ட அலுவலர்களையும்
சரியான முறையில் அந்த இடங்களில் தற்போது மாறியிருக்கின்ற
நிலவரத்திற்கேற்றாற்போல் அதனுடைய மதிப்பை நிர்ணயிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல ரியல்
எஸ்டேட்காரர்கள் ஒரு மனையை 5,000, 10,000 என்று
பத்திரிகையிலே விளம்பரம் செய்கிறார்கள். ஆனால் நேரிலே
போய்க் கேட்டால் அதனுடைய உண்மையான மதிப்பு 50 ஆயிர
மாக இருக்கிறது என்பதையும் இதனுடைய விளைவாக அரசினு
டைய நிதி ஆதாரம் குறைந்து போகிறது என்பதையும் நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தொழில் துறையைப் பொறுத்த
வரையில், இராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பேட்டையிலே
ஏராளமான தொழிற்கூடங்களை நாம் உருவாக்கியிருக்கிறோம்.
ஆனால் அவற்றில் பல, தொழிலாளர்கள் பிரச்சினைகளால் மூடிக்
கிடக்கின்றன என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.
பல தொழிற்சாலைகளிலே பணி நடைபெறாத காரணத்தினாலே,
தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற நிலையும், உற்பத்தி பாதிக்கப்
படுகின்ற நிலையும் ஏற்படுகிறது. உற்பத்தி பாதிக்கப்படுகின்ற
நிலையில் நமக்கு வருமான வாய்ப்புகள் குறைந்து வருகின்றன
என்பதையும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்த
தொழிற்சாலைகள் நடைபெறாத காரணத்தினால் இவைகளை
எல்லாம் நம்பி சுற்று வட்டாரத்தில் பணி புரிந்து
கொண்டிருப்பவர்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்,
வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்



1987 மார்ச் 28] [திரு. என். சண்முகம்]

காட்ட விரும்புகிறேன். தொழிலாளர்கள் பிரச்சினையைப்
பொறுத்தவரை, சரியான, சிறப்பான அதிகாரிகளை அமர்த்தி,
அந்த வட்டாரத்திலே மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலை
களைத் திறப்பதற்கான வழிவகைகளைச் செய்து தர வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை சோளிங்கர்
டெக்ஸ்டைல்ஸில் நடந்து கொண்டிருப்பதை எடுத்துக் காட்ட
விரும்புகிறேன். பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு இன்னமும்
கூட அங்கே நீதி கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்ற,
அரசாங்கத்திற்குச் சொந்தமான அரியூர் தொழிற்சாலையிலே
பணியாற்றுகிறவர்களுக்கும் மற்றும் சோளிங்கர் சுற்றுவட்டாரத்தி
லுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கும் நீதி கிடைக்கவில்லை
என்பதையும், அந்த பஞ்சாலை முதலாளிகள் எல்லாம்
தங்களுக்கென ஒரு ராஜ்ஜியத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்
என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். நான் வெற்றி பெற்ற
உடனே சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் தொழிலாளர்கள் மத்தியிலே
ஒருவர் இறந்தார் என்று பல தடவை எடுத்துச் சொல்லி இருக்கி
றேன். ஒருசில மாதங்களுக்கு முன்னால் இரண்டு தொழிலாளர்கள்
உயிரோடு கொளுத்தப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இது
ஒரு தொடர்கதையாக வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது
என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரோடு கொளுத்தப்
பட்டவர்களுக்காக நான் அனுதாபத்தைத் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால் உயிரோடு கொளுத்தப்பட்டதற்கான
சூழ்நிலை என்னவென்றால், அந்த ஆலை முதலாளிகள் மதுரை,
திருக்கோவிலூர், ஆரணி போன்ற இடங்களிலிருந்தெல்லாம்
காண்ட்ராக்டர்களை அழைத்துக்கொண்டு வந்து அங்கே பணி
புரிந்து கொண்டிருக்கும் தொழிலாளர்களை வேலை செய்ய
விடாமல் செய்ததன் விளைவாக, உள்ளூர் தொழிலாளர்கள்
கொதித்து எழுந்து அவர்கள் மீது இப்படிப்பட்ட தாக்குதல்களை
நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகிவிட்டது என்பதையும்
நான் புரட்சித் தலைவர் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி,
அவர்கள் கண்ணீரெல்லாம் துடைக்கப்படவில்லை என்றும்
சொன்னேன். புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயம்

[திரு. என். சண்முகம்] [1987 மார்ச் 28

துடைக்கின்றேன் என்று உறுதி கூறினார்கள். அவர்களுடைய கண்ணீரைத் துடைக்க மறந்தவர்கள் கண்ணீர் வடித்த காட்சியை நான் பார்த்தேன். விதி வலியதுதான் என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். எனவே சோளிங்கர் டெக்ஸ்டைல்ஸ் தொழிலாளர்களுக்கு என்று தனி அதிகாரிகளை அமர்த்தி அவர்களுக்கு நீதி கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை வெறும் லேபர் ஆபீசர் மட்டும்தான் இருக்கிறார்கள். அது வளர்ந்து வருகின்ற மாவட்டம், ஏராளமான பீடி தொழிலாளர்கள் வாழ்ந்து வருகின்ற அந்த மாவட்டத்தில் தொழிலாளர்கள் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்கு பொருத்தமான அதிகாரிகள் அங்கே இல்லை. எனவே பொருத்தமான அதிகாரிகளை அங்கே தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் கோர்ட்டுகள் கண்ணை மூடிக் கொண்டு தீர்ப்புகளை அளித்துக்கொண்டிருப்பதாக எங்களுக்குத் தெரிகிறது. அப்படி கோர்ட்டுகள் தீர்ப்புகளை அளிக்குமானால் தொழிலாளர்களுக்கு எதிராகத்தான் அளிக்கிறது என்று அரசுக்கு திட்டவட்டமாகத் தெரியுமானால், அந்தத் தீர்ப்புகளை ஏற்கக் கூடாது என்று அரசு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்கள் பிரச்சினையில் உண்மையான நீதியை முதலாளிகள் வழங்க மறுப்பார்களே யானால், எப்படி சமூக விரோத சக்திகளை குண்டர் சட்டத்திலே நாம் போட்டுக் கொண்டிருக்கிறோமோ அதேபோல தொழிலாளர்களை பாதிப்பவர்களையும், தொழிலாளர்கள் மரணம் அடைகின்ற சூழ்நிலையை உருவாக்குகின்ற தொழில் அதிபர்களையும், பாதுகாப்புச் சட்டத்திலே போடுவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சேரன் போக்குவரத்தைப் பொறுத்தவரை, அங்கே ஒரு தொழிலாளி வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார். அந்தத் தொழிலாளி அன்று வேலைக்குச் சேர்கிறார். அதற்கு முன்னால் நான் என்ஜினியரைப் பார்த்தேன். அந்த என்ஜினியர். வேலையிலிருந்து நீக்கப்பட்ட தொழிலாளி இன்றைக்கு வேலைக்கு வருகிறார், என் கதி என்னவாகுமோ என்றார். அவர்கள்



1987 மார்ச் 28] [திரு. என். சண்முகம்]

இருவருக்கும் அன்று இரவு ஏற்பட்ட கைகலப்பிலே, அந்த பொறியாளர் மரணம் அடைகிறார். தொழிலாளி தூக்கு மேடைக்குச் செல்கிறார். பொறியியல் படித்த பொறியியல் மேலாளருக்கும், வேலை புரிந்து கொண்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கும் இடையே நல்ல பிணைப்பும், அன்பும், பாசமும் உருவாகக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொறியாளர் கணவன் காலையிலே வீட்டுக்கு வருவான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த மனைவிக்கு அவனுடைய பிணம் வருகிற நிலையும், வேலையில்லாமல் அன்றைக்குத்தான் வேலைக் குச் சென்ற தொழிலாளி கணவன், காலையிலே ஒழுங்காக வீட்டுக்கு வரவேண்டும் என்று நினைத்தவளின் கணவன் தூக்கு மேடை சென்று கொண்டிருக்கிற நிலையும் இருக்கிறது.

தொழிலாளர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரை ஒட்டு மொத்தமாக ஒரு சரியான கொள்கையை நாம் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கடுமையான வறட்சி எங்களை வாட்டிக் கொண்டிருக்கிறது. இந்த முப்பது ஆண்டுக் காலத்தில் எனக்கு புத்தி தெரிந்ததிலிருந்து எங்களுடைய பகுதி யில் கிணறுகள் வற்றியதை நான் பார்த்ததே இல்லை. எந்த நிலையிலேயும் வற்றாத பாலாற்றுப் படுகையே கேள்விக் குறியாக வந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்கூட காவேரிப்பாக்கம் ஏரியை விரிவு படுத்த வேண்டும், அதன் கரைகளைப் பலப்படுத்த வேண்டும், எவ்வளவெல்லாம் தண்ணீர் வருகிறதோ, பெய்கின்ற மழையை, அத்தனையையும் தாங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு கரையை உயர்த்துகின்ற ஒரு திட்டத்தைத் தெரிவித்தார்கள். 30 கோடி ரூபாயிலே ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அதற்காக உயர்மட்டக் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு, 10 கோடி ரூபாய் அதற்காகப் பரிந்துரை செய்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை உடனடி யாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். சண்முகம்] [1987 மார்ச் 28

உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று வந்திருக்கிற பெருந்தலைவர்கள் மக்கள் வரிப் பணத்தைப் பாழாக்கிக் கொண்டிருக்கிறார்கள். காவேரிப் பாக்கம் ஊராட்சிமன்றத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு அரசு அளித்த ஓர் உத்தரவை தவறான முறையில் பயன்படுத்தி யிருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்களுடைய தேவையைக் கருதி இரண்டு மாதங்களுக்கான குழாய் விளக்குகள் வாங்கிக் கொள்ளலாம் என்று அரசு அறிவித்தது; ஆனால் திராவிட முன்னேற்றக் கழக பெருந்தலைவர் கிட்டத்தட்ட 3 இலட்சம் ரூபாய் பெருமானமுள்ள குழாய் விளக்குகளை வாங்கியிருக்கி றார்கள். வாங்கி இருக்கிற விளக்குகளில் 10 சதவிகிதம், 15 சத விகிதம் கூட . . . (குறுக்கீடு) (கூச்சல்).

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** இன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் பேசுகிறார்கள். கொஞ்சம் குறுக்கீடுகளைக் குறைத்துக் கொண்டால் நன்றாக இருக்கும். (குறுக்கீடு) உட்காருங்கள். உங்கள் சார்பில் உறுப்பினர் பேசும்போது பதில் சொல்வார். (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.

**திரு. ஆ. நடராசன்:** எது வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருக்கலாமா? எந்தப் பெருந்தலைவர் என்று சொல்ல வேண்டும். அதை எங்கேயும் பண்ணுங்கள். ஆதாரத்தைக் காட்டிவிட்டுச் சொல்ல வேண்டும்.

**திரு. என். சண்முகம்:** ஆதாரம் இருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானமாக வந்து அவையில் இருக்கிறது. (குறுக்கீடு) (கூச்சல்) காவேரிப்பாக்கம் ஒன்றியத்திலே திராவிட முன்னேற்றக் கழகப் பெருந்தலைவரால் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள . . . . (குறுக்கீடு).



1987 மார்ச் 28]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** சபையிலே இல்லாதவர்களைப் பற்றிப் பேசவேண்டாம். (குறுக் கீடு) உறுப்பினர் குறிப்பிட்டுச் சொன்ன அந்தக் குற்றச் சாட்டுகள் நீக்கப்படுகின்றன. அவையிலே இல்லாதவர்களைப் பற்றி தயவுசெய்து பேசவேண்டாம். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். (குறுக்கீடு) ஏற்கனவே இருந்தால் அப்படியே இருக் கட்டும். நீங்கள் புதிதாகப் பேசுங்கள்.

**திரு. என். சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 3 இலட்சம் ரூபாய்க்கான குழாய் விளக்குகளைப் பெற்று இருக்கிறார்கள். அரசினுடைய ஆணை—இரண்டு மாதத்திற்கான குழாய் விளக்குகள் தான் வாங்க வேண்டும் என்று உத்தரவு. அப்படி இரண்டு மாதத்திற்கான குழாய் விளக்குகள் 3 இலட்சம் ரூபாய் என்றால் ஒரு ஆண்டுத் தேவை 40 இலட்சமா? ஊராட்சி நிதி பொது நிதி, பாழாக்கப்படுகிறது. அப்படி பாழாக்கப்படுகிறபோது பெருந்தலைவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், அப்படி கொள்ளை யடிக்கப்பட்ட அந்தப் பணத்திலிருந்து ஒரு . . . . (குறுக்கீடு)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நடராசன், சொல்லுங்கள்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்த ஊராட்சி ஒன்றியத்தில், எவ்வளவு ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். அது ஒன்று. இரண்டாவது அவர் குழாய் விளக்குகள் வாங்கி யிருக்கிறார்கள் என்று சொல்கிறார். அதிலே என்ன மோசடி நடந்திருக்கிறது என்று தெளிவாகக் குறிப்பிட வேண்டும். சபை யிலே, இப்படி குற்றச்சாட்டுக்களைக் கூறுவதற்கு, இல்லாதவர் களைப் பற்றிக் கூறுவதற்கு அனுமதித்தால் நாங்களும் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

**திரு. என். சண்முகம்:** மாண்புமிகு துணைப் பெருந்தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் 3 இலட்சம் ரூபாய்க்கான குழாய் விளக்குகள் வாங்கப்பட்டிருக்கின்றன,

[திரு. என். சண்முகம்] [1987 மார்ச் 28

இரண்டு மாதத் தேவைக்கு. அது என்னுடைய தொகுதி என்பதையும், எனதுடைய சொந்த ஊர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அரசினுடைய ஆணைப்படி இரண்டு மாதத்திற்கான குழாய் விளக்குகள்தான் வாங்கப்பட வேண்டும். ஆனால் முறை தவறி மூன்று இலட்சம் ரூபாய்க்கான குழாய் விளக்குகள் வாங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி. . . . . . (குறுக்கீடு—கூச்சல்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குற்றச்சாட்டு இல்லை. தேவைக்கு மேலே வாங்கியிருக்கிறார்கள் என்று சொல்கிறார். அரசாங்க ஆணை மீறப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். (குறுக்கீடு, கூச்சல், குழப்பம்).

(பிற்பகல் 12-30)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** குற்றச்சாட்டு சொல்வதற்கு முன்கூட்டி எழுதிக் கொடுக்க வேண்டாமா? அதுமட்டுமல்லாமல் . . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுபற்றி கால் அட்டென்சன் வரும்போது அமைச்சரே ரிப்ளை செய்து விஷயம் பூராவும் ரெக்கார்டில் இருக்கிறது. திரும்பத் திரும்ப அதையே பேச வேண்டாம். சண்முகம் பேசி முடித்து விடுங்கள். (குறுக்கீடு).

**திரு. என். சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், அரசாங்கத்தினுடைய ஆணைப்படி 2 மாதத்திற்கான குழாய் விளக்குகள் வாங்குவதற்குப் பதிலாக ஓர் ஆண்டுக்கான விளக்கு களை வாங்கியிருக்கிறார்கள் என்பதுதான். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களைப் பற்றி அல்ல. நீங்கள் உட்காருங்கள்; தொடர்ந்து நீங்கள் பேசுங்கள்.

**திரு. என். சண்முகம்:** கைத்தறியைப் பொறுத்தவரை அதனுடைய வளர்ச்சிக்கு இன்னும் அதிகப்படியான உதவிகளைத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்



1987 மார்ச் 28] [திரு. என். சண்முகம்]

ஏனென்றால், இன்றையதினம் கைத்தறி நெசவாளர்களின் நிலைமை சங்கடமான ஒரு சூழ்நிலையாக உருமாறி வருகிறது. கடுமையான வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல் நெசவுத் தொழிலும் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், மத்திய அரசாங்கத்தை அணுகி, நம்முடைய நிலைமைகளை உடனடியாக எடுத்துச் சொல்லி, விவசாயத்திற்கு அடுத்தபடியாக நெசவுத் தொழி லாளர்கள் நிறைந்து இருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக் கூறி, இப்போது கொடுத்திருக்கும் தள்ளுபடியை இன்னும் அதிகரித்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத், பேசுங்கள் (குறுக்கீடு) அவர்களே சொல்லிவிட்டார்கள். இன்னும் நிறைய பேர் பேச வேண்டியது இருக்கிறது. நீங்கள் முதலிலேயே பேசி விட்டீர்கள் (குறுக்கீடு). நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். (கூச்சல், குழப்பம்) ஒரு குற்றச்சாட்டு கால் அட்டென்ஷனாக வந்து, அதற்கு அமைச்சர் சொன்ன பதிலை அவர் இங்கே சொல்லலாம் இல்லையா? (குறுக்கீடு) வந்த பதிலைச் சொல்கிறார் அவர். (குறுக்கீடு) இதே பிரச்சினை கவன ஈர்ப்புத் தீர்மானமாக வந்து சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். அதை இப்போது அவர் சைட் பண்ணுகிறார். நீங்களும் அந்த மாதிரி கால் அட்டென்ஷன் கொண்டு வந்து அமைச்சர் பதில் சொல்லியிருந்தால், அமைச்சர் இந்த மாதிரி பதில் சொல்லியிருக்கிறார், அரசு விதிகள் மீறப்பட்டிருக்கின்றன என்று நீங்கள் சொன்னால் நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) அவர் ஸ்பெசிபிக்காகத்தான் சொல்கிறார். காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றிச் சொல்கிறார். (குறுக்கீடு) இந்த மாதிரி அமைச்சர் இடத்திலே பதில் வாங்கி, அரசு ஆணையை மீறி வாங்கி இருக்கிறார்கள் என்று அமைச்சரே சொன்னதாக அவர் சொன்னார். அதிலே தவறு இருந்தால் நாளைக்குச் சொல்லுங் கள். (குறுக்கீடு) இந்த இந்த இடங்களில் அரசு ஆணை மீறப்பட்டிருக்கிறது, அரசுத் தரப்பிலே தெளிவாக ஒத்துக் கொண்டார்கள் என்று டிபேட்டிலே சைட் பண்ணிப்

[பேரவைத் துணைத் தலைவர்] [1987 மார்ச் 28

பேசுவதில் தப்பு இல்லை. ஓர் ஊராட்சி ஒன்றியம் என்று சொல்லிப் பேசினார்கள். (குறுக்கீடு) நான் சொல்வதை நீங்கள் புரிந்துகொள்ள மாட்டீர்களா? (குறுக்கீடு) அதனுடைய நிலை, உறுப்பினர் சொல்கிறார், குழாய் விளக்குகள் வாங்கியது சம்பந்தமாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து துறை அமைச்சரே அரசாங்கத்தினுடைய விதிகள் மீறப்பட்டிருக்கின்றன, என்று கூறி, நடவடிக்கை எடுக்க வேண்டிய விவரங்களையெல்லாம் சொல்லி, அதெல்லாம் ரெக்கார்டில் இருக்கிறது. அதைத்தான் உறுப்பினர் டிபேட்டிலே சைட் பண்ணிப் பேசுகிறார். (குறுக்கீடு) அதைப்பற்றி நாங்களும் பேசுவோம் என்று நீங்கள் சொல்வது எப்படி சரியாகும்? (குறுக்கீடு) ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது அது பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடு) அதுமாதிரி சொன்னால், அனுமதிக்கலாம். எனவே அதுமாதிரி விவரமாகச் செல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் அப்துல் சமத், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்ததற்கு முதலாவதாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றையதினம் பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ்நாட்டில், நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றி இருக்கிறார்கள். அதிலே கலந்துகொண்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தின் சார்பாக ஒரு கருத்தை வைத்திருக்கிறார்கள்.

இந்த இரண்டாவது மின் நிலையத்திலிருந்து உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதும் தமிழகத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மேடையிலேயே வைத்தார்கள் என்பதைத் தொலைக் காட்சியின் மூலமாக நாம் கண்டோம். ஆனால், இது பற்றி பாரதப் பிரதமர் அவர்கள் என்ன பதில் அளித்தார்கள் என்பதை மறுநாள் காலை பத்திரிகையிலாவது பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தாவது வரும் என்ற ஆவலோடு எதிர்பார்த்த நான், அதுபற்றி திட்டவட்டமாக பதில் எதுவும் இல்லையே



1987 மார்ச் 28] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

என்று வருந்தினேன். ஏனென்றால் இரண்டாவது மின் திட்டம் நெய்வேலியில் தொடங்கப்படும்போதே, அதிலிருந்து உற்பத்தி செய்யப்படக்கூடிய அவ்வளவு மின்சாரத்தையும் தமிழகத்திற்கு வழங்க வேண்டும்—வழங்கப்படும் என்ற ஒரு வாக்குறுதி இன்றல்ல—இரண்டாவது சுரங்கத்திற்கு அனுமதி வழங்கப்பட்ட—சற்றேறப்ப 8 அல்லது 9 ஆண்டுகளுக்கு முன்பாகவே மத்திய அரசு சார்பாக வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கப்பட்டிருக்கக்கூடிய நேரத்தில், அது தொடங்கப்படக்கூடிய ஒரு நன்னாளில் நம்முடைய முதல்வர் அவர்கள் அதை நினைவூட்டி அதை வேண்டுகோளாக வைத்திருக்கும்போது பாரதப் பிரதமர் அவர்கள் தம் பேருள்ளத்தின் அடிப்படையில் அந்த வாக்குறுதியை வழங்கியிருப்பாரானால், தமிழகத்திற்கு எவ்வளவோ வாய்ப்பாக அது அமைந்திருக்குமே என்றுதான் நான் எண்ணுகிறேன்.

உண்மையிலேயே அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திற்காக நாம் ஏறத்தாழ 6,000 கோடி ரூபாயைச் செலவழிக்க இருக்கிறோம். அதிலும், நம்முடைய நாட்டினுடைய மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்ய மூன்றில் ஒரு மடங்குத் தொகையை—ஏறத்தாழ ரூ. 2,000 கோடியை அதற்காக ஒதுக்கியிருக்கிறோம் என்ற குறிப்பினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நமக்குத் தந்திருக்கிறார்கள்.

நாடு தழுவிய முறையில் நாம் செய்ய வேண்டிய எல்லா விதமான முன்னேற்றத் திட்டங்களுக்காகவும் ரூ. 6,000 கோடி ஒதுக்கப்படக்கூடிய நேரத்தில் மின் உற்பத்திக்காக மட்டுமே நாம் ரூ. 2,000 கோடியை ஒதுக்குகிறோம் என்கிறபோது, நாம் அதற்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறோம், அதன் இன்றியமையாத் தன்மையை நாம் எந்த அளவுக்குப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்பதை என்னாலும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனாலும் கூட அந்த ரூ. 2,000 கோடியைச் செலவழிப்பதற்கு பதிலாக நாம் நெய்வேலி மின்நிலையத்திலிருந்து உற்பத்தியாகக்கூடிய மின்சாரம் அனைத்தையும் நாமே பெறுவதற்கு ஏன் ஒரு தீவிரமான முயற்சியை அரசு மேற்கொள்ளக் கூடாது என்றுதான் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் நம்முடைய

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 மார்ச் 28

கையிலேயே வெண்ணெயை வைத்துக் கொண்டு நாம் ஊர் பூராவும் நெய்க்காக அலைந்து கொண்டிருக்கிற காலம் எவ்வளவு காலம். நெய்வேலி இப்போது நன்றாக இருக்கிறது.

அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தமிழகத்தினுடைய வளத்தைப்பற்றி தமிழகத்தின் பட்டி தொட்டிகளிலெல்லாம் எடுத்துச் சொல்லுகிறபோது நம் நெய்வேலி நிலக்கரியையும் சேலம் இரும்பு உருக்கையும் சரியான முறையில் பயன்படுத்தினால் நம்முடைய தமிழகத்தினுடைய பொருளாதாரமே மிகச் செழித்துவிடும் என்ற தம் ஆசை உணர்ச்சியை அந்தக் காலத்திலேயே வெளியிட்டார்கள். அவர்கள் எண்ணிப் பார்க்காத பெட்ரோல் வளம்கூட இப்போது தஞ்சைத் தரணியின் ஒரு பகுதியில் நமக்குக் கிடைக்க இருக்கிறது. அவருடைய காலத்தில் எதிர்பார்க்காத எண்ணெய் வளம்கூட இப்போது நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை வலுப்பட்டிருக்கிறது. இத்தனை இருந்தும்கூட நாம் பெற வேண்டிய நன்மைகளை, வளங்களை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோமா என்பதுதான் நாம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டியதாகும் என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

தற்போது உற்பத்தி செய்யப்படக்கூடிய மின்சக்தியில் 28 சதவீதம் மின்சாரத்தை நாம் நம்முடைய அண்டை மாநிலமான ஆந்திரத்திற்குத் தர வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது அது தேவைதானா என்பதைப்பற்றி மத்திய அரசு ஆராய்வதற்கு நம்முடைய தமிழக அரசு கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனென்றால் ஏற்கெனவே ஆந்திரம் ஏறத்தாழ தன்னிறைவை மின் துறையிலே பெற்றிருக்கிறது. அது தன்னுடைய மின் தேவையைப் பொறுத்தவரையில தன்னிறைவைப் பெற்றதோடு தன்னுடைய மிகுதி மின்சாரத்தை ஒரிசாவுக்கு விற்று வருமானத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கிற நேரத்தில் நமக்குப் போதுமான மின்சாரம் இல்லாமல் கஷ்டப் படுகிறோம். அதாவது ஏறத்தாழ 10,000 தொழிற்சாலைகளுக்கு சென்ற ஆண்டு மாத்திரம் நாம் உயர் அழுத்த மின்சாரத்தைத் தர இயலவில்லை என்ற நிலையில், 40 சதவீதம் மின்வெட்டை அமுல்படுத்தியிருக்கிறோம். எனவே இப்படிப்பட்ட நேரத்தில் இரண்டாவது மின் நிலையத்தில் உற்பத்தி செய்யக் கூடிய



1987 மார்ச் 28] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கே தந்தாக வேண்டும் என்ற ஒரு வற்புறுத்தலை மத்திய அரசிடம் நாம் வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்

(பிற்பகல் 12-40)

ஒரு நல்ல செய்தி நம்முடைய காதிலே படுகிறது. தமிழ்நாடு மின் நிறுவனத்தின் உற்பத்தி அகில இந்திய கண்ணோட்டத்திலே பார்க்கும்போது மிகச் சிறப்பான அளவிற்கு இருக்கிறது என்று சென்ற ஆண்டு மத்திய அரசு நம்முடைய தமிழ்நாடு மின்சார நிறுவனத்திற்கு பாராட்டுப் பரிசை வழங்கியிருப்பதோடு, இந்த ஆண்டுக்கான பரிசை பெறத்தக்க முறையில் இந்த நிறுவனம் செயல்பட்டிருக்கின்றது என்பது ஒரு நல்ல செய்தி. ஆனால் எந்த அளவு செயல்பட்டிருக்கிறது, எந்த அடிப்படையில் எந்த கச்சாப் பொருளைக் கொண்டு செயல்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கும்போது இதற்கான நிலக்கரி வடக்கேயிருந்து நமக்குத் தரப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அப்படி தரப் பட்டிருக்கக்கூடிய நிலக்கரியில் ஏறத்தாழ 47 சதவீதம் சாம்பலாகவே தரப்பட்டிருக்கிறது என்று புள்ளிவிவரம் தெரிவிக்கிறது. இந்த சாம்பலுக்கும் சேர்த்து நாம் பணம் தந்திருக்கிறோம். அது மட்டுமல்லாமல் ஒரு மின் நிலையத்தில் முப்பதாயிரம் டன் எடையுள்ள கற்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன என்றால் அது எங்கேயிருந்து குவிக்கப்பட்ட சேமிப்பு என்றால், அவர்கள் அனுப்பி, நாம் இறக்குமதி செய்து, நம்முடைய மின் நிலையங்களுக்கு பயன்படுத்தியது போக இருந்தவைகள். அவற்றையெல்லாம் மின்சார உற்பத்தி நிலையத்திலே நுழைத்திருந்தால் அத்தனையும் கெட்டு பழுதாகி இருக்கக்கூடிய அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கும். அப்படிப்பட்ட பொருளை வடக்கேயிருந்து நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் ஐந்தாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ஆஸ்திரேலியா விலிருந்து நாம் நிலக்கரி இறக்குமதி செய்து அதற்கான வரியை கொட்டியும் கூட ஒரு கப்பலில் இறக்குமதி செய்த நிலக்கரி யிலிருந்து ஒரு கோடி ரூபாய் இலாபமாகப் பெற்றிருக்கிறோம் என்று கணக்கு கிடைக்கும்போது ஏன் அந்த முறையில் அந்நிய நாட்டிலிருந்து நல்ல நிலக்கரியை இறக்குமதி செய்து இன்னும் மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்குத் தேவைப்படும் நிலக்கரியைப் பெறக்கூடாது, அதற்கான அனுமதியை ஏன் மத்திய

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 மார்ச் 28

அரசிடத்திலே கேட்டுப் பெறக்கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆனால் ஒன்று தெரிய வருகிறது. நெய்வேலி நிலக்கரியைத் தோண்டுவதற்கு தமிழக அரசு சார்பாக மத்திய அரசுக்கு தரப்பட்ட உரிமம் காலாவதியாகி இப்போது மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டிய நிலையிலே உள்ள காலக் கட்டத்திலே, இதுவரையில் புதுப்பிக்கப்படாமல், தமிழ் நாட்டில் உள்ள பகுதியில் இருந்து தோண்டப்படக்கூடிய நிலக்கரியிலிருந்து பெறக்கூடிய வருமானத்தை மத்திய அரசு பெற்று வருகிறது. அவர்களே தரக்கூடிய புள்ளி விவரத்தின்படி, இந்த நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனிலிருந்து 90 கோடி ரூபாய் லாபம் மத்திய அரசுக்குக் கிடைத்திருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை பாரதப் பிரதமர் கூட குறிப்பிட்டு, பொது நிறுவனங்களுடைய நிர்வாகத்திலே தனி ஒரு எடுத்துக் காட்டு நிறுவனமாக நெய்வேலி இருக்கிறது என்று பாராட்டியிருப்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். நானும் என்னுடைய பாராட்டை வழங்க விரும்புகிறேன். ஆனால் இந்த 90 கோடியில் தமிழகத்திற்கு உரிய பங்கு என்ன என்பதைப் பற்றி தமிழகம் கேட்டதுண்டா அல்லது அதைப் பெறுவதற்கு முயற்சித்தது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி இதுவரை பங்கு கேட்கவில்லை என்றால் அதைக் கேட்டுப் பெற வேண்டும், வற்புறுத்திப் பெற வேண்டும் என்று தமிழக அரசை வலியுறுத்த விரும்புகிறேன். ஏனென்றால் மின்சாரம் நாம் அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய பகுதியாக இருக்கிறது. அதை உற்பத்தி செய்வதற்குரிய ஆற்றல் தமிழகத்திலே வளர்க்கப்பட்டிருக்கிறது. அதிலும் என்.எல்.சி. க்குக் கிடைத்திருக்கக் கூடிய பட்டறிவு, நுணுக்கமான அறிவு, இந்தியாவின் பிற மாநிலத்தில் இருந்து, ஒரிசா போன்ற மாநிலத்திலிருந்து நிலக்கரி ஆய்வு நடத்தி சுரங்கத்திலிருந்து நிலக்கரியைப் பெற்று மின் உற்பத்தியைத் தொடங்குவதற்கு உரிய அனுபவ அறிவை வாங்கக்கூடிய அளவிற்கு இருக்கிறது என்று சொல்லும்போது அதே அறிவை இன்னும் முனைப்பாகப் பயன்படுத்த மத்திய அரசு நெய்வேலியிலேயே மூன்றாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்ட உடனடியாக அனுமதி ஏன் தரக்கூடாது? அதை ஏன் நம்முடைய அரசு பேசக்கூடாது என்றுதான் கேட்கிறேன். இதையே நாம் பெறுவோமானால் கிட்டத்தட்ட மின் உற்பத்தியில் குறைந்த செலவில் நாம்



1987 மார்ச் 28] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

தன்னிறைவை அடைய முடியும், தமிழகத்தின் தொழில் வளத்தைப் பெருக்க முடியும். அதை இந்த அரசு மிக [illegible]மாக மத்திய அரசிடத்திலே பேசி, உறுதியோடு வற்புறுத்தி அந்த நியாயமாக நாம் பெற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு இந்த வரவு—செலவுத் திட்டத்தில் மகிழ்ச்சி அளிக்கக் கூடிய ஒரு அம்சம், மதுவிலக்கு—எதிர்பார்த்த அளவுக்கு [illegible], சாராயக் கடைகள் மூடப்பட்டிருக்கிற ஒரு அம்சமாகும். இதனால் ஏற்படக்கூடிய இழப்பு சரிக் கட்டப்பட வேண்டுமென்று சொல்லும்போது, நம்முடைய நிதி அமைச்சரவர்கள் மத்திய அரசிடத்திலே இதைப்பற்றி நாங்கள் கேட்டிருக்கிறோம், ஆனால் இந்த ஆண்டினுடைய வருமானத்தை இதற்கு [illegible] தருவதற்குரிய ஒரு எடுத்துக்காட்டான வருமானமாக [illegible] வேண்டுமென்பதுபற்றி மத்திய அரசு வேறு கருத்து கொண்டிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டு [illegible] பட்டிருக்கிறோம். நம்முடைய அரசியலமைப்பின் [illegible] பிரிவில் டைரக்டிவ் பிரின்சிபிளில் உள்ள [illegible] முக்கியமான கொள்கையைத்தான் தமிழ்நாடு [illegible] முன்வந்திருக்கிறது. இப்படி முன் வந்திருக்கும் மா[illegible]க்கு மத்திய அரசு எந்த அளவுக்கு தாராளத் [illegible] பொருளாதார உதவி தருகிறார்களோ அதைப் பொறுத்துதான் இந்தியா முழுவதும் காந்திஜி கனவு கண்டதுபோல [illegible] அமுல்படுத்துவதற்கு உற்சாகம் ஏற்படும் [illegible] [illegible] நிதி அமைச்சரவர்கள் [illegible] போதாது. இதற்காக [illegible] எதிர்க் கட்சித் தலைவர்களை, குறிப்பாக [illegible] நம்பிக்கை [illegible] [illegible] தமிழ் நாட்[illegible] [illegible]

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 மார்ச் 28]

[illegible] வரவு—செலவை ஈடுகட்டுவதற்காக ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அளவுக்கு சலுகைகளை அளித்துவிட்டு, [illegible] கோடி ரூபாய்க்கு வரி விதிப்பை விதித்திருக்கிறார்கள். [illegible] அரசுக்கு ஏற்படக்கூடிய ஒரு நெருக்கடியான நிலைமை என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் எதற்கு வரி விதிப்பு என்பதிலே இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தி இருக்க வேண்டுமென்பது என்னுடைய கருத்தாகும். குறிப்பாக, 30 இலட்சம் வீடுகள் கட்ட வேண்டுமென்ற திட்டத்தை அமுல் நடத்துவது பற்றிப் பேசும் போது, அது 30 இலட்சமா அல்லது 3 இலட்சமா என்ற ஐய உணர்வுகளை எல்லாம் இந்த வரிசையில் உள்ள தலைவர்கள் தெரிவித்துக்கொண்டிருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில் எத்தனை இலட்சம் என்பதைவிட அந்த இலட்சியத்தின் அடிப்படையில் உள்ள விருப்பிய எண்ணத்தை நான் வரவேற்கிறேன். அது இலட்சம் வீடுகளா, அதில் ஒன்று குறைவா அல்லது ஆயிரம் மேலா என்பது பற்றிக் கவலையில்லை. ஏழைபாழைகள் [illegible]ளுக்கென இருக்கை பெற்று வாழ வேண்டுமென்ற அந்தக் [illegible]கையை நிறைவேற்றுவதற்கு அரசு எடுத்துக் [illegible]ருக்கும் முயற்சிகளையும், ஒதுக்கியுள்ள தொகையையும் [illegible] வரவேற்கிறேன். ஆனால் இந்த வீடுகள் கட்டுவதற்குப் [illegible] செங்கல்லுக்கும், மரத்திற்கும், ஆஸ்பெஸ்டா[illegible] வரி விதித்திருக்கிறீர்கள், [illegible] கொள்கைதானா [illegible] எண்ணிப் பார்க்க வேண்டும். இதைத் திரும்ப ஒரு [illegible]விட்டால், அரசாங்கத்தினுடைய திட்டச் செலவையே [illegible]க அமைந்துவிடும் என்பதை எண்ணிப் பார்த்து, [illegible] செங்கல், மரம் ஆகியவற்றின்மீது 5 சதவிகிதத்தி[illegible] 8 சதவிகிதமாக அதிகரிக்கும் வரிகளைக் குறைக்க [illegible]மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[illegible]ம் ஒன்று அடுத்துள்ள மாநிலங்களிலே மோட்டார் வாகன விற்பனை வரி குறைவாக உள்ளதால் இங்கே உள்ளவர்கள் கூட அங்கே சென்று, [illegible] ரூபாய், [illegible] ரூபாய் குறைவாக [illegible] என்று எண்ணி, அங்கேயிருந்து வாங்கி [illegible]யைச் சரிக்கட்ட வேண்டுமென்ற நோக்கத்தில், [illegible] மாநிலங்களில் இருப்பதுபோல் விற்பனைக் குறைத்திருக்கிறீர்கள். [illegible] வரவேற்கத்தக்கது. இதனால் தமிழ்நாட்டி[illegible] பெரும்



1987 மார்ச் 28] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

பயன் ஏற்படாத அளவுக்கு மத்திய அரசின் வரி விதிப்புக் கொள்கை மூலம் ஒவ்வொரு வாகனத்திற்கும் 6,000 ரூபாய் [illegible] ரூபாய் அதிகரிப்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்பு[illegible] மருந்துகளுக்கு பல முனை வரி விதித்திருப்பது பாதகமா[illegible] என்று அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் சொல்[illegible] காட்டுகிறார்கள். அது பொது மக்களுக்கு இன்றியமையா[illegible] பொருளாக இருந்துவரும் காரணத்தால் அந்தக் கோரிக்கையில் உள்ள நியாயத்தை நீங்கள் கண்டறிந்து ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இன்னொன்று மத்திய அரசினுடைய பரிந்துரை[illegible] ஏற்ப ஓரேவிதமான வரி விதிப்பு இருக்க [illegible] என்ற திட்டத்தின் அடிப்படையிலே சில [illegible] மீது வரி அதிகரித்து இருப்பதாக நீங்கள் [illegible] இருக்கிறீர்கள். குறிப்பாக விலை மதிப்புள்ள [illegible] 10 சதவிகிதம் வரி விதிப்பை இன்று அறிவித்திரு[illegible] ஆனாலும் இந்த விலைமதிப்புள்ள கற்களுக்கு [illegible] ராஜஸ்தானிலே 2 சதவிகிதம்தான் வரி விதிக்கப்[illegible] மராட்டியத்தில் 3 சதவிகிதம்தான் வரி விதிக்கப்படுகி[illegible] நிலையில் மற்ற 3 மாநிலங்களிலே 2 சதவிகிதம் [illegible] சதவி[illegible] இருக்கும்போது, ஏற்கெனவே இருந்த 5 சதவிகிதத்தை நீங்கள் 10 சதவிகிதமாக ஏற்றியிருப்பது மத்திய அரசி[illegible] பரிந்துரையின் அடிப்படையில்தான் என்பதை என்னால் [illegible] கொள்ள முடியவில்லை. விலை மதிப்புள்ள கற்கள் [illegible] [illegible] தமிழகத்திலே [illegible] இருக்கின்றன. [illegible] [illegible] [illegible] கூடிய கற்கள் [illegible] தொழிலிலே ஈடுபட்டு [illegible] [illegible] [illegible]க்கும். [illegible] கொண்டு செல்ல [illegible] கூடாது என்று நான் [illegible] ஆவன செய்ய வேண்டும் [illegible] கூடிய சுருக்கமான நேரத்தில் [illegible] விரும்புகிறேன்.

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1987 மார்ச் 28

மாவட்டங்களை நிர்வாக வசதி கருதி பிரிப்பது வரவேற்கத் தக்கது. இதை இந்த அரசினுடைய கொள்கையாக பல நேரங்களில் அறிவித்து இருக்கின்றார்கள். தஞ்சை மாவட்டத்தில் கூட தஞ்சையைப் பொறுத்து நாகப்பட்டினத்தை தலைநகராமாகக் கொண்டு காயிதே மில்லத் மாவட்டமாக அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு கூட அமுல்படுத்தப்படவில்லையே என்ற வேதனை எனக்குண்டு. இந்த அறிவிப்பு வந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. நேற்றைய தினம் நம்முடைய நாவலர் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் பேசும்போது அல்லது சட்டமன்றத்திலே சொல்லும்போது, இந்த ஆண்டு கூட ஆற்காடு மாவட்டத்திற்கு முன்னுதாரணம் தரப் படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஒரு சமயம் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் இருப்பதனாலே அதற்கு முன் னுதாரணம் சொல்லிக்கூட கேட்கலாம். நான் கேட்க விரும்பு வதெல்லாம் உங்களுடைய அரசு அதிகாரிகளுடைய பரிந்துரையின் மீது கூட அப்படி செய்யக்கூடும். நீங்கள் சொல்லியிருக்கக் கூடிய வரிசையைப் பார்க்கும்போது வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம், திருச்சி, தஞ்சை, கடைசியாக தஞ்சை என்று போட்டிருப்பது என்பதைப் பார்த்தால் இது 3 ஆண்டு அல்லது 4 ஆண்டுகள்கூட ஆகிவிடுமோ, அதற்கு இடையிலே பொதுத் தேர்தல் வந்து விடுமோ என்ற ஐய உணர்வு ஏற்படுகிறது. நான் உங்களிடத்திலே பணிவோடு கேட்டுக் கொள்வது காயிதே மில்லத் மாவட்டத்தை இந்த ஆண்டே அமைத்துக் கொடுத்தால் நான் நன்றி உள்ளவனாக இருப்பேன். நாட்டு மக்களும் உங்களைப் பாராட்டுவார்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், அரசு அந்தப் பெருந்தலைவரை மதித்து அவரை கண்ணியப்படுத்துகின்ற முறையில் அவர் இந்த நாட்டிற்கும், தமிழ் மொழிக்கும், இந்த சட்ட மன்றத்திற்கும், பொது மக்களுக்கும் ஆற்றியிருக்கக்கூடிய ஒரு பொதுப் பணியை பாராட்டக்கூடிய பெரு உள்ளத்தோடு மாவட்டத்திற்கு அவர் பெயர் வைப்பது என்று அறிவிப்பு செய்த காலத்திலேயிருந்து, இந்த நாட்டிலே மெத்த துரதிருஷ்டவசமாக, அவர் பெயரால் மாவட்டம் அமைக்கக்கூடாது என்று அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய இடங்களிலே உள்ள சுவர்களிலே அவர்களைப் பற்றி மிகக் கீழ்த்தரமான வசனங்களைக் கொண்டு எழுதி



1987 மார்ச் 28] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

யிருக்கின்றார்கள். அதைத் தடுப்பதற்கு உரிய அதிகாரம் நம்முடைய காவலர்களுக்கு இருக்கின்றது. ஆனால் என்ன காரணத்தினாலோ அப்படி எழுதப்படுவதைத் தடுக்காமலும், எழுதப்பட்ட வசனங்களை மறைக்காமலும் விட்டு வைத்திருப்பது சரியல்ல. அந்த வட்டாரத்திலே இருக்கக்கூடிய அந்த சமுதாய மக்களின், காயிதே மில்லத் அவர்களை மதிக்கக்கூடிய பொது மக்களின் சில உணர்வுகளைத் தூண்டுவதாக இருக்கின்றது. ஆகவே இதைத் தடுக்க தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்ற வாரம் நாகப்பட்டினம் சென்று இருந்தபோது பார்த்தேன். அந்தப் பகுதியில் உள்ள சுவர் முழுவதும் இதை எழுதி இருந்தார்கள். இதை எழுதியவர்கள் யார் என்பது அரசுக்குத் தெரியும். அப்படி எழுதியவர்களுக்கு இந்த நாட்டு மக்களுடைய ஆதரவும் இல்லை என்பதும் எனக்குத் தெரியும். இதைப் பார்க்கக்கூடிய இளைஞர்கள் உணர்ச்சி வசப்பட்டு வேறுவிதமான வசனங்களை எழுத ஆரம்பித்தால் அது இந்த நாட்டில் ஒரு நல்ல பண்பாட்டை உண்டாக்காது என்பதை சொல்லிக்கொள்கிறேன். ஆகவே நான் அரசினிடத்திலே வேண்டிக் கொள்கிறேன். இந்த மாவட்டத்தை நீங்கள் தயவுசெய்து உடனடியாக அமைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில் இப்படிப்பட்ட தப்புப் பிரச்சாரங்கள் நடக்காமல் இருப்பதற்கு ஒரு உத்தரவை அங்கே இருக்கிற காவல் துறையினருக்கு பிறப்பிக்க வேண்டும்.

அடுத்து, சப்-இன்ஸ்பெக்டர் தேர்வு பற்றி சென்ற ஆண்டு பட்ஜெட் உரையின்போது கேட்டபோது மாண்புமிகு நாவலர் அவர்கள் அதே இடத்தில் இருந்து கொண்டு இன்னும் 3 மாத காலத்தில் ஆணைகள் பிறப்பிக்கப்படும் என்று உறுதிமொழி வழங்கினார்கள். அவர்கள் அப்படிச் சொல்லி ஓராண்டு ஆகிவிட்டது. அந்தத் தேர்வுக்குச் சென்றவர்கள் பலருக்கு வயது வரம்பு கடந்துவிட்டது. ஆணை வரும்போது வயது இருந்து விட்டால் அவர்களைத் திரும்ப அனுப்புவார்களோ என்கிற கவலை அந்த இளைஞர்களுக்கு வந்திருக்கிறது. இளைஞர்களாக இருக்கும் போது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வேலைக்கான ஆணைகள் வரும்போது முதியவர்களாக ஆகி விடுவார்களோ என்கிற அச்சம்

உணர்வு அந்த இளைஞர்களுக்கு இருப்பதால் அதற்கான உத்தரவை தக்க காலத்தில் வழங்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். வணக்கம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்சினை குறித்து சொல்ல விழைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதத்தின் போது என்ன ஒழுங்குப் பிரச்சினை?

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் உறுப்பினர்களாக இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. குமரி அனந்தனும், திரு. இராமசாமியும் காங்கிரஸ் கட்சிக்கு மாறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவைத் தலைவருக்கு அதுபற்றி தகவல் வந்தால் உரிய நடவடிக்கை எடுப்பார்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை அவை முன்னவர் மாண்புமிகு நாவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு அதன்மீது இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வரவு செலவுத் திட்டத்திலே 90 கோடி ரூபாய்க்கு புதிதாக வரிகள் போடப்பட்டிருக்கின்றன. அதோடு 132 கோடி ரூபாய் பற்றாக்குறை பட்ஜெட்டாக இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே நான் முதல் முறையாகக் கேட்க விரும்புவது 132 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் சமர்ப்பித்திருக்கிறீர்களே, இதுவரை தமிழகத்திலே சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டுகளிலே இதுபோன்ற பெரிய அளவுக்கு பற்றாக்குறையாக போடப்பட்ட பட்ஜெட் எதுவுமே இல்லை, அந்த விதத்திலே இது இருப்பதிலே சாதனை தான். நான் கேட்க விரும்புகிறேன். 132 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை பட்ஜெட் கொடுத்திருக்கிறீர்களே, இந்தப் பற்றாக்குறையை இந்த அரசு எப்படி சமாளிக்கப் போகிறது? இதற்கு என்ன வருவாய் வழி என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.



அவை முன்னவர் மாண்புமிகு நாவலர் அவர்கள் இதற்குப் பதிலளிக்கும்போது இது குறித்து சொல்வாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். காரணம் 90 கோடி ரூபாய்க்கு ஏற்கெனவே வரி போட்டிருக்கிறீர்கள். அதுமட்டு மல்லாமல் வரி போடுவதற்கு முன்பே எவ்வளவோ கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. பால் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. சர்க்கரை விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. தண்ணீர் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. வீட்டு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. பதிவுக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆக, இவைகள் எல்லாம் பட்ஜெட்டிலே காட்டப்படாத வரிகள். எனவே, 90 கோடி ரூபாய்க்கான வரிகள் பட்ஜெட்டிலே போடுவதற்கு முன்னாலேயே பல கோடி ரூபாய்க்கான வரிகள் போடப்பட்டுள்ளன. எனவே, இன்றைக்கு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். 132 கோடி ரூபாய்க்கான பற்றாக்குறையை இந்த அரசு எந்த வருவாயின்மூலம் சரிக்கட்டப் போகிறது? அப்படியானால் என்ன பொருள் மீது மீண்டும் நீங்கள் வரி போடப் போகிறீர்கள்? ஏற்கெனவே மத்திய அரசு தபால் கட்டணம், ரெயில் கட்டணம் போன்றவற்றை உயர்த்தி யிருக்கிறது. ஏழையெளிய மக்களைப் பாதிக்கின்ற அளவில் வரியை நீங்கள் போட்டிருக்கிறீர்கள்.

அதுபோல் திட்டக் குழுவும், பிரதமரும் நம்முடைய [illegible]த்திற்குத் தேவைப்படுகிற 86 கோடி ரூபாயை சிறப்பாகத் தந்தால் நிலைமையை சமாளிக்கலாம் என்று அவை முன்னவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். முஸ்லீம் லீக் உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். பாரதப் பிரதமர் நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்தை ஆரம்பித்து வைக்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டிருக் கிறார்கள். அங்கே உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதும் தமிழகத்திற்குத் தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அதுகுறித்து தினமணி போன்ற பத்திரிகைகளில் செய்தி [illegible] முதலமைச்சருடைய பேச்சுக்கு பதிலே இல்லை என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள். இதற்கே பதில் இல்லையே, 86 கோடி ரூபாய் வேண்டுமென்று கேட்டால் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? திட்டக் குழு என்ன பதில்

சொல்லப் போகிறது? பிரதமர் அவர்கள் என்ன பதில் சொல்வார்கள்? கணவன், மனைவி உறவு என்றெல்லாம் சொல்கிறார்களே, என்ன காரியம் ஆகப் போகிறது? என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? சபையில் இல்லாமல் கேரளாவிற்குப் போய் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக நீங்கள் பேசினால்கூட 86 கோடி ரூபாய் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

அடுத்து, முக்கியமான உவர்நீர் மீன் ஆராய்ச்சி நிலையத்தைப் பொறுத்தவரையில் அதனை அமைக்க ஆந்திராவும், ஒரிசாவும், மேற்கு வங்கமும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றன. சென்னைக்குப் பக்கத்தில், முட்டுக்காட்டில் அதனை அமைக்க 90 ஏக்கர் நிலம் அதற்காக வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-00)

நல்ல வேளை, மத்திய சர்க்கார் அமைத்த ஒரு குழு சிபாரிசு ஒன்றினைச் செய்திருக்கிறது. ஆனால் என்ன கொடுமை என்று கேட்டால், எக்ஸ்டென்ஷன் ஆப் லேண்ட் கொடுக்கப் பட்டிருக்கிறதா என்றால் இல்லை. ஒரு வருட காலமாகக் கோப்பு தூங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த இடத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். உவர்நீர் மீன் ஆராய்ச்சி நிலையம் தமிழகத்திற்கு வர வேண்டியது ஆந்திராவிற்குப் போகின்ற அபாயம் இருக்கிறது; ஒரிசாவிற்குப் போகின்ற அபாயம் இருக்கிறது; மேற்கு வங்கத்திற்குப் போகின்ற அபாயம் இருக்கிறது. இப்படித்தான் கோச் பாக்டரி ஆந்திராவிற்குப் போனது. அசோக் லேலண்ட் பம்பாய்க்குப் போனது. இன்னும் சொல்லப் போனால் நேவல் அகாடமி கேரளாவிற்குப் போனது. இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். "தூங்காதே தம்பி தூங்காதே" என்று சொல்லிவிட்டு, சம்பந்தப்பட்டவர்கள் தூங்கலாமா? இது தமிழகத்தைச் சிரமத்தில் ஆழ்த்தாதா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இங்கே பேசிய எல்லா சகோதரர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். 90 கோடிக்கு வரி. நான் ஒத்துக்கொள்கிறேன், வரியில்லாமல் ஒரு சர்க்கார் இயங்காது. ஆனால் ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற விதத்திலே போடலாமா? வெல்லத்திற்கு வரி போடலாமா? உணவு தானியத்தின் மீது வரி போடலாமா?



செங்கல், மரம், ஆஸ்பெஸ்டாஸ் போன்றவற்றிற்கு வரி போட்டால் வீடு கட்டுவதைப் பாதிக்காதா? சிற்றுண்டி உணவுப் பொருட்களுக்கு வரி போடுகிறீர்களே, ஓட்டல் பண்டங்களின் விலை உயராதா? இட்டிலிக்கு வரி, சட்டினிக்கு வரி, தடுக்கி விழுந்தால் வரி, பிரம்மச்சாரியாக இருந்தால் வரி, குபேபகாவலி ஆட்சியிலே எல்லாம் வரி வரி என்று நம்முடைய முதலமைச்சர் பாடினாரே, ஆனால் இந்த வரிகளைப் போட்டு ஏழை எளிய மக்களைப் பாதிக்க வைக்கலாமா? ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். போடுங்கள் வரி, ஆனால் ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற விதத்திலே வரி போடுவது எந்த விதத்திலே நியாயம் என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்பொழுது இங்கே வருமானம் 563 கோடி ரூபாய்; அண்ணா ஆண்டபொழுது 233 கோடி ரூபாய்; காங்கிரஸ் ஆட்சியின்பொழுது 90 கோடி ரூபாய். நீங்கள் ஆளுகின்றபொழுது 2,779.15 கோடி ரூபாய் உங்களுக்கு வருமானம் வருகிறது. சேலை வழங்குங்கள், வரவேற்கிறோம். வேஷ்டி வழங்குங்கள், வரவேற்கிறோம், செருப்பு வழங்குங்கள், வரவேற்கின்றோம், சத்துணவு போடுங்கள், வரவேற்கின்றோம். ஆனால் நான் கேட்கிறேன், ஒரு கனரகத் தொழிற்சாலைக்கு என்ன முயற்சி எடுத்திருக்கிறீர்கள்? திரும்பத் திரும்ப பத்து வருடங்களாக இந்த பட்ஜெட் புத்தகத்திலே சர்க்கரை ஆலைக்கு முயற்சி செய்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, ஹெவி இண்டஸ்ட்ரீஸ் இருக்கிறதா? முயற்சி எடுத்து இருக்கிறீர்களா? நான் கேட்கிறேன். செருப்பு கொடுத்துவிட்டு, சேலை கொடுத்துவிட்டு, பஸ் கட்டணத்தை உயர்த்தலாமா? பஸ்ஸிலே போகிறவன் டாட்டாவா, பிர்லாவா? ஓட்டல் பண்டங்களின் விலையை உயர்த்தலாமா? செருப்பு கொடுத்து விட்டு, சேலை கொடுத்துவிட்டு இதை உயர்த்தினால் இது ஏழை எளிய மக்களைப் பாதிக்காதா? எனவே, இந்த பட்ஜெட் ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற பட்ஜெட்டாக இருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தி ஆதிக்க மொழிப் போர் தியாகி அதைப்போலவே, ..... என்று சொல்லப்பட்டது, தரப்பட ...ளுக்கு 150 ரூபாய் தரப்படும் என்று சொல்லப்பட்டது, ஆனால் டெல்லியிலே தமிழக இல்லத்தில் புதிய ஃபாரின் ...இல்லை. ஆனால் டெல்லியிலே தமிழக இல்லத்தில் புதிய ஃபாரின் கன்சாலிடேட்டட் ஃபண்டிலிருந்து இரண்டு ...ார் வாங்குவதற்கு

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மார்ச் 28

இலட்சம் ரூபாய் அவசரம் அவசரமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்நிய நாட்டுக் கார் வாங்குவதற்கு இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது டெல்லியிலே அதிகாரிக்கு; ஆனால், மொழிப் போரிலே ஈடுபட்ட தியாகிக்கு 150 இல்லை. இதுதான் அண்ணா வழி நடக்கின்ற அரசா? தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடையாறு, திரைப்படம் எடுக்கக்கூடிய நிறுவனம், பிலிம் இன்ஸ்டிடியூட், அதிலே டிப்ளமா மாணவர்கள் டாகுமென்டரி பிலிம் எடுப்பதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்கள் பரீட்சையிலே அதுவொரு அமைப்பு. ஒரு மாணவர், பெயர் திருமாறன். அண்ணா பற்றிய டாகுமென்டரி படத்தை எடுத்தார். அதை டி.வி.யிலே போடுவதற்கு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் ஒத்துக் கொண்டது. ஆனால் அந்தப் படமே எடுக்கக் கூடாது, டி.வி.யிலே போடக் கூடாது, அண்ணாவைப் பற்றிய டாகுமென்டரி எடுக்கக் கூடாது என்று சொல்லப்படுகிறது. அண்ணாவினுடைய ஆட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லிக் கொண்டு, அண்ணாவின் படத்தைக் கொடியிலே போட்டுக் கொண்டு அண்ணாவைப் பற்றி டாகுமென்டரி படம் எடுக்கக் கூடாது என்று சொன்னால், அப்படிச் சொல்லியிருப்பவர்கள் யார் என்று சொன்னால், அந்த நிறுவனத்தினுடைய தலைவராக இருக்கக் கூடிய சித்ரமகால் கிருஷ்ணமூர்த்தி. நான் கேட்க விரும்புகிறேன், இது எவ்வளவு பெரிய துரோகம்? அண்ணாவிற்கு இழைக்கக் கூடிய பெரிய துரோகம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டும் அல்ல, இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தச் சர்க்கார். . . . .

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சித்ரமஹால் கிருஷ்ணமூர்த்தி சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு அப்படிச் செய்தி தரவில்லை என்று எழுதியும், அந்தப் பத்திரிகை வெளியிடவில்லை. இது உண்மையானது அல்ல.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, டி.வி.யிலே வெளியிடுவதற்காக அது கொடுக்கப்பட்டும் கூட இன்றைக்கு அரசு அனுமதி மறுத்து விட்டது. இப்பொழுது அந்த டாகுமென்டரியைத் தருவதற்குத் தயாராக இருந்தால் நான் வாவேற்கத் தயாராக இருக்கிறேன்.



1987 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** துணைப் பெருந் தலைவர் அவர்களே, அந்த டாகுமென்டரியை அந்த நிறுவனம் தயாரிக்கவில்லை. படிக்கின்ற மாணவன் டெஸ்டுக்காகத் தயாரித்தது. அது அப்ரூவ் செய்யப்படவே இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட மாணவர் அனைத்துத் தகவல்களையும் என்னிடத்திலே மனுவாகக் கொடுத்திருக்கிறார். அந்த டாகுமென்டரி படம் எடுத்ததே தவறு, அது அவர்களுடைய சொத்து, எனவே, டி.வி.யிலே போடக்கூடாது என்று சொல்லி தடுக்கப்பட்டிருக்கிறது. தடுக்கப்படாவிட்டால் நான் பேசியதற்கு பலன் ஏற்பட்டிருக்கிறது; அண்ணா படம் ஒளிபரப்பு ஆகட்டும்; மகிழ்ச்சி. ஆக, நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இந்த அரசு எப்படி நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறது என்பது தெரிய வேண்டும்.

இந்த மன்றத்திற்குத் தெரியும். சென்னையில் போலீஸ் கமிஷனர் இருக்கிறார். அதைப் போன்று கோவையில் கமிஷனர் போட வேண்டும்; மதுரையில் கமிஷனர் போட வேண்டும், கமிஷனர்கள் போடப்பட்டு நிர்வாகம் நடத்தப்படும் என்று சொல்லி டி.ஜி.பி. உத்தரவு போட்டுவிட்டார். அதற்கு பணம் கூட ஒதுக்கப்பட்டது. 148.68 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆனால் நிலைமை என்ன? அந்தப் பணம் செலவிடப்படாமல் சரண்டர் ஆகிவிட்டது. சரண்டர் ஆவதற்கு என்ன காரணம் என்று நான் கேட்க விரும்புகிறேன். அரசாங்கம் முடிவு செய்யவில்லை. முதலமைச்சர்தான் தமிழ் நாட்டை ஆளுகிறார். அவர்தான் இந்தத் திட்டத்தை அறிவித்தார். டி.ஜி.பி. திட்டத்தைக் கொடுத்துவிட்டார். தொகையும் ஒதுக்கப்பட்டு விட்டது. ஆனால் கோவைக்கு கமிஷனர் உண்டா? மதுரைக்கு கமிஷனர் உண்டா? நான் கேட்கிறேன், இதற்குப் பெயர் என்ன? தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போன்று இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். கல்வித் துறையில் முதலமைச்சர் ஒரு புரட்சிகரமான திட்டத்தை அறிவித்தார்.
"Chief Minister's Scheme of Life oriented Education in Schools" என்று அதற்குப் பெயர். அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை 404 இலட்சம் ரூபாய். ஒதுக்கப்பட்ட பணம் செலவிடப் பட்டிருக்கிறதா? இல்லை.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மார்ச் 28

அதைப்போன்று ரெவின்யூ கிராமத்திற்கு ஒன்று வீதம் கக்கூஸ், அதாவது கழிப்பிடம் கட்டும் புரட்சிகரமான திட்டத்தை அறிவித்தார். ஏறத்தாழ 4,673 கிராமங்களுக்கு கக்கூஸ் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட 649 இலட்சம் ரூபாய் பயன்படுத்தப் படாமல் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னொன்று, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை கொடுக்கும் திட்டம். அதற்காக பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடும் செய்யப் பட்டது. நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதினாலே அந்தத் திட்டம் நிறைவேறிவிடும் என்று பொருள் அல்ல. காரணம், குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்திற்கு 1,494.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இன்றைக்கு அந்தத் தொகை செலவிடப்படாமல் சரண்டர் செய்யப்பட்டுள்ளது.

அதைப்போன்று பிரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 101.99 இலட்சம் ரூபாய். அந்தப் பணம் முழுவதும் சரண்டர் செய்யப் பட்டிருக்கிறது.

அதைப்போன்று மருத்துவக் கல்லூரிக்கு கட்டிடம் கட்டுவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை 450.86 இலட்சம் ரூபாய் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது.

இன்னொன்றையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். பாலித்தீன் பைகள் 2 இலட்சம், மதிப்பீடு 0.12 இலட்சம் ரூபாய், இன்னும் சொல்லப் போனால் அரசுடைய வருஷக் கணக்கை எடுத்துக் கொள்வதாக இருந்தால் 1986 பிப்ரவரி, திருவள்ளூர் ரேஞ்சில் 2 இலட்சம் பாலித்தீன் பைகள் காணாமல் போய் விட்டன. அவற்றைத் திருடியவர் யார்? காணாமல் போனதற்கு யார் காரணம்? இதுவரையில் பதில் இல்லை. அதிகாரிகளிட மிருந்தும் பதில் வரவில்லை; அரசாங்கத்திடமிருந்தும் பதில் வரவில்லை.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். ஹவுசிங் போர்டு பற்றியது அது. கோடம்பாக்கம் சிவன்கோவில் தெருவில் ஹவுசிங் போர்டு 4 கடைகளைக் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியத்தால் வாடகை



1987 மார்ச் 28] [திரு. அ. ரகுமான்கான்]

அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இதிலே வேடிக்கை என்னவென்றால், யாருக்கு வாடகைக்கு விட்டார்கள்? ஹவுசிங் போர்டு அதிகாரிகளுக்குத் தெரியாது. டாக்குமென்ட்ஸ், பதிவேடுகள் இருக்கின்றனவா? இல்லை. எவ்வளவு வாடகை? விவரம் கிடையாது. எவ்வளவு வசூல் செய்கிறார்கள்? விவரம் கிடையாது. இதை எல்லாம் கேட்டால் ரிக்கார்டு இல்லை என்று சொல்கிறார்கள். பொது நிறுவனங்கள் குழு அதற்காக வருத்தப் பட்டிருக்கிறது. நான்கு கடைகள் வாடகைக்கு விடப்பட்ட சொத்து விவரமே ஹவுசிங் போர்டில் இல்லை என்றால் இந்த ஹவுசிங் போர்டில் ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான சொத்துக்கள் இருக்கின்றன; புலன் விசாரணை செய்தால் இப்படிப்பட்ட ஊழல்கள் எல்லாம் அம்பலத்திற்கு வரும்; வரக்கூடிய நாள் இருக்கிறது.

இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். திரைப்படத் துறையில் வாங்கப்பட்ட ஒரு இயந்திரம் பற்றியது. இத்தாலி வெஸ்ட்ரானிக்ஸ் கம்பெனியிடமிருந்து திரைப்படத் துறையில் இருக்கிறவர்கள் ஒளிப்பதிவு செய்யும் நவீன சாதனம் ஒன்றை வாங்குவதற்கு 1982 மார்ச்சில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது- அவர்களுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் அவர்களுடைய துறைக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று பொருள். பணம் ஒதுக்கப்பட்ட அந்த சாதனம் வாங்கப் பட்டதா? தகவல் இல்லை. மாறாக, ஓராண்டு ஆன பிறகும் அந்தக் கம்பெனி இத்தாலியில் இருக்கிறதா, இல்லையா என்று தெரியாமல் இருக்கிறார்கள். பல இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நவீன சாதனத்தை வாங்கப் போகிறோம் என்று சொன்னார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், ஒதுக்கப்பட்ட அந்தப் பணத்தை எடுத்து ஓராண்டுக் காலம் வைத்திருக்கிறார்கள். அந்த சாதனத்தைத் தருகிறோம் என்று சொன்ன கம்பெனி இருக்கிறதா? இல்லையா? மூடப்பட்டு விட்டதா? அதிகாரிகளுக்குத் தெரியாது. அமைச்சருக்கும் தெரியாது. அந்தக் கம்பெனி இருக்கிறதா, இல்லையா என்று தெரியாமல் பணத்தை எடுத்தவர்கள் ஒரு வருஷமாக என்ன செய்தார்கள்? விவரம் உண்டா?

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மார்ச் 28

(பிற்பகல் 1-10)

இப்படிச் சொன்னால் சொல்லிக் கொண்டே போகலாம். இன்னொன்றையும் நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். (மணியடிக்கப் பெற்றது) மரியாதைக்குரிய துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கெல்லாம் தெரியும் அரசியல் சட்டம் போற்றப்பட வேண்டும் என்பது. State Official Language (Legislative) Commission அதை மொழி பெயர்ப்பதற்கு ஒத்துக் கொண்டது. எப்போது என்றால் 1977 ஆம் ஆண்டில். 1979 ஆம் ஆண்டு பணி முடிவடைகிறது. 1981 ஆம் ஆண்டு அவர்கள் இந்திய அரசியல் சட்டத்தைத் தமிழ் மொழியில் மொழி பெயர்த்து 3000 புத்தகங்கள் போட்டார்கள். படித்துப் பார்த்தால் மொழி பெயர்த்ததே தப்பு. அரசியல் சட்டத்தைப் புரிந்து கொள்ளாத நபர்கள் அதிகாரிகளாக இருந்து கொண்டு மொழி பெயர்த்ததால் ஏறத்தாழ அந்தப் புத்தகமே வெளிவர முடியவில்லை. 1.31 இலட்சம் ரூபாய் இதனால் வீணடிக்கப்பட்டு இருக்கிறது. நான் கேட்க விரும்புகிறேன், இதெல்லாம் மக்கள் பணம் வீணாகின்ற காரியமல்லவா? இந்த விவரம் கண்டுபிடிக்கப்பட்டு 1979 ஜூன் மாதத்திற்குள்ளாக தவறுகள் திருத்தப்பட்டு அறிக்கை தர வேண்டுமென்று உத்தரவு போடப்பட்டது. ஆனால் இதுவரைக்கும் அந்தத் தவறுகள் திருத்தப்பட்டனவா? ஏழை எளிய மக்களின் பணம். . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தைத் தமிழில் மொழி பெயர்க்க முன்னாள் நீதிபதி திரு. மகாராஜன் அவர்கள் தலைமையிலான குழு அமைக்கப்பட்டு மொழி பெயர்த்தது. அரசுக்கு அந்தக் காப்பி வந்தது. மொழி பெயர்ப்பு சரியாக இல்லை என்பதை அரசளவில் நாங்கள் ஆய்ந்து கண்டறிந்த பிறகுதான் வேண்டாம் என்று அரசு முடிவு செய்தது. தூய தமிழில் சரியாக மொழி பெயர்க்க வேண்டுமென்று ஆணையிட்டு அது நடந்து வருகிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திசை திருப்புவதற்காக நான் வருத்தப்படுகிறேன். ஏரோனியஸ், ஏரர் என்பதற்கும், சரியான



1987 மார்ச் 28] [திரு. அ. ரகுமான்கான்]

தூய தமிழில் இல்லை என்பதற்கும் வேறுபாடு உண்டு. அடியோடு அபத்தம், அடியோடு தவறு, 'ஏரோனியஸ் எரர்' என்ற வார்த்தையை வேண்டுமென்றால், . . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தூய தமிழில் இல்லாமல் இருந்தாலும் மாற்ற வேண்டும். ஏரோனியஸ் எரர் ஆக இருந்தாலும், மாற்ற வேண்டும். எத்தகைய தவறு இருந்தாலும் மாற்ற வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். அந்த நோக்கத்தில்தான் தவறைத் திருத்துவதற்கு அரசு ஆணையிட்டிருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, இதனால் அரசுக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டம்? தவறு இருக்கிறது என்பதை அரசு உணர்ந்த காரணத்தால்தான் புத்தகத்தை வெளியிடவில்லை. முதலிலேயே அதிகாரிகள் சரியாகச் செய்திருந்தால் இந்த நஷ்டம் வந்திருக்காது. மக்களுடைய பணம் வீணாகி இருக்காது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். உயர்நீதி மன்றத்தினுடைய முன்னாள் நீதிபதி—இப்போது அவர்கள் நம்மிடையே இல்லை—திரு. மகாராஜன் அவர்கள் அதை மொழி பெயர்த்ததில் பொறுப்பேற்று செய்தார்கள். ஏற்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று அரசே உணர்ந்து, அரசே ஆய்ந்து கண்டுபிடித்து, அரசுதான் ஆணையிட்டு இருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திரு. மகாராஜன் அவர்களை மட்டும் குறிப்பிடுகிறார். கமிட்டி போடப்பட்டது. கமிட்டியிலே உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இப்போதும் அந்த ரிப்போர்ட் வந்ததா? அந்தத் தவறு திருத்தப்பட்டதா என்று அமைச்சரிடத்திலிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எனக்குக் கிடைத்த தகவல் இன்னும் ரிப்போர்ட் வரவில்லை என்பதுதான்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பான்மையான அளவிற்குத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் ஓரளவுக்கு இருக்கிறது. அது விரைவில் முடிக்கப்படும்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டத்தை அவமதித்து விட்டார்கள் என்று அவர்கள் மீது வழக்கு போடாமல், அரசியல் சட்டத்தைத் தப்பாக மொழி பெயர்த்தார்கள் என்ற அளவில் இன்டென்ஷன் இல்லை என்று எடுத்துக் கொண்டு அவர்களை விட்டுவிட்டு தவறுகளை மட்டும் திருத்துவதற்காக ஆணையிட்டிருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து மிக முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

வண்டலூர் ஜுவாலஜிக்கல் பார்க் இருக்கிறது. அதிலே குழந்தைகளுக்கு 50 பைசா, பெரியவர்களுக்கு ஒரு ரூபாய் வசூல் பண்ணுங்கள் என்று அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அது எப்போது என்று கேட்டால் அக்டோபர் மாதம் 1984 முதல் அதை வசூலியுங்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கான அதிகாரிகள், ஸ்டாஃப் எல்லாம் போடப்பட்டு ஆகிவிட்டது. என்ன வேடிக்கை என்றால்—புள்ளிவிவரம் சொல்கிறது—அங்கே எவ்வளவு பேர் போய் இருக்கிறார்கள் இந்த மாத இறுதிக்குள் என்று கேட்டால் 2.39 இலட்சம் பார்வையாளர்கள் போய் இருக்கிறார்கள். ஆனால் மாதத்திற்கு 28,000 ரூபாய். ரெக்கார்டைப் பார்த்தால், வசூலிக்கப்படவில்லை என்று தெரிகிறது. எனக்கு சந்தேகம். சம்பந்தப்பட்ட அமைச்சர் சொல்ல வேண்டும். மாதா மாதம் 28 ஆயிரம் ரூபாய் பணம் வசூலிக்கப்பட்டு * * அல்லது உண்மையிலேயே வசூலிக்கப்படவில்லையா? ஏன் வசூலிக்கப் படவில்லை? மக்கள் பணம் அல்லவா? பிறகு ஏன் உத்தரவு போட்டார்கள்? ஏன் ஸ்டாஃப் போட்டார்கள்? போட்ட உத்தரவை மதிக்கவில்லை என்றால் அதிகாரி மீது ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? இதையெல்லாம் நம்முடைய அமைச்சர் அவர்கள். . . . .

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நிறைய பேர் பேச வேண்டும். சீக்கிரம் முடிக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது, மாண்புமிகு * * என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அவர் அப்படி இடர் என்று சொல்வது பொருத்தமாக இருக்காது என்று நினைக்கிறேன். ஒருவேளை அவர் இருக்கும் இடத்தை வைத்து கோபம் அதிகமாகப் பேசுகிறாரோ என்னவோ தெரியவில்லை. முழு விவரத்தையும் மீண்டும் ஒரு முறை கூறினால் இப்போதே பதில் சொல்லத் தயாராக இருக்கிறோம். * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர் பேச்சில் வேகம் அதிகமாக இருக்கிற காரணத்தால் அந்த வேகத்திற்கு எளியவனான என்னால் தொடர முடியவில்லை. அதனால் [illegible]கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த வார்த்தையை நீக்குகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் (சிரிப்பு). அடிக்கடி அமைச்சர்கள் மாறுவதினால், யார் எந்த மந்திரி என்பது தெரியவில்லை. அவர் முன்னாள் உள்ளாட்சி அமைச்சர், தற்போது [illegible] துறை அமைச்சர்.

துணைத் தலைவர் அவர்களே, நேரத்தின் அருமை கருதி நான் [illegible] வேக வேகமாகப் பேசுகிறேன். அதை அவர் [illegible] எளியவராக இருப்பதால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று சொன்னார்கள். அவர் கேட்டதற்காக நான் திரும்பவும் சொல்கிறேன். வண்டலூர் ஜுவாலஜிக்கல் பார்க், அரசு உத்தரவு [illegible] 1984 ஆம் ஆண்டு, பெரியவர்களுக்கு [illegible] 1 ரூபாய், சின்னவர்களுக்கு [illegible] 50 பைசா, [illegible] 1984 அக்டோபர் முதல் 1986 பிப்ரவரி வரை வசூலித்திருக்க [illegible]

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மார்ச் 28

வேண்டும். பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மொத்தம் பார்வையாளர்கள் 2.39 இலட்சம் பேர்கள். வசூலாகியிருக்க வேண்டியது மாதத்திற்கு சுமார் ரூ. 28 ஆயிரம். ரெக்கார்டுகளில் வசூலிக்கப்படவில்லை. என்ன காரணம் என்று கேட்கப்படுகிறது. விவரங்கள் இருந்து கொடுத்தால் நலமாக இருக்கும்.

துணைச் சபாநாயகர் அவர்களே, பல பதவிகள் காலியாக இருக்கின்றன. மக்களின் நலனைக் கருதி கேட்கிறேன். தயவுசெய்து கவனம் செலுத்துங்கள். 100 டெபுடி கலெக்டர்ஸ் போஸ்ட் வேகண்ட், 100 சிவில் சர்ஜன்ஸ் போஸ்ட் வேகண்ட், டைரக்டரேட் ஆப் டவுன் அண்டு கன்ட்ரி பிளானிங் . . . (குறுக்கீடு).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** 100 சிவில் சர்ஜன்ஸ் போஸ்ட் காலி இல்லை. ஒருவர் வழக்கு மன்றத்திற்குச் சென்றிருப்பதால் பிரமோஷன் போட முடியவில்லை. தடை ஆணை இருக்கிறது. தடை ஆணை நீங்கியவுடன் போடப்படும். நீதிமன்றத்தின் தடை காரணமாக நிறுத்தியிருப்பதற்கு அரசாங்கம் என்ன செய்ய முடியும்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 100 டெபுட்டி கலெக்டர்ஸ் போஸ்ட் வேகண்ட் என்று சொன்னது மிக வேதனைக்குரிய தவறான செய்தி. அப்படி இல்லை. 4, 5 போஸ்ட்டுகளுக்கு மட்டும் புரபோசல் வந்திருக்கிறது. அவைகள் எல்லாம் தற்போது நிரப்பப்பட்டிருக்கின்றன.

**திரு. அ. ரகுமான்கான் :** விளக்கத்திற்கு நன்றி. டைரக்டர் ஆப் டவுன் பிளானிங்; மற்றும் உதவி இயக்குநர் அலுவலகத்தில் 110 என்ஜினியர்கள் போஸ்ட் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதைப்போல நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள் 4 போஸ்ட்டுகள் நிரப்பப்படாமல் இருக்கிறது. (குறுக்கீடுகள்) ரெக்கார்டுகள் உங்களிடத்திலே இருக்கிறது. நான் எதிர்க்கட்சியைச் சார்ந்தவன். எனக்குக் கிடைத்திருக்கிற குறைந்தபட்ச தகவல்களைக் கொண்டு நான் கேட்கிறேன். அந்தப் பதவிகள் நிரப்பப்பட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு கேட்கிறேன். அதைப்போலவே நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் பதவிகள் 4 காலி இருப்பதாகத் தெரிய வருகிறது. டைரக்டர் ஆப்





1987 மார்ச் 28] [திரு. அ. ரகுமான்கான்]

டவுன் அண்டு கன்ட்ரி பிளானிங் அலுவலகத்தில் 10 போஸ்ட்டுகள் காலியிருப்பதாகத் தெரிய வருகிறது. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தெரிய வருகிறது, தெரிய வருகிறது என்று சொன்னால் எப்படி? சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** சரி. நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். நான் தவறாகச் சொன்னால் எனக்குத் தண்டனை. சரியாகச் சொன்னால் அப்போது யாருக்குத் தண்டனை?

ஆகவே சபாநாயகர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் டெம்பரரி அஸிஸ்டண்ட் என்ஜினியர்ஸ் பதவி நீக்கம் ஆகிறது. மீண்டும் வேலைக்கு போட வேண்டும் என்று உத்தரவு 1985 ஆம் ஆண்டு ஜனவரியிலே வருகிறது. அது அமல் நடத்தப்படவில்லை. அடுத்து நமது மாண்புமிகு அமைச்சர் பொன்னையன் அவர்கள், மன்னிக்க வேண்டும் அவர் பெயரைச் சொல்வதற்கு, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களுக்கு ஒரு தகவல், தவறாக இருந்தால் திருத்திக் கொள்கிறேன். மதுரை மாவட்டம் பெரியகுளத்தில் சப் கோர்ட், குற்றவியல் நீதிமன்றத்தில் ஒரு வருடமாக நீதிபதி கிடையாது.

(பிற்பகல் 1-20)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் தொடர்ந்து இந்த அவைக்கு வருகிறார் என்றே நம்புகிறேன். பலமுறை இது குறித்து விளக்கம் தரப்பட்டிருக்கிறது. தற்காலிகமாக 1965 ஆம் ஆண்டிலிருந்து நிரப்பப்பட்ட செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்கள் தங்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கோரிக்கை எழுப்பி, அரசாங்கம் அவர்களை 1981 ஆம் ஆண்டு நிரந்தரம் செய்தது. ஆனால் வழக்குரைஞர்கள் சங்கத்தின் மூலமாக உயர்நீதி மன்றம் சென்று தடையாணை வாங்கி உச்ச நீதிமன்றம் வரையில் அது சென்றது. அந்த வழக்கு அண்மையில் தான் முடிந்தது. முடிந்த பிறகு சர்வீஸ் கமிஷன் மூலமாக எல்லா இடங்களையும் நிரப்புவதற்கு [illegible] தேர்வு நடந்து [illegible] ஏற்கனவே 62 பேர்களை சர்வீஸ் கமிஷன் [illegible] கொண்டிருக்கிறது.

மூலமாக போட்டு Fill up செய்தாகிவிட்டது. 14 சப்-மாஜிஸ்ட்ரேட்ஸ் பணியிடங்கள் தான் வேகன்ட்டாக இருக்கின்றன. மீதம் உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல், எச்சரிக்கையாக இன்னும் ஒரு 100 பேரைத் தேர்ந்தெடுத்து வெயிட்டிங் லிஸ்ட்டிலே வைத்துக் கொள்ள வேண்டுமென்ற உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்க தற்போது சர்வீஸ் கமிஷன் நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த நிலைமைகள் எல்லாம் பல முறை விளக்கப்பட்டிருக்கின்றன.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, அதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே விரைவில் அந்தப் பதவிகள் நிரப்பப்பட வேண்டும் என்பதற்காகத்தான் காலியிடங்களை கவனத்திற்குக் கொண்டு வந்து சொன்னேன். (மணியடிக்கப் பெற்றது) இன்னும் இரண்டு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முன் வரிசையில் இருக்கிற தலைவர்களுக்குக் கொடுத்த நேரத்தை விட அதிகமாக உங்களுக்கு நேரம் கொடுத்தாகி விட்டது. மாண்புமிகு அப்துல் சமத், மாண்புமிகு ரமணி ஆகியவர்களுக்குக் கொடுத்த நேரத்தை விட கூடுதலாக நேரம் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) டிமாண்ட் வருகிறது, அப்போது பேசலாம். இப்போது தயவுசெய்து உட்காருங்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர், திரு. சி. பழனிமுத்து பேசுவார்.

* *

திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நாட்டின் நலன் முக்கியமென்று கருதி இந்த அரசு அறிவித்துள்ள திட்டங்களுக்கு மத்திய அரசு ஆதரவு தந்தது. அனைவராலும் ஏற்று வரவேற்கப்பட்ட பொருளாதார கோட்பாடுகள் வாயிலாக

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



ஆதரவு அளித்தாக வேண்டும். பொருளாதார முன்னேற்றம் தேவை. வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய திட்டம் ஒன்றுமே இதில் இல்லை. ஆகவே வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு இந்த நேரத்தில் வழிவகை செய்ய வேண்டும். ஏழை எளிய மக்கள், படித்து பட்டம் பெற்றவர்கள், பல ஆண்டுகளாக வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க தொழில் திட்டங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை. அதற்கு ஏற்ற வழிவகை செய்ய வேண்டும்.

வீட்டு வசதியைப் பொறுத்தவரையில் 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள் கட்டப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். 30 லட்சம் வீடுகள் என்பதில் ஆதி திராவிட மக்கள், பிற்பட்ட மக்கள் இருக்கும் தலா ஐந்து லட்சம் வீடுகள் கட்டுவது குறிக்கோள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பிற்பட்டவர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான வீடுகளும் கட்டப்படவில்லை. ஆனால் ஆதி திராவிட மக்களுக்கு ஒருங்கிணைந்த வீட்டு வசதி வளர்ச்சித் திட்டத்தின் கீழும், தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும், தாட்கோ மூலமும் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால் ஏழை எளிய மக்கள், பிற்பட்ட பாமர மக்களுக்கு எந்தவிதமான இலவச வீடுகளும் கட்டித் தரப்படவில்லை. ஆகவே 30 லட்சம் வீடுகள் என்பதில் ஏழை எளிய பாமர மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல மாநில அரசு, மத்திய அரசின் அனுமதி கேட்டு தேசிய வீட்டு வசதி வங்கி ஒன்றை அமைக்கப் போவதாக அறிவித்து இருப்பதை மனதார வரவேற்கிறேன். இந்தத் திட்டத்திலே ஏழை எளிய பிற்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த வீடுகளைக் கட்டுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டத்திற்கு சமூக நலத் துறையின் மூலம் 28,125 குழந்தை நல நிலையங்கள் நடத்தப்படுகின்றன. 7,200 சுகாதார பணியாளர்களுடன் பல்நோக்குச் சுகாதாரப் பணியாளர்களுடன் துணை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 28,125 குழந்தை நல நிலையங்களில் சனிக்கிழமை, ஞாயிறுக்

[திரு. சி. பழனிமுத்து] [1987 மார்ச் 28

கிழமைகளில் சத்துணவு கொடுக்கப்படுகின்றது. ஆகவே சனிக்கிழமையையும், ஞாயிற்றுக்கிழமையையும் நீக்கிவிட்டு, வாரத்திலே 5 நாட்கள் சத்துணவு கொடுத்தால் போதும். சனிக் கிழமைகளிலே சென்று பார்த்தால் அங்கே குழந்தைகள் இருப்பதில்லை. நான் பல இடங்களுக்குச் சென்று பார்த்திருக்கிறேன். 50 குழந்தைகள் என்றால் 10 குழந்தைகள் தான் இருக்கிறார்கள். ஆகவே அந்த முறையிலே மாற்றம் தேவை.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 வயதிலிருந்து 5 வயது வரை உள்ள பாலர் பள்ளிகளில், சனி, மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் உணவு வழங்க வேண்டும் என்பது குழந்தைகள் நல வல்லுநர்களுடைய கருத்தாகும். 2 நாட்களுக்கு அவர்களுக்கு அந்த உணவை வழங்காமல் விட்டுவிட்டால், மீண்டும் அந்த சர்க்கிள் அவர்களுக்கு ஏற்படுவதில்லை. அவர்களுக்கு 411 கலோரி ஒரு நாளைக்கு உணவிலே வழங்கப்பட வேண்டும் என்ற அந்த முறையிலே தான் இது வழங்கப்படுகிறது.

**திரு. சி. பழனிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நான் வழங்குவதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நான் பெரிய கல்ராயன் மலைப் பகுதியில் கீழ்நாடு, கள்ளக்கம்பாடி, மொரசம்பட்டி, பெரண்டூர் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்த்தேன். அப்படிப் பார்த்தபோது மொரசம்பட்டி என்ற ஊரிலே அமைப்பாளரே இல்லை. அந்த அமைப்பாளர் 2 கிலோ அரிசியைக் கொடுத்துவிட்டு, சமையல் செய்யச் சொல்லி விட்டு போய்விட்டார்கள். ஆகவே அரசுக்குத்தான் நல்ல யோசனையாக நான் இதைக் கூறுகிறேனே தவிர, இந்தத் திட்டத்திலே எந்தவிதமான மாற்று அபிப்பிராயமும் இல்லை.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற விடுமுறை நாட்களில் எவ்வளவு குழந்தைகள் வருகிறார்களோ, அவர்களுக்கு மட்டும் வழங்க வேண்டும் என்றுதான் இப்போது அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. மற்றபடி அமைப்பாளர்கள் வரவில்லை என்பதற்கு தனியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



1987 மார்ச் 28]

**திரு. சி. பழனிமுத்து :** நான் சில இடங்களில் உள்ள பாலர் பள்ளிகளுக்குச் சென்று பார்வையிட்டுவிட்டு வந்தேன். அவர்களுக்கு நல்ல விதமான உணவு அளிக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான் நான் இதைக் கூறுகிறேனே தவிர, இந்தத் திட்டத்திற்கு எந்தவிதமான மாசும் கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்திலே நான் சொல்லவில்லை.

அடுத்து சுகாதாரப் பணியாளர்களைக் கூட 7,500 இடங்களில் அனுமதித்து இருக்கிறார்கள். பல இடங்களில் சுகாதாரப் பணியாளர்கள் போதுமான அளவில் வேலை செய்யவில்லை. என்னுடைய தொகுதியிலும் கூட இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே சுகாதார நிலையத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்வதிலே எல்லோருக்கும் அக்கறை உண்டு. கடந்த ஆண்டு கூட பிரதம சுகாதார நிலையங்கள் 200 ஏற்படுத்தப்பட்டன என்று சொன்னார்கள். அந்த 200 சுகாதார நிலையங்களில் இருக்கின்ற மருத்துவப் பிரிவுகளை அப்-கிரேட் பண்ணுவதாகச் சொன்னார்கள். அது எந்த அளவிற்கு உண்மை என்று எனக்குத் தெரியவில்லை. இந்த ஆண்டு 140 சுகாதார நிலையங்களை அமைக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே என்னுடைய தொகுதியில் உள்ள ராமநாயக்கன்பாளையத்திலே ஒரு சுகாதார நிலையத்தை அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 1 முதல் 8 வகுப்பு வரை உள்ள மாணவர்களுக்கு மட்டும் காலணி வழங்கும் திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். இதை 10 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கும் நீட்டித்தால் பரவாயில்லை என்ற என்னுடைய யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். காரணம் என்னவென்றால் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கிற மாணவர்களுக்குக் கொடுக்கிற போது, 10 ஆம் வகுப்பு வரை படிக்கிற மாணவர்களுக்கும் கொடுத்தால் பள்ளியில் படிக்கிற எல்லா மாணவர்களுக்கும் இதனால் பயன் ஏற்படும்.

அதுபோன்று முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள், விவசாயத் தொழிலாளர்கள், ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுபவர்கள் ஆகிய இவர்களுக்கும் இந்தக் காலணியை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. பி. பழனிமுத்து] [1987 மார்ச் 28

எல்லா ஊராட்சிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொடுக்க வேண்டும். அதுபோன்று ஒவ்வொரு ஊராட்சிக்கும் விடியோ கேசட் வழங்குவதைப் போல, நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் தனியாக கொடுக்க வேண்டும்.

வறட்சியைப் பொறுத்தவரையில், தமிழகத்தில் மழை இல்லாமல், குடிதண்ணீருக்கே மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். உதாரணமாக சேலம் மாவட்டத்தில் வாழப்பாடியிலிருந்து அயோத்தியாப்பட்டணம் வரையில் உள்ள பகுதிகளைப் பார்த்தால், அந்தப் பகுதி முழுவதும் பாலைவனம் போல காட்சி அளிக்கிறது. தண்ணீர் குடிப்பதற்கே கிடைக்கவில்லை. அங்கே ஆழ்துளைக் கிணறுகளைப் போடுவதே இல்லை. இதற்காக 28 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு தந்திருக்கிறீர்கள். ஆகவே இந்த 28 கோடி ரூபாயிலே ஊராட்சி ஒன்றியங்களுக்கு எந்தவிதமான நிதியும் போய்ச் சேரவில்லை. ஆழ்துளைக் கிணறுகள் மட்டும் 6,825 போடப்படும் என்று கூறியிருக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் 600 ஆழ்துளைக் கிணறுகள் போடுவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். இந்த 600 ஆழ்துளைக் கிணறுகள் போதாது. மேலும் புதியதாக 1,400 குடியிருப்புப் பகுதிகள் ஏற்பட்டுள்ளன. இந்த 1400 குடியிருப்புப் பகுதிகளுக்கும் வேண்டிய ஆழ்துளைக் கிணறுகளைப் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மாதம் 7 ஆம் தேதி வாழப்பாடியில், மேட்டூரிலிருந்து ஆத்தூருக்கு குடிதண்ணீர் வரவேண்டும் என்பதற்காக அடிக்கல் நாட்டினார்கள். எனவே மேட்டூரிலிருந்து ஆத்தூருக்குக் குடிதண்ணீர் கொண்டு வருகிற இந்தத் திட்டத்தை துரிதப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஊராட்சிகளுக்கு எந்தவிதமான நிதியும் இதுநாள் வரையிலும் ஒதுக்கப்படவில்லை. இந்த ஆத்தூர் நகரைப் பொறுத்தவரையில், வாரத்திற்கு இரண்டு நாட்கள்தான் குடிநீர் கொடுக்கப்படுகிறது. ஆகவே ஆத்தூர் நகரத்திற்கு லாரிகள் மூலமாகக் குடிநீர் கொண்டு வந்து கொடுப்பதற்கும், புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கும் நிதி ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 மார்ச் 28] [திரு. பி. பழனிமுத்து]

அடுத்து, ஆஸ்பெஸ்டாஸ் ஷீட்டுகள், செங்கல், மற்றும் மாம் போன்றவைகளுக்கு வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். இந்த வரி உயர்வினால் நடுத்தர மக்கள் தான் அதிகமாக பாதிக்கப் படுவார்கள். எனவே இந்த வரியைத் தள்ளுபடி செய்ய வேண்டும்.

அடுத்து பஸ் கட்டணத்தை உயர்த்தியிருக்கிறீர்கள். பஸ் கட்டணத்தை விரைவுப் பேருந்துகளுக்கு மட்டும் உயர்த்தி யிருந்தால் பரவாயில்லை. நகரப் பேருந்துகளுக்கும், பஸ் கட்டணத்தை உயர்த்தியிருப்பது வரவேற்கக் கூடியதல்ல. இதனால் பாதிக்கப்படுவது ஏழை மக்கள்தான்.

(பிற்பகல் 1-30)

அதேபோல் ஆத்தூர் வட்டத்தில் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆத்தூர் வட்டத்தில் இதற்கு முன்பு சர்க்கரை ஆலையோ, எந்தவிதமான ஆலையோ இல்லை. ஆகவே ஆத்தூர் வட்டத்தில் இப்போது ஆய்வு செய்யப்பட்டு எந்த ஒரு பகுதியிலாவது இந்த சர்க்கரை ஆலையை நிறுவவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூர் வட்டத்தில் மின் இணைப்பு கேட்டு கிட்டத்தட்ட 12 ஆயிரம் விவசாயிகள் மனு செய்து இருக்கிறார்கள். இப்போது 1978 ஆம் ஆண்டு முடிய்வுள்ள மின் இணைப்புக்கான விண்ணப்பங் களுக்கு மின் இணைப்பு கொடுக்க இருக்கிறது. ஆகவே [illegible]யாக அதிகமான விண்ணப்பங்கள் உள்ள பகுதிகளுக்கு மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்கு இப்போது 597 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். 1,250 மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. 1984-85, 1985-86, 1986—87 ஆம் ஆண்டுகளில் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்பட்டன. அப்போது எனதுடைய தாலுக்காவில் கிரிப்பட்டியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை 1985—86 ஆம் ஆண்டில் 729 ஜி.ஓ. வின் மூலம் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தினார்கள். ஆனால் இதுவரையில் அந்த பள்ளிக்கு சையன்ஸ் கட்டடத்தை கட்டவில்லை. ஆகவே அந்தப் பள்ளிக்கு சையன்ஸ் கட்டடத்தைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. பழனிமுத்து] [1987 மார்ச் 28

ஆத்தூரில் அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி 1973 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. அந்தக் கல்லூரிக்கு எந்தவிதமான கட்டிட வசதியும் இல்லை. சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து யூனிவர்சிட்டி சிண்டிகேட் மெம்பர்கள் வந்து அதைப் பார்த்து விட்டு அந்தக் கல்லூரிக்கு எந்தவிதமான வசதியும் இல்லை, ஆகவே அந்தக் கல்லூரியில் உள்ள மாணவர்கள் படிப்பதற்கு கட்டிட வசதி தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே எந்தவிதமான மாணவர் விடுதியும் இல்லை. ஆகவே உடனடியாக அறிஞர் அண்ணா கலைக் கல்லூரிக்கு கட்டிடத்தைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெத்தநாயக்கன்பாளையத்தில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு கட்டிடம் கட்டவும் வேண்டு கிறேன்.

இந்த ஆண்டு விளையாட்டுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். விளையாட்டு வீரர்களுக்கு தேவையான பயிற்சியையும், ஊக்கத்தையும், நல்ல சத்துணவையும் கொடுத்தால் தான் விளையாட்டு வீரர்கள் நல்ல முறையில் விளையாட முடியும்.

முதியோர் உதவித் தொகையைப் பொறுத்தவரையில், ஒரு ஆலோசனையை கூற விரும்புகிறேன். 1.98 லட்சம் முதியோர் களுக்கு உதவித் தொகை கொடுப்பதைப் பொறுத்தவரையில், என்னுடைய பகுதியில் உள்ள முதியோர்களுக்கு முந்தைய மாத, அதாவது நவம்பர் மாத பணமே இன்னும் சென்று அடைய வில்லை. காரணம் என்ன என்று கேட்டால் என்னுடைய வட்டத்தில் 6 ஆயிரம் முதியோர்களும், விவசாயக் கூலிகளும், ஊனம் உற்றவர்களும் இந்த முதியோர் உதவித் தொகையை பெறுகிறார்கள். அவர்களுக்கு மணி ஆர்டர் மூலமாக பணம் அனுப்பப்படுகிறது. அப்படி அனுப்பும் போது ஒரு நாளைக்கு 150 மணி ஆர்டர்கள் தான் என்று கணக்கு வைத்து அனுப்பு கிறார்கள். ஆகவே இப்படி மணி ஆர்டர்கள் மூலம் அனுப்புவ தால் கிட்டத்தட்ட 2 மாதங்களுக்குமேல் கால தாமதம் ஆகிறது.



1987 மார்ச் 28] [திரு. சி. பழனிமுத்து]

ஆகவே அப்படி மணி ஆர்டர் மூலம் அனுப்புவதை விட்டுவிட்டு, வி.ஏ.ஓ. கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக இந்தப் பணத்தை அனுப்பினால் பரவாயில்லை என்று சொல்ல விரும்புகிறேன். காரணம் என்னவென்று கேட்டால் 4 மாதங்கள் ஆகியும் என்னுடைய தொகுதியில் கள்ளநத்தம் என்ற பகுதியில் உள்ள சடையன் என்பவருக்கு இதுவரை பணம் கிடைக்கவில்லை. ஆகவே அந்த முதியோர் உதவித் தொகையை கிராம நிர்வாக அலுவலர் மூலமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் சேலத்திலிருந்து ஆத்தூர் செல்லும் வழியில் நரசிங்கபுரத்தில் ஒரு பாலம் இருக்கிறது. அந்தப் பாலம் கட்டி 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அந்தப் பாலத்தில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. அந்த விபத்துகள் எதனால் ஏற்படுகின்றன என்று பார்த்து, அந்தப் பாலத்தை மிகவும் குறுகியதாக இருப்பதால் நெடுஞ்சாலைத் துறையினர் பெரிதாகவும் அகலமாகவும் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமச் சாலைத் திட்டத்தின்கீழ் கருமாந்துறையை சுற்றுலா மையமாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பி.எஸ்.ஸி. தோட்டக் கலை படித்தவர்கள் இப்போது வேலை இல்லாமல் 100 பேர்களுக்கு மேல் இருக்கிறார்கள். பி.எஸ்.ஸி. விவசாயம் படித்தவர்கள். இப்போது அந்த தோட்டக்கலைத் துறையில் 100 பேர்கள் டெபுடேஷனில் இருக்கிறார்கள். அந்த 100 பேரை விவசாயப் பிரிவுக்கு எடுத்துக் கொண்டால் அந்த தோட்டக்கலை படித்து வேலை இல்லாமல் இருக்கும் 100 பேருக்கு வேலை கிடைக்கும். ஆகவே அந்த 100 பேருக்கு வேலை கிடைப் பதற்கு பி.எஸ்.ஸி. (விவசாயம்) படித்தவர்களை தோட்டக் கலைத்துறையில் இருந்து விவசாயத் துறைக்கு மாற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் கரியக்கோயில், ஆனைமடை என்ற 2 நீர்த்தேக்கங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் தலைமையில் திரு. ராஜா முகமது அவர்கள் அதற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். அந்த 2 அணைக்கட்டுகள் மூலம்

[திரு. சி. பழனிமுத்து] [1987 மார்ச் 28

என்னுடைய பகுதியில் உள்ள பழைய ஆயக்கட்டுதாரர்களுக்கு தண்ணீர் விடுவதற்கு இல்லை என்று இப்போது கூறப்படுகிறது. அந்த ஆயக்கட்டுதாரர்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். கீழே உள்ள ஆயக்கட்டுதாரர்களின் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும். ஆகவே, அந்த ஆனைமடை, கரியக்கோயில் நீர்த் தேக்கத் திட்டத்தை நிறைவேற்றும்போது புதிய ஷட்டர் ஒன்றை வைத்துக் கட்ட வேண்டும்.

என்னுடைய பகுதியில் உள்ள கல்ராயன் மலைப் பகுதியில் 2 ஊராட்சிகள் உள்ளன. கல்ராயன் கீழ் நாடு என்ற பகுதியில் அத்திரிபட்டி, மொடவன் கோயில், சிட்டம்பட்டி, கீழ்ப்பூண்டி, குன்னூர், சேம்பூர், அடியனூர், கல்லூர், கொரங்காடு, நாகலூர், பட்டிவளைவு, தலைகரை, இணத்தூர், சூலாங்குறிச்சி, மேல்பூண்டி என்பது அடங்கியது ஒரு பஞ்சாயத்து. இந்த ஒரு பஞ்சாயத்துக்கு நியாய விலைக் கடை ஒன்றுதான் இருக்கிறது. 10, 15 மைல்களுக்குப் போய் மக்கள் பொருட்களை வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே அந்த இடங்களில் எல்லாம் புதிய நியாய விலைக் கடைகளை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கல்ராயன்மலை மேல்நாட்டில் வேலம்பட்டி, அம்பளத்தட்டு, பனைம்பட்டு, மாயமனச்சி, நரியகோவில், புளியம்பட்டி, செம்பருக்கை, ஒடுவங்காடு, கோவில்புத்தூர், செங்காட்டுபுதூர், ஆல்பெட்டி, தாளவள்ளம், மேல்வள்ளம், மோதூர், ஆகிய ஊர்களுக்கு மின்சாரம் வேண்டும் என்று கேட்கிறார்கள். அங்கே, சூரிய விளக்குகள் அதாவது சோலார் விளக்குகளைத்தான் போட்டிருக்கிறார்கள். அதுவும் சரியாக எரிவது இல்லை. ஆகவே அந்த விளக்குகளுக்கு நல்ல முறையிலே சூரிய மின்சாரத்தைக் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, பெத்தூர், தவளப்பட்டி, முருகம், வானாவரம், கல்லுக்கட்டு, ஆகிய கிராமங்களுக்குச் சாலை வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பகுதியிலே புதிய



1987 மார்ச் 28] [திரு. சி. பழனிமுத்து]

அணைக்கட்டுகளைக் கட்டி, தண்ணீர் விடுவதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் பரிசீலனை செய்து தண்ணீர் விடுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். என். இராசேந்திரன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன்.

நிர்வாகம் செவ்வையான முறையில் நடைபெற வேண்டு மென்பதற்காக, அரசு போடுகின்ற திட்டங்கள் மக்களுக்குச் சரியான முறையிலே போய்ச் சேரவேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து, நிர்வாகத்தை திருத்துவதில் நெல்லை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து சிதம்பரனார் மாவட்டம் கண்டு, அதிலே தூத்துக்குடியைத் தலைநகராக்கிய இந்த அரசுக்கும், அந்த நடத்திச் செல்கின்ற பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்களுக்கும், மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்ட மக்கள் சார்பாகவும், மாவட்டத் தலைநகராக ஆக்கியமைக்கு தூத்துக்குடி தொகுதி மக்கள் சார்பாகவும் புரட்சித் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாவட்டத்தைப் பிரித்துப் பல மாதங்களாகியும், மாவட்டத் தலைநகரில் கலெக்டரேட் கட்டுவதற்கு ரூ. 1 கோடி ஒதுக்கி இருப்பதாக அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட, தூத்துக்குடியிலே கலெக்டரேட் கட்டுவதற்கான இடம் நிர்ணயிக்கப்படாத சூழ்நிலை இன்னும் இருக்கிறது. அதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விரைவில் கலெக்டரேட் கட்டுவதற்கான இடத்தை நிர்ணயித்து வேலையைத் தொடங்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே பல நல்ல நிலைகளை வரவேற்பதற்கு எதிர்க் கட்சியினர் தயக்கம் காட்டினாலும்கூட, பல நல்ல காரியங்களை நடத்துவதற்கான சூழ்நிலையை இந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அரியலூர் விபத்து கோரமாக இருந்தாலும்

[திரு. எஸ். என். இராசேந்திரன்] [1987 மார்ச் 28

கூட, நமது போலீஸ் படையினர் விரைவாக அந்தக் குற்றவாளிகளை, எதிரிகளை கைது செய்தது பாராட்டுக்குரிய விஷயம்.

வறட்சி பயங்கரமாக தமிழ் நாட்டிலே இருந்தாலும், போர்க் கால நடவடிக்கையாக அரசு எடுக்கின்ற நடவடிக்கை உண்மையிலேயே பாராட்டுக்குரியதாக இருக்கிறது.

அதைப்போல வரிகளைப் போட்டாலும், ஏழைகளைப் பாதிக்காத அளவிலே வரிகளை விதித்து இருப்பது பாராட்டுக்குரிய விஷயம். இந்த மன்றத்திலே நேற்றையதினம் பேசும்பொழுது மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்களுக்கும், திரு. சுப்பராயன் அவர்களுக்கும் எழுந்த விவாதத்தில் இந்த அரசை நிச்சயமாக மாற்றக்கூடிய சூழ்நிலை வருகிறது, காலச் சக்கரம் சுழலும் என்று திரு. சுப்பராயன் சொன்ன நேரத்திலே, அந்தக் காலச் சக்கரம் எப்போது சுழலும் என்பது ஐயத்திற்குரிய விஷயம் என்றார்கள். காரணம், தமிழக முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள், ஏழைகளின் இதயங்களில் குடியிருந்து வருகின்ற காரணத்தால், ஆண்டுக்கு ஒரு திட்டத்தை அறிவித்து வருகின்ற காரணத்தால், ஏழைகளின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம் என்ற அண்ணாவின் வாசகத்தை இன்றையதினம் தமிழக முதல்வர் நிறைவேற்றி வருகிறார்கள். ஏழைகளுக்குத் தேவையானது என்ன? இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு, செய்வதற்கு வேலை. அத்தனையும் செய்து கொடுத்த பின்னர், ஏழைகள் நிச்சயமாக யார் பக்கம் நிற்பார்கள் என்பதை உணர்ந்துவிட்ட காரணத்தால்தான் எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் 'இனிமேல் நமக்கு எதிர்காலம் இல்லை' யென்று அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். வீடுகள் கட்டுவதில், 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுப்போம் என்று தமிழக முதல்வர், புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் அறிவித்ததையொட்டி, இது என்ன ஜீ-பூம்பா வேலையா என்று கேலி பேசினார்கள். ஏன் முடியாது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டவில்லை. முடியும் என்பதை நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 30 இலட்சம் வீடுகள் கட்டுவது என்று அறிவித்தவுடன் பிப்ரவரி மாதம் குடிசை



1987 மார்ச் 28] [திரு. எஸ். என். இராசேந்திரன்]

மாற்று வாரியத் தலைவரை தூத்துக்குடி தொகுதிக்கு அழைத்துச் சென்றேன். அங்கேயுள்ள குடிசைப் பகுதிகளைச் சுற்றிக் காட்டினேன். சுற்றிப்பார்த்துவிட்டு, 10,000 குடிசைகள் இருக்கின்றன, அதை உடனடியாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று சொல்லிவிட்டு வந்தார்கள். இரண்டு மாதங்களில் மார்ச் 31 ஆம் தேதிக்குள் இன்றைக்கு 2,500 வீடுகள் தூத்துக்குடியிலே கட்டி முடித்திருக்கிறார்கள். அதுபோன்று தமிழகம் எங்கும் நடக்குமா என்று வாரியத் தலைவர் திரு. அங்கமுத்துவிடம் கேட்டபோது 'நிச்சயமாக முடியும்' காரணம் டிவிஷன்களைப் பிரித்திருக்கிறோம்' மூன்றாக இருந்ததை ஐந்தாக மாற்றிக் கொடுத்திருக்கிறோம், ஒவ்வொரு

(பிற்பகல் 1-40)

டிவிஷனுக்கும் இரண்டு இலட்சம் வீடுகள் ஒரு ஆண்டுக்குக் கட்ட வேண்டுமென்று நாங்கள் தீவிரப்படுத்திக் கொண்டிருக்கிறோம், ஆகவே ஆண்டுக்கு 10 இலட்சம் வீடுகள் வீதம் 3 ஆண்டுகளுக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன' என்பதையும் அவர்கள் உறுதியாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே இவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களுக்கு தாராளமாக பண உதவியை அரசு செய்யும். அப்படி உதவுமானால் 30 இலட்சம் வீடுகளை நிச்சயமாக 3 ஆண்டுகளுக்குள் கட்டிக் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. வீடுகளும் பிரமாதமாக இருக்கும். தூத்துக்குடியிலே, அண்ணா நகர், அண்ணா காலனி, கிரேஸ்புரம் ஆகிய இடங்களில் குடிசைப் பகுதிகள் இருந்தன. இன்று அவைகள் ஓட்டுப்போட்ட வீடுகளாக மாற்றப்பட்டு, அவைகள் பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றன. அந்த அளவிற்கு குடிசை மாற்று வாரியம் விரைவாக பம்பரமாகச் சுழன்று கொண்டு இருப்பதால் நிச்சயமாக 30 இலட்சம் வீடுகளை கட்டிக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இருக்க இடம். உடுக்க உடை இந்த அரசு அளித்திருக்கிறது. தாய் தந்தையர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி அதன் வாயிலாக குடும்பங்களுக்கு உண்ண உணவும் அளித்திருக்கிறது. கருவுற்றிருக்கின்ற கர்ப்பிணிப் பெண்களையும், கருவிலே உருவாகி

[திரு. எஸ். என். இராஜேந்திரன்] [1987 மார்ச் 28

யிருக்கின்ற குழந்தையையும் இந்த அரசு பாதுகாக்கின்ற காரணத்தினாலே, அது வளர்ந்து வருகின்ற வரையிலும் அதற்கு உணவு கொடுக்கின்ற காரணத்தினாலேயும், ஏழை எளியவர்கள் இதயத்திலே நிச்சயமாக ஒரு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது, இன்று அவர்கள் சிரித்துக்கொண்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். வீடுகளை கட்டிக் கொடுத்த பின்னர், அவற்றைப் பார்க்க வருகை தந்த வாரியத் தலைவர் திரு. அங்கமுத்து அவர்களை, ஏழை எளியவர்கள் வரவேற்பது மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது. ஆகவே, ஏழை எளியவர்கள் மனம் நிறைந்திருக்கின்ற காரணத்தினாலே, இன்றும், எதிர்காலத்திலும் நிச்சயமாக புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிதான் இருக்கும் என்பதற்கு இது ஒரு அச்சாரமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு சில கருத்துக்களை கூறி அமர விரும்புகிறேன். எனது தொகுதியிலே ரூ. 43 இலட்சத்திற்கு ஒரு மருத்துவமனை கட்டப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும் அது நடைமுறைக்கு வராமல் இருக்கிறது. காரணம், பொதுப்பணித் துறையைச் சேர்ந்தவர்கள் ரேம்போ என்று சொல்லக்கூடிய, வியாதியஸ்தர்களை அழைத்துச் செல்லக் கூடிய, வண்டிகளை ஓட்டிச் செல்லுகின்ற ஏணிப் படிகளை கட்டுவதற்கான எஸ்டிமேட்டை போட மறந்துவிட்டதால், அதை டிலியேட் பண்ணி, அந்த ரேம்போவை இப்போது கட்ட முடித்திருக்கிறார்கள். ஆகவே பணம் 3, 4 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இந்தப் பணத்தை கொடுத்து உதவினால் விரைவிலே மருத்துவமனை நடைமுறைக்கு வரக்கூடிய சூழ்நிலை உருவாகும். ஆகவே, 43 இலட்சம் ரூபாய் செலவழித்தும் இந்த மருத்துவமனை திறக்கப்படாமல் இருப்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து மாவட்ட நீதிமன்றம் அமைக்க உத்தரவிட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. சிதம்பரனார் மாவட்டத்திற்கு மாவட்ட நீதிமன்றம் வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அதற்கென்று என உத்தரவும் பிறப்பிக்கப்பட்டு விட்டது. இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் அந்த மாவட்ட நீதி மன்றம் வராத



[1987 மார்ச் 28] [திரு. எஸ். என். இராஜேந்திரன்]

காரணத்தை அரசு ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஏற்கெனவே உள்ள மாவட்ட நீதி மன்றம் அங்கிருந்து நகர்ந்துவிட்டால், வழக்குகள் பாதிக்கப்படும் என்று எண்ணுகின்ற சிலர் இதைத் தடுப்பதாக அங்கிருக்கின்ற பார் அசோசியேஷன் வழக்கறிஞர்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே ஒரு தீர்மானமாகவே போட்டிருக் கிறார்கள். ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருக்கின்ற நீதி மன்றக் கட்டிடத்திலேயே மாவட்ட நீதிமன்றம் நடப்பதற்கான இடம், வசதி அனைத்தும் இருக்கிறது என்று சுட்டிக்காட்டியும் கூட அரசு தயக்கம் காட்டுவதை இந்த அரசு சிந்தித்துப் பார்த்து விரைவிலேயே மாவட்ட நீதிமன்றம், இப்போது இயங்கி வருகின்ற நீதிமன்றக் கட்டிடத்திலேயே இயங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

சிப்காட் பிரிவு ஆரம்பிப்பதற்காக அரசால் கையகப் படுத்தப்பட்ட நிலங்கள் ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் இருக்கின்றன. ஆகவே, அதையும் ஆரம்பித்துத் தர வேண்டுமென்று கேட்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. வை. பாலச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது ஒரு [illegible] இந்த [illegible] [illegible] ஆகும் [illegible] [illegible] பரிசீலித்துச் [illegible] [illegible] சூழ்நிலைகள் [illegible] [illegible] செயல்படும் என்பதைப் பற்றி [illegible] விசாரணைக் [illegible] கமிஷன் என்று ஒரு [illegible] வேண்டுகோள் [illegible] நியமனம் செய்து [illegible] [illegible] வழங்கியிருக்கிறது [illegible]

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 மார்ச் 28

இந்தப் பரிந்துரைகளில் மொத்தம் 34 பரிந்துரைகள் இருந்தாலும் கூட, அவைகளை மொத்தம் 5 தலைப்புகளாகப் பிரித்து, சட்டம், நீதி நிர்வாகம், காவல்துறை நிர்வாகம், சமூகப் பொருளாதார முன்னேற்றம், பொது—என்று 5 தலைப்புகளின்கீழ் 34 பரிந்துரைகளை இந்த கமிஷன் சொல்லியிருக்கிறது. அந்த 5 தலைப்புகளில் சொல்லப்பட்டுள்ள பரிந்துரைகளில் சமூகப் பொருளாதார முன்னேற்றம் குறித்து சொல்லப்பட்டுள்ள பரிந்துரைகள், கன்னியாகுமரி மாவட்டத்தின் பொருளாதார நிலையை படம் பிடித்து காட்டுவனவாக இருக்கின்றன. இவைகள் பற்றி மாண்புமிகு நீதிபதி திரு. வேணுகோபால் அவர்கள் சொல்கிறபோது, அந்த நீதிபதி அவர்கள் Socio-economic Progress என்று சொல்லப்படுகிற அந்தத் தலைப்பின் கீழ் சொல்கிறார்:

"It is the socio-economic problem arising out of deprivation, unemployment, hunger, squalor, lack of proper housing facilities and civic amenities, operating against the background of anger and discontent with an increasing population and overcrowding towns and villages, which is the main reason behind these clashes in Kanniyakumari district. With the rising social and political consciousness, everybody expects more and better. The economy and infrastructure are not keeping pace quantitatively and qualitatively with the increasing demands. More hands are grasping at the limited opportunities available in Kanniyakumari district. The people in this district are vulnerable because of the socio-economic failures and frustration is concentrated here to a point where spontaneous combustion of violence is always possible. The level of spread of violence and frustration will keep increasing unless the phase and pattern of development are able to meet the growing expectations of rising numbers. Generating full employment and containing the growing regional and sub-regional disparity hold the key to solve the problem and pave the way for communal harmony and peace in this district on a permanent basis."

என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சுட்டிக் காட்டுகின்ற கருத்துக்களின் பின்னணி சூழ்நிலைகளாக மொத்தம் 9 சூழ்நிலைகள் இருக்கின்றன. இன்று (1) கன்னியாகுமரி மாவட்டத்தில் இல்லாமை இருந்து கொண்டிருக்கிறது,



1987 மார்ச் 28] [திரு. வை. பாலச்சந்திரன்]

(2) கன்னியாகுமரி மாவட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் தாங்க முடியாத அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது, (3) கன்னியாகுமரி மாவட்டத்தில் பசியும், ஏழ்மை நிலையும் சகிக்க முடியாத நிலையை அடைந்து இருக்கிறது, (4) கன்னியாகுமரி மாவட்டத்தில் வீட்டு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் இல்லை, (5) கன்னியாகுமரி மாவட்டத்தில் பொருளாதாரமும், அடிப்படை வசதிகளும் பெருகி வரும் மக்கள் தேவைக்கேற்ற அளவிலோ, தரத்திலோ ஈடு கொடுப்பவையாக இல்லை, (6) கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற அளவான வாய்ப்புக்களை அளவுக்கு மீறியவர்கள் பயன்படுத்திக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. (7) கன்னியாகுமரி மாவட்டத்தில் சமூகப் பொருளாதார தோல்விகள் காரணமாக மாவட்ட மக்கள் பின் தங்கிய நிலையில் உள்ளனர், (8) கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சிக் கட்டமும், முறையும் எண்ணிக்கையில் பெருகி வரும் மக்களின் வளர்ந்து வரும் எதிர்பார்ப்புகளை ஈடு செய்யாத வரை வன்முறையும், வெறுப்புணர்வும் வளர்ந்து கொண்டேதான் இருக்கும், (9) கன்னியாகுமரி மாவட்டத்தில் நிரந்தரமாக முழு வேலைவாய்ப்பை உருவாக்குவதும், விரிவாகி வரும் வட்டார துணை வட்டார வேறுபாடுகளைக் களைவதும்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வாகும் என்று அவர் கருத்துக்களைக் கூறி இருக்கிறார். இவைகளைப் பொறுத்து நிரந்தரமான பரிகாரமாக என்ன செய்யலாம் என்ற பரிந்துரைகளைக் கூட சொல்கிறார். இந்தப் பரிந்துரைகளை எல்லாம் நம்முடைய அரசாங்கம் 1986-வது ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாளிட்ட அரசாணை எண் 916 மூலம் ஏற்றுக் கொண்டது. அதிலே 3-வது பத்தியில் அரசாங்கம் சொல்கிறது:

"ஆணைக் குழுவின் சட்ட ரீதியான பரிந்துரைகளையும், நீதி நிர்வாகம் மற்றும் காவல் துறை சம்பந்தப்பட்ட பரிந்துரைகளையும், சமுதாய, பொருளாதார முன்னேற்றத்திற்கான பரிந்துரைகளையும் அரசு ஏற்றுக் கொள்கிறது" என்று சொல்கிறார்கள்.

ஆகவே, நம்முடைய அரசாங்கம் அந்த நீதிபதி வைத்த பொருளாதார முன்னேற்றத்திற்கான பரிந்துரைகளை, பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதாகச் சொல்கிறது. அந்த நீதிபதி

[வை. பாலச்சந்திரன்] [1987 மார்ச் 28

சொல்கிற சமுதாயப் பொருளாதார முன்னேற்றத்திற்கான பரிந்துரைகள் மொத்தம் 9 ஆக அவர் பட்டியல் போட்டுச் சொல்கிறார்.

(1) மணவாளக்குறிச்சிப் பகுதியில் இருக்கின்ற அரிய மண் வகை ஏற்றுமதியை உடனடியாக நிறுத்தவேண்டும். படித்த, தேர்ச்சி பெற்ற, ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் தொழில் உற்பத்திப் பணிகளைத் தொடங்க, ஏற்றுமதியாகும் அந்த மண்ணைப் பயன் படுத்தக்கூடிய வகையில் தொழிற்சாலைகள் தொடங்க அரசின் உயர்மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் சொல்கிறார். அதை ஏற்றுக்கொண்டதாக அரசாங்கம் சொல்கிறது. ஆனால் அதை நிறைவேற்றும் அளவுக்கு ஒரு திட்டம் நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்படவில்லை என்பது வேதனைக்குரியதாகும். ஆகவே, அதற்கான திட்டம் ஒன்றை அரசு விரைவில் அறிவிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

(2) இரண்டாவதாக, 'இம்மாவட்டத்தில் மோனசைட், [illegible]டானியம் கிடைப்பதால், இம்மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கக் கூடிய வகையில், தொழிற்சாலைகள் அமைக்கப்படவேண்டும்' என்று அவர் சொல்லியிருக்கிறார். அரசாங்கம் ஏற்றுக்கொண்ட தாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் திட்டங்கள் சொல்லப்பட வில்லை. அது வேதனைக்குரியதாகும். இதற்கான திட்டம் ஒன்றினையும் அரசு விரைவில் அறிவிக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

(3) மூன்றாவதாக, 'கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட்டுத் துறையிலோ, அரசுத் துறையிலோ ரப்பரை மூலப் பொருளாகக் கொண்டு தொழிற்சாலை ஒன்றைத் தொடங்குவது, இம்மாவட்டம் பொருளாதார வளம் காணத் துணை புரியும்' என்று அவர் சொல்லியிருக்கிறார். அரசாங்கம் ஏற்றுக்கொண்டது என்று சொல்லியிருக்கிறது. ஆனால் திட்டங்களைக் காணவில்லை. எப்போது திட்டங்கள் அறிவிக்கப்படும் என்று கேட்பதற்கு விரும்புகிறேன்.

(4) நான்காவதாக, 'இம்மாவட்டத்தில், கயிறு உற்பத்தித் தொழிலுக்கும், கயிறு பொருட்கள் உற்பத்திக்கும் பெரும் அளவில் வாய்ப்பிருக்கிறது. இம்மாவட்டத்தில் மேம்படுத்தப்படக் கூடிய



1987 மார்ச் 28] [திரு. வை. பாலச்சந்திரன்]

கயிறு உற்பத்தித் தொழிலுக்கான வள வாய்ப்பை அரசு மிக நுணுக்கமாக ஆய்வு செய்யவேண்டும்' என்று அவர் சொல்லியிருக்கிறார். அரசு ஏற்றுக் கொண்டதாகச் சொல்லியிருக்கிறது. ஆனால் திட்டங்களைக் காணவில்லை ஐந்தாவதாக இம்மாவட்டத் திலுள்ள .... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

(பிற்பகல் 1-50)

திரு. வை. பாலச்சந்திரன்: (5) ஐந்தாவதாக, இம்மாவட்டத்தி லுள்ள மீன்பிடித் தொழிலை நவீனப்படுத்தினால் ஏற்றுமதி செய்வதை அதிகரிக்க வகை செய்யலாம் என்றும் அப்படி செய்வதன் மூலம் அது அரசாங்கத்திற்கு வருமானமாக அமையும் என்றும் சொல்லியிருக்கிறார். ஏற்றுக் கொண்டதாகச் சொல்லியிருக்கிறது அரசு; ஆனால் திட்டங்களைக் காணவில்லை. எப்போது வரும் திட்டம்? (6) ஆறாவதாக, [illegible] தோவாளை வட்டத்தில் சிமெண்ட் தயாரிக்கத் தேவைப்படும் மூலப் பொருள் கிடைப்பதால், அரசுத் துறையில் அல்லது கூட்டுறவுத் துறையில் சிமெண்ட் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதன் மூலம் வேலைவாய்ப்பை அதிகரிக்கலாம் என்று அவர் சொல்லியிருக்கிறார். ஏற்றுக் கொண்டதாக அரசு சொல்லியிருக்கிறது. ஆனால் திட்டங்களைக் காணவில்லை. ஏன்? (7) ஏழாவதாக, ரப்பர் வாரியம் [illegible]களையும், உதவித் தொகைகளையும் வழங்கி [illegible] உதவி வருகிறது. இம்மாவட்டத்திலுள்ள [illegible] [illegible] கன்னியாகுமரி மாவட்டத்தில் [illegible] அளிக்க [illegible] தேவையான [illegible] ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கிறார். ஏற்றுக்கொண்டதாக அரசு ஆணை மூலமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் திட்டங்களைக் காணவில்லை. [illegible] இந்த திட்டங்கள்? (8) [illegible] கோட்டிலிருந்து மணல்குடி [illegible] அமைத்தால், அது [illegible] மேம்பாட்டிற்கும், மேலும் [illegible] பெரும் துணை புரியும் என்று அவர் சொல்லியிருக்கிறார்.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 மார்ச் 28

ஏற்றுக்கொண்டதாக அரசாங்கம் சொல்லியிருக்கிறது. ஆனால் திட்டங்களைக் காணவில்லை. இதற்கான திட்டத்தை அரசு விரைவில் தர வேண்டும் என்று வேண்டுகிறேன். (9) கடைசியாக, இம்மாவட்டத்திலே உள்ள வட்டங்களின் பரப்பளவு அதிகப் படியாக உள்ளதால், நிர்வகிக்க முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே வசதியான அளவுகளிலே மாவட்ட நிர்வாகம் முறையாகவும், சிறப்பாகவும் இருக்கும் வகையில் சிறு சிறு வட்டங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென்று அவர் சொல்லி யிருக்கிறார். ஏற்றுக்கொண்டதாக அரசாங்கம் சொல்லி யிருக்கிறது. ஆனால் திட்டங்களைக் காணவில்லை.

என்னுடைய பத்மநாபபுரம் தொகுதி, விளவங்கோடு தொகுதி கிள்ளியூர், திருவட்டார், குளச்சல் தொகுதிகளை தன்னகத்தே கொண்ட கல்குளம் தாலுக்கா என்பது இரண்டாகப் பிரிக்கப்பட்டு மன்னர் ஆட்சிக் காலத்தில் அரண்மனை நகராக இருந்த இரணியலைத் தலைநகரமாகக் கொண்ட இரணியல் வட்டம் அமைக்கப்படும் என்று நம்முடைய மன்றத்திலே சொல்லப்பட்டது. அது இந்த ஆண்டு நடத்தித் தரப்படும் என்றுகூட சொல்லப்பட்டது. ஆனால் அதற்கான திட்டங்களைக் காணவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற கல்குளம் வட்டத்தை இரண்டாகப் பிரிப்பதன் மூலம் இந்த மாவட்டத்தினுடைய பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த முடியும் என்ற காரணத்தால் அதை உடனடியாக பிரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பத்மநாபபுரம் நகராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான பரிந்துரை அரசுக்கு வந்திருக்கிறது. அதை அரசாங்கம் உடனடியாக பரிசீலித்து அனுமதி கொடுத்து திட்டத்தை விரைவில் நிறைவேற்ற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றிகூறி அமைகிறேன்.

**திரு. தமிழ்மணி**: மாண்புமிக்க பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் 1987-88-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியதைப்போல, டாக்டர் நாவலர் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையை பல்வேறு கோணங்களில்



1987 மார்ச் 28] [திரு. தமிழ்மணி]

அதனுடைய சிறப்புகளை வலியுறுத்தி பேசுகின்ற வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்கு முதலில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு"

என்று சொன்னான் வள்ளுவன். இன்றையதினம் அஞ்சாமையும், குடிப் பிறப்பும், காக்கும் திறனும் கற்றறிந்த அறிவும் முயற்சியும் ஆகிய இவ்வைந்தும் திருத்தப் பெற்ற தமிழகத்தினுடைய இதய வேந்தர், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை வணங்கி இன்றையதினம் பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் வகுத்து தொகுக்கப்பட்டு அவையின் முன்னால் வைக்கப்பட்டிருப்பதற்காக மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறி ஒரு சில எண்ண உணர்வுகளை தெரிவிக்க நான் விழைகின்றேன்.

எதிர் வரிசையிலே உள்ள அன்புச் சகோதரர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் நிதிநிலை அறிக்கையை இழித்தும் பழித்தும் பேசினார்கள். அப்படி பேசுவது அவர்களுக்கு கை வந்த கலை என்பதை நாம் அறிவோம். பாரதி சொன்னான் "நெஞ்சிலே உரமும் இன்றி, நேர்மைத் திறனுமின்றி வஞ்சனைகள் செய்வாரடி கிளியே, அவர்கள் வாய்ச்சொல்லில் வீரரடி" என்று சொன்னான்.

எனக்கு முன்னால் பேசிச் சென்ற அருமைத் தோழர் உண்மைக்கு விரோதமான, பொய்மைக்குச் சொந்தக்காரரான உறுப்பினர் ஒருவர் ஏதோ பேசி, விட்டு சென்றார். அவர்களைப் பார்க்கின்ற நேரத்தில், சாதாரண என் போன்ற உறுப்பினர்கள் எல்லாம் மெத்த வருத்தப்படுகின்ற சூழ்நிலையிலே இருக்கின்றோம். கற்றறிந்த வழக்கறிஞர் ஒருவர் அவையிலே எப்படி நடந்துகொள்ள வேண்டும், எப்படி நடந்துகொண்டால் சிறப்பாக இருக்கும் என்று தெரியாமல் அநாகரிகமான முறையிலே சென்றிருக்கிறார். அந்த வன்மையான [illegible] கண்டிக்கிறோம்.

அடுத்தாற்போல், இன்றையதினம், வீட்டுவசதித் திட்டத்தின் [illegible] 50 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும் என்று அமைச்சர் [illegible] மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் [illegible]

அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். 30 லட்சம் வீடுகள் எப்படி முடியும் என்று கேட்கிறார்கள்.

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்று சொன்னான் வள்ளுவன். அத்தகைய நிலையிலே உள்ள தமிழக அரசு ஏனைய திட்டங்களைச் சீராகவும், சிறப்பாகவும் செய்கின்ற நேரத்தில் வீட்டு வசதித் திட்டத்தை மட்டும் செய்ய இயலாதா என்பதை எதிர் வரிசையிலே இருக்கின்ற நண்பர்களை நான் கேட்க விரும்புகிறேன். அவர்கள் இன்றையதினம் எதற்கெடுத்தாலும் குறைகளைச் சொல்லியே பழக்கப்பட்டவர்கள்.

ஆகவேதான் அவர்கள் புரட்சித் தலைவரின் அகத்தில் உள்ள சிறப்புகளை எல்லாம் விட்டுவிட்டு ஏனைய குற்றங்களை மட்டும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அது குற்றமாக இருக்கலாம். ஆனால் நாட்டு மக்களுக்கு அது குற்றமாக இருக்கிறதா என்றால் இல்லவே இல்லை.

குறிப்பாக இன்றையதினம் எதிர் வரிசையில், எதிர் முகாமில் இருக்கிற நண்பர்கள் எங்களைப் பார்த்து ஏதோ அறிஞர் அண்ணா அவர்கள் இவர்களுக்குத்தான் அறிமுகம் ஆனதைப் போலவும் அவர்களுக்கு மட்டும் வேண்டியவரைப் போலவும் பேசுகிறார்கள். நாங்களும் அறிஞர் அண்ணா அவர்களிடம்தான் அரசியல் அறிவு பெற்றவர்கள், பத்திரிகை விளம்பரத்திற்காகப் பேசுகிற அருமைச் சகோதரர் திரு. ரகுமான்கான் போன்றவர்கள் சில தவறான தகவல்களை இங்கே தந்து கொண்டிருக்கிறார்கள். ஓட்டல்களுக்கு வரி போட்டுவிட்டோம் என்று சொல்லுகிறார். 2 லட்சம் ரூபாய் வருமானத்திற்கு மேல் உள்ள ஓட்டல்களுக்குத் தான் இப்போது வரி விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர திரு. ரகுமான்கான் போன்றவர்கள் செல்லுகிற ஓட்டல்களுக்கு அல்ல. அப்படிப்பட்ட ஓட்டல்களுக்கு வரி விதிப்பதில் யாருக்கும் ஆட்சேபனை இல்லை. திரு. ரகுமான்கான் அவர்கள் நகரில் உள்ள ஸ்டார் ஹோட்டல்களுக்குத்தான் போவார் போல் இருக்கிறது. எனவே 2 லட்சம் ரூபாய்க்குக் குறைவாக வருவாய் உள்ள ஓட்டலுக்குத்தான் நாங்கள் செல்வது வழக்கம். எனவே அத்தகைய நண்பர்கள் பேசுகிறபோது அரசின் நல்ல பரிந்துரையை வரவேற்றுப் பேசினால் நன்றாக இருக்கும். அதை விடுத்து எதை எதையோ பேசுவது சாலச் சிறந்ததாக இருக்காது என்றுதான் கருதுகிறேன்.



அடுத்து, குறிப்பாக இந்த அறிக்கையிலே எண்ணற்ற பல நன்மைகளை நான் காணுகிறேன். பொது சுகாதாரத் திட்டத்தின் வாயிலாக 19887-88 ஆம் ஆண்டிற்கு 140 சுகாதார துணை நிலையங் களையும் 500-க்கும் மேற்பட்ட சுகாதார நிலையங்களையும் அமைக்கும் வகையில் திட்டமிடப்பட்டிருப்பதற்காக நான் அதை வரவேற்று நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. தண்ணீர்ப் பிரச்சினையாக இருந்தாலும் சரி, கல்விப் பிரச்சினை யாக இருந்தாலும் சரி, வேளாண்மை, நகராட்சி நிர்வாகம், சமூக நலம், பாசனம் போன்றவைகளாக இருந்தாலும் சரி, இவைகளுக் கெல்லாம் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு சிறப்பான முறையில் அதிகமான நிதி ஒதுக்கம் செய்திருப்பதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

எது எப்படி இருப்பினும் எனது கடந்த 35 ஆண்டுக் கால அரசியல் வாழ்க்கையில் எந்த உணர்வோடு நான் நுழைந்தேனோ அந்த உணர்வுக்கேற்ப 20 ஆம் நூற்றாண்டில் மிகச் சிறந்ததொரு திட்டமாக காலணித் திட்டத்தை அறிவித்திருக்கிற அந்தப் பொற்காலத் தலைவரின் பாதாரவிந்தங்களைத் தொட்டு வணங்கத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

35 ஆண்டுகளுக்கு முன்னாலே அரசியலில் நான் அடி எடுத்து வைத்த காலத்தில் ஏழை எளிய மக்கள், சாலை ஓரத்தில் இருப்பவர்கள், வேலை அற்றவர்களாக தங்கள் காலில் செருப்பு இல்லாமல், தலையில் எண்ணெய் இல்லாமல் இருப்பதைப் பார்த்து நானும் அப்படியே இருப்பேன் என்றேன். ஆனால் அந்த நிலைமை மாற இன்றையதினம் என் வாழ்நாளில் என்னுடைய தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுதான் ஏழை எளியவர்களுக்கு இலவசமாக காலணி வழங்கும் திட்டம். அந்தத் திட்டத்தை நான் மனமார இரு கரம் கூப்பி வணங்கி வரவேற்கிறேன். அந்தக் கரங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் 35 ஆண்டுகளுக்கு முன்னால் நான் சாதாரண தொண்டனாக, காலில் செருப்பு அணியாமல் இருந்தேன். என்றைக்கு நாட்டில் உள்ள லட்சோப லட்சம் மக்கள் தங்கள் காலில் செருப்பு அணிகிறார்களோ அந்தக் காலம் வரை நானும் காலணியை அணியமாட்டேன் என்று சொல்லியிருந்தேன். ஒரு திருமணத்திற்கு எனது தலைவர் அவர்கள் வந்திருந்தபோது என்னைப் பார்த்து நீயும் காலணி அணிய வேண்டும் என்று

சொன்னார்கள். நானும் அளிக்கிறேன் என்று சொன்னேன். அவ்வாறு அளிக்கிற சந்தர்ப்பத்தை இன்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர்—எனது இதய தெய்வம் அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள். தொகுதி பற்றி பேசுங்கள். இன்னும் 2 பேர் பேச வேண்டும். முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. தமிழ்மணி:** அந்தத் தலைவருக்கு நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து முட்டுக்காடு பகுதியில் 90 ஏக்கர் நிலம் வேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்டிப் பேசினார்கள். முட்டுக்காடு என்னுடைய தொகுதியைச் சேர்ந்ததாகும். அந்தத் திட்டத்திற்காக நான் மாண்புமிகு மீன்துறை அமைச்சர் அவர்களிடம் சென்று சொல்லி அதற்குத் தேவையான நிலங்களை ஒதுக்கவும், மத்திய அரசிடமிருந்து பெற வேண்டிய நன்மைகளைப் பெறவும் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அவர்களும் அதைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருக்கிறார்கள். அதைச் சொல்லாமல் பொய்யான தகவல்களை, தவறான தகவல்களைக் கொடுத்து பத்திரிகை விளம்பரத்தை நாடுகிறார்கள் என்றால் அதை நான் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லை. அது சரியான தகவல் அல்ல என்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியைப் பொறுத்தவரை அது மிகவும் பின்தங்கிய ஏழை எளிய மக்களையும் மீனவர்களையும் பிற்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களையும் கொண்ட பகுதியாக இருக்கிற காரணத்தால் அதற்கு பல்வேறு திட்டங்கள் தேவை என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2.00)

எனது எண்ண உணர்வுகளைச் சொல்லுவதற்கு அருள்கூர்ந்து துணைத் தலைவர் அவர்கள் 5 நிமிடம் அவகாசம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம் நான் என்றோ ஒரு நாள் பேசுகின்றவன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



6. அரசினர் தீர்மானம்.

விதி 32-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"சட்டப் பேரவையின் ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப் பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 31—3—1987 ஆம் தேதி அன்று தளர்த்தி அரசினர் அலுவல்கள் எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

5. வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொது விவாதம்—(தொடர்ச்சி)

**திரு. ஆர். செங்காளியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய 1987-88 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய ராசியோ என்னவோ தெரியவில்லை, எப்போது பார்த்தாலும் சபாநாயகர் அவர்களும், துணை சபாநாயகர் அவர்களும் கடைசியில், நேரம் முடியும்போது பேச வாய்ப்புக் கொடுக்கிறார்கள். அன்றைக்கு அப்படித்தான் மூன்று நிமிடங்களுக்குள் முடித்துக் கொண்டேன். பேச அனுமதிப்பதாக இருந்தால் 10 நிமிடங்களாவது அனுமதித்தால்தான் பேசலாம். இல்லாவிட்டால் பேசாமல் உட்கார்ந்து விடுகிறேன். நான் சண்டை போடுபவன் அல்ல. வயதானவன். சண்டை போடுகிறவர்களுக்கு அதிகம் கொடுக்கிறார்கள். பல தடவை நேரிடையாகக் கேட்டாலும் இடம் கொடுப்பதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுங்கள்.

**திரு. ஆர். செங்காளியப்பன்:** துணை சபாநாயகர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் உண்மையிலேயே பல ஏழையெளிய மக்களுக்கு பல நன்மைகளைச் சொல்லியிருந்தாலும் சில

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1987 மார்ச் 28

இனங்களிலே ஏழையெளிய மக்களை பாதிக்கக்கூடிய அளவிற்கு வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. சாதாரண ஏழையெளிய மக்கள் தான் பஸ்ஸில் செல்லுகிறார்கள். பஸ் கட்டணத்தை உயர்த்தியிருப்பதானது உண்மையிலேயே அவர்கள் கஷ்டப்படுகிற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதேபோல செங்கல் போன்ற கட்டுமானப் பொருள்களுக்கு வரி உயர்த்தியதால் சாதாரண ஏழையெளிய மக்கள் வீடு கட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் நீங்கள் இந்த வரியை ரத்து செய்ய வேண்டும். ஏழையெளிய மக்களை பாதிக்கக்கூடிய வரிகளை நீங்கள் ரத்து செய்ய வேண்டும். தனவந்தர்களுக்கு வரி விதிக்கலாம், பணக்காரர்களுக்கு வரி விதிக்கலாம், ஆலை அதிபர்களுக்கு நீங்கள் வரி விதிக்கலாம். அதை நாங்கள் வேண்டாம் என்று கூறவில்லை. அதன் மூலம் ஏழையெளிய மக்களுக்கு நல்ல அம்சங்கள் செய்ய முடியும். ஆகவே இந்த வரிகளை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வறட்சியைப் பற்றி எல்லா உறுப்பினர்களும் பேசினார்கள். இந்த வறட்சியால் தமிழகம் முழுவதும், ஒரு சில பகுதியைத் தவிர பெரும்பாலான கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. குடிதண்ணீர் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கோயம்புத்தூர் மாவட்டத்திலே என்னுடைய தொகுதியான சிங்காநல்லூரை எடுத்துக் கொண்டால் உண்மையிலேயே குடிக்கத் தண்ணீர் இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கேயுள்ள ஆட்சித் தலைவர் சிரமப்பட்டு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறார். இருந்தாலும் போதுமான அளவிற்குத் தண்ணீர் கொடுக்க முடியவில்லை. ஆகவே தண்ணீர் கொடுப்பதற்குண்டான எல்லா நடவடிக்கைகளும் எடுப்பதற்காக அதிக நிதியை ஒதுக்கி ஏழையெளிய கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்குண்டான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளின் கிணறுகளில் மோட்டார்கள் ஓடுவது கிடையாது. ஆகவே விவசாயிகளுக்கு விதிக்கும் கட்டணத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இரண்டு ஏக்கருக்குக் கீழேயுள்ளவர்களுக்கு கட்டணத்தை தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். ஆனால் இரண்டு



1987 மார்ச் 28] [திரு. ஆர். செங்காளியப்பன்]

ஏக்கருக்கு மேலேயுள்ளவர்களுக்கு மினிமம் சார்ஜ் ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நிறைய இடங்களில் மோட்டார்கள் ஓடுவதில்லை. குடிக்கவே தண்ணீர் இல்லாத நிலையில் விவசாயிகள் ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னால் அது அவர்களுக்குச் சிரமமாக இருக்கிறது. அதை மறு பரிசீலனை செய்து அப்படிப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு, மோட்டார் ஓடாத விவசாயிகளுக்கு கட்டணத்தை, மினிமம் சார்ஜை ரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதனாலே விவசாயிகள் இன்று நிரம்ப சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கடன் உதவி கொடுத்திருக்கிறீர்கள். அதை மனதார வரவேற்கிறேன். வட்டியைத் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். அதை வரவேற்கிறேன். இன்றைக்கு வறட்சி அதிகமாக ஏற்பட்டிருக்கிற காரணத்தால் அவர்கள் திருப்பிக் கட்டுவதற்கான காலக்கெடுவை கொஞ்சம் நீட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று பஞ்சாலைத் தொழிலாளர்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பது தெரியும். மாண்புமிகு நிதி அமைச்சரிலிருந்து கைத்தறி அமைச்சர் வரையில் பேசியாகி விட்டது. இன்று நிலைமை என்னவென்றால், இன்னும் அபிவிருத்தி ஏற்படவில்லை. எல்லாக் கட்சியினரும் ஒருமனதாக 10 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தோம். 3 ஆண்டுக் காலமாக பஞ்சாலைத் தொழிலாளர்கள் பட்டினியில் கிடந்து, நூற்றுக் கணக்கானவர்கள் இறந்துவிட்டார்கள். அரசு, ஏழை மக்களுக்காக பல கோடி ரூபாய்களை செலவழிக்கிறது. ஆனால் பஞ்சாலைத் தொழிலாளர்கள் இந்த நாட்டில் பிறந்தவர்கள் இல்லையா? இந்த அரசாங்கத்தைத் தவிர வேறு யாரிடம் அவர்கள் தங்கள் குறையைச் சொல்ல முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது பற்றி பல முறை சொல்லியாகிவிட்டது. மத்திய அரசு, இந்தப் பஞ்சாலைகளில் நஷ்டம் ஏற்படுகிறது, ஆகையால் இந்த ஆலைகளை எடுக்க முடியாது என்று சொல்லுகிறது. அதே நேரத்தில் நீங்களும் அப்படிச் சொல்லுகிறீர்கள். திரு. சின்னசாமி அவர்கள் கேள்விக்கு பதில் அளிக்கும்போது, 'எடுப்பதாக இல்லை' என்று கைத்தறி

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1987 மார்ச் 28

அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாம் 2, 3 ஆலைகளை எடுத்திருக்கிறோம். அவற்றில் நஷ்டம் ஏற்படவில்லை. நாம் அதற்கு அரசாங்க மூலதனம் போடவில்லை. அங்கே என்ன செய்திருக்கிறோம் என்றால், சேல்ஸ் டாக்ஸில் சலுகை கொடுத்திருக்கிறோம், எலக்ட்ரிசிட்டியில் சலுகை கொடுத்திருக்கிறோம். நஷ்டத்தில் ஒரு பகுதியை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். 25 சதவிகிதம் சம்பளத்தை நாங்கள் குறைத்துக் கொண்டோம். தொழிலாளர்கள் 3, 4 மாதங்களாக முக்கால் சம்பளம் பெற்றுக் கொண்டு, அந்த மில்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே அரசு அவற்றை தேசிய உடைமையாக்க வேண்டாம். மத்திய அரசுக்கும் அந்தக் கொள்கை இல்லை. உங்களுக்கும் அந்தக் கொள்கை இல்லை. குறைந்த பட்சம் ஸ்ரீஹரி, ஜெயலட்சுமி, ஜோதி மில்களைப் பொறுத்து செய்யுங்கள் என்று சொல்லுகிறோம். நஷ்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எங்கள் பங்கைக் குறைத்துக் கொள்கிறோம். அரசாங்கமும் சலுகை கொடுத்தால் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு அளிக்க முடியும். அவர்கள் பட்டினி கிடக்கிறார்கள். அவர்கள் சாவதைக் காட்டிலும், தொழிற் சங்கத் தலைவர்களாகிய நாங்கள் சாகலாம் என்றுதான் 10 நாட்கள் உண்ணாவிரதம் இருந்தோம். திரு. அரங்கநாயகம் வந்தார்கள், சமாதானம் சொன்னார்கள். அதை ஏற்றுக் கொண்டோம். நீங்கள் 2 ஆலைகளைத் திறந்தீர்கள். இன்னும் 5, 6 ஆலைகள் கோவையில் இருக்கின்றன. புதுக்கோட்டையில் இருக்கிறது. நான் சொன்ன அடிப்படையில் எடுத்துக் கொள்ளுங்கள். நிறைய மூலதனம் இட வேண்டாம். நீங்கள் சில சலுகைகளைச் சொல்லி, எடுத்துக் கொள்ளுங்கள் என்றுதான் கேட்கிறோம். தயவுசெய்து அந்த ஆலைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே, பஞ்சாலைத் தொழிலாளர்கள் நாங்கள் உண்ணாவிரதம் இருந்த நேரத்தில் ஒரு போராட்டம் துவங்கினார்கள். தலைவர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்று உணர்ச்சிவயப்பட்டு பஸ் மறியல் செய்தார்கள். எனவே அவர்கள் மேல் கேஸ் போட்டார்கள். அந்தக் கேஸ்களை வாபஸ் பெற வேண்டுமென்று சொன்னோம். சட்ட அமைச்சரவர்களும் அதை ஒத்துக் கொண்டார்கள். அங்கேயிருந்து ரிப்போர்ட் அனுப்பச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களும் அனுப்பியிருக்கிறார்கள். அவர்கள் ஆலைக்கு வேலைக்கு செல்ல வேண்டியவர்கள்.



1987 மார்ச் 28] [திரு. ஆர். செங்காளியப்பன்]

இதனால் அவர்கள் தினமும் 50 ரூபாய் சம்பளம் இழக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. வாரம் ஒரு முறை வாய்தா போடுகிறார்கள். அந்தக் கேஸ்களை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என் தொகுதியில் பீளமேடு என்ற நகரம் இருக்கிறது. அங்கே ரயில்வே ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் 1979 ஆம் ஆண்டு உணவுக் கார்ப்பரேஷனுக்காக [illegible] ஏக்கர் நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. அரசாங்கம் கையகப்படுத்தி, அதில் கட்டிடங்கள் கட்டி, 4 ஆண்டுக் காலமாக எஃப்.சி.ஐ. நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் நிலச் சொந்தக்காரர்களுக்கு இன்னும் பணம் கொடுக்கவில்லை. பணம், உணவுக் கார்ப்பரேஷனிலிருந்து கலெக்டருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. நிதி அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு ஆர்டர் வர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதாவது, அரசாங்கத்திலிருந்து ஒரு ஆர்டர் வர வேண்டும். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்துள்ள சாதாரண ஏழை விவசாயிகள் அவர்கள். 1979-லிருந்து அவர்களுக்கு இன்னும் பணம் கிடைக்கவில்லை. அதைச் [illegible] 1986 வரை பணம் கிடைக்கவில்லை. சீக்கிரத்தில் பைலைப் பார்த்து, நிதி அமைச்சரவர்கள் ஆர்டரை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோவையில் கலெக்டர் ஆபீஸில் பணம் இருக்கிறது. ஆர்டர் போட்டால், பணத்தைப் பிரித்துக் கொடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சின்னவேலன்பட்டி குளம் என்ற திட்டத்திற்காக வேலை நடந்து கொண்டிருக்கிறது. அங்கே 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் நிலங்களை ஒப்படைத்து விட்டார்கள். ஆட்சேபணை இல்லை என்றும் எழுதிக் கொடுத்து விட்டார்கள். அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும். அவர்கள் அந்தப் பணத்தைக்கொண்டு வேறு இடத்தில் விவசாயம் செய்யவேண்டும். அவர்களுக்கும் உடனடியாக அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். செங்காளியப்பன்] [1987 மார்ச் 28

அதே நேரத்திலே இன்று நிதிநிலை அறிக்கையின் மீது இதுவரையிலே பல உறுப்பினர்கள் பேசினார்கள். அவர்கள் பல கோரிக்கைகளை வைத்தார்கள். அதையெல்லாம் மனதிலே வைத்து நீங்கள் தாராளமாக தமிழக ஏழை மக்களின் நல்வாழ்விற்காக உள்ள திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-10)

மீண்டும் பஞ்சாலைகளையும் மனதிலே வைத்து நிதி அமைச்சர் அவர்கள் செயலாற்ற வேண்டும். அவர்கள் மனது வைத்தால் தான் நடக்கும். இந்த 2 ஆலைகளை எடுப்பதற்குக் கூட அவர்கள் தொழிலாளர் நலத் துறையை ஏற்றதற்குப் பின்னாலே, நாங்கள் பேசியதற்குப் பின்னாலே தான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மூலமாகத்தான் முடிவெடுக்கப்பட்டது. அவருக்கு இலாகா மாற்றம் ஏற்பட்ட பிறகு அது கிடப்பிலே போடப்பட்டு விட்டது. அந்த ஆலைகளை தயவுசெய்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பினைக் கொடுத்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

*திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களின் 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களாலே அறிவிக்கப்பட்டிருக்கின்ற எல்லா திட்டங்களையும் வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்கின்ற நேரத்தில், பாதிக்கப்பட்ட ஆதி திராவிட மக்கள், அருந்ததிய சமூகத்தைச் சார்ந்த மக்கள் நீண்ட காலமாக ஒரு பாதுகாப்பு இல்லாமல், செய்கின்ற தொழிலுக்கு உத்தரவாதம் இல்லாமல் இருந்தார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு வாழ்வு அளிக்கின்ற வகையிலே இன்றைக்கு ரூ. 20 கோடி திட்டத்திலே, காலணி வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். அதற்கு அருந்ததிய சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்றைக்கும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்,



1987 மார்ச் 28] [திரு. கே. பி. கே. சேகர்]

நேரம் இல்லாத காரணத்தினாலே, என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட விவரங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய செங்கற்பட்டு மாவட்டம் மிகப் பெரிய பரப்பளவு கொண்ட மாவட்டமாகும். அதே நேரத்திலே சிறிய சிறிய அளவிலே இருக்கின்ற மாவட்டங்களை எல்லாம் பிரிக்கின்ற இந்த நேரத்திலே பெரிய பரப்பளவுள்ள செங்கற்பட்டு மாவட்டத்தை பிரித்து, செங்கற்பட்டை தலைநகரமாகவும், காஞ்சியைத் தலைநகரமாகவும், திருவள்ளூரை தலைநகரமாகவும் ஆக்கி செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய மாவட்டங்களாக இருக்கின்ற மாவட்டங்களில் எல்லாம் போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. பெரிய மாவட்டமாக இருக்கின்ற பேரறிஞர் அண்ணா பிறந்த எங்கள் மாவட்டத்திற்கு என்று தனியாக அரசுப் போக்குவரத்துக் கழகம் இதுவரைக்கும் இல்லாமல் இருக்கின்றது. அந்தக் குறையை தயவுசெய்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டும். எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்திற்கு தனியாக போக்குவரத்துக் கழகம் தொடங்கி அதற்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பெயரை வைக்க வேண்டும் என்றும் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியில் பழவேற்காடு என்ற பகுதி இருக்கின்றது. இந்த இடத்திற்கும் திருப்பாலைவனம் என்ற இடத்தில் உள்ள காவல் நிலையத்திற்கும் 10 கிலோ மீட்டர் தூரம் இருக்கின்றது. அங்கே உள்ள மீனவ மக்கள் இடையிலே அடிக்கடி தகராறு ஏற்படுகின்றது. அங்கே விரும்பாத சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியிலே ஒருவர் கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் கொலை செய்யப் பட்டிருக்கின்ற நிலைமை கூட ஏற்பட்டிருக்கின்றது. அங்கு அடிக்கடி நடக்கின்ற ஒரு நிகழ்ச்சியாக கொலை நடந்து வருகிறது. ஆகவே அந்த பழவேற்காடு பகுதிக்கு என்று தனியாகவே ஒரு காவல் நிலையம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, என்னுடைய தொகுதியிலே தீ அணைப்பு நிலையம் வேண்டுமென்று நீண்ட நெடுநாட்களாக வலியுறுத்தி வந்திருக்கிறோம். அந்த தீ அணைப்பு நிலையத்தினை அரசு

உருவாக்குவதற்கு இருக்கிறது. அதற்கு எனக்கு உறுதி யளித்திருக்கின்றது. அப்படி இருந்தாலும் அந்தப் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆக பொன்னேரியில் ஒரு தீ அணைப்பு நிலையம் அவசியம் வேண்டும். மணலி புதுநகரிலே தீ அணைப்பு நிலையம் ஒன்றையும் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, சென்னை திருவொற்றியூர், பொன்னேரி—பஞ்சட்டி நெடுஞ்சாலையிலே எரணாவூர் என்ற இடத்திலே ஒரு ரயில்வே மேம்பாலம் கட்டுகின்றார்கள். அந்த மேம்பாலத்தினுடைய பணியினை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கடந்த மாதம் 20 ஆம் தேதி என்னுடைய தொகுதிக்குச் சுற்றுப்பயணம் வருகின்ற நேரத்திலே அந்த பாலம் கட்டுகின்ற பணி நடக்கின்றதைப் பார்வையிட்டார்கள். அதுபோலவே நம் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும் கடந்த மாதம் 24 ஆம் தேதி வருகை தந்தபோதும் அந்த பாலத்தினுடைய பணியினை பார்வையிட்டார்கள். ரூபாய் 1½ கோடி திட்டத்திலே தமிழக அரசும் மத்திய அரசும் சேர்ந்து கட்டும் அந்த பாலத்தினுடைய பணி முடிவடையும் தருவாயில் இருக்கின்றது. ஆனால் அந்த பாலத்தை இணைக்கின்ற பாதையினுடைய பணி தொடங்கப்படாமல் இருக்கின்றது. மிக விரைவிலே அந்த பாதையை அமைக்கும் பணியினை உடனடியாக உருவாக்கித் தர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்வதோடு நெடு நாட்களாக பாதியிலே விடப்பட்டிருக்கின்ற வயக்காடு பாலம் என்ற பணியினையும், பாதியிலே விடப்பட்டிருக்கின்ற அந்த பணியினையும் விரைவில் முடிக்க வேண்டும். அந்தப் பணியை இப்போதுதான் தொடங்கியிருக்கின்றார்கள். அந்தப் பணியினை வருகின்ற மழை காலத்திற்குள்ளாகவே முடித்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே நீண்ட நெடுநாட்களாக குசஸ்த்தலை ஆற்றின் குறுக்கே, நாப்பாளையம் என்ற இடத்தில் பாலம் கட்டி அதுவும் பாதியிலே நின்று கொண்டிருக்கின்றது. அந்தப் பணி முடிக்கப்படாமல் டெல்லி உச்ச நீதிமன்றத்திலே வழக்கில் இருக்கின்றது. அந்த காரணத்தினாலேயே அது அப்படியே இருக்கின்றது. தமிழகத்தினுடைய அரசு சார்பில் அரசு வழக்கறிஞர்கள் அந்த





வழக்கை வேகமாக முடுக்கிவிட்டு, அந்த வழக்கை அவர்கள் முடித்து, அந்தப் பாலத்தை முடித்துத் தர வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு வறட்சிப் பகுதியாக செங்கற்பட்டு மாவட்டத்திலே ஒரு பகுதியை மட்டும் அறிவித்திருக்கின்றார்கள். ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்திலே எல்லாப் பகுதிகளையும் வறட்சி தாலுக்காக்களாக அறிவித்து அந்தப் பகுதிகளுடைய வறட்சிப் பணிகளை தீவிரமாக முடுக்கிவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனது தொகுதியில் மண் மேடிட்டு இருக்கின்ற ஏரிகளை மராமத்து செய்து, கரைகளை வலுப்படுத்தித் தர வேண்டும். வேலையில்லாமல் இருக்கின்ற விவசாயக் கூலிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையிலே உத்தரவாதம் கொடுத்து அந்தப் பணியினை செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பொன்னேரி தொகுதியிலே இருக்கின்ற தாலுக்கா மருத்துவமனையில் காலரா பிரிவு, சிறிய ரத்த சேமிப்பு நிலையம் போன்ற வசதிகளை செய்து கொடுக்க வேண்டும். அங்கே ஆம்புலன்ஸ் வண்டி இல்லாமல் நெடுநாட்களாக இருக்கின்றது. அந்த மருத்துவ மனைக்கு ஆம்புலன்ஸ் வண்டி வழங்குவது முக்கியம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. அந்தப் பகுதியிலே போஸ்ட் மார்ட்டம் செய்கின்ற ஒரு இடம் ஊருக்கு மத்தியிலே இருக்கின்ற காரணத்தினாலே, 10 நாட்களுக்கு அல்லது 15 நாட்களுக்கு முன்னால் இறந்து அழுகிய நிலையில் உள்ள பிணங்கள் வருகின்ற காரணத்தினால், அந்த பகுதியிலே பெருத்த துர்நாற்றம் ஏற்படுகின்றது. அதனால் அந்தப் பகுதியிலே சுகாதார வசதி பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆக போஸ்ட் மார்ட்டம் செய்கின்ற இடத்திற்கு ஒரு குளிர்ப் பதன அறை அமைத்துத் தர வேண்டும் என்றும், அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு வாய்ப்பினை கொடுத்ததற்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. ஜெ. ராஜூபாபு :** மாண்புமிகு பேரவையினுடைய இந்திய அணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற இந்த தேசிய காங்கிரஸ் சார்பில் என்னுடைய கருத்தை

[திரு. ஜெ. ராஜாபாபு] [1987 மார்ச் 28

மாமன்றத்திலே கூற விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே சில குறைபாடுகளைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பாக உணவுப் பண்டங்களின் மீது விதிக்கப்பட்டுள்ள வரி சாதாரண மக்களை மிகவும் பாதிக்கும்.

அதைப்போல, கட்டடம் கட்டுவதற்குத் தேவையான மரம், ஆஸ்பெஸ்டாஸ் சீட், செங்கல் போன்றவைகளின் மீது விதிக்கப் பட்ட வரிகளை குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் ஏழையெளிய தொழிலாளர்களின் வேலைவாய்ப்பை குறைக்கின்ற தடைக் கல்லாக அது இருக்கும் என்றும், ஏழை யெளிய மக்கள் கட்டுகின்ற வீடுகள் இதனால் பாதிப்புக்குள்ளாகும் என்பதையும் நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, இப்போது தமிழகத்திலே வறட்சி நிலைமை இருக்கின்றது. அந்த வறட்சி நிலைமையைத் தீர்க்கும் பணிகளை தீவிரமாக முடுக்கிவிட்டு, கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற குடி-நீர் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோலவே காலனி திட்டத்தை நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் தாழ்த்தப்பட்ட, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மக்களுடைய அன்றாடப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு திட்டவட்டமான திட்டத்தைத் தீட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே கிராமப்புறத்திலே இருக்கின்ற ஏழையெளிய மக்களுக்கு உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை தீர்க்க நிதிநிலை அறிக்கையிலே எந்தத் திட்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவில்லை என்பதை குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க மத்திய அரசும் பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தியும் எடுத்து வரும் பல முயற்சிகளுக்கு தமிழக அரசு தருகின்ற ஆதரவை



1987 மார்ச் 28] [திரு. ஜெ. ராஜாபாபு]

மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இலங்கைத் தமிழர் பிரச்சினை களுக்கு ஒரு அரசியல் தீர்வை ஏற்படுத்தி இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். அதற்கு மாறாக சில அரசியல் கட்சிகள் இப்பிரச்சினையை அரசியல் முதலீடாக கருதுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற குறைபாடுகளை இந்த மாமன்றத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சாலை வசதிகள் சரியான முறையிலே இல்லை, அங்கே மாட்டு வண்டிகள் செல்வதற்குக் கூட மிகவும் கஷ்டமான நிலைகள் இருக்கின்றன. குறிப்பாக படவேட்டிலிருந்து கண்ணமங்கலத்துக்கும், மாதிரி மங்கலத்திலிருந்து ஆத்துவாம்பாடிக்கும் கண்ணமங்கலம் என்ற இடத்திலிருந்து கீழ் அரசம்பட்டுக்கும், கண்ணமங்கலம் என்ற இடத்திலிருந்து ஆற்காடுக்கும் சரியான சாலை வசதிகளை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 2-20]

அடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள பள்ளிகளைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 14—8—1986 அன்று எனது தொகுதியிலுள்ள கந்தவாசலில் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற ரூபாய் 25,000 கட்டியும், அதேபோல் 23—8—1985 அன்று கீழ் பெண்ணாத்தூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற பணம் கட்டியும், இதுவரை அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே அரசு இந்த ஆண்டிலேயே அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் கட்டிடங்கள் சரியான முறையில் இல்லை என்பதனை இந்த அரசுக்கு பல முறை சுட்டிக்காட்டியும் இது வரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறிப்பாக கீழ் அரசம்பட்டு, பெண்ணாத்தூர், கம்மவான் பேட்டை, கன்னியம்பாடி, சந்தவாசல், ஏ. கே. படவேடு, அத்தியூர் போன்ற இடங்களிலுள்ள பள்ளிகளில் சரியான முறையில் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

[திரு. ஜெ. ராஜாபாபு] [1987 மார்ச் 28

அடுத்து, என்னது தொகுதியில் பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே செய்து வருகிறார்கள். இங்கே கரும்பு உற்பத்தி அதிகமாக உள்ளது. எனவே அரசு, போளூர் பகுதியில் கரும்பு ஆலையை நிறுவ வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் உள்ள அமிர்தி பகுதியில் உள்ள மிருகக் காட்சி சாலையை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று நான் அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலுள்ள மக்கள் நீண்ட நெடுநாட்களாக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற செண்பகத் தோப்பு அணைத் திட்டத்தைப் பற்றியும் இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான பதிலுரையின்போது அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியில் இருக்கின்ற பல்வேறு ஏரிகள் தூர் எடுக்கப்படாமல் பாழ்பட்டுக் கிடக்கின்றன. அவற்றை துரிதமாக தூர் எடுக்க அரசு உத்தரவிட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கஸ்தம்பாடி பகுதியில் அரசின் புறம்போக்கு நிலம் 300 ஏக்கர் உள்ளது. இந்நிலத்தில் அரசு ஒரு சிறிய தொழிற் பேட்டை அமைக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அதோடு இப்பகுதியில் ஒரு தொழில் நுட்பக் கல்லூரியை அமைத்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் பொழுது, ஒரு பிரிவிற்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரை வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதேபோல புதிய மருத்துவ பல்கலைக் கழகம் துவக்க இருப்பதாக மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் கூறினார்கள்.' இந்த ஆண்டு தொடங்கப்படும் மருத்துவ பல்கலைக் கழகத்திற்கு அன்னை இந்திரா காந்தி அவர்களின் பெயரை சூட்ட வேண்டுமென்று கோரி வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி இத்துடன் என் உரையை முடிக்கின்றேன்.



1987 மார்ச் 28]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 31—3—1987 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

85. 1980-81 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் அறிக்கையில் பொதுப் பணித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தாறாவது அறிக்கை.

86. 1981-82 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் அறிக்கையில் பொதுப் பணித் துறை குறித்த பத்திகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தேழாவது அறிக்கை.

87. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை.

136509